பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

சனவரி 2023

## தமிழ்த்தொண்டாற்றும் மருத்துவச் செம்மல்



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – சனவரி 2023

613

ஆசிரியர் / வெளியிடுபவர் :

**அமின் மொஹமெட்**

இணையாசிரியர் :

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

நிர்வாக ஆசிரியர் :

**சஃபி மொஹமெட்**

ஆசிரியர் குழு :

**ஹிப்ஸிர் ரஹ்மான்**

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

**கவிஞர் நெல்லை உலகம்மாள்**

**பாவலர்மணி இராம வேல்முருகன்**

**பாவலர் தென்றல் கவி**

**வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்**

**கவிஞர் பொன்மணிதாசன்**

**கவிஞர் அ. முத்துசாமி**

**கவிஞர் ஈழபாரதி**

ஆலோசகர்கள் :

**பாட்டரசர் கி. பாரதிதாசன்**

**கவிதாயினி சக்தி ஜோதி**

**நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

## இராம வேல்முருகன்

**எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை**
**வலங்கைமான் 612804**
**திருவாரூர் மாவட்டம்**
**தமிழ்நாடு , இந்தியா**
**தொடர்பு எண்**
**+91 9952529619 (கட்செவி)**
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த அன்புத் தமிழ் நெஞ்சங்களே! வணக்கம்!

தமிழ்நெஞ்சம் தனது 52 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. என்னளவில் நினைத்துப்பார்க்க முடியாத வெற்றிதான். இந்த வெற்றிக்கு வழித் துணையாய் வந்தவர்களில் பலர் இப்பொழுது இல்லையே என்பதை நினைத்துப் பார்க்கும்போது மனம் வலிக்கிறது.

இந்த இதழியல் பணியில் எத்தனையோ தடங்கள்களைச் சந்தித்திருக்கிறேன். எத்தனை பொறாமைக்காரர்களைக் கடந்து வந்திருக்கிறேன் என்பதையும் நினைக்கவும் செய்கிறேன். அதுபோலவே இன்று எத்தனை நல்லுறவுகளுடன் பயனிக்கிறேன் என் பதையும் அவர்களிடம் கூடவே இருந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இதழ் நடத்துவதென்பது இலகுவான பணியல்ல. ஒரு சிற்றிதழின் வாழ்வு சில ஆண்டுகளே... பொருளாதாரம், ஒத்துழைப்பின்மை இப்படி இன்னும் பிற காரணங்களால் இதழ்கள் தொடரவியலாமல் போகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

அந்தவகையில் இறைவன் எல்லா நிலையிலும் நல்லுதவிகளைச் செய்து வருகிறான் என்பது எனது நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு துணையாக என்னோடு இணைந்து செயல்படும் ஆசிரியர் குழுவினர் நான் சோர்ந்துவிழும் நேரமெல்லாம் என்னைத் தூக்கி நிறுத்துகிறார்கள். அவர்களுக்கும், அன்பான வாசகர்களுக்கும், எழுத்தாளத் தோழமைகளுக்கும் நன்றிகளைத் தெர்விப்பதில் மனம் நிறைகிறேன்.

இதழில் வெண்பாப்பயணம் வெற்றிகரமாக தொடந்துக் கொண்டுள்ளது. வெண்பாவே எழுதத் தெரியாதவர்கள்கூட எழுதத்துணிந்திருக்கிறார்கள். இவர்களுக் கெல்லாம் சான்றிதழ்கள் வழங்கி வருகிறோம். வரும்காலங்களில் இன்னும்பல சிறப்புகளைச் செய்ய அவாவாகவுள்ளோம். வாசக எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் துணை நூலாக்கிவரும் திட்டமும் தொடர்கிறது. இன்னும் நல்ல ஆலோசனைத் திட்டங் களிருப்பின் பகிர்ந்தால் செயலாக்க முனைவோம். எம்மோடு இணைந்துச்செயல்பட விரும்பும் தோழமைகளை அன்போடு வரவேற்கிறோம்

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள். நன்றி!



என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)



# “நம்பிக்கை”

**Dr. ஃபஜிலா ஆசாத்** சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

நான் அந்தக் கம்பெனியை மிகவும் நம்பி தானே சீட்டு கட்டினேன்.. இப்படி நம்பிக்கை துரோகம் செய்து விட்டார்களே…

நெருங்கிய உறவு என்று தானே நம்பி அவசர நேரத்தில் இவ்வளவு பண உதவி செய்தேன் ஆனால் இப்படி ஏமாற்றி விட்டார்களே..

நல்ல நண்பர் என்று தானே என் மனதில் கிடந்த பாரங்களை இறக்கி வைத்தேன். இது உனக்கும் எனக்கும் இரகசியமாக இருக்கும் என்று அவ்வளவு சொல்லி என் மனபாரத்தை எல்லாம் இறக்கி வைக்க தூண்டி விட்டுவிட்டு, இப்படி ஒன்றிற்கு இரண்டாக வெளியே சொல்லி பிரச்னையை ஏற்படுத்தி விட்டார்களே..

இப்படி ‘யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்’ என்ற சாகா வரம் பெற்ற பாடலை வாழ்வில் ஒரு முறையாவது முணுமுணுக்காதவரே இருக்க முடியாது எனலாம்.

பளபள விளம்பரங்களும் பகட்டான பரிசுகளையும் நம்பி தகுதிக்கு மீறி பணம் கொடுத்து வாங்கி வரும் பொருட்கள்தான் தரமில்லாமல் போகிறதென்றால் கஷ்டப் பட்டுசேமித்துபணம்கட்டும்நிறுவனங்களும் காலைவாரி விடுகின்றன. இதெல்லாம் போதாதென்று நெருங்கிப் பழகும் உறவுகள் நட்புகள்கூட நம்பிக்கையை பொய்யாக்கி சுய நலத்துடன் நடப்பதையும் அனுபவிக்க வேண்டி இருக்கிறது என பல நேரங்களில் வாங்கும் பொருட்களிலிருந்து பழகும் நபர்கள் வரை இன்றைய உலகமே ஒரு அவநம்பிக்கையால் கட்டமைக்கப் பட்டது போல மாறிக் கொண்டிருப்பது போல் ஒரு மாயை எழும்.

இனி வாழ்க்கையில் யாரையும் நம்பி விடக் கூடாது என்பதில் நான் மிக முடிவாக இருக்கிறேன் நான் நம்பியவர்கள் எல்லோரும் ஏமாற்றி விட்டார்கள். என நம்பிக்கை எல்லாம் சுக்கு நூறாக உடைந்து விட்டது. இனி எப்படி என்னால் யாரையும் நம்ப முடியும் என சமுகத்தின் மீதும் கோபமும் தன் மீது ஆற்றாமையும் இயலாமையும் ஏற்படும்.

முதலில் நம்பிக்கை என்பது ஒரு

பொருள் அல்ல அது சுக்கு நூறாகவோ அல்லது இன்ச் ஆயிரமாகவோ உடை வதற்கு. நம்பிக்கை என்பது உங்களுக்குள் ஏற்படும் ஒரு மனநிலை.

பொதுவாக எந்த விஷயத்தையும் ஒன்று மனம் துருவித் துருவி ஆராய்கிறது அல்லது முழுவதுமாக நம்பி ஆழ்மனம் எழுப்பும் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்து விட்டு அல்லும் பகலும் தவிக்கிறது. என்ன தான் பட்டம் வானத்தில் பறக்க வேண்டுமென்று அதை வானில் பறக்க விட்டாலும் அது திரும்பி தன் கைகளுக்குள் வர வேண்டும் என்று நினைப்பவர்கள் அதன் ஒரு நுனியை தன் கையில் பிடித்து தன் முழு கவனத்தையும் அந்த பட்டத்தில் வைத்து அது வேறு எதிலும் சிக்கி தன் கையை விட்டும் நழுவி விடக் கூடாது என்று தான் பல நேரங்களில் இருக்க வேண்டி இருக்கிறது. அதை விட்டும் அதை வானில் பறக்க விட்டு அதுவே தானே வந்து விடும் என நினைத்து கேட்பாரற்று இருக்க செய்து பின் யாரையும் எந்த வகையிலும் நம்ப மாட்டேன் என்றே மனம்அரற்றுகிறதுஎனஎன்னென்னவோ எல்லாம் முடிந்த பின் தோன்றுகிறது.

எந்த ஒரு சூழலிலும் மிக விழிப் புணர்ச்சியோடு யார் சொல்கி றார்கள், அவர்கள் எந்த உடையில் இருக்கி றார்கள், எவ்வளவு ஆழமாக சொல்கிறார் கள் என்பதை எல்லாம் தாண்டி எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று அறிவுப்பூர்வமாக ஆராய்ந்து செயல் படுபவர்கள் வெற்றியாளர்களாக மன அழுத்தம் இல்லாதவர்களாக இருக்கிறார் கள் என்கிறது வாழ்வியல்.

நியூஜெர்ஸியில் இது சம்பந்தமாக ஒரு நீண்ட ஆய்வு நடத்தப் பட்டது, அதன் ஒரு பகுதியாக ஒரு கார் நிறுத்துமிடத்தில் வாடிக்கையாளர்கள் கார்களை நிறுத்த வரும்போது அங்கு காரை நிறுத்தக் கூடாது என்று கூறும்படி சில வாலன்டியர்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். முதலில் சாதாரண உடையில் அங்கு வரும் வாடிக்கையாளர்களிடம் சொல்வதாகவும் பின்பு செக்யூரிட்டிகளுக்கான சீருடை அணிந்து கொண்டு சொல்வதாகவும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

சாதாரண உடையில் சென்று சொல்லும்போது பொருட்படுத்தாத வாடிக் கையாளர்கள்கூட சீருடையில் சொல்லு ம்போது எதிர்ப்புக் காட்டாமல் சென்று விட்டார்கள்.

அதே சமயம் சீருடை இல்லாமல் சொல்லும்போதும் ஒரு செக்யூரிட்டியைப் போல இருக்கமான தோரணையுடன் இருந்த வாலன்டியர்கள் சொல்வதைக் கேட்ட வாடிக் கையாளர்கள் அவர்கள் சொன்னதை எதிர் கேள்வி இல்லாமல் கேட்டு கார்களை நிறுத்தாமல் சென்று விட்டனர்.

இதே போன்று விற்பனை, முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் ஆராய்ந்து அதன் முடிவாக எது ஒன்றையும் உங்களை நம்பச் செய்வதற்கு மூன்று அடிப்படை விசயங்கள் முதன்மையாக இருக்கிறது என வலியுறுத்துகிறது இன் னும் பல ஆய்வுகள்.

அதாவது சொல்லும் செய்திக்குப் பொருத்தமான தோற்றம் மற்றும் அதைப் பிரதிபலிக்கும் உடை, தவிர மீண்டும் மீண்டும் சொல்லப் படும் ஒரு விஷயம். இந்த மூன்று விசயங்கள்தான் உங்கள் மனதை உங்கள் கட்டுப்பாட்டிலிருந்து பிரித்து உங்கள் ஆழ்மனம் கூறும் எச்சரிக் கைகளை எல்லாம் புறந்தள்ளி உங்களை ஒரு நபரையோ அல்லது எந்த செய்தி களையுமோ தகுந்த காரணம் இல்லாமல் நம்பச் செய்கிறது என்கின்றன அந்த ஆய்வுகள்.

அதே ஆய்வின்போது வெளிப்பட்ட இன்னொரு முடிவும் மிக முக்கியமா னது அதாவது ஆய்வின்போது அணுகப் பட்ட வாடிக்கையாளர்களில் வெற்றிப் பின்னணியில் இருந்தவர்கள் எந்த நிலை யிலும் ஆய்வாளர்களின் கோரிக்கை

களுக்கு ஒப்புக்கொள்ள வில்லை அவர்கள் கூறப்பட்ட விசயங்களுக்கான ஆதாரத்தைக் காட்ட சொன்னார்கள்.

**எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு**

என்று வள்ளுவர் கூறியது வெறும் மதிப்பெண்களுக்கான படிப்பல்ல. அதுவே உங்கள் வாழ்வியல் பாடம் என்பதை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கிறது இந்த ஆய்வின் முடிவு.

நம்பிக்கை என்பது பிற மனிதர்கள் மீதோ அல்லது நிறுவனங்கள் மீதோ அல்லது பொருட்கள் மீதோ வைக்கப் படுவது அல்ல, மாறாக உங்கள் ஆழ்மனதின்மீது வைக்கப்பட வேண்டியது நம் உடல் உறுப்புகளிலிருந்து, நம் ஆழ்மனம், நம் சமுகம் இந்த பிரபஞ்சம் எல்லாமே ஒன்றோடொன்று பின்னப் பட்டு ஏதாவது ஒரு வகையில் ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கிறது என்கிறது ஆழ்மன இயல்.

ஒரு சில எதிர்மறையான நிகழ்வுகள் உங்கள்மேல் உள்ள தன்னம்பிக்கையையும் இந்த சமூகத்தின் மேல் உள்ள ஒட்டு மொத்த நம்பிகையையும் இழக்க அனுமதிக்காதீர்கள். அது உங்களுக்கான உலகத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் அப்படியே சுருக்கி விடும்.

தவிர உங்கள் உள்ளுணர்வு உங்களுக்குக்கான வழிகாட்டி. நீங்கள் உங்கள் உள்ளுணர்வை சரியாக கவனிக்காமல் இருந்த தருணங்களில் தவறான அனுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். உங்கள் அனுகூலங்கள் தவறாக போனதை வைத்து, நீங்கள் நம்பியவர்கள் உங்கள் நம்பிக்கைக்கேற்ப நடந்து கொள்ளாததை நினைத்து உங்கள் ஆழ்மனம் என்ன சொன்னாலும் அதை உங்கள் மனம் நிராகரித்து செயலற்று இருக்க முனையும். அப்படி நீங்கள் ஒட்டு மொத்தமாக உங்கள் ஆழ்மனதை உங்களுக்கான சரியான வழிகாட்டியையே ஒதுக்கி வைத்து விட்டால் அது பல கதவுகளை அடைத்து விடும்.

உங்களுக்கான சரியான நம்பிக்கையான நபர்கள் அடையாளப் படுத்தக் கூடிய வகையில் உங்கள் ஆழ்மனதை நேர்மறையான சிந்தனைகளால் நிரப்புங்கள். அது உங்கள் மனதின் இறுக்கத்தைக் குறைக்கும். மகிழ்ச்சி நிலைக்கும்.

## மனப் பிரச்னை

‘இறைவனை நம்புங்கள், ஒட்டகத்தை கட்டி வையுங்கள்’ என்று ஒரு அரபு நாட்டுப் பழமொழி உண்டு. எவ்வளவு நம்பகமான ஒட்டகமாக இருந்தாலும் இறைவன் பாதுகாவலில் தான் விடுகிறீர்கள் என்றாலும் அததற்கு செய்ய வேண்டிய முறைகளை செய்து விட வேண்டும் அதன் பின் மனதை போட்டு சலனத்திற்கு ஆளாக்காமல் நிம்மதியாக இருங்கள் என்பது தான் அதன் அர்த்தம்.

அதனால் முழுமையாக யாரையும் இனி நம்பக் கூடாது என்று முடிவுக்கு வருவதை விட்டும் எந்த இடத்தில் தவறாக போனது என்ன செய்திருந்தால் இந்த மாதிரி நடக்காமல் தடுத்திருக்கலாம். இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது எது என கொஞ்சம் நடந்தவைகளை ஒவ்வொரு கட்டமாக அலசிப் பாருங்கள்.

எந்த சூழல் வரை சரியாக எல்லாம் போய்க் கொண்டிருந்தது.. எந்த இடத்தில் சறுக்கியது.. எது சறுக்கச் செய்தது என்பது சரியாக பிடிபடும் போது அதை விழிப்புணர்ச்சியோடு அணுகும்போது, தீர்வுகள் இலகுவானதாக இருக்கும். தவிர ஏதாவது ஒரு வகையில் அது தீர்க்க முடியாததாக இருந்தாலும் மனம் அதை ஏற்றுக் கொண்டு மாற்றுத் தீர்வை பற்றி சிந்திக்கும். மகிழ்ச்சி மலரும்.

# உன் திசை நோக்கி

உன் கைகளை
பற்றிக் கொண்ட
என் விரல்களை நிமிட்டி
விலக்கி விடுகிறாய்

இப்பாலை மணலின்
அசுர வீச்சு
உன் இருப்பின்
கூடாரத்தை சிதைக்கும் என்று
பாலைவனத்தின்
சித்திரவதைகளை
சொல்லிக் கொண்டே
இருக்கிறேன்...

நீ வேட்டையாடிய
திறன்கள் பற்றி சிலாகிக்கிறாய்...

பாதுகாப்பற்ற
இப்பாலை நிலத்தின்
மணல் சுடும்
கண்களில் இடரும்
உதடுகள் வரடும்

துகள்கள் எல்லாம்
கூர் ஈட்டிகளாக மாறிவிட்டன

உனக்கு ஒரு
போர்வையை தருகிறேன்
போர்த்திக் கொள்
நீர் தருகிறேன்
பருகிக் கொள் என்கிறேன்

எப்பொழுதும் போல்
சொல்லாமல் விடைபெறுகிறாய்...

உன் திசை நோக்கி
என் கண்கள்
பார்த்துக் கொண்டேயிருக்கிறது

**வழக்கறிஞர் சரவணன்,**
நாமக்கல்

# நகரும் நிமிடங்கள்

**இந்தக் காலத்தின் பயணத்தில்
நகர்கையில்**

**மரங்கள் அசைந்தாட
மலர்கள் புன்னகைக்க
நிலவும் நகர்ந்து வர
மெல்லிய காற்றும்
என்னை உரசிச் சென்றதே!**

**நட்சத்திரங்களும் கண்சிமிட்ட
பறவைகளும் கண்முன்னே
ஏதேதோ பேசிச் சென்றதே!**

**கடலலைகளும்
பேச வெட்கித்து கரை
வருவதும் போவதுமாக
ஒளிந்து விளையாடியதே!**

**மழலைகளும் மொழியின்றி
மனம் திறந்து சிரித்தனரே!**

**மகிழ்ச்சியாய் வாழ உலகில்
இத்தனையுமிருக்கையில்
எங்கே நிம்மதி தேடி அலைகிறாய்..?
என்றது வாழ்க்கை**

**மறுநொடியில்
இடியும் முழங்க
வெயிலும் சுட்டெரிக்க
வழியில் மிருகங்களும் சத்தமிட
புயல் காற்றும் வீசியதே!**

**நகரும் நிமிடங்களில் எதிர்ப்படும்
தடைக்கற்களைத் தாண்டி
ஜெயிப்பதல்லவா வாழ்க்கை..
என்றது காலம்**

**மஜினா**

# வண்டலூருக்கு போவோமா?

## சா. கா. பாரதி ராஜா

அருணுக்கு ஒரு தங்கை. பெயர் கோமதி. அருண் நான்காம் வகுப்பு படித்து வந்தான். கோமதி இரண்டாம் வகுப்பு படித்து வந்தாள்.

அரையாண்டுத் தேர்வு முடிந்து மாணவர்களுக்கு விடுமுறை விடப்பட்டது. அருணும், கோமதியும் தங்களது அப்பா அம்மாவிடம், «எங்கேயாவது எங்களை அழைத்துச் செல்லுங்கள்» என ஆசையாக கேட்டனர்.

அப்பா சங்கர், «சினிமாவிற்கு போகலாமா? கடற்கரைக்கு போகலாமா? எங்கே போகலாம்? சொல்லுங்கள்» எனக் கேட்டார்.

உடனே அம்மா விஜி, «வண்டலூருக்கு போகலாம். அங்கே நிறைய விலங்குகள், பறவைகள் உள்ளன. குழந்தைகளும் பாடத்தில் வரும் விலங்குகளை நேரில் பார்ப்பர்» என்றார்.

«ம்! நல்ல யோசனையாக இருக்கிறதே. அருண்! கோமதி! வண்டலூருக்குப் போகலாமா?» என அப்பா கேட்க,

«ம்! போகலாம்! போகலாமா! ஜாலி! ஜாலி!» என மகிழ்ச்சியில் துள்ளி குதித்தனர்.

வண்டலூர் உயிரியல் பூங்கா உள்ளே சென்றதும், மிதிவண்டிகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டனர். அப்பாவின் மிதிவண்டியில் அருணும், அம்மாவின் மிதிவண்டியில் கோமதியும் அமர்ந்து கொண்டு பூங்காவை பார்வையிட ஆரம்பித்தனர்.

சிங்கவால் குரங்கு, அணில் வால் குரங்கு, சிவப்பு கை டாமரின் குரங்கு, சிம்பன்சி குரங்கு என வரிசையாக அப்பா குரங்கு வகைகளைக் காட்டினார்.

«அப்பா! இத்தனை வகை குரங்குகளா? « என்று வியப்போடு கேட்டான் அருண்.

«நான் நமது வீட்டிற்கு வரும் ஒரே வகை குரங்கைத் தான் பார்த்திருக்கிறேன். இங்கு நிறைய குரங்கு வகைகளை தெரிந்து கொண்டோம்» என மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள் கோமதி.

அம்மா அனைத்தையும் ஒளிப்படம் எடுக்க, அப்பா நோட்டில் குறித்துக் கொண்டு வந்தார்.

சிம்பன்சி குரங்கைப் பார்த்து, பார்வையாளர்கள் சிம்பன்சி போல் கத்தி கேலியும் செய்ய ஆரம்பித்தனர். அருணும் கோமதியும் அவர்களைப் பார்த்து அவர்களும் கேலி செய்ய ஆரம்பித்தனர்.

சிம்பன்சி எல்லாரையும் பார்த்து, முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு, மீண்டும் குகைக்குள் சென்று விட்டது.

மான், எருமை வகைகளை பார்த்துக் கொண்டே வர, சிங்கத்தை அனைவரும் பார்க்க வந்தனர். கோமதிக்கு கொஞ்சம்

பயமாகவே இருந்தது. அப்பாவை தூக்கிக் கொள்ள சொன்னாள்.

அருண், கோமதியைப் பார்த்து சிரித்தான்.

கொஞ்சம் பயத்தோடு சிங்கத்தைப் பார்த்தனர். ஆனால், காட்டின் ராஜாவாக கதைகளில் படித்த சிங்கம் தனிமையில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. பார்வையாளர்கள் கூச்சலிட்டு சிங்கத்தையும் கேலி செய்து எழுப்பினர். சிங்கம் அமைதியாக எழுந்து எல்லோரையும் பார்த்து மீண்டும் படுத்துக் கொண்டது. பார்வையாளர்கள் மீண்டும் கேலி செய்ய, அருணும் கோமதியும் கேலி செய்ய ஆரம்பித்தனர்.

அப்பா உடனே, இதுபோல விலங்குகளை கேலி செய்யக் கூடாது. அவைகளுக்கும் உணர்வுகள் உண்டு. இங்கே பாதுகாப்பு வளையங்கள் இல்லை என்றால், நாம் அவற்றை கேலி செய்ய முடியாது. யாரையும் எப்போதும் கேலியோ கிண்டலோ செய்யக் கூடாது என அப்பா அறிவுரை வழங்கினார்.

“ம்! சரிப்பா” என இருவரும் சொல்லி, சிங்கத்திற்கு புன்னகையுடன் டாடா காட்டி விட்டு கிளம்பினர்.

உயிரியல் பூங்கா பார்த்து வெளியே அனைவரும் வர, வாகனம் விடும் இடத்தில் இருந்த நாயை சிலர் கேலி செய்து, கல்லால் அடித்து துரத்தினர். அந்த நாய் ஓடி அருண் அருகில் வர, அருண் தனது கையில் வைத்திருந்த பிஸ்கட் பாக்கெட்டிலிருந்து சில பிஸ்கட்களை நாய்க்குப் போட்டான். கோமதியும் கையில் இருந்த தண்ணீரை நாய்க்கு கொஞ்சம் ஊற்றினாள்.

இதைப் பார்த்த அப்பா மகிழ்ச்சி அடைய, அம்மா வண்டலூர் உயிரியல் பூங்கா சுற்றுலா சிறப்பு என்றார்.

# விருது விற்பனைக்கு!

**ஆசிரியர்கள் என்ற பெயர்தாங்கி
ஏராளமானவர்கள் இங்கிருக்க
நல்லாசிரியர் என்ற பட்டம் வாங்கும்
நாலுபேரில் நாமும் ஒருவராக
இருந்துவிட முடியாதா என
தாராளமாக மனம் ஏங்கித்
தவித்த தருணத்தில்**

**குறுஞ்செய்தி வழியே குபீரெனக்குதித்த
அருஞ்செய்தி ஒன்று என்னை
ஆற்றுப்படுத்துவதாய் அமைந்தது
நல்லாசிரியருக்கு நாலாயிரம்
நல்நல்லாசிரியருக்கு எட்டாயிரம்
சொல்லாசிரியருக்கு பத்தாயிரம்
பெருநல்லாசிரியருக்கு பதினைந்தாயிரம்
என்ற புனைவும் தொகையும்
பட்டியலின் நீளத்தை அதிகரித்தது
கொடுக்கப்பட்ட எண்ணை அழைத்து
என்னை அறிமுகம் செய்துகொண்டேன்**

**பின்னையும் பேச அவகாசம் தரவில்லை
படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பிய
அரை மணி நேரத்தில்
பட்டம்பெற தேர்வு செய்யப்பட்டதில்
மட்டற்ற எனதின்ப அதிர்ச்சியும்
தேர்வுக்குழுவின் முதிர்ச்சியும்
தேக்கமற்று தென்பட்டது
ஒரு வாரத்துக்குள் பட்டம்
கைக்கு வரப்பெற்றது
அதற்கு முன்பாகவே
நல்லாசிரியர் பட்டம்
என் பெயருக்கு முன்பாக
ஒட்டிக் கொண்டது**

**ஏலச்சீட்டு நடத்தியவர்தான்
இப்போது விருது வழங்கும்
வியாபாரத்தைவெற்றிகரமாகத்
தொடங்கியிருக்கிறார் என
யார் அறியப்போகிறார் என்ற
அசைக்க முடியா தைரியத்தில்....**



**- பா.சக்திவேல்**

# இரண்டாவது தாய்

**எஸ். மைக்கேல் ஜீவநேசன்**
**தேனி.**

பொங்கல்! விரல்விட்டு எண்ணி விடும் நாட்களே உள்ளன. பத்து நாட்களுக்கு முன்பே பண்டிகை கால ஊக்கத் தொகை பெற்றுவிட்டான். அதற்காக அவன் கடுமை யாக உழைக்க வேண்டி இருந்தது.வாரத்தில் ஆறு நாட்கள் ஓய்வே கிடையாது.ஞாயிறு மட்டும் எட்டு மணி வரை தூங்கும் அவனை, 'இதென்ன எழவெடுத்த தூக்கம் தூங்குறாரு'- என்ற மனைவியின் வசை மொழி கேட்டு எழுந்தான், பரத். ஆண்களுக்கு நிகராக பெண்கள் உழைத்தாலும் ஆண்களை போல் கடுமையான உழைப்பாளியாக பெண் இருக்க முடியுமா.மனதுக்குள்ளே வெதும்பினான்.

பெண்கள் உரிமைக்காகவும், பெண் அடிமைத்தனத்தை எதிர்த்தும் பிரச்சாரம் செய்கிறார்கள். எத்தனை வீடுகளில் ஆண் கள் கையில் விலங்கிடாத கைதியாய் பேச்சுரிமை இன்றி தவிக்கிறார்கள்... நினைத்துப் பார்த்தான்.

அதிகாலையிலே ஆண்வர்க்கம் உழைக்கத் துவங்கிவிடுகிறது. செய்தித் தாள் வினியோகம், பால் வினியோகம், காய்கறிகளை மார்கெட்டுக்கு எடுத்து செல்லுதல், பூக்களை பறித்து பஜாரில் விற்று வருதல், ஆறு மணி சிப்டிற்கும், ஏழு மணி சிப்டிற்கும் பணிக்கு செல்ல நான்கு மணிக்கே ரயில்வே பிளாட் பாரங்களில் நடுங்கும் குளிரில்... என்று அதிகாலையிலே ஆண் வர்க்கம் உழைக்கத் தொடங்கிவிடுகிறது.

பரண் மேலே உள்ள சாமான் சட்டுக்களை எடுத்து கீழே போட்டு, மேலே கீழேயெல்லாம் சுத்தமாக ஒட்டடை அடித்து, கலக்கி வைத்த சுண்ணாம்பை அடிக்கச் சொல்லி சமையலறையிலிருந்து வந்த கட்டளையை ஏற்று துடப்பத்தை கையில் எடுத்து தலைப்பா கட்டிக் கொண்டு இயங்கத் துவங்கினான், பரத்.

மனைவிக்கு பட்டுச் சேலை, மகளுக்கு பட்டுப் பாவாடை, மகனுக்கு கலாச்சார வேஷ்டி சட்டை என்று பண்டிகை கடன் சுமைகள். தனக்கென்று எந்த கோடியும் எடுக்கவில்லை. ஒரு வருடத் திற்கு முன்பு எடுத்த கால் சட்டையும், மேல் சட்டையையும்தான் துவைத்து தேய்த்து அலமாரியில் பத்திரப் படுத்தினான்.

சந்தைக்கு சென்று வர மனைவியின் கட்டளை குளியலறையிலிருந்து... வழக்கம் போல்ஏற்றுக்கொண்டுகூடையைஎடுத்துக் கொண்டு கிளம்பினான். தரையோடு தரை யாக தேய்ந்து போன செருப்பை மாற்ற முடியவில்லை. அதற்கான நேரங்கள் தள்ளிப் போய் கொண்டே இருக்கிறது. எத்தனை அடிமைத்தனம் - சூன்யத்தில் விழுந்தது போலிருந்தது அவனுக்கு.

தாயின் அரவணைப்பில் இருக்கும் போது எத்தனை சுகமாக இருந்தது. கர்ப்பப் பையின் கணகணப்பில் எந்த சிந்தனையு மின்றி கண்களை மூடி உறங்கும் சிசுவைப் போல நிச்சலனமற்ற பொழுதுகள் அவை - நினைத்துப் பார்த்தான் பரத். தன்னலமற்றவள் தாய். அம்மாவின் உபச்சாரங் களை நினைவுபடுத்தி பார்த் தான். அழுக்குப் படியாத சட்டை, நேரம் தவறா சாப்பாடு, சனிக் கிழமைகளில் எண்ணைக் குளியல், ஜலதோஷம்

என்றால் கசாயம், தலை வலி என்றால் நெற்றியில் பச்சிலைப் பத்து. நெஞ்சில் கபம் கட்டும் போது தூதுவளை துவையல் - என்றெல்லாம் மனசுக்குள்ளேயே மருகி மருகி யோசித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

“ஏங்க மார்கெட்டுக்கு போனீங்களே ஒரு பினாயில் பாட்டிலும், ப்ளீச்சிங் பவுடரும் வாங்கி வந்திருக்க கூடாதா?”

“எதுக்கு?”

“சொல்ல மறந்துட்டேன்...வீட்டைக் கழுவி துடைச்சு விடனும். அப்பறம் உங்களுக்கு நேரம் கிடைக்காது”

பரத்துக்கு பதவிசான குணம்தான். சாது மிரண்டால் காடு கொள்ளாது. எதிரில் இருந்த குடத்தை எட்டி உதைத்தான். 'நங்ங்..!' என்ற ஓசையுடன் குடம் அலறியது. சில நிமிடங்கள் வரை சப்தம் அறைக்குள் மண்டலித்துக் கொண்டிருந்தது. பரத்தின் மனையாட்டி மருண்டு போனாள். பசி வயிற்றைக் கிள்ளியது. கட்டிலில் சென்று கவிழ்ந்தான். பரத்தின் மனதில் பரவிக்கிடந்த சூன்ய உணர்வுகள் சன்ன சன்னமாக குறைந்தது. அல்லது நீங்கி அறை முழுவதும் அமைதி நிலவியது. தூங்கிவிட்டான். தூக்கத்தில் கிடைக்கும் மயான அமைதி வேறெதிலும் கிடைப்பதில்லை. ஆனால், பரத் விஷயத் தில் சற்று நேர் மாறாக இருந்தது.கனவு. புரட்டி எடுக்கும் கனவு. நெஞ்சு புடைத்து மூச்சு வாங்கினான். இறந்து போனான்.

‘டண் டண் டணக்கு!, டண் டண் டணக்கு!’ என்று தப்பை தட்டும் ஓசை கேட்கிறது.இடையிடையே சங்கு ஊதும் சப்தமும் கேட்கிறது.

ஆம்!, பரத் இறந்து விட்டான். கனவில்தான். அனைத்து சொந்த பந்தங் களுக்கும் சாவு சேதி சொல்லியாகிவிட்டது. பரத்தை நன்றாக கழுவி புதுக் கோடியில் சுற்றி நாசியில் பஞ்சை வைத்து அடைத்து,

# கண்திறப்பு

உன் கண்கள்
குவளைப் பூக்களானால்
நான் அவை மிதக்கும்
குளம் ஆகிறேன்

உன் கண்கள்
உண்கண்களானால்
அவை உண்பது
என் கவிதையின்
மையாக இருக்கட்டும்

உன் கண்கள்
தூண்டில்களானால்
நான் சிக்கிக் கொள்ளும்
மீன்கள் ஆகிறேன்

உன் கண்கள்
தூப தீபங்களானால்
நான் வந்து விழும்
விட்டில்களாகிறேன்

உன் கண்கள்
கண்ணோட்டம் ஓடினால்
அந்த ஓட்டம்
என் காதல் தடகளத்தில்
நடக்கட்டும்

உன் கண்களின்
முகந்து தான்
மேகம்
என் பாலைக்கு நீர் வார்த்தது

இனியும் என் காதலை
கண்துடைப்பு செய்யாதே
கண்திறப்பு செய்.

- மு. ஆறுமுகவிக்னேஷ்

கால்களின் பெருவிரல்களை ஒரு சேர கட்டி வீட்டின் முற்றத்தில் கிடத்தியிருந்தார்கள். தலைமாட்டின் ஒருபுறத்தில் மனைவி தலைவிரிக் கோலமாய் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறாள். மறுபுறத்தில் அம்மா, 'நான் இருக்க நீ போயிட்டியே!' என சொல்லி நெஞ்சை தட்டி அழுது கொண்டிருக்கிறாள். பாடை தயாரானது. உறவினர்கள் கூடி பரத்தின் பூத உடலை பாடையில் கிடத்தி தூக்கி செல்கிறார்கள். அம்மாவும், மனைவியும் சிறிது தூரம் அழுது வந்த பின் திரும்பி சென்றுவிடுகிறார்கள். ஒவ்வொரு வீட்டையும் சாவு கடந்து செல்லும் போது வாசலில் தண்ணீர் ஊற்றி பிணத்தின் தாகம் தணிக்கிறார்கள்.

சாவு ஊர்வலம் தெருவைக் கடந்து பிரதான சாலையை அடைகிறது. சாலையை மறித்து சரக்கு லாரியிலிருந்து ரேஷன் கடைக்கு அரிசி மூட்டையை இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது லாரியிலிருந்து அரிசி மூட்டைகள் அவிழ்ந்து அத்தனையும் நடு ரோட்டில் சிந்திவிடுகிறது. பாடையை நடு ரோட்டி லேயே போட்டுவிட்டு உறவினர்கள் ஓடிச் சென்று அடித்தும் - இடித்தும் சிந்திய அரிசியை அள்ளிக் கொண்டிருக்கிறார்கள். அனாதையாக விடப்பட்டான் பரத். பூத உடலிலிருந்து ஆவி விட்டகன்று தனியாக நின்று இறந்து போன பரத்தை நன்றாக பார்த்துக் கொண்டிருந்தது. ஆவி பரத்துக்கு பூதபரத்தின் மேல் பரிவு ஏற்படுகிறது. பாபி பிரக்ஞையற்று நிர்மூலமாய் கிடக்கிறானே. உடலெங்கும் ஓடிக் கொண்டிருந்த ரத்தம் உறைந்து போய்விட்டதே. 'லப்டப்' என்று அடித்துக் கொண்டிருந்த இதயம் கல்லாகிப் போனதே.திரண்ட புஜமும் அகன்ற மார்பும் தளர்ந்து கூழாகிக் கிடக்கின்றதே ஆவி பரத் அழுதே விடுகிறான். தனக்கும் இந்த உலகுக்கும் உள்ள கணக்கு வழக்குகள் முடிக்கப்பட்ட பின்பும் ஒரு அற்ப ஆசை. அம்மாவையும், மனைவியையும் ஒரு முறை சென்று பார்த்துவிட்டு வந்தாலென்ன. ஓடுகிறான் பரத். சாலையை கடந்து தெருவைக் கடந்து தன் வீட்டை வந்தடைகிறான். தன் வீட்டை சுற்றி இருள் சூழ்ந்திருக்கிறது. எண்பது வயதடைந்த தன் தாத்தா கயிற்றுக் கட்டிலில் செருமிக் கொண்டு கிடக்கிறார். சாற்றியிருந்த கதவை தட்டுகிறான். 'அம்மா!அம்மா! வென குரல்யெழுப்புகிறான். சிறிது தயக்கத்துடன் அம்மா வந்து கதவை திறக்கிறாள். ஆவி பரத் நின்று கொண்டிருக்கிறான். சில நிமிடங்கள் கலவர முகத்துடன் மேலும் கீழும் பார்க்கிறாள். பரத்தின் பாதம் தரையில் பாவவில்லை. அப்பாவை கூப்பிடுகிறான். அப்பாவும் ஓடி வந்து அம்மாவின் முதுகுப் புறமாக நின்று பார்க்கிறார்.

'நம் பிள்ளை மாதிரி இருக்குதே. ஆவியாக இருக்குமோ?'

'டமார்!' என்று கதவை சாத்தி விடுகிறார்கள்.

'டமார்! டமார்!' என்ற ஓசை ஆவி பரத்தின் நெஞ்சை தாக்குகிறது. காற்றில் கலந்து அண்டத்திலும் பேரண்டத்திலும் எதிரொலிக்கிறது.

'அம்மா! அம்மாவா இப்படி செய்கி றாள்?' ஆசையோடு அரவணைப் பாள் என்று நினைத்தவனுக்கு பேரிடி யாய் இருந்தது. அருகிலேயேதான் மனைவியோடு குடித்தனம் நடத்திய வீடு இருக்கிறது. ஓடிச் சென்று பார்த்தான். பூட்டிக் கிடக்கிறது. 'அடப்பாவி..!' அலுத்துக் கொண்டான். மாதத்தில் பதினைந்து நாட்கள் அம்மா வீட்டிற்கு சென்றுவிடுவாயே. இன்று முதல் நான் இல்லை யென்று ஆன பின்பு நிரந்தரமாக சென்றுவிட்டாயோ. அழுது கொண்டே ஆவி பரத் மயானம் நோக்கி நடக்கலானான். கனவு முடிந்துவிடுகிறது.

திடும்மென விழித்துப் பார்த்தான். நெஞ்சில் கை வைத்துப் பார்த்தான்.இதயம் துடித்துக் கொண்டுதான் இருக்கிறது. நான் சாகவில்லை உயிரோடுதான் இருக்கி றேன் போலும். மெல்லியதாய் சந்தோஷம் அடி வயிற்றில் பரவியது. இறைஞ்சும் பார்வையுடன் எதிரே மனைவி கையில் கண்டங்கத்திரி கசாயத்துடன் நின்று

கொண்டிருந்தாள். நெற்றியில் ஏதோ மொட மொடத்தது. தலைவலிக்காக போடப் பட்ட சுக்குப் பத்து. குழந்தைகள் ஆளுக் கொரு மூலையாக சுருண்டு படுத்துக் கிடந்தார்கள்.

“எனக்கு என்ன ஆச்சு?” பரத்.

“குளிர் காய்ச்சல்!” மனைவி.

“குழந்தைகள் சாப்பிடலையா?”

“அப்பா சாப்பிடலையாம்!”

“சாம்பார் வச்சு சாதம் ஆயிடுச்சா?”

“இல்லை, கஞ்சிதான் வச்சேன்”

“ஏன்?”

“உங்களுக்கு உடம்பு முடியலையே!”

“நீயும் சாப்பிடலையா?”

“நீங்களும், குழந்தைகளும் சாப்பி டாம நான் எப்படி..?”

அப்பா சாப்பிடவில்லை என்பதால் பிள்ளைகள் சாப்பிடவில்லை. பிள்ளைகளும் கணவனும் சாப்பிடவில்லை என்பதால் அவள் சாப்பிடவில்லை. பரத்துள் மையம் கொண்டிருந்த 'நான்'செத்துவிட்டது. மனதுள் எழும்பிய சலனங்கள் அடங்கின. நீண்ட நாள் புயல் மழைக்கு பின்பு, புயல் ஓய்ந்து மாமூல் வாழ்க்கைக்கு திரும்பியது போன்ற உணர்வு ஏற்பட்டது பரத்துக்கு.

மனைவியும் இரண்டாவது தாய் தான். பரத் தனது தவறுகளை மனைவி யிடம் கூறி சமரசம் செய்து கொண்டான். பின்பு, தனது மேல் சட்டையை அணிந்து கொண்டு பஜாருக்கு கிளம்பினான். பினாயிலும், ப்ளீச்சிங் பவுடரும் வாங்கத்தான். வீடெல்லாம் அழுக்கு. கழுவி விடப் போகிறான்.

■

# சிறகொடிந்த பறவை

சிறகொடிந்த பறவையாய் இன்னல்களில் சிக்கியே
பிறகென்ன வாழ்வினி என்றெண்ணி கலங்கியே
இன்றைய நாளில் தளர்வுகள் கொண்டால்
இனிவரும் நாளின் முடிவுதான் என்னே?

வாழ்க்கை எப்போதும் மலர்களின் மெத்தையா?
வாழ்வதனை நாமும் வெறுப்பதும் முறையா?
இன்னல்கள் வருவதில் அலசித் தேடி
இதோ வாய்ப்பென உடும்பாய்ப் பிடி!

பற்றிக் கொண்டப் பிடியதனை விடாது
வெற்றியேணியில் முன்னதாக ஏறிச் செல்!
இலக்கினில் மட்டுமே குறியாகவே இரு!
இடையூறானப் புலம்பல்களை மனதில் அறு!

இதுவும் கடந்தே போகும் என்று
இசைபட வாழ வெற்றி நடைபோடு!
நாளைய வாழ்வில் நம்பிக்கை வைத்திடு!
நாடே போற்றிட நல்லதையே செய்திடு!

இதுவே விதியோ என்பதும் மெய்யோ?
இயலாது எனவும் இருந்திடல் நன்றோ?
உனக்குள் நொந்துப் போவதை விடு!
உனக்குமோர் காலம் வரும் பொறு!

காலம் என்பதுவும் ஒரு சக்கரந்தானே?
காணதை கீழிலிருந்து மேலேயும் வரும்!
கண்ணீர் விடும் நிலையிதும் போகும்!
காலம் நல்லதொரு தீர்ப்பையும் சொல்லும்!

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

**நேர்கண்டவர் : தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்**



# தமிழ்த்தொண்டாற்றும் மருத்துவச் செம்மல்

பொதுவாகவேதமிழ்ஆசிரியர்களைவிட.மற்றதுறைகளில்உள்ளவர்களேதமிழில் கோலோச்சி வருகிறார்கள் என்பது உண்மை. பொறியாளர்களும் மருத்துவர்களும் தமிழ்த்தொண்டை ஆற்றிவந்துள்ளனர் தற்போதும் ஆற்றிவருகிறார்கள் என்பதற்கு பொறியாளர் வா.செ.குழந்தைசாமி மருத்துவர் ஜெய.இராஜ மூர்த்தி போன்றோரை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பொறியியலில் சேர்ந்த முதல்மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மருத்துவப்படிப்பு பயில இடம்கிடைத்தவுடன் அதனைக் கைவிட்டுவிட்டு மருத்துவப் படிப்பைக் கற்று சிறந்த மருத்துவர்களாகவலம்வருவதைநாம்காணலாம்.அப்படிப்பட்டமருத்துவரேஇன்றுநமக்கு நேர்காணல் வழங்க உள்ளார். ஆம் சென்னை பள்ளிக்கரணை காவல்நிலையத்திற்கு எதிரில் உள்ள மேடவாக்கம் கல்பனா பல் நோக்கு மருத்துவமனையின் நிறுவனர். அரசு மருத்துவக்கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் . வாழ்நாள் சாதனையாளர் உட்பட பலவிருதுகளைப் பெற்றவர். தமிழ்க் கவிதைகளை சிறுவயது முதற்கொண்டு எழுதி வருபவர்.

**முனைவர் கவிக்கோ ஜெயக்குமார் பலராமன்** M.B.,B.S.., M S (General Surgery), D.A, C.R.S (Indira Gandhi open University), D P.H ( Admin ), .D.(Alternate medicine ), F A I.M.S. , F.C.G.P (Indian medical association ), M.Sc. General Psychology ( Madras University ), D.Lit.(Jerusalem Medical University Vellore ), D Lit. ( International Tamil University America )

அவர்களைத்தான் இம்மாத தமிழ்நெஞ்சம் இதழ் க்காக நேர்காணல் செய்துள்ளோம்

வணக்கம் ஐயா

பிரான்சு நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ்நெஞ்சம் திங்களிதழின் ஆசிரியர் குழு சார்பாக இனிய வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணக்கமும் மனமார்ந்த நல்வாழ்த்துகளும் ஐயா..

**உங்களது சொந்த ஊரைப்பற்றியும் பெற்றோரைப்பற்றியும் கூறுங்களேன்**

ஐயா.. நான் பிறந்தது முன்னாள் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ளடங்கிய சோழ சிம்மபுரம்.. தற்காலத்தில் அது ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ளடங்கிய சோளிங்கர் என மருவி விட்டது. ஆனால் அதனுடைய இயற்பெயர் திருக்கடிகை இரண்டு பள்ளிகளில் நான் எனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தேன். சி.எஸ்.ஐ ஆரம்பப்பள்ளியில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படித்தேன். குட் லெட் மேல்நிலைப்பள்ளியில்.. ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்றேன். ஆரம்ப காலம் முதலே ஆசிரியர்களுடன் மிகுந்த நெருக்கமான நட்பை வளர்த்துக்கொண்டு என்னுடைய படிப்பைத் தொடர்ந்தேன்.. இன்றும் எனக்குப் பாடம் சொல்லித் தந்த பல ஆசிரியர்கள் என்னுடன் தொடர்பில் இருக்கிறார்கள். இது நாள் வரை நான் பெற்ற அனைத்து வளர்ச்சிகளுக்கும் அவர்களின் ஊக்கமும் அறிவுரைகளுமே காரணம்.

அப்பா பலராமன். தீயணைப்புத் துறையில் ஓட்டுனராகப் பணியாற்றியவர். அம்மா அற்புதம்மாள் மகப்பேறு நலச் செவியராக சோளிங்கரில் இறக்கும் வரை பணியாற்றி.. அனைத்து மக்களிடமும் நற்பெயரைச் சம்பாதித்தவர். இப்போதும் இரண்டு தலைமுறைக்கு முன்புள்ள நபர்களைச் சோளிங்கரில் கேட்டாலும் என்னுடைய தாயின் பெயரைச் சொல்வார்கள் அவர்களுடைய பிள்ளைகளை என்னுடைய அம்மா தான் பிரசவம் பார்த்தார்கள் என்று.. அவரே நான் மருத்துவத் துறைக்கு வர முன்னோடியாக இருந்தவர். இறைவனின் அருளால் எனது இளமைக்காலம்.. மிகுந்த மகிழ்ச்சியுடனும் நட்புகளும் உறவுகளும் சூழ்ந்து வளர்வதாக அமைந்திருந்தது.

**சோளிங்கர் இலக்குமிநாராயணன் திருக்கோயில் சென்றுள்ளீர்களா? இப்போதும் செல்வதுண்டா? அதன் சிறப்பு என்ன?**

கண்டிப்பாக ஐயா சோளிங்கரில் உள்ள இலக்குமி நாராயணன் திருக் கோயில் ஒரு மலை வாசஸ்தலம். இங்கு விஷ்ணு யோக நரசிம்மராக இருந்து அருள் அளிக்கிறார்.

சென்னையில் நடந்த அனைத்திந்திய தமிழ்ச்சங்க விழாவில் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் மற்றும் தமிழறிஞர்களுடன் மருத்துவர்...



இது 108 திருத்தலங்களில் ஒன்று. அங்கு இருந்த வரை நான் கார்த்திகை மாதத்தில் தவறாமல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மலை மீது ஏறி இறைவனை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன் கூடவே என்னுடைய நண்பர்களும் வருவதால் எங்களுக்கு மலை ஏறி இறங்குவதில் சிரமம் இல்லாமல் இருந்தது. யோக நரசிம்மர் திருக்கோயில் சுமார் 1300 படிகளுக்கு மேல் கொண்டது.

அதைத் தவிர பள்ளிக் காலத்தில் சாரணர் அமைப்பின் மூலமாக அங்கு சென்று சேவையாற்றி இருக்கிறேன். இதற்கு மூல காரணமாக இருந்தவர் என்னுடைய பள்ளியின் சாரண ஆசிரியர் திரு பட்டாபிராமன் அவர்கள்.

மேலும் அன்றைய காலகட்டத்தில் சோளிங்கரில் உள்ள அனைத்து பூசாரி களின் இல்லங்களில் நிகழ்ந்த பிரசவங் களுக்கு என்னுடைய தாய்தான் உதவி செய்திருப்பார். எனவே அங்கு சென்றால் அவருக்கென தனி மரியாதை உண்டு கூடவே எங்களையும்.. அங்குள்ளவர்கள் சிறப்பாகக் கவனிப்பார்கள்.

இன்றும் நேரம் கிடைக்கும் பொழுது என்னுடைய சொந்த ஊருக்குச் சென்று அப்படியே இறைவனையும் தரிசித்து வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன்.

பள்ளிகாலம்தொட்டே படிப்பில் முதல்மாணவராகவே வந்துள்ளீர்கள்? அதன் இரகசியம் என்ன?

இரகசியம் என்று தனியாக எதுவும் இல்லை ஐயா. ஏழாம் வகுப்பு வரை நானும் ஓர் சாதாரண மாணவனாகத்தான் படித்தேன். ஆனால் மதிப்பெண்ணிகள் எடுப்பதில் வகுப்பில் முதல் ஆறு இடத்தில் ஏதாவது ஒரு இடத்தைப் பிடித்து விடுவேன். இப்படி இருக்கும் பட்சத்தில் என்னை அறியாமல் ஒரு நேரம் நான் வகுப்பில் முதல் மாணவனாக வந்தேன். அன்றைக்கு கிடைத்த மரியாதை என்னுடைய மனதை முழுவதுமாக மாற்றி விட்டது. இனிமேல் நன்றாகப் படித்து "அந்த முதல் இடத்தை"த் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்திலேயே தொடர்ந்து நான் நன்றாகப் படித்து முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டேன்.

முதல் மதிப்பெண்ணைப் பெற்றால் "வரும் மரியாதை கூட ஒரு புகழ் போதை போலத்தான் போலும்." விடாமல் நுகர்ந் திட எனக்கு அது ஒரு உந்துதலாக அமைந்தது.

இன்றும் எனது பெயர்... நான் படித்த குட் லெட் மேல்நிலைப் பள்ளியில் இறுதியாண்டின் முதல் மாணவனாக வந்து தங்கப்பதக்கத்தைப்பெற்றதற்கானபலகை அங்கே உள்ளது. மலரும் நினைவுகளாக என்னுடைய குடும்பத்துடன் அங்கு சென்று என்னுடைய பிள்ளைகளுக்கு நான் படித்த இடங்களை காண்பித்ததும் அந்த பலகையில் எனது பெயர் இடம் பெற்று இருப்பதையும் காண்பித்தது மிகவும் பெருமையாக இருக்கிறது.

சென்னை மையத் தொழில்நுட்பப் பயிலகத்தில் சேர்ந்துவிட்டு இடைநின் றதற்கு பின்னாளில் வருந்தியதுண்டா?.

சென்னை மைய தொழில்நுட்ப பயிலகத்தில் நான் "இரசாயனப் பொறியா ளராக « படிக்க பத்தாம் வகுப்பு முடிந்ததும் வாய்ப்பு கிடைத்து.. சேர்ந்த இரண்டே நாளில் மனம் மாறி.. பின்பு குட் லெட் மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன்.

மேல்நிலைப்பள்ளி முடித்த பின்பும் கூட மருத்துவ இடத்திற்கான கலந்தாய்வு முடிந்து முடிவு வெளியாக கால தாமதமானதால் மதுரையிலும் , சென்னை அண்ணா பொறியியல் கல்லூரியிலும் பொறியாளருக்கான இடம் கிடைத்து.. என் படிப்பைத் தொடர்ந்தேன். முடிவாக நான் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த மருத்துவத்துறையில் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்ததால் மருத்துவத்தில்




கவிஞர் முத்துலிங்கம் அவர்களிடம் விருது பெறுகிறார் மருத்துவர். அருகில் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார்

என்னுடைய படிப்பைத் தொடர்ந்து. அதிலே உச்சப் படிப்பு வரை படித்து முடித்தேன். ஆனால் நான்.. பொறியாளர் படிப்பை நிறுத்தியத்திற்காக பின்னாளில் எப்போதுமே வருந்தியது கிடையாது.

ஒவ்வொரு நோயாளிகளையும் நான் பார்த்து அவர்களின் நோய்கள் சுகமான பின்பு வந்து என்னை வாழ்த்துவது எனக்கு மிகுந்த ஆனந்தத்தை அளிக்கின்றது. மனநிறைவைத் தருகிறது. மருத்துவத்தைச் சேவையாகவும் தொழிலாகவும் மகிழ்ச்சியுடன் இன்றளவும் மனமாரச் செய்து கொண்டு வருகிறேன்.

மருத்துவராகப் படிப்பதுதான் சிறந்தது எனக் கருதுகிறார்களா?

மருத்துவராகப் படிப்பதுதான் சிறந்தது என்று நான் சொல்ல முடியாது. அனைவருக்கும் மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்கும் என்று எப்படி உறுதியாகச் சொல்வது?? இடம் கிடைத்தால் கண்டிப்பாக சிறந்த முறையில் படித்து சேவையாற்றுவதே சிறந்தது என்று நான் கருதுகிறேன். மறுபிறவி என்று ஒன்று இருந்தால் அதிலேயும் எனக்கு மருத்துவத்தில் இடம் கிடைத்து இன்று போலவே அன்றும் வாழ்ந்திடவே நான் இறைவனிடம் வேண்டிக் கொள்வேன்.

பொறியியற் படிப்பை விட்டுவிட்டு மருத்துவக்கல்லூரி நுழைந்த அந்த நாளைய அனுபவம் பற்றி...

அது ஒரு “கனாக்காலம்” என்று சொல்வார்களே அதைப் போலத்தான். அன்றைய காலகட்டத்தில் அண்ணா பொறியியல் கல்லூரியில் என்னுடன் படித்தவர் அன்றைய கல்வித்துறை அமைச்சரின் மகன். அவரும் நானும் நெருங்கிய நண்பர்கள் இருவருக்கும் மருத்துவ துறையில் படிக்க இடம் கிடைக்கும் என்று மிகுந்த நம்பிக்கையோடு இருந்ததால்.. மிகவும் மகிழ்ச்சியுடன் அன்றைய நாட்களைக் கழித்தோம். கடைசி நிமிடம் வரை பொறியியல் படிப்பை மிகுந்த ஈடுபாடுடன்தான் படித்து வந்தேன். ஒவ்வொருதுறையிலும் அதற்கானசிறப்புகள்

உண்டு அல்லவா?? அதைப் போலத்தான் பொறியியல் படிப்பும்.

உங்கள் துணைவியாரும் மருத்துவ ராக உள்ளார்களே! உங்கள் திருமணம் காதல்திருமணமா?

ஆமாம் ஐயா.. என்னுடைய துணைவியார் திருமதி கல்பனா ஜெயக் குமார் என்னுடன் மருத்துவக் கல்லூரியில் படித்தவர். என்னுடைய நெருக்கமான நண்பர்.

பின்பு மனங்கள் இணைந்து ஒரு வரை ஒருவர் புரிந்து கொண்டபின் காதலாக அது வளர்ந்து பின்பு திருமணத் தில் முடிந்தது. ஆரம்பத்தில் இரு வீட்டு எதிர்ப்பிலும் பின்பு சற்றே தணிந்து இரு வீட்டு ஆதரவிலும் திருமணம் முடிந்து இன்று நல்லதொரு வாழ்க்கையை நடத்தி வருகிறோம்.

மூன்று பிள்ளைகள்.. மூத்த மகள் மருத்துவத் துறையில் முதுகலைப் பட்டம் முடித்து இப்போது நுண்ணுயிரியல் சிறப்பு மருத்துவராக பெங்களூரில் இருந்து வருகிறார். இரண்டாவது மகள் மருத்துவம் படித்து வருகிறாள். மூன்றாவது மகனும் இப்போது ஜிப்மர் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துள்ளார்

உங்கள் மாமனார் ஊரான கும்பகோணம் வந்துள்ளீர்களா? அதன் சிறப்பென எதைக் கருதுகிறீர்கள்?

புதுவை சட்டமன்றச் சபாநாயகர் திரு ஏம்பலம் செல்வம் அவர்களுடன்...



கண்டிப்பாக ஐயா.. கும்பகோணத் திற்கு நான் பலமுறை வந்ததுண்டு. திருமண மான புதிதில் அவர்களுடைய உறவினர் கள் இல்லத்திற்கு சென்று அவர்க ளுடன் நாட்களை கழித்தது மறக்க முடியாத நினைவாக இன்றளவும் நினைவில் உள்ளது. கும்பகோணம் என்றாலே கோயில்களின் நகரம் என்றுதான் சொல்வார்கள். தடுக்கி விழுந்தால் பிள்ளையார் கோயில் என்பார்கள் ஆனால் இங்கு தடுக்கி விழுந்தால் அனைத்தும் கோயில்களே. தெருவுக்குத் தெரு..கோயில்கள் தான் இங்கு. சக்கரபாணி திருக்கோயில் முதல் சாரங்கபாணி திருக்கோயில் வரை..

கும்பகோணம் கோயில்களுக்குப் புகழ்பெற்ற நகரம். இன்று அந்த கும்ப கோணம் என்ற பெயரை நாம் போகும் நெடுந்தூர பயணங்களின் சாலைகளின் ஓரங்களில் காணலாம் ஆம் ‘‘கும்பகோணம் டிகிரி காபி’’ என்று.

அத்தனை சிறப்பு வாய்ந்தது கும்ப கோணம் காபி. மூன்று முறை மகா மதத்திற்கு என்னுடைய குடும்பத்தாருடன் கும்பகோணத்திற்கு வந்துள்ளேன் .

படிக்கும்போதே கவிதை எழுதிப் பணப்பரிசு பெற்றுள்ளீர்கள் அந்த அனுபவம் எப்படி இருந்தது?

தமிழன்னையின் அருள் எனக்கு இருந்தது என்று தான் சொல்ல வேண்டும். நான் தமிழில் எழுத ஆரம்பித்தது என்னுடைய 12ஆம் வயதில். (ஏழாம் வகுப்பு படிக்கும் போது) முதலில் நான் எழுதியது ஒரு கதை ‘‘ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்.’’

மெல்ல மெல்ல கவிதைக்கு மாறியது என் மனம். நிறைய கவிதைகளை நானாகவே புதுக்கவிதை வடிவிலே எழுத ஆரம்பித்தேன்.

தினத்தந்தி வார இதழில் என்னு டைய கவிதை இடம்பெற்றமைக் காக எனக்கு 25 ரூபாய் ‘‘பண ஆணை’’

வந்தது. என்னை அது மேலும் எழுத ஊக்கப்படுத்தியது இன்றளவும் என்னை எழுதத் தூண்டிக் கொண்டிருக்கிறது. அன்றைய காலகட்டத்தில் அது எனக்கு ஒரு மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது.

கவிஞராகப் பாடகராக மருத்துவ ராக எவ்வாறு பலதுறைகளில் பணிக்கு முடிகிறது?

மருத்துவத் துறையில் எந்நேரமும் நான் நோயாளியுடன் பயணிப்பதால் எனக்கென்று சில மணி நேரம் ஒதுக்கிக் கொள்ள சமீப காலமாக முடிவெடுத்தேன். அதன் நிமித்தமே காலையில் ஒரு மணி நேரம் எழுதுவதும்... ஒரு மணி நேரம் பாடுவதும்... மாலையில் 2 மணி நேரம் நடைப்பயிற்சி மேல் கொள்வதையும் விடாமல் பற்றிக் கொண்டுள்ளேன் இன்றளவும். எட்டு மணி நேர வேலை யில் நான் மருத்துவத் தொழிலில் முழு ஈடுபாடுடன் செயல்பட்டுக் கொண்டுள் ளேன். கிட்டத்தட்ட நான்கு தலைமுறை நோயாளிகளைப் பார்த்து வருகிறேன்.

புதுக்கவிதைகளிலேயே கவனம் செலுத்தும் தாங்கள் ஏன் மரபுக்கவிதை பக்கம் செல்வதில்லை?

புதுக்கவிதை எனக்கு மிகவும் பிடித்த ஒன்றாகும் அதற்காக மரபுக் கவிதை எழுத வேண்டாம் என்று இல்லை. ஒரு வட்டத்திற்குள் அமைந்து அதற்குள் எழுதி சிறப்புடன் இருப்பது மரபுக் கவிதை. உண்மையிலேயே அது மிகவும் சிறந்தது. இருந்தும் எனக்கிருக்கும் காலத்தை மனதில் கொண்டு இப்போது புது கவிதையிலேயே என்னுடைய மனம் நாட்டமுடன் இருக்கிறது கண்டிப்பாக மரபுக் கவிதைகளை எழுதுவேன் அது காலத்தின் கைகளில் தான் உள்ளது.

இதுவரை எழுதியுள்ள நூல்கள் பற்றி.



திரைப்பட இயக்குநர் யார் கண்ணன் அவர்களுடன்...

இதுவரை நான் ஏழு கவிதை தொகுப்பு நூல்களையும் ஒரு உரைநடை நூலையும் எழுதி உள்ளேன்.

கவிதை தொகுப்புகள் அனைத்தும் புதுக்கவிதைகளே.

என்னுடைய முதல் கவிதைத் தொகுப்பு நூல் "கற்பனை வித்துக்கள்.." சுமார் 300 பக்கங்கள் கொண்டது அந்த கவிதைத் தொகுப்பு நூல்.

அதற்காக நான் நக்கீரன் நூலாய்வு அமைப்பிலிருந்து சிறந்த கவிதை புத்தகத் திற்கான பதக்கத்தையும் தமிழ்ச் செம்மல் விருதையும் வாங்கியுள்ளேன்.

மேலும் உலகத் தமிழ் பல்கலைக் கழகத்திடமிருந்து "அறிவொளி" சான்றி தழையும் பதக்கத்தையும் வாங்கியுள்ளேன்.

மற்ற கவிதைத் தொகுப்புகள்..

"பகலிலும் கனவுகள் என்னோடு பேசும்"
"பாக்களில் மின்னும் வைரங்கள்"
"தாழம்பு வாசம் தரை எங்கும் வீசும்"
"மனதோடு பேசும் மாயங்கள்"
"வ(எ)ண்ண விழுதுகள்"
"கார்கால மேகங்கள்"
உளவியல் சார்ந்து உரைநடையில்
பொது மக்களுக்கான நூலாக
"மனமே ஓ... மனமே நீ... மாறிவிடு..."
இப்போது எழுதிக் கொண்டு வருவது
நற்றமிழ் நாலடியில் நறுந்தேனாய்த்
திருக்குறள் "என் பார்வையில்..
அறிவியலும் ஆன்மீகமும்.."

தாங்கள் பெற்ற விருதுகளில் சிறந்தது என்று எதனைக் கருதுகிறீர்கள்?

மருத்துவத்துறையில் நான் மூன்று முறை சிறந்த மருத்துவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் பெற்று கௌரவிக்கப் பட்டேன். இருந்தும் நான்கு மாதங்களுக்கு முன்பு இந்து தமிழ் நாளிதழில் சார்பாக நடந்த கணக்கெடுப்பில் ''சிறந்த மருத்துவ நட்சத்திரம்'' என்ற விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

விழா நடக்கும் இரண்டு நாட்களுக்கு முன்பு நான் பார்த்துக் கொண்டிருந்த நோயாளிடம் கூறினேன் நாளை மறுநாள் வர வேண்டாம் எனக்கு ஒரு நிகழ்ச்சி இருக்கிறது என்றேன். நெடு நாட்களாக பழகிய நோயாளி என்பதால் நண்பராகக் கேட்டார்.

அப்படி என்ன சார் நிகழ்ச்சி ?

சிறந்த மருத்துவராக தேர்ந் தெடுக்கப் பட்டு "மருத்துவ நட்சத்திரம்" விருதை வாங்கச் செல்கிறேன் என்றேன். அட போங்க சார் நீங்க எப்போதுமே எங்களுக்கு சிறந்த மருத்துவர்... தான். உங்களுக்கு என்ன தனியா பட்டம் வேணும்?? நாங்க தருகிறோம் சார் நீங்க சிறந்த மருத்துவரென்று என்றார். அதையே இன்றளவும் நான் பெற்ற சிறந்த விருதாகக் கருதுகிறேன். மக்களுக்காக சேவை செய்யும் நான் மக்களிடமிருந்து அந்த வார்த்தையைக் கேட்டது தான் எனக்கு மிகப்பெரிய விருதாக மருத்துவத்துறை சார்ந்த வரையில் விளங்குகிறது

தமிழ்த் துறையைப் பொறுத்தமட்டில் முகநூலில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேல் சான்றிதழை வாங்கியுள்ளேன் 70க்கும் மேல் நேரடி நிகழ்வுகளில் பங்கு பெற்று சான்றிதழ்களையும் பதக்கங்களையும் பதாகைகளையும் பெற்றுள்ளேன். அப்படி ஒரு நாளில் திருச்சியில் இருந்து இல்லம் நோக்கி வருவதற்காக இரயில் நிலையத்தில் காத்திருந்தோம். நானும் எனது நண்பரும் பேசிக் கொண்டிருக்கும் போது முகநூலில் பார்த்தேன் தஞ்சை தமிழ் மன்றத்தின் விருது அறிவிப்பு.

வருடத்திற்கு "ஆறு" நபர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் விருது. அது பற்றி அன்றைக்கு என்னுடைய நண்பரிடம் பேசிய போது மிகவும் கடினம் இது போன்ற விருதுகளை நாம் பெறுவது என்றார் அவர். ஆனால் அடுத்த இரண்டு நாட்களில் நீங்கள் என்னைத் தொடர்பு கொண்டு இந்த ஆண்டு அந்த விருது எனக்கு வழங்கப்படுவதாக அறிவித்தது "ஆச்சரியத்தின் உச்சத்திற்கு" என்னை அழைத்துச் சென்றது. இந்த நிகழ்வும் எனக்கு மறக்க முடியாத நிகழ்வாக இன்றளவும் அமைகிறது.

மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றிய போது நடந்த மறக்கவியலாத சம்பவம் ஏதாவது...

கண்டிப்பாக பல நிகழ்வுகளை நான் மணிக்கணக்கில் சொல்லிக் கொண்டே போகலாம். இருந்தாலும் ஒன்று இரண்டு நிகழ்வுகளை இங்கே கூறுகிறேன்.

அறுவை சிகிச்சை நிபுணராக படிப் பதற்காக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த போது தீக்காயத்தால் பாதித்த ஒருவருக்கு காலில் உள்ள காயத்திற்காக மருந்து போட்டு விட்டு திரும்பினேன். அந்த நோயாளியுடன் வந்தவர் என்னுடைய சட்டை மேல் பாக்கெட்டில் நூறு ரூபாய் வைக்க முயன்றார். என்ன இது?? வென்று நான் அவரிடம் கேட்டபோது இல்ல சார் சும்மா வச்சுக்கோங்க அப்படி என்றார். தயவு செய்து எடுத்து விடுங்கள் நான் இங்கே படிக்க வந்திருக்கிறேன் என்னுடைய செயலை நான் சிறப்புற செய்து அதில் தேர்ச்சி பெறவே இங்கே வந்தேனே தவிர உங்களிடமிருந்து கையூட்டு பெறுவதற்காக இல்லை என்று கூறியதும் ஒரு நிமிடம் அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். அப்புறம்



நூல் வெளியீட்டு விழாவில் இயக்குநர் அரவிந்தராஜ், கல்கண்டு லேனா தமிழ்வாணன், ஜவஹர் மற்றும் சிந்தைவாசன் அவர்களுடன் மருத்துவர்.

சென்று விட்டார்.

இரண்டாவது மயக்கவியல் துறையிலே நான் முதுகலைப் பட்டம் பெறுவதற்காக அரசு சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று கொண்டு இருந்த நேரம் நுரையீரல் புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு தீராத வலி இருந்தது என்னுடைய பேராசிரியர்களின் அனுமதியோடு அதற்கான சிகிச்சை முறையை ''ஆராய்ச்சி ரீதியில்'' நான் என்னுடைய செலவில் மருந்தை வாங்கி அறுவை அரங்கில் அந்த நோயாளிக்கு செலுத்தினேன். செலுத்தி விட்டு நான் கைகளை கழுவிக் கொண்டு வெளியே வந்த போது... அவரும் அவருடைய குடும்பத்தாரும் என்னுடைய காலில் விழுந்து... ஐயா நீங்க தான் எங்களுக்கு தெய்வம் என்றார்கள். ஏனென்றால் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து ''வலியால்'' அந்த நோயாளி பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார். உறக்கம் என்பது அவருக்கு ஒரு கனவாகவே அமைந்திருந்த காலம். நான் ஊசி செலுத்திய உடனே அவருக்கு அந்த நரம்பு செயல் இழந்து வலி உடனே போய்விட்டது அந்த தாங்க முடியாத மகிழ்ச்சியில்தான் அவர்கள் அப்படி செய்தார்கள் அது எனக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது. இன்று நினைத்தாலும் மருத்துவம் பற்றிய பெருமை மேலோங்கத்தான் செய்கிறது.

இதைப்போல நிறைய நிகழ்வுகளை சொல்லிக் கொண்டே போகலாம் ஆனால் அதற்கான நேரமும் இடமும் இல்லாததால் இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

**மருத்துவப்பணி இலக்கியப்பணி எவ்வாறு சமமாகப் பயணிக்க முடிகிறது?**

மருத்துவப்பணி மன நிறைவான தொழிலாக எனக்குப்படுகிறது. நோய்




முன்னாள் நீதிபதி சந்துரு, முனைவர் கவிக்கோ ஜெயக்குமார் பலராமன்.

களுடன் வரும் நோயாளிகளை குணப்படுத்தி அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியை தருவதால் அதைவிட சிறந்த பணி எதுவும் இல்லை என்று நான் உறுதிப்படக் கூறுகிறேன்.

இலக்கியப் பணி தமிழன்னைக்கு நான் செய்யும் சேவையாகவும்.. தமிழனாகப் பிறந்தமைக்கு என்னுடைய கடமையை நான் செய்வதைப் போலவுமே நினைத்துக் கொண்டிருக்கிறேன். முத்தமிழில் முடிந்தவரை பணியாற்றுவதையே நான் விரும்புகிறேன்.

**உங்களுக்குப் பிடித்த கவிஞர்கள் நால்வரைக் குறிப்பிடுங்களேன்.**

மகாகவி பாரதியார்
பாரதிதாசனார்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்
கவியரசு கண்ணதாசன்

**இக்கால வளரும் கவிஞர்களுக்குத் தங்கள் அறிவுரை என்ன?**

தமிழன்னையின் அருளோடு கற்பனைச் சிறகுகளை விரித்து. கருத்துக் களை எதுகை மோனையுடன் இணைத்து... இயைபு நடையுடன் பாக்களை புனையும் அனைவருமே நல்ல கவிஞர்கள் தான். புதுக்கவிதைகளுடன்மரபுக்கவிதைகளையும் பயின்று"காலத்தால்அழியாதகவிதைகளைப் படைத்து நம் தமிழைக் காப்பதே கடமை" என்றிருந்தால் நல்லது. தற்காலத்தில் தமிழுக்கான எதிரிகள் நாற்புறமிருந்தும் நம்மைத் தாக்க முற்படுகிறார்கள். அவர்களிடமிருந்து நம் மொழியை.. தமிழ் மொழியை காப்பாற்றிட.. தமிழனென்ற உள் உணர்வோடு செயல்படுவது நல்லது என்று நினைக்கிறேன். அனைவரும் இணைந்து அதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டால்.. தமிழ் மண் இருக்கும் வரை.. மாசு படாது வாழும்

**தமிழ்நெஞ்சம் இதழ் குறித்து தங்களின் கருத்து என்னவாக இருக்கும்?**

தமிழ்நெஞ்சம் திங்களிதழ் பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ்த் திங்களிதழ். பல்சுவை உணர்வுகளை பலரும் இரசிக்கத்தக்க வகையில்.. பல ஆளுமைளுடனான சந்திப்புகள் மற்றும் பல தமிழ் சார்ந்த கருத்துக்களையும் பதித்து தமிழ் மக்கள் மனதில் நாளும் இடம் பெறச் செய்கின்ற ஒன்று. தமிழால் இணைந்து தமிழைப் போற்றி தமிழை வளர்ப்பதற்காக வெளிவரும் ஒரு உன்னதத் திங்களிதழ் என்பது என் கருத்து.

மிக்க நன்றி மகிழ்ச்சி ஐயா..

ஒரு நல்ல மனிதரை ஒரு நல்ல தமிழ்ப்பற்றாளரை ஒரு நல்ல பண்பாளரைச் சந்தித்த மகிழ்வில் அவருடன் காலைச் சிற்றுண்டியை முடித்து விட்டு அவருக்கு வாழ்த்துகளைக்கூறி விடைபெற்று வந்தோம். ■

# வெண்பாவில் காதல் சந்தம்...



தரிகிட தத்தோம் தரிகிட தத்தோம்
தரிகிட தத்தோம் தகதோம் - தரிகிட
தத்தத் தரிகிட தத்தத் தரிகிட
தத்தத் தரிகிட தோம்.

.

விழிகளில் மோதி விளைவுகள் கோடி
எழிலுற நெஞ்சில் இசைய - பொழிலெழில்
முத்துப் பதுமையை முன்பின் தழுவிட
சித்தம் அலைகிற தே.

.

அடடட காதல் அதுவென எண்ணி
கடகட வென்றே கனிய - இடஇட
கன்னக் குழியினில் காமன் கணைவிட
எண்ணம் விழைகிற தே.

.

தழுவிடும் காற்றும் தணலென மாறி
முழுவுடல் மோகம் முதிர - எழுகிற
மாலை நிலவொளி; மல்லிப் புதுமணம்
லீலை புரிகிற தே.

.

கனியெழில் கண்டு கவினுறு சோலைக்
கனிகளும் துன்பில் கரைய - இனியிவள்
தேகச் சுவையினைத் தீண்டும் வழியினை
மோகம் தொடர்கிற தே.

.

கனவுகள் எல்லாம் கதவுகள் மூடத்
தினவினில் நானுந் திரிய - உணவினை
உண்ணும் பொழுதிலும் உள்ளம் சுவையினை
எண்ணக் கலைகிற தே.

.

பகலினில் ஏக்கம் பகையெனத் தூக்கம்
அகலொளி பார்த்தும் அழுதே - முகவெழில்
பூவாய் உதிர்கிற பொன்சொல் வரும்வரை
தீவாய்த் தெரிகிற தே.

.

சிலையெழில் பெண்ணே சிமிழெனும் கண்ணே
இலையொரு காலம் இனியும் - விலையறு
காதல் தருகிற கண்கள் தடையுறச்
சாதல் சரித்துவி டும்.

.

மனமெனும் கூட்டில் மலரென நீயும்
வனமென நாளும் வளரக் - கனமெனத்
தூக்கும் சுமைகளும் தூசாய்க் குறைகிற
தாக்கம் தெரிகிற தே.

.

கணைவிடு காமன் கதைகளைப் போல
எனைவிடு உந்தன் இடையில் - இணைகிற
நேரம் குழலினை நீயும் அணிகையில்
தூரம் குறைந்திடு மே.

**ஏடி வரதராசன்**

# மஞ்சக்காட்டு மைனா

கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் கிளியே
தஞ்சமென வந்தேன் நானே மயிலே
வஞ்சனை ஏதுமில்லே புள்ளே வாடி
மஞ்சக்காட்டு மைனா வரவு தேடி

கம்மாங் கரையோரம் காத்து வாங்கவே
சும்மாங்காட்டி போலாம் சோடி போட்டே
உம்மா ஏதுமிருந்தா உதட்டிலே தாடி
சம்மதமானா நானும் தருவேன் கோடி

பூ வாசம் பூவையுந்தன் வாசம் இழுக்குதடி
கூவிடும் குயிலாய் குரலில் மயக்குதடி
தாவிடும் குரங்காய் தவிப்பில் நானடியோ
ஓவியமே உலராத காவியமே நீ மானடியோ

நிலாக் காயும் நேரமோ நெருங்குதடி
உலா வரலாம் ஆனந்தமா இருக்குதடி
பலாவா இனிக்குதடி சீனியும் வேண்டாமடி
குலாவலாம் கூடிக் கும்மாளம் இடலாமடி

பக்கத்திலே யாருமில்லே மடியும் வேணுமடி
சொக்குதடி மனசும் நீ சொக்கத் தங்கமடி
வெக்கமெல்லாம் வேணாம் நான் மாமனடி
நிக்க நேரமில்ல புள்ளே நெருங்கி வாடியம்மா

பூஞ்சோலைப் பக்கம் போலாமடி புள்ளே
மாஞ்சோலையும் பக்கத்திலே இருக்குதடி
தீஞ்சுவையா தித்திக்கும் தேனடி நீயோ
நீஞ்சுதடி நினைவுகளும்  நெஞ்சில் தீயோ

மஞ்சக்காட்டு மைனா எம்மனச மயக்கிட்டியே
நெஞ்சக்கூடு நெருங்கவே நினைக்குதடி தங்கமே
கொஞ்சும் முல்லையா கொஞ்சம் வாடியம்மா
வஞ்சமில்லா நெஞ்சிருக்கு பக்கம் வாடியம்மா.

**கவிஞர் புல்லாங்குழலன்**




# பூமாக்கிழவி எனும் ராக்காச்சி

– ரிஸ்வான்

தொடர் நாவல்

பூமாக்கிழவி வழக்கம்போல கிழக்கால சூரியன் எந்திரிக்கிற முன்னாடி எந்திரிச்சி வயக்காட்டு பக்கம் வழக்கம் போல ஒதுங்க போயிடுச்சு..

வழியில எட்டி வேப்பமரத்துல குச்சி ஓடிச்சி நுனியில கடிச்சி நைஞ்சிட்டு பல் தேச்சி கிட்டே நடந்துச்சி..

அம்பிகா நாயுடு வாழைத் தோட்டத்துல பம்பு செட்டு தண்ணீர்



தொட்டியில இறங்கி முங்கி முங்கி குளிச்சது, ஒடம்புல சுத்தி இருந்த சீலைக் கந்தையை கசக்கி மேல போத்திக்கிட்டு பம்பு செட் தண்ணீத் தொட்டியில இறங்கி முங்கி முங்கி ஆயாசம் போக குளிச்சிது. கெழவி என்னிக்கும் ஒடம்புக்கு சவுக்காரம் தேய்ச்சி குளிக்காது.. காக்கா குளியல்தான். கையால அரக்கி தேய்ச்சி குளிக்கும். என்னிக்காவது தலை நர நரன்னுச்சுன்னா.. நாலனாவுக்கு கமலக் கண்ணன் கடையில சீக்காய் தூளு பாக்கட்டு வாங்கி தலையில கொட்டி தேச்சி குளிக்கும்..

ஒடம்புல சுத்தி இருந்த சீலைக் கந்தையை பூமாக்கிழவி விரிச்சி ஒலத்திக்கிட்டு குடிசைக்கு கிளம்புச்சி…

காலங்காத்தால வெயில் சுள்ளுன்னு எந்திரிச்சி வந்தது..

வழக்கம் போல அக்கம் பக்கத்து கிராமத்துல இருந்து கை குழந்தைங்களோட பூமாக்கிழவி குடிசை முன்னாடி குந்திக்கிட்டு இருந்தாங்க பூமாக்கிழவி கிட்ட கை வைத்தியம் பாக்குறதுக்கு.

பூமாக்கிழவி குடிசைக் குள்ளாரப் போயி தட்டுல சாமி குங்குமமும் விபூதியும் கொண்டாந்து எல்லாருக்கும் குடுத்துச்சி.. குழந்தைங்களுக்கு நெத்தியில் வச்சி விட்டுச்சு..பூமாக்கிழவியோட சூட்சுமம் அது.. நெஞ்சில எல்லாருக்கும் சாமி பலம் வந்துடும்.

பூமாக்கிழவி குழந்தைங்களை கிழக்கு முகமா நிக்கவச்சி முகத்துக்கு முகம்

## பூமாக்கிழவி..3

**ரிஸ்வான்**
**தேநீர் நேரக்கதை**

பார்த்து எதையோ முடிஞ்சி வச்சிருந்த முந்தானைய மூனு முறை தலைக்கு ஆரம்பிச்சி ஒடம்பு முழுக்க வட்டமா சுத்தும், பொறவு உச்சன் தலையில் இருந்து உள்ளங்காலு வரைக்கும் ஒடம்புல தேய்ச்சி கிட்டே வந்து முந்தானையில் இருந்த முடிச்சை மூணு முறை திருஷ்டி கழிச்சிட்டு..

பூமாதேவி கொழந்தை மேல இருக்குற நோய் நொடி திருஷ்டிட்டி எல்லாத்தையும் ஏத்துக்கிடு தாயேன்னு மூணு முறை முந்தானையில முடிஞ்சி வச்சிருக்கும் முடிச்சியை சர்ருன்னு பூமியில் இறக்கி மூனுமுறை தட்டும்..

குழந்தைங்களை கையில் வாங்கி உச்சி மோந்து தீட்டு மாந்தம்னு யேதாச்சும் இருக்கான்னு பாக்கும்... குழந்தைங்க மூக்குல இருந்து வெளியே வர்ற வெளி மூச்சு காத்து வாசனை உள்ளுக்குள்ளாற இழுத்து வச்சி மோந்து பாத்து உள்ளுக்குள்ள சளி இருக்கான்னும் பாக்கும். தாய்ப் பாலு குடிச்சிட்டு வந்த குழந்தையோட வாய் வாசனையைகிழவி மோந்துபார்த்தேகுழந்தை குடிச்ச பாலு வயத்துக் குள்ளாற புளிச்சுப் போயி வயத்து வலியில அழுவுதுன்னு சரியா கண்டுபிடிச்சி வைத்தியம் பார்க்கும்..எல்லாம் அவங்க அப்பத்தா கிட்ட இருந்து கத்து கிட்ட சுயம்பு வைத்தியம்..

ஆத்தா காவனூர்ல இருந்து வாறேன்.. தாயீ

பிள்ளைக்கு காய்ச்சல் கண்டு இருக்கு.. ரெண்டு நாளா.. மடியிலயே கெடக்கான்..

பூமாக்கிழவி குழந்தையோட நெத்தி யில ஒதட்டை வச்சி ஒரசிப் பாத்துச்சி சுரீர் ன்னு சூடு கண்டுச்சு..

ஏலா.. இம்புட்டு நெருப்பாக் கொதிக் குது.. பிள்ளைக்கு..

பூமாக்கிழவி குடிசைக் குள்ளாற போயி கோரோஜணம், கஸ்தூரி கொஞ் சமாக் கிள்ளி கம்மாரு வெத்தலையில வச்சி கொஞ்சமா தேன் வார்த்து சுட்டு விரலால குழைச்சி பிள்ளையோட வாயை திறந்து நாக்குல கைமருந்தை தடவி விட்டுச்சி.

பிள்ளைக்கு தாய்ப்பால் குடு மருந்து வயத்துக் குள்ளாற போவட்டும்..

சரி ஆத்தா..

மருந்தை..காலையில ராவிக்குன்னு இரண்டு வேளைக்கு வெத்தலையில தேன் விட்டு கொழைச்சி நாக்குல தடவிட்டு தாய்ப்பாலு குடு..

தட்டுல இருந்த குங்குமத்தை குழந்தை யின் நெற்றியில் இட்டுச்சி. சாமி பாத்துக்கும் ஊரு போயி சேருன்னு சொல்லுச்சி..

குழந்தையோட தாயி தன்னோட அழுக்கு கந்தை சீலை இடுப்பு முடிச்சுல அங்கிட்டு இங்கிட்டு துழாவி சில்லறைகளை பீராஞ்சி ஆத்தாவோட குங்கும தட்டுல போட்டுச்சு..

என்கிட்டே வேற துட்டு இல்லை ஆத்தா.. அடுத்தவாட்டி கொண்ணாந்து தாறேன். குழந்தை ரெண்டு நாளா மடியிலேயே கெடந்த தாலே வயக் காட்டு வேலைக்கு போவ முடியல..

கிழவிக்கு மண்டை காஞ்சி சுர்ருன்னு எகிறிட்டுது.. கோவம் உச்சிக்கு ஏருச்சு..

அராபாக்கோ.. மொத வாட்டியா ஆத்தா கிட்ட வாரியா... பக்கி மட்ட எவடி உன்கிட்ட காசு கேட்டா.. ஆத்தா கூலிக்கு மாரடிக்கிறவன்னு... நெனைக்கியா காசை மொதல்ல எடுடி செத்த மட்டை.

தாய்க்காரி கருப்பு குடைய பார்த்த காளை மாடு மாதிரி மிரண்டு போச்சு..

பூமாகிழவிக்கு எதுத்தாப்போல

இருக்குறவ நெலமையை புரிஞ்சிது

இப்பத்தான் மொத வாட்டி ஆத்தாவை தேடி வார போல இருக்கு... ஊருக்கு போவ காசு இருக்கா ..

பூமாக்கிழவி இடுப்பிலிருந்த சுருக்கு பையை உருவி சுருக்கை விரிச்சி விரலை விட்டுத் துழாவிச்சி..எட்டா மடிச்சு வச்சிருந்த இருவது ரூவா நோட்டு தட்டுப் பட்டுச்சு. உருவி அவகிட்ட கொடுத்துச்சி.. கர்ல பாக்கத்தாரு வயக்காட்டுல இறங்கி நாத்து நட்டதுக்கு எல்லாப் பொம்பளை ங்களுக்கும் சந்தோஷம் செய்ய கொடுத்தக் கூலியும்நூல்சேலையும்...குடிசைக்குள்ளப் போயி நூல் சேலையை கொண்ணாந்து குடுத்துது.. மாத்து சீலையா வச்சுக்கடி பொம்பள.. ஒன்னோட சீலைக் கந்தை ரொம்ப நயீஞ்சி போயிருக்கு..

ஊருக்கு நடந்து போவாதே வெயிலு குழந்தைக்கு காய்ச்சல் வேற.. மூல ரோட்டுல உக்காந்திரு சுந்தரம் பஸ்சு வரும் பஸ் சுல போயிரு. மூலை ரோட்டு தனபாலு டீ கடையில நாலு இட்லி வாங்கி தின்னுட்டு பசியாறிட்டு குழந்தைக்கு பன்னும் காப்பி தண்ணியும் வாங்கி வயத்துக்கு குடு மிச்சகாசுல அரிசி குருணை கஞ்சிக்காக வாங்கிக்கோ. உப்பு புளி இருந்தா மக்கியா நாள் கழிச்சி கொழைய சுடுசோறு பொங்கி உச்சிவேளைக்கு குழந்தைக்கு ரசம் சோறு கூழா கரைச்சுக் குடு. குழந்தைக்கு மூசுண்டை ஏதாச்சும் வாங்கி கொடுத்து வயத்தை பாழாக்காதே. மூனு நாளு கழிச்சி குழந்தையை கொன்னாந்து காட்டு.. சொவமாயிட்டுன்னா ஆத்தா கிட்ட வர வேணாம்..போய் வா..

ஆத்தா காய்ந்த மிளகாய் ஒன்னை சுட்டு எடுத்து மொனையை கிள்ளிட்டு பழங் கஞ்சில இருந்த நீராகாரத்தை

மிளகாய்க்குள்ளரா ஊத்தி நிரப்பி இடது கையில பிடிச்சிக்கிட்டு கஞ்சிக்குடுவையை கையால அலசி அலசி குடிச்சிட்டு மிளகாயை வாயில் வச்சி சுர்ருன்னு மிளகாய் தண்ணியை உறிஞ்சிது... மிளகாய் காரம் ஜிவ்வுன்னு உசுருல ஏறுச்சு ஆகாரமா காலைக் கஞ்சி குடிச்சிட்டு சாவகாசமா கால்களை நீட்டி உக்காந்தது.

சுருக்குப் பையை விரிச்சி கொட்டை பாக்கு ஒன்னை எடுத்து வாயிக் குள்ளப் போட்டு கிட்டு மடிச்சு வச்சிருந்த மொறட்டுக் கம்மார் வெத்தலையை எடுத்து காம்பை கிள்ளிட்டு வெத்தலையை கவுத்துப் போட்டு வெத்தலை முதுகுல சுண்ணாம்பு தடவ ஆரம்பிச்சிது....

தொடரும்

## நீடுதுயில் நீக்கப் பாடியநிலா

**தேசத்தின் விடுதலையே**
**சுவாசமெனக் கொண்டு வாழ்ந்த**
**முண்டாசுக் கவிஞனின்**
**சிந்தனையில் பலபாடல்**
**காடுகழனி நிறைந்திடவே!**
**கல்வித்திறன் மேம்படவே!**
**நீடு துயில் நீங்கிடவே!**
**தீது தந்தோன் ஒழிந்திடவே!**
**கூடிக் களித்து மகிழ்ந்திடவே!**
**அடிமை விலங்கு களைந்திடவே!**
**மண்ணில் வீரம் விளைந்திடவே!**
**பெண் உரிமை அடைந்திடவே!**
**வன்கொடுமை அகன்றிடவே!**
**பண்ணெடுத்துப் பாடி வைத்த!**
**சுதந்திர விதை தூவி வைத்த!**
**நெஞ்சில் உரம் வேண்டுமென்றே!**
**அஞ்சி சாதல் கூடாதென்றே!**
**அனுதினமும் பேசி வந்த**
**பாரதி புகழ் போற்றிடுவோம்!**
**பாரதத்தைக் காத்திடுவோம்!**



**லீ. லியாகத்அலி**

# மறக்க முடியுமா...



●

தாலாட்டு கேட்டபடித்
தாய்மடியில் வீழ்ந்தபடிக்
காலால் நடந்துக்
களித்தபடிப் - பாலாய்
வழிய உளறியென்றன்
வாய்வந்த இந்த
மொழியை மனம்மறக்கு
மோ.

●

பள்ளிப் பயின்றதுவும்
பைந்தமிழால்; நட்போடுத்
துள்ளிவிளை யாடியதித்
துய்தமிழால்; - எள்ளிநகை
ஆடியதும் இத்தமிழால்
அச்சொல் கெடுதலென
மூடியதும் இத்தமிழால்
முன்.

●

தந்தையென்னை வைததுவும்
தண்டமிழால்; ஆறுதலை
அந்தமடிச் சாய்த்துரைத்த(து)
அத்தமிழால்; - முந்திமுந்திப்
புத்தி உரைத்ததுவும்
பூந்தமிழால்; எப்படிநான்
இத்தமிழை விட்டிருப்பேன்
ஈங்கு...?

●

பாட்டி கதைசொன்னாள்
பைந்தமிழால்; அக்கதையில்
நாட்டின் அரசனுமோர்
நற்றமிழன்; - கேட்ட
வசனங்கள் ஒண்டமிழே
வாழ்வெல்லாம் இந்த
அசல்மறக் காதே
அகம்.

●

காதல் பருவத்தில்
காகிதமும் செந்தமிழே
பாதம் தொடர்ந்ததுவும்
பைந்தமிழே - தூதறிந்த
கண்ணிரண்டும் வார்த்தக்
கவியெல்லாஞ் செந்தமிழே
எண்ணம் விலகுமோ
இங்கு...?

இடம்பெயர்ந்த என்னிடம் இடையராமல் கேட்கப்பட்ட கேள்விக்கான

# தமிழ்நெஞ்சம் அமின்

அன்பர் உடன்நான்
அரட்டை அடித்ததுவும்
இன்பத் (து)டன்நான்
இருந்ததுவும் - துன்பத்தில்
துக்கம் உரைத்ததுவும்
தோளிரண்டில் சாய்ந்ததுவும்
எக்கணமுஞ் செந்தமிழே
யாம்.

செல்பேசி இல்லாத
சின்னஞ் சிறுகாலம்
சொல்லைக் கடிதஞ்
சுமந்ததுவும் - சொல்லறிந்து
அங்கோர் பதிலை
அனுப்பியதும் செந்தமிழே
எங்கும் மறவேன்
இதை.

நாற்றுநடும் பாட்டு
நடிக்கும் தெருக்கூத்து
காற்றுவழி வந்த
கவித்துளிகள் - சேற்றின்மேல்
வேலையுடன் சேர்ந்த
விடுகதையும் ஓர்பதிலும்
சோலைத் தமிழென்றே
சொல்.

திண்ணை உரையாடல்
திக்கில் அலைந்தபடி
அண்ணனுடன் தம்பியுடன்
ஆறுதல்கள் - எண்ணியெண்ணிப்
பார்த்து ரசித்தப்
பலவும் எனைப்பக்கம்
ஈர்த்ததுவும் செந்தமிழே
இங்கு.

கண்கள் விழித்துக்
கதிர்பார்த்து மீண்டுமிரு
கண்கள் உறங்கிக்
கனவறிந்து - மண்ணில்வாழ்
எல்லாப் பொழுதும்
எனது மொழிகலந்த
சொல்லை மறப்பேனோ
சொல்...?

ஆழ்கடலைத் தாண்டி
அருஞ்செல்வம் சேர்த்திடினும்
வாழ்வில் மலைபோல்
வளர்ந்திடினும் - சூழல்கள்
தத்தம் திசைமாற்றித்
தாவிடினும் செந்தமிழை
நித்தம் மறக்காதென்
நெஞ்சு.

பதிலே இது என்பதை நட்பால் சொல்லி உணர்த்துகிறேன்.

# எழுதிப் பழகுவோம் 5

தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் வலங்கைமான்



இன்று புதுக்கவிதை எழுதுவோர் குறுங் கவிதை எழுதுவோர் அவை புதிய வடிவமென்றும் தமிழுக்குப் புதியதொரு வடிவத்தைத் தாம் கொண்டுவந்ததாகவும் மார்தட்டிக் கொள்வதும் பரவலாகக் காணப்படுகிறது. ஆனால் அவை தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இது இருந்தது என்றால் நம்ப முடிகிறதா?

அது இணைக்குறள் ஆசிரியப்பா

புறநானூறு, பதிற்றுப்பத்து, பொருநராற்றுப் படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களில் இணைக் குறள் ஆசிரியப்பா உள்ளது. சிலப்பதிகாரத்திலும் இணைக்குறள் ஆசிரியப்பா காணப் படுகிறது.

அது எப்படி என இப்போது பார்ப்போமா?

ஈரசைச் சீர்கள் நான்கும் உங்களுக்குத் தெரியும்; காய்ச்சீர்களும் தெரியும். இந்த எட்டுச்சீர்களுமே பொதுவாகவே கவிதை எழுதுவதற்குப் போதுமானது.

கீழே உள்ள தொடரைப் பாருங்கள்

**“மெய்யெலாம் உலகில் மெய்யென ஆமோ? மெய்யே பொய்யென ஆமோ? பொய்யே உலகில் மெய்யை வென்று சிறக்குமோ? உய்யும் உலகில் உய்வன யாவும் உயர்வோ? பொய்யுலகில் எல்லாம் பொய்யென் பாரே! “**

இது ஒரு பத்தியைப் போல இருக்கும் இதனைச் சற்றே பிரித்துப் போடுங்கள் . ஒரு அழகான கவிதை வரும்

**மெய்யெலாம் உலகில் மெய்யென ஆமோ?**
**மெய்யே பொய்யென ஆமோ?**
**பொய்யே உலகில்**
**மெய்யை வென்று சிறக்குமோ?**
**உய்யும் உலகில்**
**உய்வன யாவும் உயர்வோ?**
**பொய்யுலகில் எல்லாம் பொய்யென் பாரே!**

இது புதுக்கவிதை போலக் காட்சியளித்தாலும் இது ஒரு மரபுக் கவிதை; இது இணைக்குறள் ஆசிரியப்பா வகையைச் சேர்ந்தது.

விதி

1. ஈரசை மற்றும் மூவசைச் சீர்களில் காய்ச்சீர் மட்டும் வரவேண்டும். ( கனிச்சீர் வரலாகா)

2. மா முன் நிரை, விளமுன் நேர், மா முன் நேர், விளமுன் நிரை , காய் முன் நேர் வரவேண்டும் அதாவது ஈரசைச்சீர்கள் எப்படி வேண்டுமானாலும் வரலாம் ஆனால் காய்ச்சீர்கள் முன் நிரை வரக்கூடாது.

நினைவில் கொள்ள..

தேமா நேர் நேர் - அன்பே
புளிமா நிரை நேர் - அருளே
கூவிளம் நேர் நிரை - கண்மணி
கருவிளம் – நிரை நிரை கருவிழி
தேமாங்காய் நேர் நேர் நேர்- அன்பேவா
புளிமாங்காய் நிரை நேர் நேர்- அருளேவா
கூவிளங்காய் நேர் நிரைநேர் - கண்மணியே
கருவிளங்காய்- நிரை நிரைநேர்- கருவிழியே

3. முதல் மற்றும் இறுதி அடிகளில் நான்கு சீர்கள் வரவேண்டும்.இடையில் நான்குக்குக் குறைவாக வரவேண்டும்

4. எதுகை மோனை இருப்பின் சிறப்பு

என்ன எழுதத் தொடங்கி விட்டீர்களா? வாழ்த்துகள்

# காற்றின் முகில் புதிதாகும் பரிணாமங்கள்

கண்களுக்கு விருந்தாகும்
காற்றினிலே மிதந்து வரும்

சிந்தனையைத் தூண்டி விடும்
சிலுசிலுவெனத் தூறல் தரும்

புகை போலப் பூதாகாரமாகும்
பூனை போல உருவமெடுக்கும்

பாவையருக்குத் தூது போகும்
பாலகருக்கும் நல் காட்சி தரும்

பெண் போலப் படம் வரையும்
பேய் போலவும் பயத்தைத் தரும்

கைகளால் அள்ளியெடுக்க முடியாதது
கணத்துக்குக் கணம்
மாற்றங்களுடன் படிவது

கண்களுக்கு ஏற்ப தோற்றம் கொள்வது
காததூரம் காற்றின்
விசையாலே சுற்றி வருவது

வான்வெளியில் ஓவியம் வரைந்து செல்லும்
வானிலவை முந்தானையால்
போர்த்திக் கொள்ளும்

விரிகடலின் அலைகளாய்ப் பவனி வரும்
விந்தைகள் புரியும்
கலைகளாய் ஆடிவரும்

நீளும் நெடுஞ்சாலையாயும் ஒரு கணம் மாறும்
நிலவு கனிந்த வேளைகளில் குளுமை தரும்

ஆர்ப்பரிக்கும் மழையிலே
வானவில் புடவையுடுத்தும்
அந்திமாலை நேரத்திலே
வெந்தணலைப் பிரதிபலிக்கும்

சில நேரம் பொம்மையெனப் பதுமையாகும்
சீறிப் பாயும் புலியாகவும் உருமாறும்

முகடுகளில் மோதித் தவழ்ந்து செல்லும்
முத்தங்களில் அவிழ்ந்தே
அருவியாக மாற்றமடையும்

மீன்களும் சில நேரம் அதில் துள்ளும்
மான்கள் பலவும் பாய்ந்தோடியே செல்லும்

தேரிழுக்கும் காட்சியும்
தோன்றும் உனக்கெதிரே
தென்னை மரத்தோப்பும் விரியுதங்கே

அணியணியாய்க் கோலங்கள்
அழகாய்ப் போடும்
ஆகாய வெளியினிலே ஆட்டங்கள் ஆடும்

எண்ணத்தில் வராத
உருவங்கள் ஆங்காங்கே
ஏகாந்த வெளிதனிலே அலையும்
பஞ்சுகளும் அங்கே

எத்தனை எத்தனை காட்சிகள் உருளுதங்கே
நீலவண்ணத்திரையில் ஓடுது
பல திரைப்படம் அங்கே

புதிது புதிதாய் பரிணாமங்கள்
கீற்று முகில்களிலே
பரிசாகும் இயற்கையின்
கொடைகள் விசும்பினிலே

பயணங்கள் முடிவதில்லை
காற்றின் முகில்தனிலே
பல சேதிகளைச்
சுமந்து செல்லும் மேகங்களே

**மருத்துவர் ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# சந்தையான பள்ளிக்கூடம்

கரும்பலையின் மேல் அழகாக இந்தியா வின் வரைபடத்தை வைத்து பாடம் நடத்திக் கொண்டிருந்தார் சந்திரன். ஒருவன் எழுந்து...

சார் ...

அவன் என்ன அடிச்சு புட்டான் சார்...

இல்ல சார்...

அவன் தான் சார்...

அடிச்சு புட்டான்... சார்.

சந்திரன் இருவரையும் அழைத்து காதை பிடித்து திருக...

ஆஆஆஆ... ஆ... ஆரம்பித்தனர்.

முதுகில் ஒரு போடு போட்டு அமரச் செய்தார், இருவரும் முதுகை தடவிக் கொண்டு ஐயோவென்று கதறினர்.

பெரியகரும்பலையில்நாள்,கிழமை, வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை, வருகை புரிந்த மாணவர்கள் எண்ணிக்கை, பள்ளிக்கு வராத மாணவர் கள் எண்ணிக்கை, இப்படி கரும்பலகை யில் இரு முனைகளிலும் ஓரத்தில் எழுதப் பட்டிருந்தது.

கரும்பலையின் நடுவில் நைன்த்-A பெரிதாக எழுதப்பட்டிருந்தது. மதியம் 12:30 ஒவ்வொரு வகுப்பு முடிந்த பின் பள்ளியின் நடுவில் ஒரு அலறல் சத்தம் கேட்கும்.

வகுப்பை விட்டு வெளியே மாணவர்கள் அமர்ந்து சாப்பிடுவார்கள் மாணவிகள் உள்ளே அமர்ந்து சாப்பிட, சந்திரன் மாணவர்கள் பக்கத்தில் இருக்கும் டேபிளில் அமர்ந்து சாப்பிட அமர்ந்தார்.

மொத்தம் 30 மாணவர்கள். ஒரே சத்தம்...

ஒருவன் பிளாஸ்டிக் பந்தினை தூக்கி போட்டு விளையாடிக் கொண்டிருக்க... மற்றொருவன் வராண்டாவில் வெளியில் கை கழுவிக்கொண்டு இருக்க, அமர்ந் திருந்த ஒருவன் அவனை அடிக்க தண்ணியை அவன் மேல் ஊத்த... இருவரும் கழுத்து சட்டையை பிடித்து சண்டை போட ஆரம்பிக்க, சந்திரன் எழுந்து வந்து அபிலாசை குனிய வைத்து முதுகில் ஒரு அடி அடித்தார்.

சந்திரன் அடிக்கும்போது பக்கத்தில் இருந்த டேபிளில் மீது அவன் குனிந்து விட்டான். திடீரென்று கண்ணின் புருவத் திற்கு கீழே ரத்தம் வழிந்து ஓடியது.

அதனை கவனிக்கவில்லை, திருப்பி குனிய வைத்து முதுகில் அடித்தார்.

அவன் நிமிர மீண்டும், இரத்தம் வழிந்து ஓடியது, கூட்டத்திலிருந்து ஒருவன் வந்தான் இரத்தம் வழிந்து விடுவதை கண்டு அபிலாசை கூட்டிக்கொண்டு படி வெளியே இறங்கி கீழே ஓடினான் ஹரிஷ்.

சந்திரனுக்கு பதற்றம்... என்ன ஆனது... ஏது ஆனது... என்று தெரியாத ஒரு பதட்டம் அவருக்கு கை கால் தரையில் நிற்கவில்லை.

கீழே போன இரண்டு பேரையும் காணவில்லை.

படி வ ழி இறங்கி கீழே வந்தார். அபிலாசும் ஹரிசும் முதல்வர் அறையை விட்டு வெளியே உடற்கல்வி ஆசிரியருடன் வந்தனர்.

வேக வேகமாக நடந்து பின்னால் செல்ல உடற்கல்வி அறையில் உடற்கல்வி ஆசிரியர் பஞ்சை டிஞ்சரில் நனைத்து கண்ணின் புருவங்களுக்கு கீழே ரத்தம் வழிந்து கொண்டிருப்பதை பார்த்து துடைத்துக் கொண்டு இருந்தார். அது மீண்டும் மீண்டும் கசிந்து கொண்டே இருக்க தொட்டு தொட்டு வைத்தார். நகத்தை வைத்து கிழித்தால் எப்படி இருக்கும் அதுபோல ஒரு சிறு கோடு போல தெரிய லேசாக வெள்ளைத்தோல்தெரிய...

பயப்படாதடா ஒன்னும் இல்ல... லேசான காயம் தான். சரியா எல்லாம் சரியாயிடும் வலிக்குதா.. உடற்கல்வி ஆசிரியர் பாலு சொல்லிக்கொண்டே இருக்க சந்திரனும் பக்கத்தில் நின்று கொண்டே இருக்க,

சந்திரன் அவன் மேல் கை வைத்து என்னப்பா... வலிக்குதா.

இல்ல சார்... அதெல்லாம் ஒன்னும் இல்ல.

சார் லைட்டா... வலிக்குது சார்...

ஆஸ்பத்திரிக்கு தான் கூட்டி போகணும்.

ஏன்னா ரத்தம் வந்துகிட்டே இருக்குது அங்க போனா தான் தையல் போடணுமா, போட வேண்டாமா அப்படிங்கறத சொல்லுவாங்க அபிலாசை அங்கு இருக்க வைத்துவிட்டு பாலுவும், சந்திரனும் பள்ளியின் சேர்மன் அறைக்கு வந்து நிற்க என்னப்பா ஆச்சு உள்ள வாங்க இல்ல ஆஸ்பத்திரிக்கு தான் கூட்டிட்டு போகணும் தையல் போடணும்.

அப்படியா சரி ஆபீசுக்கு போங்க பணத்தை வாங்கிட்டு ரெண்டு பேரும் போய்ட்டு வந்துடுங்க சார் எனக்கு கிளாஸ் இருக்கு சார் சரி நீங்க அப்ப பாருங்க நீங்க மட்டும் போயிட்டு வந்துடுங்க அப்படின்னு பாலுவை பார்த்து சொன்னார் சேர்மன்.

சந்திரன் கிளாசுக்கு வந்து பத்து நிமிடம் கூட ஆகவில்லை ஒரு பையன் வந்து சார் கீழே உங்களை கூப்பிடுறாங்க.

வேகமாக ஓடி வந்தார் கிட்டத்தட்ட 30 படிகட்டுகள்.

பெரிய டேபிள் அதற்கு பின்னால் அழகான நாற்காலி அதில் நன்றாக சாய்ந்து கொண்டு பேசலாம்.

அதற்கு மேலே சாய்பாபா போட்டோ, அதற்கு எதிரில் அப்துல் கலாம் போட்டோ, மிகப்பெரிய டிவி அதற்கு இடதுபுறம் மிகப்பெரிய காலண்டர் பக்கத்தில் ஜன்னல் துணிகள் கிழிந்து கிழிந்து தொங்கிக்கொண்டு இருக்கிறது.

சார் வாங்க...

ஏன் சார்...

நானே 10, 20 ஸ்கூல்ல இருந்துட்டு இப்ப இங்க வந்து முதல்வரா வந்து இருக்கிறேன்.

உட்காருங்க முதல்ல லெட்டர் எழுதுங்க. எழுதிட்டு இருங்கே வந்து டுறேன். முதல்வர் வெளியே எழுந்து கரஸ் பாண்டன்ட் அறைக்கு சென்று விட்டார். அங்கே ஒரே சத்தம் குளறல் காது கிழிய ஏதேதோ பேசிக் கொண்டிருக்க.

சந்திரன் டேபிள் மேலே வைத்து அனுப்புநர், மட்டும்தான் எழுதி இருக்க, முதல்வர் டேபிளில் இருந்த. விலையுர்ந்த மொபைல் ஓம் முருகா... முருகா.. ன்னு ஒலிக்க, சந்திரன் மொபைலை எடுத்து மொபைலை எடுத்து ஹலோ.. சொல்லுங்க.

சார். என்ன சார் நடந்து இருக்குது..

சார். நான் தான் சார்..

கிளாஸ் டீச்சர் சொல்லுங்க .

நீங்கதான் அடிச்சதா சார் படாத இடத்துல பட்டு இருந்தா என்ன பண்றது சார் தெரியாம பட்டு இருக்கு ...

கை கழுவும் போது தண்ணி ஊத்தி விளையாண்டுக்கிட்டு இருந்தான், அது தான் கூப்பிட்டு அடித்தேன், அது தெரியாம போயி கண்ணுல பட்டுருச்சு டேபிளில் போய் முட்டிக்கிட்டான்.

என்ன சார் தெரியாம அடிச்சீங்க. சந்திரன் எழுதிக் எழுதிக் கொண்டிருக்கும்போதே அறையில் உள்ளே ஒருவர் வேகமாக வந்தார்.

யாரு... யாரு... அபிலாசை பார்த்து கேட்டார்...

இவர்தான் உனக்கு யாரு அடிக்க உரிமை கொடுத்தது.

நான் இப்ப உன்ன அடிக்கவா யாருடா ...

உனக்கு அடிக்க உரிமை கொடுத்தது, உன் பிள்ளையா இருந்தா இப்படி அடித்து இருப்பியா... இப்படி போட்டு அடிச்சிருக்கியே படாத இடத்துல பட்டுருச்சுன்னா யாரு பதில் சொல்றது.

நீ ரெண்டு லட்சம் மூணு லட்சம் குடுப்பியா.. குடுப்பியா சொல்லு சந்திரனைப் பார்த்து கை ஓங்க வந்தார்.

சந்திரன் எதுவுமே பேசவில்லை அமைதியாக நின்றார் இல்லை சார் தெரியாம நடந்துடுச்சு.

எதுக்கு அடிச்சீங்க..

வரண்டாவுல கை கழுவி விட்டிருந்தான் கீழ ஒருத்தன் மேல பட்டுகிட்டு இருந்தது, அவனும் இவனும் சண்டை போட்டு ஆரம்பித்தான்.

அதனாலதான் கூப்பிட்டு அடித்தேன் அது தெரியாம டேபிள்ல போய் முட்டிக்கிட்டான் எனக்கு ரத்தம் வந்தது தெரியல.

இவன் மட்டும் தான் தப்பு பண்ணினான்னா. வகுப்பில் அத்தனை பேரு இருக்க, இவன மட்டும் போட்டு அடிச்சு இருக்கீங்க... அடிச்சு இருக்கீங்க..

அவனை ஒன்னும் பண்ணலையா.

ஒரு படையே திரண்டு வந்தது.

சங்க காலத்தில் போர்க்களத்திற்கு மன்னர்கள் முரசு அறைந்து படை வீரர்களுடன் படைக்கு செல்வது போல அபிலாஷின் பெற்றோர்கள் ஒரு படையே திரட்டிக் கொண்டு வந்திருக்க..

சந்திரன் ஒரு பூனைக்குட்டியை போல பேசாமல் இருந்தார்.

அபிலாஷின் அப்பா உள்ளே வந்து நாக்கை துருத்திக் கொண்டு எதுக்கு அடிச்ச? படாத இடத்துல பட்டுருச்சுன்னா நீ குடுப்பியா? நீ பேசாம அடிச்சு புட்டு போயிருவ வேற ஸ்கூலுக்கு எங்க ஸ்கூல் கெட்டுப் போய்விடும் தாளாளர் அறைக்கு அனைவரும் சென்றனர். தாளாளர் சேரில் அமர்ந்திருக்க சந்திரன் நின்று கொண்டிருந்தார்.

பள்ளி முதல்வர் அவரும் நின்று கொண்டிருக்கிற.. அபிலாஷின் பெற்றோர்கள் உறவினர்கள் சேரில் அமர்ந்து பேசத் தொடங்கினர்.

நான் போன வருஷமே டிசி கேட்டேன். கொடுக்கல பாத்தீங்களா சார்.. முன்னே மாதிரி இல்ல ஸ்கூல்... இப்ப இல்லைங்க, சார் அவர் தெரியாம அடிச்சுட்டாரு அடிக்கும்போது வந்து

பாத்தீங்கன்னா டேபிள்ல முட்டிட்டான் வேணும்னே அடிப்பாங்களா சார்...

என்ன தப்பு பண்ணாலும் அடிக்கிற துக்கு யார் சார் ரூல்ஸ் கொடுத்தது? ரத்தம் வந்துட்டு இருக்கும்போதே திருப்பி வேற அடிச்சிருக்காரு. அவரு பிள்ளையா இருந்தா இப்படி அடிச்சு இருப்பாரா..

சந்திரன் அமைதியாக நின்று கொண்டிருந்தார் அவருக்கு என்ன செய்வது ஏது செய்வது புரியல அனை வரும் அமைதியாக கைகட்டி நின்று கொண்டிருந்தார்.

சார் நல்லா பாடம் நடத்துறாரா?

அதெல்லாம் பாடம் நல்லாத்தான் நடத்துறாரு.

ஹோம் வொர்க் பண்ணலைன்னா அடிப்பாரு..

என்ன ஹோம் ஒர்க். கிளாஸ் ஒர்க் தாளாளர் பேச ஆரம்பித்தார் .

அடுத்த வருஷம் டென்த் இப்ப இருந்தே பயிற்சி கொடுத்தால் தானே அடுத்த வருஷம் பப்ளிக் எக்ஸாம் எழுத போறீங்க.

நெடுவினா எழுத வேண்டும் இல்ல பேசிக் கொண்டு இருக்கும் போதே ஒருவர் எழுந்து வெளியே போனார்.

திருப்பி உள்ளே வந்தார். இல்லைங்க இது போலீஸ்ல கம்ப்ளைன்ட் பண்ணனும் உள்ளே வந்தார்.

சந்திரனை பார்த்து...

ஏப்பா... அடிக்கிறீங்க அடிக்காதீங்க பா அதுதான் கவர்மெண்ட்டே ரூல்ஸ் போட்டு இருக்கான் இல்ல..

பார்த்து சொல்லுங்க சார் பொறுமையா இருக்க சொல்லுங்க.

நீங்க கொஞ்சம் பொறுமையா இருந்து இருந்தீங்கன்னா.. இப்படி அடிபட்டு இருக்குமா? நாங்க எல்லாம் ரொம்ப கஷ்டப்பட்டு மேல வந்தவங்க சார் புரிஞ்சுக்கங்க.

சாருக்காக தான் அங்க போறோம் அவரை நம்பித்தான் நாங்க அட்மிஷன் போட்டோம்.

உங்களுக்கெல்லாம் நாங்க போகல அவருக்காக தான் அவரோட மரியாதைக்காக.

சாரிங்க.. சார் இனிமேல் இப்படி நடக்காது தெரியாமல் நடந்துருச்சு சந்திரன் பெற்றோர்களிடம் மன்னிப்பு கேட்டார்.

இனிமேல் எந்த பிள்ளையும் அடிக் காதீங்க அனைவரும் எழுந்து வெளியே சென்றார்கள் .

சந்திரன் மட்டுமே நெடுமரம் போல் நின்று கொண்டிருந்தார்.

நரைத்த முடியுடன் இருந்த தாளாளர் அடிக்காதீங்கப்பா சொல்லுங்க அரட்டுங்க அதிலேயே அவன் பயப்பட வேண்டும்.

ஏற்கனவே ஸ்கூல்ல அட்மிஷன் இல்லை இவ்வளவு பெரிய பில்டிங் கட்டி வச்சு அட்மிஷன் இல்லாம இருக்கு நீங்க வேற இப்படி பண்ணிக்கிட்டு இருந்தீங்கன்னா ஒரு பயலும் வந்து தன்னுடைய பிள்ளைகளை சேர்க்க மாட்டான் நான் எல்லாத்தையும் வித்துப்புட்டு தெருவுல தான் நிக்கணும் போங்கய்யா வேலைய பாருங்க.

சந்திரனின் முகத்தில் அறைவது போல் சொல்லிவிட்டார். சந்திரன் அமைதியாக வெளியே வந்தார்.

முதல்வர் அழைக்க உள்ளே சென்

றார். ஏன் உங்களை லெட்டர் எழுத சொன்னேன் தெரியுமா? உங்கள சேப்டி பண்ணத்தான், நீங்க முன்னாடியே லெட்டர் எழுதி இருக்கணும், இங்க வாங்க சார் இப்ப எல்லாம் எந்த பிள்ளையும் பையனும் வாத்தியான்களுக்கு எல்லாம் பயப்படறது இல்ல, அதெல்லாம் நம்ம படிச்ச காலம் சூழ்நிலைக்கு ஏத்த மாதிரி இருந்துக்கங்க, அப்பத்தான் இந்த காலத்துல பொழைக்க முடியும் சரிங்களா சார்... வந்தம்மா பாடம் நடத்துனமா? நிர்வாகத்தில் மீட்டிங் போட்டா சரி சரின்னு தலைய ஆட்டுனமா.. மார்க் காமிச்சமா, நோட்டே காட்டுனுமா கையெழுத்து வாங்கணுமா காட்டிட்டு போய்கிட்டே இருக்கணும். அப்பதான் பொழைக்க முடியும் சார் ஒரு வார்த்தை எதிர்த்து பேசக்கூடாது.

இன்னும் 1998ல் இருக்காதீங்க.

எல்லாம் மாறிருச்சு நானு உங்க கிட்டையும் பதில் சொல்லணும், ஸ்டூடண்ட்ஸ் கிட்டயும் பதில் சொல் லணும், பத்தா குறைக்கு வேற நிர்வாகத் துக்கும் பதில் சொல்லணும், தலை யெழுத்தும் என் மேல தான் விழுது புரிஞ்சுக் கோங்க சார்...

தனியார் பள்ளிக்கூடத்துல எல்லாம் ஸ்டூடண்ட்ஸ்க்கு என்ன திறமை இருக்குன்னு எந்த வாத்தியான்களும், பெற்றோர்களும் கண்டு கொள்வதே இல்லை. மார்க் மார்க் ன்னு சொல்லி சந்தைக்கு பொருட்களை உற்பத்தி செய்வது மாதிரி ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் உற்பத்தி செய்து கொண்டு இருக்குறது தான் இன்றைய கல்விக்கூடம்.

ஏன்னா நானும் ஆசிரியராக இருந்து தான் இந்த சீட்டில் வந்து உட்கார்ந்து இருக்கிறேன். தனியார் பள்ளிக்கூடத்துல நல்லா பசு மாடுகளை உற்பத்தி செய்கிறான் அது மேய்ந்து விட்டு பாலை கொடுத்துவிட்டு ,அசை போட்டுக் கொண்டே தான் இருக்குது வேற என்ன பிரயோஜனம்.

நாடு நாடு மாதிரி இல்ல ...

பெற்றோர்களும் பெற்றோர் மாதிரி இல்ல....

வாத்தியான்களும் வாத்தியார் மாதிரி இல்ல ....

அவ்வளவுதான் இந்த கல்விக்கூடம்.

இங்கதான் இப்படின்னு நினைத் தால் அரசாங்க பள்ளிக்கூடத்துல என்ன பண்றான் தெரியுமா அங்க செக்கு மாடு களை உற்பத்தி செய்கிறான் .

கடைசியில் நல்லா இருக்குற மாடுக முன்னாடி வந்துருது.

கடைசியில வர மாடு செக்கு மாடா தான் கடைசிவரை இருக்குது பசு மாட்டையும் கேட்கக்கூடாது செக்கு மாட்டையும் கேக்க கூடாது சரிங்களா சார் போங்க உங்க வேலைய பாருங்க சந்திரன் அன்று ஒரு நாள் முழுவதும் சாப்பிடவில்லை வீட்டிற்கு வந்து திருப்பி திருப்பி படுத்தான் தூக்கம் வரவில்ல 20 வருடமாக ஆசிரியர் பணியில் இருக்கிறான் ஸ்டுடென்ஸ்களை அடித்திருக்கிறான், ஒரு பெற்றோர்கள் கூட எதிர்த்து கேள்வி கேட்டதில்லை. முதல் முறையாக எல்லோரும் முன்னாடியும் தலை குனிந்து நின்றது முதல் இதுதான் முதல் முறை. திருப்பி படுத்தான் தூக்கமே வரவில்லை


## மா.மணிகண்டன்

தமிழ் ஆசிரியர்
ஜெயந்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
அருள்புரம், திருப்பூர் - 07




# மதம் கடந்தும் மனிதம்

மனிதம் என்பதே மறந்து போனதால்
மனிதருள் பகையே நிறைந்து போனது!
முடிவுக்கு இன்னும் வராது போனதால்
முழுமையிலா உலகமாய் பிரிவினை ஆனது!

அகிம்சையைப் போதிக்கும் அன்பினைப் போற்றிட
அருமைமிகு மாந்தர்கள் அருளியே சென்றனர்!
ஆனாலும் மக்களோ மதத்தினாலே பிரிந்தனர்!
அதனால் சிலரும் அரவணைக்காது விலகினர்!

மனிதத்தைக் காக்கும் வலிய அரணென்பது
மனிதர்களுக்குள் காட்டும் உன்னத அன்பென்பது!
பகையை அறுத்தெறியும் தந்திரம் கொண்டது!
பழகிடப் பழகிட மந்திரமாகவே மாறுவது!

எம்மதமும் போதிப்பது அன்பென்ற ஒன்றையே!
எந்நாளும் அதனைக் கடைபிடிப்பது நன்மையே!
மதங்களை மதிக்கக் கற்றுக் கொள்வோம்!
மனிதம் காக்க மதத்தினையும் மதிப்போம்!

அன்பே உலகத்தில் ஒற்றுமையை வளர்க்கும்!
அதுவே தரணியை உயிர்ப்பாக வைக்கும்!
ஆகவே மக்களே அன்பாக இருப்போம்!
அன்புக்கு பதிலாக அன்பையே கொடுப்போம்!

நன்குணமும் நாட்டிடம் பற்றும் வேண்டும்!
நாடெங்கும் மனிதத்தையே நாட்டிட வேண்டும்!
வளரும் தலைமுறையிடமும் வளர்த்திட வேண்டும்!
வருங்காலம் நலமாக விழைந்திட வேண்டும்!

நல்லிணக்கம் இழைந்தோட நல்லுறவு வேண்டும்!
நாட்டின் முன்னேற்றமே நமக்கானதாக வேண்டும்!
சாதியோடு சமூகமும் சமயம் மொழியென்றும்
சகித்து ஆன்மம் மலர்ச்சியுற வேண்டும்!

கூட்டுறவு மனப்பான்மை குவிந்திட வேண்டும்!
சமுதாயப் பிரிவினை நீங்கிட வேண்டும்!
சமய வேற்றுமைகள் அறுத்திட வேண்டும்!
சமய நடுநிலைமையை நாட்டிட வேண்டும்!

நாட்டுணர்வு கொண்டே நடந்திட வேண்டும்!
நாட்டுப்பற்று எல்லோரிடமும் மிகுந்திட வேண்டும்!
புனராக்கம் கல்வி வழியிலே வேண்டும்!
புத்தாக்கம் படைத்தே புதுமையாக வேண்டும்!

பொருளோங்க உழைக்கும் தலைவனும்
மனையோங்க வைக்கும் தலைவியும்
சமமாக சாதித்து அறம்போற்ற வேண்டும்!
சரிநிகராக தேசியம் போற்ற வேண்டும்!

கல்வியிலும் சமவாய்ப்பு கற்பதற்கு வேண்டும்!
கற்றோரால் நலமே பயக்க வேண்டும்!
சமதர்ம கோட்பாடு தழைத்தோங்க வேண்டும்!
சமய சார்பின்மையை காத்திட வேண்டும்!

புன்னகையே நம்மில் மொழியாக வேண்டும்!
பொன்னகையாய் பாரதம் பொலிவுற வேண்டும்!
பற்றிடும் வெற்றியெலாம் பாரதத்திற்கே வேண்டும்!
பற்றுறுதி கோத்த மாலையாக்க வேண்டும்!

ஒற்றுமையால் நாட்டை ஒருங்கே இணைப்போம்!
ஒருமைப்பாடு நிலைத்திட ஒன்றாகவே இருப்போம்!
தேசத்தையே நேசித்து தரணியில் உயர்த்துவோம்!
தேசியத்தைக்காத்திடவேதன்னலமின்றிஉழைப்போம்!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

## ஒரு அடைமழைக்காலம்

இரவும் வானமும்
சங்கமிக்கிறது இரவானத்தில்
ஏழையின் வீடு!

தீ வெயிலைக் காட்டிலும்
ரொம்பவே சுடுகிறது
பசி!

பயமின்றி கடக்கிறது சாலையை
வாகனங்களுக்கிடையில் ஊர்ந்து
அட்டை!

உறக்கம் வரவில்லை வெறும்
இடி மின்னலோடு போன மழை
விவசாயி!

எங்கும் மழை
எங்கும் குளிர்
நமக்குள் மட்டும் வெப்பம்!

பெரும் மழையில் நனைந்து
குளிரில் பாடுகிறது
காக்கை!

அடை மழை தொடர்கிறது
அப்படியும் நிரம்பவில்லை
ஏழையின் வயிறு!

இறுக்கி கட்டியணைத்த படி
உறங்குகிறேன் குளிரில்
தலையணை!

தலைசாய்ந்து விடுகிறது தினம்
கிளைகளோடு மரம்
நிழல்!

கேட்டதும் பெரும் பயம்
இறுதியில் நகைப்பு
புயல் அறிக்கை!

**- மகிழை.சிவகார்த்தி**

## தேவதை வாழும் வீடு

மின்னும் நட்சத்திரங்களை
கண்ணில் பதித்து
பூமிக்கு வந்த தேவதைகள்
பெண் குழந்தைகள்!

உந்தன் சிரிப்பொலியும்
கொலுசொலியும் கேட்டுக் கேட்டு
பூமி தன்னைத்தானே
புதுப்பித்துக் கொள்ளும்!

நீ கொஞ்சிப் பேசும்
மழலை மொழிகளை
மொழிபெயர்க்க
முச்சங்கங்களும் முந்திக் கொள்ளும்!

நீ கிறுக்கிய ஓவியங்களை
சுவற்றில் காணும் போதெல்லாம்
எல்லோரா ஓவியங்களும்
தோற்றுப் போகும்!

அப்பாக்களின் ராஜ்ஜியத்தில்
பெண் குழந்தைகள் என்றும்
அன்பைப் பொழியும்
இளவரசிகள் தான்!

முத்தமிடுகிறேன்
மோட்சம் பெறுகிறேன்!
அன்பை தருகிறேன்
ஆயுளை பெறுகிறேன்!

உன் மடி சாய்த்து என்னை
தலைக்கோதி தாலாட்ட
கடவுள் அனுப்பி வைத்த
இன்னும் ஒரு தாய் நீ

வாழ்ந்தபின் செல்வது
நரகமா? சொர்க்கமா? யானறியேன்
வாழும்பொழுதே சொர்க்கம்
தேவதை வாழும் வீடு!

**பெ. விஜயலட்சுமி**
காஞ்சிபுரம்

# ஒளிக்கீற்று....!

- மரீனா இல்யாஸ் ஷாபீ
நியூ ஸிலாந்து

'உண்மையாகவா...?'' சலீமா பதறிப் போனாள். அவளது கணவன் சாதிக் அவளுடன் எவ்வளவு அன்பாகவும் பிரியமா கவும் இருந்தான் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். அவன் தனக்கு துரோகம் செய்கிறான் என்று அங்கும் இங்குமாகக் காதில் விழுந்த செய்திகளை அவள் தொடர்ந்தும் அலட்சியம் செய்து வந்தாள் .

"யா அல்லாஹ், நான் கேள்விப் படுகிற விஷயங்கள் பொய்யாக இருக்க வேண்டும்..." என்று மனம் பிரார்த்தித்து கொண்டிருந்தாலும் உண்மை நிலையை அறிய வேண்டும் என்று அவள் மனம் உள்ளூரத் துடித்துக் கொண்டிருந்தது.

சலீமாவின் குடும்பம் அவள் தையல் வேலை செய்து உழைக்கும் ஒரு சிறிய வருமானத்திலேயே பிழைப்பு நடத்தி வந்தது. அவளது கணவன் சாதிக் மத்திய கிழக்கில் தொழில் புரிந்து விட்டு வந்து இருப்பதாகவும் விரைவில் சொந்தத் தொழில் ஆரம்பிக்க இருப்பதாகவும் சொல்லித் தான் சலீமாவின் பெற்றோர் அவனுக்கு மணமுடித்து வைத்தனர். ஆனால், திருமணமாகி ஒரு குழந்தை பிறந்த பிறகும்கூட அவன் எந்தத் தொழிலையும் ஆரம்பிக்க வில்லை. அதற்குரிய பணமும் அவனிடம் இருக்க வில்லை. எனினும் அவர்கள் குடும்ப வாழ்க்கை குழப்பமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தது.

சலீமா தையல் வேலையில் ஈடுபடும் போது சாதிக் குழந்தையைக் கவனித்துக் கொண்டான் . வீட்டு வேலைகளில் உதவி செய்தான்.

எனவே பணம் இல்லாவிட்டாலும் அவர்களது இல்லற வாழ்வில் சந்தோஷத்துக்குப் பஞ்சம் இருக்கவில்லை.



ஆனால், தன் கணவன் தொழில் எதுவும் இன்றி வீட்டில் இருப்பதால் அவரது சுயமரியாதைக்குப் பங்கம் வந்து விடும் என்று சலீமா பயந்தாள். அதனால் ஓய்வு நேரங்களில் எல்லாம் தன்னால் முடிந்த அளவு ஆடைகள் தயாரித்து தன் கணவன் மூலம் அறிமுகமான கடை களுக்கு விற்பனைக்கு விடலாம் என்ற யோசனையைக் கணவனிடம் முன்வைத்தாள்.

''உங்களை மாதிரி ஒரு மனைவி கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்...'' என்று பூரிப்புடன் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டான் சாதிக். சலீமா தான் திட்டமிட்டபடி ஆடைகளை தயாரித்துக் கொடுக்க, சாதிக் துணிக்கடைகளுக்கு விற்க, ஒரு வருடத் துக்குள் வியாபாரம் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. ஒரே ஒரு தையல் மெஷின் வைத்திருந்த சலீமா இன்னும் இரண்டு மெஷின்களை விலைக்கு வாங்கி, இரண்டு பெண்களை வேலைக்கு அமர்த்தினாள்.

அவர்களின் வியாபாரம் விருத்தி அடைந்த பிறகு சலீமாவுக்கு இன்னொரு யோசனை தோன்றியது. ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து சின்னதாக ஒரு ஆடைத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று கணவனிடம் சொன்னபோது சாதிக் பூரித்துப் போனான். மனைவியின் புத்தி சாதுர்யத்தை மெச்சினான். அவனது குடும்பமும் மருமகளைத் தலையில் வைத்துக் கொண்டாடியது .

வாடகைக் கட்டிடத்தில் ஆரம்பிக் கப்பட்ட வியாபாரம், சலீமாவின் அயராத முயற்சியால் சொந்தக் கட்டிடம் வாங்கி பெரியதோர் ஆடைத் தொழிற்சாலையாக உருவெடுத்தது. தன் கணவனை முதலாளி யாக்கிப் பார்க்கவேண்டும் என்ற சலீமாவின் கனவு நனவான அன்று, ஊரையும் உறவு களையும் கூட்டி விருந்தளித்து மகிழ்ந்தாள் சலீமா. அந்த மகிழ்ச்சி அவ்வளவு சீக்கி ரத்தில் தொலைந்து போகும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

வியாபாரம் மலர்ந்து பணம் பெருகப் பெருக, சாதிக்கின் நடவடிக்கை கள் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தன. இப்போது அவன் ஒரு பெரிய 'பிசினஸ்மேன்' ..! அவனுக்கென்று ஒரு கம்ப்யூட்டர், கைத்தொலைபேசி, ஒரு வாகனம், மட்டுமல்ல தன் வியாபார நடவடிக்கைகளை கவனித்துக் கொள்ள ஒரு 'பெர்சனல் செக்ரட்டரி' யும் வைத்துக் கொண்டான் .

சலீமா இனிமேல் தொழிற்சாலைப் பக்கம் வரத்தேவையில்லை என்று அவன் சொன்னபோது, தனக்கு ஓய்வு கொடுப்ப தற்காகவே அப்படிச் சொல்கிறான் என்று நினைத்தாள் அவள். ஊரார் அதற்கு வேறு அர்த்தம் சொன்னார்கள். அந்த வதந்தி அவள் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டியது. அந்த செய்தி நிஜமா பொய்யா என்று தெரிந்து கொள்வதற்காக இன்று ஆடைத் தொழிற்சாலைக்கு சொல்லாமல் கொள்ளாமல் போவது என்று தீர்மானித்தாள்.

முற்றத்தில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் சிந்தனை கலைந்து எழுந்தாள் சலீமா. குழந்தையைப் பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு ஆட்டோவில் ஏறி ஆடைத் தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தபோது அங்கு சாப்பாட்டு இடை வேளையாக இருந்தது. சலீமா உள்ளே நுழைந்தபோது, சலீமின் அறைக்கதவு மூடியிருந்தது. கண்ணாடி ஜன்னலினூடாக இரண்டு விம்பங்கள் தெரிந்தன. சலீமா மூச்சை இறுக்கப் பிடித்துக்கொண்டு சுவரில் சாய்ந்தாள் .

''போதுங்க...'' அறைக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் கெஞ்சும் குரல் கேட்டது. ''நான் ஊட்டினா நீ சாப்பிடணும்... இன்னும் ஒரு வாய் சாப்பிடு..'' சலீமின் கொஞ்சும் குரல் கேட்டபோது, சலீமாவின் நெஞ்சு வெடித்து விடும்போல இருந்தது. அவசரமாகத் திரும்பி வந்து ஆட்டோவில் ஏறி மாமியாரின் வீட்டில் போய் இறங்குகிறாள்.

உதவாக்கரை மகனை உருப்படியாக்கியவள் என்று மாமியார் உச்சந் தலையில் வைத்துக் கொண்டாடிய மருமகள்தான் சலீமா. அதனால், மாமியாரிடம் நீதி கேட்டு வந்தாள். ஆனால், மகன் பணக்காரனாகியதும் மாமியாரும் மனம் மாறிவிட்டார்...

வியாபார விடயமாக மகன் வெளிநாட்டுக்குப் போகும்போது ஆங்கிலம் பேசத்தெரிந்த ஓர் அழகான பெண்ணுடன் போனால்தான் அவனுக்கு மாரியாதையாம். அதனால், அந்தப் பெண்ணை இரண்டாம் தாரமாக அவன் மணம் முடிப்பதற்கு சலீமாவும் ஒத்துழைக்க வேண்டும் என்று மாமியார் வாதிட்டார்.

பீறிட்டு வந்த அழுகையை அடக்கிய படி, நடைபிணம்போல் ஆட்டோ வுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள் சலீமா. “இப்ப எங்க போகணும்...?” ஆட்டோ டிரைவரின் கேள்விக்கு பதில் சொல்லத் திராணியில்லாமல் விசும்பினாள். கண்ணெதிரே தெரிந்த அந்தக் கடலும் பாலமும் அவளைத் தற்கொலைக்குத் தூண்டுவதுபோல் இருந்தது .

திடீரென்று குழந்தையின் ஞாபகம் வந்தபோது திக்குமுக்காடிப் போனாள். இருண்ட கண்களுக்குள் திடீரென்று ஓர் ஒளிக்கீற்று தென்பட்டது. தன் மகன் ஊதாரி என்று மாமியார் அடிக்கடி எச்சரித்ததால் , ஆடைத் தொழிற்சாலையை தன் பெயரில் பதிவு செய்தது நினைவில் வந்தது .

“வக்கீல் கிட்டப் போதம்பி...” என்று ஆட்டோ டிரைவரிடம் சொல்லிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு மீண்டும் அந்தக் கடலைப் பார்க்கிறாள் . “நான் கோழைகளை மூழ்கடிப்பேன்; போராடத் துணிந்தவர்களைக் கரை சேர்ப்பேன்...” என்று கடல் அலைகள் அவள் காதுகளில் முணுமுணுப்பதுபோல் உணர்ந்தாள் சலீமா...!

# துயிலின் விதி

இருள் விழுங்கும்
சூரியவொளியின் பலன்
நிலவொளியின் இருளில்
எரிகிறது

துயில் கெட்டதொரு
பெரு மூச்சில்....
சாத்தானியக் கொட்டத்தில்
மனமெனும் சஞ்சாரம்

மேனி மூடிய
வெட்க விரிப்பில்
அசதியான விழிகள்
உயிர் விரயமாய்க் கொட்டும்.

நேரவோட்ட விளையாட்டில்
சில நொடிகள் பிந்தியதால்
கெட்டுக்களிப்பான உணர்வுகள்
சொட்டும் வெந்நிறக் குருதியாய்ப்
பாயும்

கட்டுப்பாடற்ற பணியில்
குட்டுப்படும் தையலின் நிலை
சலிப்பின் பேரெழும்
துயராய் அவளகத்தில்
அடாவடித்தனமாய்ப் பதியும்

இன்பச் சுவையில்
வித்தை காட்டும் இரவுகள்
ஆந்தைகளின் அலறல்களிலும்
ஆரவாரமாய்த் தொடரும்

சிதைவுறும் மாதுவே
மறுநாள் நச்சரிப்புடன்
கானலெனக் கண்ட காட்சியாய்
அடங்கி அடுப்பங்கரையில்
அரசியாகிறாள்....

நிர்ணய விதிப்பான
இரவுகளின் ஒவ்வொரு
துயிலின் விதியும் ஏனோ
அவளுக்கு அவலப் பயணமாகிறது

"ஏரூர்க்கவி"

**எச்.எம்.எம்.றசீம்**

## தன்முனைக் கவிச்சாரல் - 1

உவமைகள் இல்லாமல் கவிதை
சுவாரஸ்யமாக இருக்குமா?

ஏன் இருக்காது? அம்மா என்பது கூட ஒரு வார்த்தைக் கவிதை தான் என்கிறார்களே. இதற்கு உவமை ஏது? உவமைகள் என்பது வெறும் அலங்காரம். அவ்வளவே. அலங்கார அணிமணிகள் இல்லாமலே எத்தனையோ பேர் பேரழகாய் இல்லையா? அது போல் தான் உண்மை அழகுக்கும் அலங்காரம் தேவையில்லை. உயர்ந்த நோக்குடையக் கவிதைக்கும் அலங்காரம் அவசியமில்லை.

கவிஞர் இமயம்.
https://ta.quora.com/

**அலங்காரம் இல்லாமல்**
**கவிதையொன்று நெய்கிறேன்**
**அதைநீ உடுத்துகையில்**
**அத்துனை அழகாய்**

Without decoration
I am weaving a poem
When you wear it
It is so beautiful



## தன்முனைக் கவிச்சாரல் - 2

வசனங்கள், துணுக்குகள், கருத்துகள், நீதி போதனைகள், எழுச்சி கோஷங்கள் ஆகியவற்றின் வரிகளை ஒடித்து, வார்த்தைகளை ஒன்றுக்குக் கீழே ஒன்றாக எழுதி, இடையிடையே மூணு புள்ளிகள், ஆச்சரியக் குறிகள் போட்டால் அது கவிதை என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிற ஏராளமான பேர்கள் இருக்கின்றனர். இவர்கள் சிறிதும் கூச்ச நாச்சமே இன்றி தங்கள் பெயருக்கு முன்னால் கவிஞர் பட்டத்தைப் பெருமையாக சேர்த்துக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். அவர்களது அந்த வார்த்தை அடுக்குகளைக் கவிதை என்று வெளியிடக் கூடிய இணைய, அச்சு இதழ்களும் ஏராளமாக உள்ளன.

ஷாராஜ்
https://ta.quora.com/

**கற்றது கடுகளவு**
**கவிஞராவது வானளவு**
**கவிதைக்கு அழகு**
**கவிதையாய் வாழ்தல்**

What is learned is only a mustard seed size
To become a poet is sized like the sky
Poetry is beautiful
Only when living like poetry

- ராஜூ ஆரோக்கியசாமி

# பரணியின் பார்வையில்

# வாணிதாசன்



தமிழ் வளர்க்கும் நட்பும் தலை நிமிரும் தமிழும் என்றால் மிகையில்லை.

பள்ளிப் பருவத்தில் மட்டுமே கற்றது தமிழ்.அப்போதும் முறையாக கற்கவில்லை. இலக்கணம் நானறியேன். இருந்தாலும் தமிழ் மேல் இனம் புரியா தாகம். பொழுது போக்கிற்காக முகநூல் நுழைந்தவனுக்கு சிலரைப் பற்றிய கண்ணோட்டங்கள் தேடுதலைத் தந்தது. தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உந்துதல் தந்தது. எதையாவது எழுதிக் கொண்டே இருந்தால் எழுத்து பிடிபடும் என்ற உணர்வு எழுந்த போது எதை எழுதுவது என்ற மனதின் கேள்விக்கு விடியலை வணங்கி வரவேற்கச் சொன்னது.

இப்படியாகத் துவங்கிய எழுத்து ஒவ்வொரு நள்ளிரவும் வருகின்ற நாளை வரவேற்க ஆயுத்தமாகி எழுதத் துவங்கினேன். ஒவ்வொரு கிழமையையும் வரிக்குள் அடக்கி அத்தோடு இயற்கையை நனைத்து எழுதத் துவங்கினேன். அவ்வப்போது முக நூல் குழுமங்கள் நடத்துகின்றப் போட்டிகளில் கலந்து கொண்டேன். அதில் பல போட்டிகளில் சான்றுகள் வந்தமைந்தன. அதில் மகிழ்வே என்றாலும் அவர்கள் கொடுக்கின்ற அடை மொழிகள் விருதுகள் வெட்கப் பட வைத்தன. இந்த வெட்கம் வேட்கையானது.

ஏதாவது உருப்படியாக எழுத வேண்டும் என்ற வேகம் வந்தது. இதற்காக படிக்க ஆரம்பித்தேன். சொல்லிக் கொள்ளும் அளவுக்கு எதையும் ஆய்ந்தறிய வில்லை. நட்புகள் நிறையவே நாளும் வளர்ந்தன. இப்படிப் பட்ட நட்பின் தாக்கங்கள் தமிழை அறிய வேண்டும் என்ற தாக்கத்தைத் தந்தது. பாரதி பாரதிதாசன் கண்ணதாசன் என்ற பெயர்கள் தெரிந்த அளவுக்கு அவர்களின் படைப்புகள் அறிய வில்லை. தமிழுக்குள் எத்தனை எத்தனை கவிஞர்கள் கவிதைகள்.

தமிழே முதலானது. பணி ஓய்வு கை கொடுத்தது. தூக்கமின்மை வரமானது. இப்படிப்பட்ட பயணத்தில் விடியல் வணக்கம் 2180 நாட்களாக எழுதுவதும் இதற்கான விருதுகள் ஒரு பொறுப்பை யும் தந்தது. எதையோ என்னிடம் எதிர் நோக்கியுள்ளனர் என்ற உணர்வு என்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கடமை உணர்த்தியது.

இத்தகு சமயத்தில்தான் சகோதரர் பாரதி சுகுமாறன் அவர்களின் பாரதியின் புதிய ஆத்திசூடி தலைப்புகளில் 110 கவிதைகள் எழுத வேண்டும் என்ற அறிவிப்பு வெளியானது. கலந்து கொள்ள ஆயுத்தமாகி களம் நின்றேன். பாரதி சொன்னது என்னவென்று தெரிந்தால் தானே அதைப் பற்றி எழுத முடியும் என்பதற்காகவே பாரதியின் ஆத்திசூடியை முதல்முதலாக படிக்க ஆரம்பித்தேன். ஆத்திசூடி வரிகள் 110 என அன்றுதான் அறிந்தேன்.

கற்பதற்கு ஏது வயது? அறுபதில்

அஆ படிப்பது போன்ற நிலை யெனக்கு. தெரியாததற்கு வெட்கப்பட்டேன்.தெரிந்து கொள்ள விருப்பப் பட்டேன். ஒவ்வொரு தலைப்புக்கும் எழுத முற்பட்டேன் நூற்றுக்கும் மேற்பட்ட குழுமங்களில் பயணிப்பதால் அனைவருக்கும் பழக்கப்பட்டவனாகி விட்டேன். பாரதியை முழுவதுமாக படிக்கவில்லை யென்றாலும் தேவையான ஆத்திசூடியை அறிந்தேன். எழுதிக் கொண்டிருக்கும் போதே நட்பு வட்டம் விரிந்து கருத்துரைக்க ஆரம்பித்தனர். என்மேலும் நம்பிக்கை வந்ததாய் உணர்ந்தேன்.

பாரதியின் குடும்ப உறுப்பினரே அலைபேசி மூலம் அழைத்து வாழ்த்துரைத்து 110 தலைப்பும் தெளிவும் பதிவேற்றம் செய்ய தனிப் புலன அமைப்பையும் உருவாக்கித் தந்தனர். இப்படிப் பட்ட நேரத்தில் தான் வாணிதாசனார் குடும்ப உறுப்பினர்கள் பாரதியின் ஆத்திசூடிக்குண்டான தெளிவுரையைக் கண்டு வாழ்த்தி வாணிதாசன் பற்றிய ஒரு கட்டுரை எழுதப் பணித்தார்கள். அந்த அழைப்பு வரும்வரை எனக்கு வாணிதாசன் பற்றிய எந்தவொரு வரியும் தெரியாது.

எதைத் தேடுவது என்றிருப்பவனுக்கு இதைத் தேடு என்றதோர் கருத்து எடுப்பாக இருந்தது. ஆனாலும் பாரதியின் ஆத்திசூடி எழுதி முடித்தபின் இதனை அறியலாம் என்றிருந்தேன். ஒருநாள் வலைதளத்தில் தேடத் துவங்கும் போது தான் வாணிதாசன் வரிகளை பார்க்கத் துவங்கினேன். ஒரு வழியாக பாரதியின் ஆத்திசூடியை முடித்துவிட்டு வாணியாரின் வரிகளைத் தேடத் துவங்கினேன்.

வரிகளா அவை அவ்வளவும் பட்டை தீட்டிய வைரங்கள். நான் ஒரு வகையில் பொறுக்கி தான். விடியல் வணக்கத்திற்காக வார்த்தைகளைப் பொறுக்கி பொறுக்கி எடுப்பவன். இதற்கானப் பொறுக்கலில் கை கொடுத்தது தமிழேறு முடியரசன் நூல்கள் தான். அவரின் (முடியரசன் கவிதைகள் 13 பாகமும்) வரிகள் தான் அந்நாளில் வார்த்தை களை வழங்கியது. அந்த 13 நூல்கள் மட்டுமே நான் அறிந்ததால் அதன் தாக்கம் விடியல் விவரம் வரச் செய்தது. இப்போது வாணிதாசன் பற்றியத்தேடலில் நல்லாசிரியர் பாவலர் வளர்மதி முருகன் அவர்களின் சிறுநூல் கிடைக்கப் பெற்றேன். உள்ளே நுழைந்தேன்.உயர்ந்தது போல் உணர்ந்தேன். அவரது புதிய ஆத்திசூடியும் புதிய கொன்றை வேய்ந்தோன் தெளிவுரையும் தேடலுக்கான தீனியைக் கொடுத்தது. ஆத்திசூடியைப் பற்றிய பார்வையைப் பிறகு எழுதலாம். புதிய கொன்றை வேய்ந்தோன் வரிகள் 91க்கும் எனக்குத் தெரிந்த தெளிவுரையைத் தரலாம் என இப்போது எழுதி வருகின்றேன். வாணிதாசன் என்ற பெயர்கூட தெரியாமல் என்னைப்போல் எத்தனை பேர்களோ.. தெரியாததும் தெரிந்து கொள்ள முடியாததுமாக அவரது பெயரை யாரும் அவ்வளவாக அசைபோடவில்லை என்ற ஆதங்கம் எனக்குண்டு. வாணிதாசன் ஒரு

> **“ஊமைபோல் எத்தனை நாள் ஊரினில் வாழ்வார் மக்கள்?”**

நெருப்புக்கவிஞன் தான். மொழிக்காகவும் நாட்டிற்காகவும் தன்னைக் கரைத்துக் கொண்ட கடமை தவறா தமிழ்மொழிக் காவலன் என்றால் மிகையில்லை. அத்தகு சிறப்புமிகு கவிஞனைப்பற்றி கொஞ்சமாவது எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இக் கட்டுரையை எழுத ஆரம்பித்தேன்.

1882ல் பிறந்த மகாகவியைத் தெரிந்த அளவுக்கு, 1891ல் பிறந்த பாரதிதாசனை அறிந்த அளவுக்கு, 1915ல் பிறந்த அரங்கசாமி என்ற வாணிதாசனை தெரியவில்லையே என்ற வருத்தம் எனக்குண்டு. புதுவையில் பிறந்திருந்தாலும் புவியின் கவிஞராக புதுமைக் கவிஞராக, திராவிடக் கவிஞராக, மொழிக் காவலராக பன்முக இலக்கிய வாதியாய் வாழ்ந்த இவர் பாரதிதாசனின் மாணாக்கர்

என்று அழைக்கப்படுவதில் பெருமிதம் கொள்கின்றார். ஒன்றா இரண்டா கல் வெட்டுப் போல சாட்டையும் சவுக்குமாய் ஊசிக் கவிதைகள் பாடிய இவருக்கு இன்னும் கூடுதலாக அங்கீகாரம் கொடுத்திருக்கலாம். அவரை அறியாதவர்களாகவே பலர் இன்றும் என்னைப் போலவே நாட்டில்.

வாணிதாசனை வாசிக்க முற்பட்டு வரிகளுக்குள் விழுந்து எழ முடியாது நிற்கின் றேன். அவரது எழுத்துக்கள் அவ்வளவையும் வாசித்ததில்லை. வாசித்ததில் மனம் தொடாத வார்த்தைகள் இல்லை. எழுத்துக் களின் வலிமை எதிராளிக்கு பயம் தர வேண்டும் தானே. அந்த வகையில் நானறிந்த பாரதி பாரதிதாசன் முடியரசன் இவர்கள் வரிசையில் வாணிதாசன் நிலை கொண்டுள்ளார். சில நாட்களுக்கு முன் தான் இவரின் சில வரிகளைக் கண்ணுற்று மெய் மறந்து என் தேடுதலைத் தொடர்ந்தேன். தேடலில் அறிந்த சில வரிகளைக் கொண்டே என் கட்டுரையைத் தருகின்றேன்.

வடக்கிருந்து வருமெதுவும் தமிழுக்குப் பகையென்றால் பகை நமக்கே என்ற வரிகள் காலத்தைக் கடந்த நிலையிலும் கண்முன் நிற்பதைக் காண்கின்றோம். மொழியுணர்வில் முன்னோடியாக இவரைப் பார்க்க வைக்கும் வைர வரிகள் தானே இது.

மலையமான் திருமுடிக்காரி என் றொரு படைப்பில் சொல்லாத விசயமே இல்லை யென்றால் அது தவறில்லை. மொழி வளமும் நாட்டின் வளமும் அவரின் எண்ணமாகவே என்றும் நிலைத்ததைக் காண முடிகிறது.

ஆத்திசூடி என்பது பழையதோ புதியதோ காலத்திற்கேற்ப கணிக்கப்பட்டு பலரால் பல்வேறு நிலைகளில் பல்வேறு பொருளில் எழுதப்பட்டு வந்ததைக் காண்கின்றோம். எழுதிய யாரும் பழமையை வெறுக்காது ஒதுக்காது கருப்பொருள் மாறாது அதே சமயம் அன்றைய கள நிலவரத்திற்கு ஏற்ப எழுதியுள்ளனர். அவ்வகை யில் வாணிதாசனும் புதிய ஆத்திசூடியை 95 தலைப்புகளில் தந்துள்ளார். அது மட்டுமின்றி புதிய கொன்றை வேய்ந்தோன் ஒன்றையும் படைத்து அதில் 91 தலைப்புகளைத் தந்துள்ளார். ஆத்தி சூடியோ கொன்றை வேய்ந்தேனோ என்னைப் போல் 60 வயதில் படிப்பதற்காக எழுதப் பட்டதல்ல. இளம் பருவத்துளேயே பிஞ்சு மனதில் பதிய வேண்டும் அது அவர் களையும் அவர்களால் மொழியும் நாடும் வளம் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக எழுதப் பட்டவைதான். ஆனால் காலம் கடந்தும் காணாது நிற்கின்றோம்.


கட்டுரையாளர் பரணி சுப சேகர்

வாணிதாசனின் தாலாட்டு கூட தவிப்பாக இருப்பதை பார்க்க முடிகிறது.

ஆராரோ பாட்டில் கூட சமூக அக்கறை கண்டு பிரமிக்க வைக்கிறது. சாதிச் சனியும் தமிழ்ப் பகையும் இல்லாத ஆதித் தமிழ் நாட்டை அடைவோம் நீ கண்ணுறங்கு என்கின்றார்.

இயற்கையை ரசித்துப் போற்றும் விதமாக விண்ணெழிற்கண்ட கண்கள் வேறொன்று வேண்டுமோ சொல் என்கின்றார். இயற்கையே இறையென்ற நோக்கம் புலனாகிறது.

இவரது காதல் மனம் இவரது கவிப் பெண்ணில் நாட்டியம் ஆடுகிறது. அவளில்லா இடமேயில்லை பேச்சில்லை

துன்பமெனும் பேச்சேயில்லை என்கின் றார். தேனொழுகும் தேவதையென தேடுதலைத் தேனாக்கியுள்ளார் தமிழன் ஒன்றாக இருக்க வேண்டும் என்று ஓங்கி குரல் கொடுக்கின்றார்.

கடமை நினைத்திடு தமிழா தமிழ்ப் பொதுக்கலப்பினிலே வேற்றுமைக்கே திடம் திடம் வரும் தோளினில் தீரம் வரும் நெஞ்சினில் தீமைக்கிடமில்லையடா என்ற வரிகள் போர்முரசு போல ஒலிக்கிறது.

கலைவாணரைப் பற்றிச் சொல்லும் போது... கதிகெட்ட திராவிடர்க்கு கருத் தொளி அளிப்பார் ஒவ்வாக்கதை செயல் இடித்துரைப்பார் என்று மூடப் பழக்க வழக்கத்தைச் சாடும் வரிகளுக்காகப் பாராட்டுகின்றார்

பாரதிதாசனைப்பற்றிக் குறிப்பிடும் போது... எதற்கும் கலங்கா தெழுதும் புரட்சிக் கவியரசைப் புதுவை உலகிற் களித்துப் புகழ்நிலை நாட்டியதே என்ற வரிகள் போதுமே.

தந்தைப் பெரியாரை அறிஞர் அண்ணா வை நெடுஞ்செழியனைப் போற்றும் இவர் நாம் அறியாத மயிலைசிவமுத்து பற்றி உரைப்பது தேடிப்பார்க்கத் தூண்டும் வரிகளது.

இவரது எழுத்துக்கள் அனைத்துமே ஆயுத எழுத்துக்கள் தான். அத்தனை எழுத்துக்களையும் ஆயுதமாக்கியவர் வாணிதாசன்.

ஊமைபோல் எத்தனை நாள் ஊரினில் வாழ்வார் மக்கள்? என்று சொல்லம்பு தைக்கின்றார்.

உழவை முதலாக்கி அத்தனைத் தொழிலையும் நேசித்து பரிவோடு பாட்டுக்குள் வைத்தவர் இவர். ஒன்று பட்டால் தான்உண்டு வாழ்வு என்ற நிலைப்பாட்டை பல நிலைகளில் முன் வைக்கின்றார். எந்தத் தொழிலும் இழிவில்லை என்று முழக்கமிடும் இவர்... எந்தத் தொழில்தான் இங்கீனம் ஈதறியேடி என் தோழி என்றுரைக்கின்றார். அத்தோடு அனைத்துத் தொழில்களையும் போற்றுமிவர் அவர்கள் இல்லையென்றால் வாழ்வில்லை உனக்கு வரிக்கு வரி வாசனை யோடு தருகின்றார்.

பெண்சமுதாயம்முன்னேறவேண்டும் படிப்பறிவில் முன்னிலையாக வேண்டும் என்பதை... படிக்காத ஆண் பெண் இல்லை. உடமையினைப் பொது வாக்கி கலை வளர்க்கும் ஒப்பில்லாத் தமிழகத்தைப் பார் பார் நீயே என்றுரைக்கின்றார். இயற்கைஎப்படிபொதுவானதோஅதுபோல் இருப்பதும் பொதுவாக வேண்டும். என்ற பொதுவுடமை விதி சொல்லும் வாணிதாசன் யாரும் உழைக்காமல் இருக்கக் கூடாது. உழைத்தவன் உயராத நிலையும் கூடாது என்கின்றார்.

கையூட்டு வரிக் கொடுமை கிம்பளம் என்ற பரவிக்கிடக்கும் அவலங்களைக் கண்டு பதறி இக்கொடுமை நீங்க வேண்டும் என்று விரும்பியவர் வாணிதாசன். சொல்லிப் பயனில்லை இவர்களுக்கு புரிய வைக்க செயல் படுவோம் என்றுரைக்கின்றார். அவரே மேலே சொல்லுகின்றார் விரிவுரை இனிமேல் வேண்டாம். செயலினால் வெற்றி காண்போம் என்கின்றார்.

வாழ்ந்தால் பிறர் சொல்லும்படி வாழ வேண்டும். பிறர் நகைக்க வாழ்தல் இழிவு என்கின்றார்.

பண்டைவாள் மறவனைப்போல் வாழலன்றி பலர் நகைக்க உடல் வளர்க்க வேண்டேன் என்று சிம்மமாய் சிந்திக்க வைக்கும் வரிகள்.

சடங்குகள் எனச்சொல்லி பூசை யென்ற பெயரில் நடக்கின்ற கூத்துக் களையும் சாடுகின்றார்.

புத்தகத்தை அடுக்கி அதன்மேல் பூ நிரப்பி மணப்பொடி தூவி கத்திக்கத்தி அர்ச்சனை செய்தால் கல்வி வந்திடுமா?

கல்வி பயில வேண்டாமா? கலைகள் வளர்த்து கைத்திறன் காட்டி காவியம் செய்கின்ற ஒன்றே கருத்தான பூசையென் கின்றார்.

எழுத்தாளன் நாட்டின் அச்சாணி. எழுத்தாலே நாட்டை ஈடேற்ற முனைய வேண்டும் என்று நெஞ்சு நிமிர்த்தி சொல்கின்றார்.பாரதியைப்போற்றும்இவர்... பொன்னான அவர் தமிழின் இனிமை கண்டேன். புதுமையெலாம் அவர் வாயிற் சொல்லக் கேட்டேன். அவர் மாய்ந்தார் என்பார் சிலர் என்விழி முன் கண்டேன் என்கிறார்.

இப்படி பல்வேறு நிலைகளில் பாக்களால் பரிவட்டம் கட்டி நிற்கும் வாணிதாசனை அனைவரும் அறிய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள் என்ற நிலையில் இவரை எனக்கு அறிய வைத்த அவர்தம் குடும்ப உறுப்பினர்களை வணங்குகின்றேன். அவர்தம் இல்லப் பெண்மணி நல்லாசிரியர் பாவலர் வளர்மதி முருகன் அவர்களை நூல் நல்லதோர் ஆக்கம் என வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன். அவர்தம் கணவர் முருகன் அவர்கள் இத்தகு வரிகளை நான் எழுத உந்துதலாக முழு முதற் காரணமாக இருந்துள்ளார் என்பதைச் சொல்லி வாணிதாசனை நாமறியும் நல்லதோர் பார்வையை நட்புகள் பலர் அறிவதற்காகவே எனது வரிகளை பரணியில் பார்வையில் வாணிதாசன் என்ற இக் கட்டுரையை நிறைக்கின்றேன்.

முகநூலில் வந்து கொண்டிருக்கும் கொன்றைவேய்ந்தோன் வரிகள் முழுமை யடைந்த பின் நூலாக்கமானவுடன் வாணிதாசனின் பிற படைப்புகளை நோக்குவோம் என்ற உறுதியுடன் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

**பரணி சுப சேகர்**
**மதுரை**



# பாரதி தீ...

எட்டய புரத்து தீயே
தமிழதன் மூச்சு உமதே
தொட்டிடும் புகழ் உம் வானை
தோன்றினீர் உலகின் ஒளியாய்

கடிமணம் வீசும் தமிழை
உலகிற்கு எடுத்துரைக்க
விடியலை தோற்றுதற்காய்
பெரும்பணி ஆற்றினீரே

விதைத்தீரே விடுதலை தீயை
விரும்பினீர் சுதந்திரத்தை
வதைக்கின்ற கொடுமை தீயிக்கு
புயலென எழுந்து நின்றீர்

பாட்டாலே செய்தீர் புரட்சி
உம் பெயர் நிலைக்க செய்தீர்
ஏட்டிலே எழுதி வைத்தீர்
உலகிலே தமிழ் விதைத்தீர்

பாமரர் புரியும் வண்ணம்
பாட்டினை மகிழத் தந்தீர்
அமுதமாம் குழந்தைப் பாடல்
அள்ளியே தந்தீர் உண்மை

கண்ணம்மா என்னும் அந்த
புதுமை பெண் அவளுக்காக
வண்ணமாம் தமிழில் அழகாய்
வடித்தீரே பெருமை சொன்னீர்

எதிர்ப்புக்கள் வந்தபோதும்
எதற்குமே தலைசாய்க்காது
மதமது பிடித்த கரி போல்
தமிழதே மூச்சு என்றீர்

முண்டாசு கவிஞர் நீரே
முறுக்கிய மீசை யோடு
அண்டத்தில் தமிழ் வளர்க்க
நெஞ்சத்தில் துணிவு கொண்டீர்

பாரதி தீ யாய் எழுந்தீர்
பைந்தமிழ் காத்து நின்றீர்
நேரிய தமிழணங்கை
வாழ்விலே வணங்கி நின்றீர்!.

**- கௌ. மோகனா**

# நுட்பம் குழுமத்தின்

## ஏழாம் ஆண்டு நிறைவு விழா

நுட்பம் குழுமத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா 13.11. 2022 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஓட்டமாவடி அந்நூர் பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் நுட்பக் குழும ஸ்தாபகரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், வர்ம மருத்துவ வைத்தியருமான கவிஞர் கவிமணி திருமதி. பாயிஷா நௌபல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மொழித் துறைத் தலைவர், இலக்கிய விமர்சகர், ''தமிழ்முத்து'' மரியாதைக்குரிய பேராசிரியர் செ.யோகராசா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினராக நுட்பம் குழுமத்தின் ஆலோசகரும் நாட்டாரியல் வித்தகருமான எழுத்தாளர், பல்துறைக் கலைஞர், கவிஞர் எழுகவி எம்.ஐ.எம். ஜெலீல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக நுட்பக் குழுமத்தின் சர்வதேச அமைப்பாளரும் முன்னாள் தலைவருமான கவிஞர் தனா சர்மா அவர்களும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். ஏ.நழீம் அவர்களும் மரண விசாரணை அதிகாரி அல்ஹாஜ் எம்.எஸ். பஷீர் அவர்களும் ''தூரிகை முற்றம்'' கலை இலக்கிய அமைப்பின் தலைவருமான கவிஞர் வானம்பாடி முஜாமலா அவர்களும் ''புத்தொளி'' கலை இலக்கிய குழுமத்தின் தலைவர், கல்வியியலாளர், மணிக்கூ கவி நசீரா ஆப்தீன் அவர்களும் ''தமிழ்ச் சாரல்'' கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கவிஞர் ஏரூர் ஜிப்ரியா அவர்களும்






நுட்பம் குழுமத்தின் நிருவாக உறுப்பினரும் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர். (கிராம அதிகாரி) பஷீர் அவர்களும் மேலும், நுட்பக் குழும நிருவாக உறுப்பினர்களான எச். எம்.எம். நௌபல், கூலிக்காரன் நூலின் ஆசிரியர் கவிஞர் அன்சார் சமூன், மூங்கில் காடு ஹைக்கூ நூலின் ஆசிரியர் கவிஞர் ரஹ்மான் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



நிகழ்ச்சிகளை எம்.ஐ.எம். நாளீர் தொகுத்தளித்தார்.



இவ்விழாவில் பேராசிரியர் செ. யோகராசா, கவிஞர் எழுகவி எம்.ஐ.எம். ஜெலீல், நுட்பம் குழுமத்தின் ஸ்தாபகர் கவிஞர் பாயிஷா நௌபல், கவிஞர் தனா சர்மா கவிஞர் முஜாமலா, கவிஞர் நஷீறா ஆப்தீன், கவிஞர் ஏரூர் ஜிப்ரியா, நிகழ்ச்சித் தொகுப்பாளர் எம் ஐ எம்.நாளீர், ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர். பஷிர், எச்.எம்.எம். நௌபல், கவிஞர் அன்சார் சமூன், கவிஞர் ரஹ்மான் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க ப் பட்டனர். ■

# ஒன்றுபடுவோம்! வென்று காட்டுவோம்!

(குறு நாடகம்)

## முனைவர் ஓசூர் மணிமேகலை

1

மலர் : அம்மா... அம்மா... (தயங்கியபடி வருகிறாள்)

அம்மா : என்ன... என்ன ஆச்சு...

மலர் : அம்மா... நம்ம வீட்டுக்கு அடிக்கடி வராரே... ராமு மாமா... அவரு... அவரு...

அம்மா : என்னடி... என்ன பேசுற...

மலர் : (நடுங்கியபடியே) அவரு... என்கிட்ட தப்பா நடந்துக்கிறார்மா....

அம்மா : ஏய்... போய் வாய கழுவுடி...

மலர் : இல்லம்மா... நேத்து கூட... (அழுகிறாள்)

அம்மா : கண்டதையும் டிவில பார்க்கிறது... இல்லாத கற்பனை பண்றது... அவரு... என் அண்ணன் மாதிரி... போ... போ... போய் படிக்கிற வேலைய பாரு...

மலர் : (அழுது கொண்டே) அம்மா நான் சொல்றதை கேளுங்கம்மா...

அம்மா : வாய மூடு... இனிமே இத பத்தி ஏதாவது பேசுன... அவ்வளவுதான்... உன்னை எல்லாம் படிக்க அனுப்புனதே தப்பா போச்சு... தெரியாமயா சொன்னாங்க அந்த காலத்துல... போ... போ... வேலைய பாரு...
(மலர் அழுது கொண்டே செல்கிறாள்)

2

ஆசிரியர் : மலர்... ஏன் டல்லா இருக்க... இன்னிக்கு பாடத்த கவனிக்கல... வீட்டுப்பாடமும் எழுதல... காலையிலிருந்து உன்னை பார்த்துக்கிட்டே தான் இருக்கிறேன்... என்ன ஆச்சும்மா...

மலர் : எங்க வீட்டுக்கு வர்ற மாமா ஒருத்தர் என்கிட்ட தப்பு தப்பா பேசுறாரு டீச்சர்... தப்பா நடந்துக்கிறார்... அம்மாகிட்ட போய் சொன்னா என்னத்தான் ரொம்ப திட்டுறாங்க எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியல டீச்சர்... (தயங்கித் தயங்கி பேசுகிறாள்)

ஆசி : அப்படியா... நீ ஒன்னும் கவலைப்படாத மலர்... இத சரிப்படுத்திடலாம்... நீ பயந்துகிட்டு எதுவும் சொல்லாம இருந்திராத... நாளைக்கு உங்க அம்மாவை டீச்சர் கூப்பிட்டாங்கன்னு இங்க வரச் சொல்லு...

மலர் : சரிங்க டீச்சர்... (போகிறாள்)

### புதுக்கவிதை

**மணிக்கொருதடவை**
**ஓரே ஓசை**
**வெவ்வேறு**
**எண்ணிக்கைகளில்...**

**மணிக்கூண்டில்**
**வசிக்கும்**
**கடிகாரப்பறவையிடமிருந்து...**

**- அ.கேசவராம்**

3

ஆசிரியர் : வாங்கம்மா மலர் அம்மா... உட்காருங்க... மலர் உங்ககிட்ட என்ன சொன்னா நேத்து...?

அம்மா : இந்த பாருங்க டீச்சர்... அவதான் சின்ன புள்ள... ஏதாவது உளர்றானா... நீங்க வேற என்ன கூப்பிட்டு கேக்குறீங்க... இப்படி தேவையில்லாம பேசினா நான் ஸ்கூல விட்டு அவளை நிறுத்திடுவேன்...

ஆசிரியர் : அம்மா... இருங்கம்மா... இருங்க பொறுமையா இருங்க... இது உங்க பொண்ணோட வாழ்க்கை...

அம்மா : என் அண்ணனை பத்தி எனக்கு தெரியும்... இவ பேச்செல்லாம் நம்ப கூடாது... இது எங்க குடும்ப விஷயம் நீங்க தலையிடாதீங்க...

ஆசிரியர் : அவ என்னோட மாணவி... எனக்கும் பொண்ணு மாதிரிதான்... நீங்க இப்படி பேசுவீங்கன்னு தெரிஞ்சுதான் இன்னைக்கு நான் ஒருத்தரை இங்கு வர சொல்லி இருக்கிறேன்... இருங்க... (போன் ) ஹலோ மேடம் வாங்க மேடம்... வாங்க வாங்க... நாங்க காத்திருக்கிறோம்...

(மனநல ஆலோசகர் உள்ளே வருகிறார்)

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்க மேடம்... நான் சொன்னேனே அந்த பெண் மலர். அவங்க அம்மா...

மனநல ஆலோசகர் : வணக்கம்... மலர்... இங்க... வா எப்படி இருக்க ..? (முதுகில் தட்டி கொடுக்கிறார்)

(மலர் அழ ஆரம்பிக்கிறாள்)

மனநலஆலோசகர் : பெண்கள் அழுது அழுது தான் இந்த நிலைமைக்கு ஆளாய் இருக்கிறாங்க... (அம்மாவை பார்த்து) என்னம்மா... மலர் உங்க பொண்ணு தானே... அவள் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லை... ஆனா தூரத்து சொந்தக்காரங்க உங்க அண்ணன் மேல உங்களுக்கு ரொம்ப நம்பிக்கை... ம்...

அம்மா : இந்தக் காலப் பொம்பளப் பிள்ளங்க...

மனநல ஆலோசகர் : இந்தக் காலம்... அந்த காலம்னு பேசாதீங்க... உங்க காலத்துல வீட்டுல பாட்டி... சித்தி... அத்தை... இப்படின்னு எத்தனை பேர் ஆறுதலா இருந்திருக்காங்க... கவுன்சிலிங் பண்ணி இருக்காங்க... இன்னைக்கு அப்படியா...? தனித்தனியா வாழ்றோம்... இந்த பொண்ணுக்கு ஒரு கஷ்டம்னா யாரு கிட்ட சொல்லுவா... புரிஞ்சுக்கோங்க...

அம்மா : ஆமா... என்கிட்ட தான் சொல்லணும்... ஆனா...

மனநல ஆலோசகர் : ஒரு அம்மாவா இல்லாம ஒரு தோழியா அவ சொல்றத நீங்க கேட்டு இருந்தா இந்த பிரச்சனையை நீங்களே எளிதா முடிச்சு இருக்கலாம்.. சின்னப் பிள்ளைங்க பொய் சொல்ல மாட்டாங்க அம்மா... அவங்கள முதல்ல புரிஞ்சுக்கோங்க... நாம... பெண்கள்தான் உறுதியா இருக்கனும்...

அம்மா : மேடம்... என் மேல தப்பு தான் என் பொண்ண நான் புரிஞ்சுகிட்டேன்... இனி கவனமா பாத்துக்குவேன்...

ஆசிரியர் : நீங்க தான் முதல்ல அவளுக்கு தைரியம் சொல்லணும்... நாங்க எல்லாரும் இருக்கிறோம் உங்களுக்கு ஆதரவா... பெண் கல்வி எவ்வளவு முக்கியம் தெரியுமா? படிப்ப நிப்பாட்டிடுவேன்னு இனிமே நீங்க சொல்லாதீங்க...

அம்மா : டீச்சர்... மேடம்... நீங்க ரெண்டு பேரும் என் கண்ணை திறந்துட்டீங்க... இனி இப்படி நடக்காம

நான் பாத்துக்குறேன்... மேடம்... உங்கள மாதிரி படிச்சு என் பொண்ணு பெரிய ஆளா வரணும் மேடம்... (கண் கலங்க மலரை அணைத்துக் கொள்கிறாள்).

ஆசிரியரும் மனநல ஆலோசகரும் இருவரையும் தட்டிக் கொடுக்கின்றனர்.

(பெண் கல்வி மிகவும் முக்கியம். பெண்களைப் படிக்க வைக்க தயங்காதீர்கள். பெண் குழந்தைகள் கூறும் பிரச்சனைகளை தாய் தோழியாக இருந்து கேளுங்கள். பகிருங்கள். பெண்களால் முடியாதது எதுவுமே இல்லை. பாலியல் வன்முறைகளை வேரோடு களைவோம்! ஒன்றுபடுவோம்! வென்று காட்டுவோம்!)

# "நீ எனக்கு"

தண்ணீர் கேட்டு தேனீர் கிடைத்தால்
எப்படி இருக்கும் அப்படித்தான் இருந்தது
உன்னை பார்த்த எனக்கு!

வெயிலில் அலைந்து திரிந்து வந்தவன்
கையில் குச்சி ஐஸ் கிடைத்தது போல்
உன் நட்பு!

படிக்காத மாணவன் எல்லாப் பாடங்களிலும்
தேர்ச்சியென்றால் எப்படியோ அப்படியே
மிக நெருக்கமான உன் கதகதப்பு!

நீச்சல் தெரியாதவன் கிணற்றில்
விழுந்தது போல் பேரதிர்ச்சி எனக்கு
எதிர்பாராமல் நீ தந்த முத்தம்!

கடலில் மூழ்குபவனின் கரம் பற்ற
வந்த இன்னொரு கடவுள் போல் நீ
எப்பொழுதும் உன் கூடவே இருக்கும்
சாபம் தந்த தேவதை நீ!

கதைப் புத்தகம் கேட்டவன் கையில்
காமப் புத்தகம் கிடைத்தால்
எப்படி இருக்கும் அப்படித்தான் மிக
இரகசியமாய் பூட்டி வைத்திருக்கிறேன்
நமக்கான காதலை
சந்திப்பை... முத்தத்தை...!

**- மகிழை.சிவகார்த்தி**

## தன்முனைக் கவிதைகள்

கிளிக்கூண்டு விற்பனையில்
மும்முரமாய் தந்தை
பறவை விடுதலைக்காய்க்
கண்ணீரோடு மழலை

***

ரயில் வண்டி விளையாட்டில்
கடைசியாய்ப் பாட்டி
தள்ளாடி நகர்கிறது
வண்டியின் தடம்

***

உடைந்த பலூனுக்காய்
ஒப்பாரியில் சிறுவன்
கைகொட்டி நகைக்கும்
உடனிருக்கும் நட்புகள்

***

பெய்த மழையில்
மூழ்கிடும் கப்பல்கள்
கையொலி மறைந்து
கவலையில் சிறுவன்.

***



பள்ளி இடைவேளையில்
பகிர்ந்துண்ணும் சிறுமி
பசியாறி மகிழும்
எறும்புகளோடு அணில்.

**கன்னிக்கோவில் இராஜா**

# Power Point Stories
# பவர் பாயிண்ட் கதைகள் 2

# கண்ணில் தோன்றிய கண்மணியே...

எழுதியவர்கள் :

- வனஜா முத்துக்கிருஷ்ணன்
- ருக்மணி வெங்கட்ராமன்
- விஜி சிவா
- கி.இரகுநாதன்

## 1

## வனஜா முத்துக்கிருஷ்ணன்



சிறிய ஓட்டு வீட்டின் திண்ணையில் அமர்ந்து சிறிய அளவிலான உரலில் வெற்றிலையைப் போட்டு இடித்துக் கொண்டிருந்த பொன்னாத்தா...

“ஏண்டி.. சோலையம்மா... கைப் பிள்ளையைத் தூக்கிகினு இந்த வேகாத வெயிலில எங்க போயிட்டு இருக்கே...” என வினவ,

“போச்சு போ... இந்தக் கிழவி வாயை வச்சிடுச்சா, விளங்கிடும். நந்தி மாதிரி வழிய மறைச்சுகினு..” என்று முணுமுணுத்தபடியே வேகமாக நடக்க ஆரம்பித்தாள் சோலையம்மா.

பக்கத்தில் இருந்த பொன்னாத்தாவின் கணவர் முருகையன், “ஏம்மா... சோலையம்மா... நீ வரிசையா புள்ளைங்களை பெத்துப் போட்டே..! அப்போ அந்தப் புள்ளைங்கள வெளிய இழுத்துப் போட உனக்கு பொன்னாத்தா தயவு வேண்டி இருந்துச்சு.. இப்போ அவளுக்கு வயசாகிடுச்சின்றது உங்களுக்கெலாம் எளக்காரமா போச்சோ...? ஒண்ணு தெரிஞ்சுக்கோ என் பொஞ்சாதி பொன்னாத்தா என்னிக்குமே சிங்கம் தான்..!” என்று கூறியபடி கண்களில் பொறி பறக்க, தன் கையில் இருந்த ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு எழுந்தார் முருகையன்.

“ஐயே... இந்தப் பெரிசுக்கு வயசானாலும் ஆச விடல. தன் பொஞ்சாதியை ஒரு வார்த்தை சொல்லிப்புட்டேனாம். எப்படி தோளைத் தூக்கிகிட்டு சண்டைக்கு வருது. இந்த ரோஷத்த உன் புள்ளைகிட்ட காமி...” என்று அலட்சியப் பார்வையுடன் நடந்தாள் சோலையம்மா.

“சரி.. சரி.. விடுங்க; நம்ம பேரப் புள்ளைங்கதானே. என்னமோ போங்க... நம்மள பாத்தாலே ஏதோ ஒரு எதிரியைப் பார்க்கற மாதிரி புருஷனும் பொஞ்சாதியும் பாக்குதுங்க...!” என்று சொன்ன பொன்னாத்தாவின் கண்களில் பொல பொல வென்று வழிந்த கண்ணீரைப் பார்த்து விட்டு சோலையம்மாவின் கைகளைப்

பிடித்துக் கொண்டு வந்த பத்து வயது கோபால்... தன் தாயின் கரங்களை உதறிவிட்டு நேராக ஓடி வந்து அவள் கண்ணீரைத் துடைத்தான்.

''ஆச்சி..அழுவாதீங்க.. நீங்க பாவம். ஏன்தான் இவுக ரெண்டு பேரும் இப்படி இருக்காங்களோ...? உங்க ரெண்டு பேர் மேல என்ன தான் கோபமோ?'' என்றான்.

''ஏ... கோவாலு... நான் என்னத்தடா சொல்றது..! எங்ககிட்ட நீயாவது ஆசயா இருக்கயே... அது போதும்.. இதான் ரத்த பாசங்கறது. உங்கப்பனும் ஆத்தாவும் எங்க மேல பழியா இருக்காங்க.. ஏண்டா பேராண்டி... ஒரு சிறு துளியாவது எங்க மேல பாசம் இருக்காதா கண்ணு..?" என பொன்னாத்தா கூறுகையில் கோபால் கண்ணைக் கசக்கினான்.

''அழாதடா என் கண்ணு... நீ அழுதா இந்த ஆச்சி கண்ணுல ரத்தம் வரும்ல...!''

"..ம்... ஆச்சி... நாங்க மூணு பேரும் நேத்தில இருந்து ஒண்ணுமே திங்கலை.. ஆத்தாவும் நைனாவும் ஏதோ சண்டை போட்டுகினு சோறே பொங்கல.. சின்னவன் அழுதான். அதனால அம்மாக்கு மனசு கேக்காம எங்களுக்கு சாப்பிட ஏதாச்சும் வாங்கித் தரலாம்னு கூட்டிக்கிட்டு வந்துச்சு... வழில உங்களப் பார்த்ததும் அம்மாவுக்கு கோபம் தலைக்கேறிடுச்சு..." என்று திணறித் திணறி தேம்பியபடி கூறினான் கோபால்.

தள்ளாடியபடி நடந்த முருகையன் தன் தோளில் இருந்த துண்டைச் சரி செய்தபடி தனக்கு வைத்திருந்த சோறைப் பிசைந்து கொண்டே... ''இந்தாடா பேராண்டி... சாப்பிடு. ஒன் தங்கச்சி தம்பி எங்க..?'' எனக் கேட்டார்.

''எனக்கு வேண்டாம் தாத்தா... பாவம் அதுங்க.. சின்னதுங்க. அதுங்களே பட்டினியா கிடக்குதுங்க. பாவம் நீ சாப்பிடு. அதுங்க ரெண்டும் பயந்துகினு அம்மா பின்னாடி ஒளிஞ்சுக்கிட்டு இருக்குதுங்க.''

சோலையம்மாவின் முதுகுப் பக்கத்தில் ஒளிந்து கொண்டு இருந்த குழந்தைகள் சுப்புவும் கண்ணம்மாவும் ஏக்கத்துடன் பார்த்ததை, பொன்னாத்தாவும் முருகையனும் கவனித்தனர்.

''வாங்க கண்ணுங்களா... ஆச்சி சோறாக்கி வச்சிருக்கேன்.'' என்று பொன்னாத்தா சொன்னதும் ஆக்ரோஷத்துடன் ஓடி வந்த சோலையம்மா முருகையனின் கையில் இருந்த சோறைத் தட்டி விட்டு...

''என்ன...? ஆடு பகை குட்டிங்க ஒறவா...? மத்த ரெண்டு புள்ளைங்களையும் படிக்க வச்சு பெரிய வேலைக்கு அனுப்பிட்டு, கடைக்குட்டியான என் புருஷனை உங்க வேலையாளா வச்சிகிட்டீங்க. ஒங்க பையன் ஒரு தண்டம். புள்ளைங்கள பெத்துட்டு அதுங்களுக்கு கஞ்சி ஊத்தக் கூட துப்பில்லை. இதுல கஷ்டப்படறது நானும் என் புள்ளைகளும்தான்.!» என்று அனல் பறக்கும் வார்த்தைகளை அவர்கள் மீது விட்டெறிந்தாள் சோலையம்மா.

இரண்டடி எடுத்து வைத்தவள் மீண்டும் கோபத்துடன் சொன்னாள், ''இதப் பாருங்க.. சுட்டமண்ணும் காஞ்ச மண்ணும் ஒட்டாது..! தெரிஞ்சுக்கங்க" என்றபடி விடுவிடுவென்று தன் குழந்தைகளை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

பொன்னாத்தா அழுதாள். "ஏங்க.. நாம மூணு புள்ளைகளையும் ஒண்ணாத்தானே வளர்த்தோம். கடைசிப் புள்ளையாச் சேன்னு ராமனுக்கு அதிக செல்லம் கொடுத்துட்டோமோ...? நாமளே அவனைக் கெடுத்துட்டோமோ..?". என்று முருகையன் தோளில் சாய்ந்து புலம்பினாள்.

'கட்டித் தந்த சோறு எத்தனை நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்கும்...! சோலையம்மாவின் மனதில் இருக்கும் காயங்களை ஆற்ற முடியுமா என்று காலம்

தான் பதில் சொல்ல வேண்டும்..' என நினைத்து கலங்கினாள் பொன்னாத்தா.

## 2

## ருக்மணி வெங்கட்ராமன்



பஞ்சாயத்துக் குழாயில் இருந்து தண்ணீர் பிடித்து வர, இடுப்பில் குடத்துடன் பொன்னாத்தா மற்றவர்களுடன் வரிசையில் நின்றாள்.

மனசு முழுக்க சோலையம்மாவின் 'ஆடு பகை, குட்டி உறவா...' என்கிற வார்த்தைகள் காதருகில் ஒலிக்க, நிம்மதி இன்றி தவித்தாள்.

''என்ன... பொன்னாத்தா.... மருமக என்னத்தச் சொல்றா. .?" என்றாள் ஒருத்தி. மற்றொரு பெண், ''எல்லார் வீட்லயும் நடக்கிறது தானே.! இதப் போய் பெரிசா கேள்வி கேட்டுகிட்டு; உன் வேலையைப் பாப்பியா..!" என்றாள்.

''சோலையம்மா கேக்கறதும் சரி தானே..! மொத இரண்டு பசங்களையும் பெரிய படிப்பு படிக்க செலவு செஞ்சீங்க! கடைசி பையனுக்கும் ஏதாவது செய்ய ணும்ல'' என ஒருத்தி கிளறினாள்.

''நீ என்னத்தக் கண்ட...! நாட்டா மைக்கு வந்துட்டா பெரீசா...!'' என்றாள் கோபத்துடன் பொன்னாத்தா.



பொன்னாத்தா மனசு கனவாகிப் போன ராமன் வாழ்க்கையைச் சுற்றியே வந்தது.

'நானும் புருஷனுமா நெலத்துல பாடுபட்டு, அதுவும் போதாம கடனும் உடனும் வாங்கி மூணு பேத்தையும் காலேஜில சேர்த்து படிக்க வச்சோம்! என்னாச்சு? மொத ரெண்டு பேரும் நல்லா படிச்சு நல்ல வேலைல இருக்கறாங்க. இந்த ராமன் சரியா காலேஜிக்கும் போனதில்லை. படிப்பில் நாட்டமும் இல்லை. ஊருல இருக்கிற அம்புட்டு பேரும் உபதேசம் செஞ்சி பரிட்சை எழுதினான். குறைஞ்ச மார்க் வாங்கி பாஸ் ஆயிட்டான்.

நம்ம ஊர் மணியக்காரர் பையன் ஒரு கம்பெனி நடத்தறானு தெரிஞ்சு , அவர் கால்ல விழாத குறையா கெஞ்சி கூத்தாடி இவனுக்கு வேலை வாங்கி கொடுத்தாரு இவன் அப்பா.

'மாமா பொண்ணை கல்யாணம் பண்ணி வையி'ன்னு கேட்டான். அவன் ஆசப்படி கல்யாணமும் நடந்துச்சு. மூன்று குழந்தைங்க பெத்துக்கிட்டான்.

நிறைய பணம் சம்பாரிக்கணும்னு மோகம் மட்டும் இருக்கு அவனுக்கு.

எல்லாத்துக்கும் அவன் பொண்டாட்டியும் கூட காரணம். 'பானை புடிக்கிறவ பாக்கியசாலியா இருக்கணும்னு' எங்க ஆத்தா சொல்லுவாக. சோலையம்மா செலவாளி. ஆம்பளைங்க சம்பாதிச்சு கொண்டு வர வரும்படியை சிக்கனமா செலவு செய்றவ தானே மகராசி.

சோலையம்மாவின் ஆசைக்குத் தீனி போடத் தான் ராமனும் துடிக்கிறான். ஆனா பாழாப்போன குடிகாரப் பழக்கமும், சோம்பேறித்தனமும் அவனை திசைமாற வைச்சுடுச்சி. எல்லாத்துக்கும் காரணம் பணம்... பணம் என்கிற பேராசை.

திடீர் பணக்காரன் ஆகணும்னு நினைப்பு மட்டும் இருக்குது..! வழி தான் தெரியல. மாசச் சம்பளம் வாங்கி முன்னேற முடியாதுனு நினைச்சு முட்டாத்தனமா வேலையையும் விட்டுட்டான்..' என பொன்னாத்தா முணுமுணுத்துக் கொண்டிருக்கையில் அங்கு குடத்துடன் வந்த சோலையம்மா, «நல்லா கேட்டீங்க ஒரு கேள்வி.! அவரு யாவாரம் செய்யலாம்னு வீட்டு பத்திரத்தைக் கேக்கறாரு. அதை அடமானமா வச்சு பணம் வாங்கி யாவாரம் ஆரம்பிச்சா லாபத்தில திருப்பிடலாம்ல. அதக் கொடுக்க மனசு வரலை இவுங்களுக்கு..'' என்று தன் நியாயத்தைக் கூறி புலம்பினாள்.

அவளைப் பார்த்ததும் பொன்னாத்தா... எதுவும் பேசாமல் தண்ணீர்க் குடத்தை தூக்கிக் கொண்டு அவள் சொன்னது காதில் விழாத மாதிரி அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

''பாத்தீங்களா...!? இப்படித்தான்... ஏதாவது கேட்டால் எதுவும் பேசாம இடத்தை விட்டு போயிடுவாங்க'' என்றாள் சோலையம்மா.

வீட்டை அடைந்த பொன்னாத்தா வாயடைத்து நின்றாள். வீட்டின் முன் ஒரே கூட்டம். பதறியபடி, ''அய்யோ ...விலகி வழி விடுங்க, என்னாச்சு...?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்று பார்த்தாள்.

அங்கு மயங்கிய நிலையில் இருந்த முருகையனின் அருகில் ஊர் வைத்தியர். ''வைத்தியரே.. அய்யய்யோ என்னாச்சு எம் புருஷனுக்கு...? அவர் ஏன் இப்படி நெடுஞ்சாண்கிடையா கெடக்காறு..!?'' என்றாள் பதற்றத்துடன்.

''ஆத்தா.... ஒண்ணும் இல்ல.. பயப்படாத தாயி...! உம் பையன் வந்து ஏதோ சொல்லி மிரட்டியிருக்கான். அதைக் கேட்டு மயக்கம் ஆயிட்டாரு . உன் பேரன்

கோபால் தான் பயந்து போய் என்னை வரச் சொன்னான்...!'' என்றார் வைத்தியர். கண் திறந்து பார்த்த முருகையன் ''பொன்னாத்தா... வந்திட்டயா.. ? ராமன் நம்ம வீட்டு பத்திரத்தை தரச் சொல்லிக் கேட்டான். நான் மறுத்ததும் 'தரலைனா அம்மா வீட்டுக்கு வரமாட்டா'ன்னு பயமுறுத்தறான்..'' கண்ணில் இருந்து கண்ணீர் சொட்ட பயத்துடன் வார்த்தை களைக் கொட்டினார்.

பொன்னாத்தா மனதில் உடனே ஒரு தீர்மானம் உருவானது..

## 3

## விஜி சிவா



முருகையனின் கன்னத்தைத் தென் றலாய் வருடி, தன் முந்தானையால் வீசிக்கொண்டே,''சரி...சரி...ஒண்ணுமில்ல ராசா, நான் பாத்துக்கிறேன்..! நம்ம பையனப் பத்தி நமக்குத் தெரியாதா...!? சின்னப் பையன் ஏதோ கோவத்துல உளறுறான்... விடுங்க...! நான் சமா தானப்படுத்துறேன் அவன...'' என்ற பொன்னாத்தாவின் வருடலான பேச்சால், கடல் மட்டத்தின் அடியில் ஏற்படும் நிலநடுக்கமாய் இருந்த முருகையனின் கண்களில் இப்பொழுது சற்றே மலர்ச்சி தெரிந்தது.

உடனே மருத்துவர் கிண்டலாக ''சரி சரி.. அப்ப நான் கிளம்புறேன். அதான் உன் டாக்டரம்மா வந்துட்டாங்கல....! இனி நான் எதுக்கு?'' என்று சிரித்தபடி கிளம்பினார்.

அங்குகூடியிருந்தஒருசிலர்,"சரிப்பா முருகையா.. அதெல்லாஞ் சரியாயிடும். நம்ம புள்ளைங்க தானே...! சொன்னாப் புரிஞ்சுக்குவாக.. விடு விடு... யார் வீட்ல இப்ப பிரச்சனையில்ல...?! இதுக்கா எங்கள இப்படிப் பயமுறுத்தின...!?'' எனக் கூறியபடி விலக... ''ம்...தென்னையப் பெத்தா இளநீரு... பிள்ளையப் பெத்தா கண்ணீருனு; அந்தக் காலத்திலேயே சொல்லி இருக்காக... அதானே நடக்கும்... இந்தப்பிள்ளைகளைச்சொமந்தவயித்துல, குளவிக் கல்ல சொமந்திருக்கலாம்..'' என சில வயதான பெண்கள் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு, மூக்கை உறிஞ்சியபடி அங்கிருந்து சென்றனர்.

பொன்னாத்தாவின் உள்ளங்கை ரேகைகளைத் தடவியபடி, முருகையன் கவலையாக ''என்ன பொன்னாத்தா இப்படிச் சொல்ற; அவனப் போய் சின்னப் பையன்னு... சின்னப் பையன் கணக்காவா பேசுறான்? கண்ணெல்லாம் செவக்க எப்புடி கத்துனான் தெரியுமா? இவன் சின்னப் புள்ளையில பேச மாட்டானானு எத்தினி கோயில் குளம் போயிருப்போம்! எவ்வளவு ஏங்குனோம்...?! இப்படி அப்பனையும் ஆத்தாளையும் பேசுற துக்கா....!? 'அய்யனாரே...' என்ன தப்பு பண்ணுனோம் சாமி நாங்க... !? நல்லாத்தானே எல்லாப் புள்ளைகளையும் வளத்தோம்..'' என மீண்டும் முருகையன் கூரையைப் பார்த்து முணுமுணுத்தார்.

''இங்கபாருஎன்னய..அதவிடுன்னு சொல்றேன்ல; நான் பாத்துக்குறேன் யா... என் மேல நம்பிக்கை இருக்குல்ல..'' என அவரின் கையை அன்பாய் இறுக்கிப் பிடித்தாள் பொன்னாத்தா.

அவளின் ஆறுதலான வார்த்தை களில், அவளின் திறமையில் இருந்த நம்பிக்கையில் சற்றே உறங்கிப் போனார் முருகையன். அவரின் தலையைச் சற்று நேரம் கோதி விட்ட பொன்னாத்தா, மெது

வாய் எழுந்து அடுக்களைக்குள் சென்று, தவிடு சேகரித்து வைத்திருந்த மண்பானைகளுக்குள் ஒன்றில் கைவிட்டு வீட்டுப் பத்திரம் இருக்கிறதா என உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மறுநாள் காலையில் அந்த வீட்டுப் பத்திரத்தை எடுத்துக் கொண்டு பக்கத்து கிராமத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்திற்குச் சென்றாள் பொன்னாத்தா. அங்கு தலைமை ஆசிரியராக நந்தினி என்ற இளம் வயது ஆசிரியை பணிபுரிந்தார். பேரன் கோபாலைப் பள்ளியில் விடுவதற்காக பொன்னாத்தா வரும் போதெல்லாம் அன்பாய்ப் பேசி பரிச்சயமானவர். பொன்னாத்தா-முருகையாவின் நிலைமையை நன்கு அறிந்தவர்.

''டீச்சரம்மா... டீச்சரம்மா...'' என அறைவாசலில் நின்று தயங்கித் தயங்கி பொன்னாத்தா அழைக்க, எட்டிப் பார்த்த நந்தினியின் முகம் கண்டு... சட்டென மாறும் வானிலையாய் மாறியது பொன்னாத்தாவின் உள்ளம் .!

''அடடே... வாங்கம்மா; வாங்க வாங்க...! எப்படி இருக்கீங்க?" என புன்சிரிப்புடன் நந்தினி வினவ, சட்டென்று கண் கலங்கி "அது... வந்து..." என குரல் உடைந்து அழ ஆரம்பித்தாள் பொன்னாத்தா.

அவள் தோளை அணைத்த நந்தினி, "என்னாச்சும்மா ? என்கிட்ட சொல்லுங்க.." என ஆறுதலாய் வினவ, "ஏற்கனவே உங்ககிட்ட சொல்லி இருக்கேன்ல டீச்சரம்மா.... என் கடைசிப் பையன நெனச்சா எங்களுக்குப் பயமா இருக்குமா.." கலங்கிய கண்களுடன் நேற்று நடந்த சம்பவங்களை அவளிடம் ஒரே மூச்சாக, பெருமழையாய்க் கொட்டித் தீர்த்தாள்.

அடுத்த சில நிமிடங்கள் புயலுக்குப் பின் வரும் அமைதி போல் நகர்ந்தன.!

அந்த அமைதியை நந்தினியே கலைத்தாள், ''இப்ப என்ன செய்யலாம்னு இருக்கீங்கம்மா.." எனக் கேட்டாள்.

பொன்னாத்தா, "இந்தப் பத்திரம் அவன் கைக்கு இப்பப் போகக் கூடாதும்மா... இது வீட்டுல இருந்தா ஆபத்துமா... இத நீங்க வச்சுக்கங்கம்மா'' என அவளிடம் பத்திரத்தை கொடுத்தபடி மேலும் சொன்னாள்.

''அவனை நல்லாத்தான்மா படிக்க வச்சோம். அவனே எல்லாச் சேட்டையும் பண்ணிட்டு, இப்பப் பழிய எங்க மேல போடுறான்; இப்ப இந்தப் பத்திரத்தை வித்துக் கொடுத்தாலுமே அவன் முன்னேற மாட்டான்மா... குறுக்குப் புத்தியில பணம் சம்பாரிக்கணும்னு நெனைச்சா, அது நிலைக்குமாமா...? உழைப்போட அருமை தெரியாம ஊதாரித்தனமா இருந்தா எப்படிம்மா..? அவன் கஷ்டப்பட்டு வாழ கத்துக்கணும்.. ஆனா..'' என பொன்னாத்தா ஒரு நிமிடம் தயங்கினாள்.

அவளைக் கூர்ந்து நோக்கிய நந்தினி, "தயங்காம சொல்லுங்கம்மா'' என்றாள்.

''பத்திரத்தைக் கொடுக்காம இருந்தா அவன் எங்கள ஏதாவது பண்ணிடு வான்னு எங்க வூட்டுக்காரரு பயப் படுறாருமா. என்ன செய்யுறதுனு ஒரே யோசனையா இருக்குமா; அதேன்.... டீச்சரம்மா கிட்ட யோசனை கேக்கலாம்னு வந்தேன்..." என ஆவலாய் நந்தினியை நோக்க...

புன்முறுவலுடன் நந்தினி, "உங்கள நெனச்சாச் சந்தோசமா இருக்குமா! எப்படியாவது பத்திரத்தைக் கொடுத்து, அவனைச் சமாதானப் படுத்தணும்னு நினைக்காம, சுயமா அவன் நேர்மையா உழைச்சு முன்னேறணும்னு நினைக்கிறீங்க பார்த்தீங்களா...! இது தான் உண்மையாக ஒரு பெற்றோரின் கடமை; உங்களை நினைச்சா எனக்குப் பெருமையா இருக்குமா.!" பாராட்டிய நந்தினி, சற்று நேரம் யோசித்து விட்டுச் சொன்னாள்.

''ம்.. சரி. நான் ஒரு யோசனை சொல்றேன் அதன்படி செய்வோம்...''

"சொல்லுங்க டீச்சரம்மா, உங்களத் தான் குலசாமியாட்டம் நம்பிக்கிட்டு இருக்கேன் தாயீ.. வயசான நாங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்னு நினைக்கிற மனசுத்தா உங்களுக்கு''

''சொல்றேன்.. உங்க மூத்த பையன் கள் இரண்டு பேரிடமும் சின்னவனின் பிரச்சனையை சொல்லி இருக்கீங்களா..? அவங்க என்ன சொல்றாங்க..?''

''அவனுங்க எதுவும் கண்டுக்கறது இல்லம்மா; அவங்களால எனக்கு நல்லதும் இல்ல, கெட்டதும் இல்ல; அவங்க உண்டு அவங்க வேலை உண்டுன்னு இருக்குறானுங்க. அதுவே சந்தோசம்தான் எனக்கு. பிள்ளைக சந்தோசமா இருந்தா அது போதும்மா: அவனுக ரெண்டு பேரும் குடும்பத்தோட நல்லா இருக்காக; ஏதாவது தீபாவளி பொங்கல்னா, துணிமணி அனுப்புறாக, செலவுக்குக் கொஞ்சம் காசு அனுப்புறாக....! அது போதும்மா; அவனுக கொடுக்கணும்னு நான் எதிர்பார்க்கிறது இல்லை. என் வீட்டுக்காரர் தான் அப்பப்ப 'லெட்டர் போடு.... பெத்தக் கடனுக்கு அவனுக நமக்கு ஏதாவது பண்ணட்டும்'னு சொல்லுவாரு .பெத்த மனசு என்னத்தம்மா எதிர்பார்க்கும்? கை கால் சுகத்தோட, என் பிள்ளைக நல்லா இருந்தா போதும்னு தான் நினைக்கும்...! நம்மள கவனிக்காட்டாலும் பரவாயில்லை; ஊருசனம் முன்னாடி அவுக நல்லா வாழ்ந்தா போதும் டீச்சரம்மா...''

நந்தினி பேச்சற்று நின்றாள். பெரு மழைக்கும் குடையான முந்தானையின் வாசமாய் பேசிய பொன்னாத்தாவை அணைத்துக் கொண்டே சொன்னாள், "நாளைக்குச் சனிக்கிழமை; நான் உங்க ளைக் கூட்டிக்கிட்டு ஒரு இடத்துக்குப் போறேன். இப்ப நிம்மதியா வீட்டுக்குப் போங்க. இன்று ஒரு நாள் மட்டும் என்னிடம் இந்தப் பத்திரம் இருக்கட்டும். உங்க பையன் வந்து பத்திரத்தக் கேட்டா, நாளைக்குத் தர்றேனு சொல்லுங்க; சரி யாமா..! நாளைக்கு உங்கப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு வரும். இப்ப கவலைப்படாம வீட்டுக்குப் போங்க..''

''நீங்க சொன்னாச் சரிதான் டீச்சரம்மா.." எனத் தெம்பாய்க் கூறிய பொன்னாத்தா வீடு நோக்கி நடக்கையில் வானம் பளீரென மேகத்தின் நடுவே மின்னியது.

மறுநாள் காலை ஒரு வங்கியின் வாசலில் அவர்கள். «வாம்மா நந்தினி... இவுங்க தானா அவங்க... வாங்கம்மா» எனக் கூறிய அந்த மனிதரின் முகம், பொன்னாத்தாவிற்கு ஏனோ ஒரு நிம்மதியைத் தந்தது.

''அம்மா... இவர் எங்க மாமா.. பேங்க் மேனேஜர். நீங்க தயங்காம எந்த உதவியும் கேட்கலாம்'' எனக் கூறியபடி அந்தப் பத்திரத்தை தன் மாமாவிடம் கொடுத்தாள் நந்தினி.

இருவரின் வார்த்தைகளும், உரையாடல்களும் பொன்னாத்தாவின் வாழ்க்கை யைச் செப்பனிட ஆரம்பித்தன! பொன்னாத்தாவின் நிம்மதியான வாழ்க் கைக்கும், பாதுகாப்பிற்கும், வருமானத் திற்கும், பத்திரத்தின் பாதுகாப்பிற்கும் ஒரு அழகான திட்டம் அங்கே உருவானது. அவர்கள் விவரிக்க, விவரிக்க... "எஞ்சாமிகளா...'' எனக் கூறியபடி, அவர் கள் இருவரின் கையைப் பிடித்து வானம் பார்த்த பொன்னாத்தாவின் முகத்தில், உச்சி வெயிலில் ஆலமரத்தில் அமர்ந்து சிறகடிக்கும் பறவையாய்...

நீண்ட நாட்கள் கழித்து ஒரு குதூகலம் கூத்தாடியது.

4

## கி. இரகுநாதன்



சில நாட்களாகவே சோலையம்மாவுக்கு பொன்னாத்தாவின் நடவடிக்கையில் சந்தேகம் வந்திருந்தது. கிழவி புழக்கடையில் என்ன செய்கிறாள் என்று தெரியவில்லை. நேரடியாக உள்ளே சென்று பார்ப்பதற்கு தன்மானம் தடுத்தது. எப்படியாவது உள்ளே சென்று பார்க்க வேண்டுமே..

''கோவாலு...! டேய் கோவாலு..!'' என்று அழைத்தவாறு பொன்னாத்தாவின் வீட்டுக்கு வெளியே நின்று கூப்பிட்ட சோலையம்மா, பொன்னாத்தா புழக்கடையில் இருந்து வருவதற்கு முன்பே திடுமென்று உள்ளே நுழைந்து பின்பக்கம் போனாள். வெளியில் இருந்து பார்க்க முடியாதவாறு சுற்றிலும் சுவர் எழுப்பி பாதுகாப்பாக வைத்திருந்தார் முருகையன். அங்கே சென்ற சோலையம்மாவுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. முன்னர் காலியாக இருந்த இடத்தில் இப்போது அழகாக பாத்தி கட்டி ஒரு பக்கம் சிறுகீரை அறுப்பதற்குத தயாராக நிற்க, இன்னொரு புறம் கொஞ்சம் கத்தரி, கொஞ்சம் தக்காளி, கொஞ்சம் மிளகாய் என தனித்தனியே பயிரிடப்பட்டு மிக நேர்த்தியாகவும், அந்த இடத்திலேயே அதிக மகசூல் தரும் வகையில் பயிரிடப்பட்டிருந்தன. சோலையம்மா வியந்து நின்றாள். 'ஆகா! அதான் கிழவி வெளியில அதிகமா வரல..' பொன்னாத்தா நிமிர்ந்து 'என்ன?' என்பது போல் பார்த்தாள்.

''நான் கோவால தேடினு வந்தேன்.. இன்னும் இந்தப் பயல காணோம்..'' என்ற சோலையம்மா கீரைகளைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''இதையெல்லாம் என்ன செய்யப் போறீக..?''

பொன்னாத்தா சிரித்தாள். ''உனக் கெதுக்குடி அதெல்லாம். டவுன்லேர்ந்து மாடசாமி மருமவன் வரான். எல்லாத் தையும் வாங்கிட்டுப் போறான். அவன் வர எடத்துக்கு சொமையை தூக்கிட்டுப் போகணும்.. அம்புட்டுதான். ஆனா கை மேல காசு''

சட்டென்று சோலையம்மா கேட்டாள், "ஏன்? எங்கிட்ட கொடுத்தா நாங்க வாங்க மாட்டோமா..?"

''நீ ஓசியில கேப்ப.. நான் கஷ்டப் பட்டுட்டு உனக்கு சும்மா தூக்கிக் கொடுக்கணுமா..? அவன் ஒரு கீரை கட்டுக்கு ஏழு ருபா தரான்... போவியா..!'' சோலையம்மா உடனே கணக்குப் போட்டாள். 'ஒரு கீரைக்கட்டு பத்து ரூவாக்கு தாராளமா விக்கலாம். கிழவி தெரியாம ஏழு ரூவாக்கு விக்கிறா. இவளிடம் இன்னும் பேரம் பேசிப் பாப்போம். நாமே எப்படியாச்சும் இவளிடமே வாங்கி விக்கலாமே..'

''நான் அவ்ளோ காசுக்கு உடனே எங்க போவேன்..! கடனாகத்தரலாமில்ல..''

சற்று நேரம் யோசித்தாள் பொன்னாத்தா. பின்னர், ''சரி... இன்னைக்கு எடுத்துகிட்டுப் போனா நாளைக்கு காலைல அதனோட காசு எனக்கு வந்துரணும். அப்படி கொடுத்தியனா.. இதோ பாத்தியா.. தினமும் கத்தரிக்கா, தக்காளி எல்லாம் தரேன். அடுத்த நாள் காசு கொடுக்கலையோ..இந்தப் பக்கமே வராதே..! அப்படியே ஓடிப் போயிரு..''

'கட்டைல போற நேரத்திலயும்

கிழவிக்கு காசு மேல ஆசையப் பாரு..' என்று மனதில் சொல்லிக் கொண்ட சோலையம்மா,

''சரி.. தரேன்.. ஆனா நான் இங்கயே வந்து வாங்கினு போறேன்ல.. அதனால ஒரு கட்டுக் கீரை எனக்கு அஞ்சு ரூவாக்குத் தரணும்''

பொன்னாத்தா மீண்டும் யோசித் தாள். ''சரி..! காலைல வா..! கீரையை கட்டுக் கட்டா கட்டி வெக்கறேன்'' என்றாள். தலையாட்டி விட்டுச் செல்லும் சோலையம்மாள் கண்பார்வையில் இருந்து மறைந்ததும் புன்னகைத்தாள்.

அடுத்த நாள் காலை சோலையம்மா வருவதற்கு முன்பே பன்னிரண்டு கட்டு கீரைகள் தயாராக இருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு தன் வீட்டுக்குச் சென்ற சோலையம்மா எல்லா கட்டுகளில் இருந்தும் கொஞ்சம் கீரைகளை உருவி தனித்தனியாகக் கட்ட பன்னிரண்டு கட்டுகள் பதினைந்தானது. பின்னர் டவுன் பஸ்சில் ஏறி பக்கத்து டவுனுக்குச் சென்று பஸ் ஸ்டாண்டிலேயே ஒரு ஓரமாக கீரைகளை வைத்துக் கொண்டு நிற்க.. அரை மணிநேரத்திலேயே அனைத்தும் விற்றுத் தீர்ந்தன.

சோலையம்மா நீண்ட நாட்க ளுக்குப் பின்னர் சந்தோசமாக இருந்தாள். கையில் நூற்றைம்பது ரூபாய். கிழவிக்கு அறுபது ரூபாய் கொடுத்து விட்டால் இன்னும் தொண்ணூறு ரூபாய் இன் றைய வருமானம். பிள்ளைகளுக்கு வயிறார சாப்பாடு போடலாம். அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்குள் இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்து கறி வாங்கிச் சமைக்கலாம். சும்மா சொல்லக் கூடாது. கிழவியின் கை ராசியான கை தான்.

ஆனால் அடுத்த நாள் காலை அவள் வீட்டில் வைத்திருந்த மொத்தப் பணமும் காணவில்லை. கூடவே ராமனையும்..!

5

## கி. இரகுநாதன்

''ஆச்சி..!! ஆச்சி..!!'' என்றபடி பொன்னாத்தாவிடம் ஓடி வந்தான் கோபால், ''ஆச்சி..! அம்மா அழுதுகிட்டே உக்காந்திருக்குது'' என்றான்.

''உங்கப்பன் எங்கடா போனான்?''

''நேத்து போனவர் தான் .. இன்னும் வரல''

''போய் உங்கம்மாவ வரச் சொல்லு..'' என்றாள் பொன்னாத்தா.

சற்று நேரத்தில் தயங்கித் தயங்கி சோலையம்மா எட்டிப் பார்த்தாள். அழுதழுது வீங்கிய முகமும், வாராமல் காற்றில் பறந்த கேசமும், உள்ளடங்கிய கண்களும், சோர்ந்த உடலும்... என்ன நடந்திருக்கும் என பொன்னாத்தாவால் ஊகிக்க முடிந்தது.

''வாடி உள்ள..'' என்றாள் பொன்னாத்தா. ''அங்க காப்பி வெச்சிருக் கேன். எல்லோரும் குடிங்க.. தண்ணி காய வெச்சிருக்கேன். மொதல்ல பசங் கள பள்ளிகோடத்துக்கு அனுப்பு. மத்த தெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்.''

ராமன் பணத்தைத் திருடிச் சென்று குடித்து விட்டு வருவது சோலை யம்மாவுக்குப் புதிதல்ல.. ராமன் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது சேமித்து வைத்திருந்த பணத்தை அவன் குடிப் பழக்கத்துக்கு ஆளான பின்னர் அவனே கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சென்று விடுவான்.

ஆனால் இப்போது வந்த பணம் அவள் உழைப்பில் வந்த பணம். ஒரு நாளில் தன்னாலும் பணம் சம்பாரிக்க முடிகிறது என்கிற நம்பிக்கை தந்த பணம். பிள்ளைகளுக்கு இனிமேலாவது நல்ல

சாப்பாடு செய்து போட்டு.. நன்றாகப் படிக்க வைத்து.. ஊரில் தானும் தலை நிமிர்ந்து நடந்து... இப்படி எத்தனையோ எண்ணங்களை நேற்று ஒரே நாளில் மனதில் விதைத்திருந்தது அந்தப் பணம்.

அதே நேரம் இதற்கு முக்கியக் காரணமாக இருந்த பொன்னாத்தாவைப் பற்றிய எண்ணமும் சோலையம்மா மனதில் நேற்று முதல் மாறி இருந்தது. 'எத்தனையோ முறை கிழவியை திட்டி அவமானப்படுத்தி இருக்கேன்.. ஆனாலும் அதையெல்லாம் மனசுல வச்சுக்காம...

''என்னடி இன்னும் யோசனை..?'' என்றது பொன்னாத்தாவின் அதட்டலான குரல். ''இன்னைக்கும் உம் புருசன் வந்து காசு எடுத்துகிட்டுப் போனா என்ன பண்ணுவ..?''

சோலையம்மா பொலபொல வென்று கண்ணீர் உகுத்தாள். ''என் தலையெழுத்து..! நான் இதுகிட்ட மாரடிக்கணும்..! நான் என்னதான் பண்ணுவேன்...? இந்த மனுசன்கிட்ட அடி, உதை பட்டே சாகணும்னு எழுதி இருக்கு!''

''அழுவறத நிறுத்துடி..'' என்று மீண்டும் அதட்டினாள் பொன்னாத்தா. ''அடுத்து என்னான்னு யோசிப்பியா அத வுட்டுட்டு..'' என்றவள் தன் சுருக்குப் பையில் இருந்து ஒரு சாவியை எடுத்து பேரனிடம் தந்தாள். ''கட்டில் கீழ பொட்டியில பச்சை கலர்ல ஒரு கவர் இருக்கும்... அதை எடுத்துனு வா'' என்றாள்.

கோபால் கொண்டு வந்த கவரில் இருந்து சில படிவங்களை உருவினாள். «இது பாங்க்ல காசப் போடற செலான். இது சோலையோட பாங்க் கணக்குப் பொஸ்தகம். ரெண்டையும் உன் நந்தினி டீச்சராண்ட குடுத்து...''

பேரன் இடைமறித்தான், ''அவங்க கிட்ட குடுத்து எழுதி வாங்கியாரணும்... அவ்ளோ தான..வாங்கிட்டு வரேன்''

பொன்னாத்தா பேரனை அடிப்பது போல் கையை ஓங்கினாள். குரலில் கண்டிப்புடன் சொன்னாள்.

''அவங்கள எழுதச் சொல்லாத. எங்க, என்னா எழுதணும்னு அவங்களக் கேட்டு நீ எழுது.. அப்பத்தான் உனக்கும் பழக்கம் ஆவும். நூறு ரூவா போடணும்னு சொல்லு..''

சோலையம்மா வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். 'திருமணமான புதிதில் கிழவி தன்னிடம் எதை எதையோக் காட்டி கையெழுத்து வாங்கியது இதற்குத் தானா..? என் பேர்ல பாங்க்ல கணக்கா..?''

பொன்னாத்தா மீண்டும் அதட்டினாள். «என்னடி..! மசமசன்னு நிக்கற..! இன்னைக்கு கத்தரிக்காவும், தக்காளியும் தரேன். பள்ளிக்கோடத்துக்குப் போறப்ப டீச்சராண்ட கவனமா செலான் வாங்கிக்க. டவுனுல எல்லாத்தையும் வித்தப்பறம் பாங்க்ல போய் நூறு ரூவா போடு. மிச்சக் காச என் கிட்ட குடு.. நேத்து காசே பாக்கி இருக்கு..''

சோலையம்மா வாய் பேச முடியாமல் நின்றாள். 'இது எப்டி இதையெல்லாம் இவ்ளோ யோசனை பண்ணி இருக்கு.. 'கிழவி நெசமாலுமே சிங்கம் தான்.'

அன்றைக்கு வந்த இருநூறு ரூபாய் வருமானத்தில் பாங்க்கில் நூறு ரூபாய் கட்டி விட்டு, மீதம் நூறு ரூபாயை பொன்னாத்தாவிடம் தந்தாள் சோலையம்மா. பொன்னாத்தா தன் சுருக்குப் பையில் வைத்தபடி சொன்னாள்.

«நாளைக்கு எனக்குத் தரவேண்டிய பணத்துல இத கழிச்சுக்கறேன். நாளைக்கு மொத்தப் பணத்தையும் பாங்க்ல கட்டு..' என்றாள்.

''எனக்கு இங்கிலிபீசு வராதே..'' என்றாள் சோலையம்மா.

''நீயும் அஞ்சாப்பு படிச்சிருக்கல்ல.. போடி..! எப்டி எழுதணும்னு கத்துக்க.'' அன்று இரவு எல்லோரையும் தன்னுடன் தங்க வைத்தாள் பொன்னாத்தா.

அடுத்த நாள் காலை பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குச் சென்ற பின்னர் கீரைகளையும், காய்கறிகளையும் ஒரு பெரிய பையில் அடுக்கிக் கொண்டிருந்த பொன்னாத்தாவும், சோலையம்மாவும், வாசலில் 'தடால்' என யாரோ விழும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தனர். பொன்னாத்தாவின் கணவர் முருகையன்...

6

## கி. இரகுநாதன்

ராமன் தள்ளாடியபடி நடந்தான். வேலைக்குப் போகாத நிலையிலும் ஊராரிடம் கெத்து காட்டி பந்தாவுடன் வலம் வந்து கொண்டிருந்தான். சமீப கால மாகத்தான் இந்தக் குடிப்பழக்கம் ஆரம்பித் தாலும் குடித்தவுடன் யாரிடமும் பேசாமல் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொள்வான். ரோட்டில் விழும் அளவுக்கு குடித்திருப்பது இப்போது தான்.

''சோலை... ஏ.. சோலை..'' அவன் அழைப்புக்கு பதில் இல்லை.

எங்க போனாளோ?'

அப்படியே வெளிப்புற திண்ணை யில் உட்கார்ந்தான்; சாய்ந்தான். அப்படியே உறங்கிப் போனான்.

அவன் எழுந்த போது இருட்டி இருந்தது. இப்போது சற்றுத் தெளிவாக உணர்ந்தான். பூட்டி இருந்த கதவை அப்போது தான் பார்த்தான். பசி எடுத்தது. நேற்று மதியம் செட்டியார் கடையில் பிரியாணி சாப்பிட்டதோடு இப்போது வரை எதுவும் சாப்பிடவில்லை. 'இவள் எங்க போய் தொலஞ்சாளோ ? யாரிடமும் கேட்க முடியவில்லை. காசு எடுத்தேன்னு கோச்சிகிட்டு அவ அம்மா வீட்டுக்குப் போய்ட்டாளா..? இந்த எண்ணமே அவனை இன்னும் ஆத்திரமடையச் செய்தது. 'அங்கே போனாலும் இங்கே வரத்தானே வேணும்.. வரட்டும் சிறுக்கி.. அப்ப பாத்துக்கிறேன்...

இரவு முழுவதும் வயிற்று வலியில் துடித்தான். அதிகாலை நேரத்தில் வலியி னூடே உறங்கினான்.

எழுந்த போது மணி என்ன என்று தெரியவில்லை. வீடு இன்னும் பூட்டி இருந்தது. வயிறு கபகபவென எரிந்தது. அடுத்த அடி எடுத்து வைக்கவும் சக்தி இல்லாமல் தடுமாறினான். 'அம்மாக்கிட்ட போவலாம். அம்மா என்னய கைவிட மாட்டாள்.'

தட்டுத் தடுமாறி, தள்ளாடி நடந்து அவன் வீட்டு வாசற்படியில் மயங்கி விழுவதற்கும், அப்போது தான் வெளியில் வந்த முருகையன் அவனைத் தாங்கிப் பிடிக்கும் முயற்சியில் சற்றே நிலை தடுமாறி அவன் மீதே விழுவதற்கும் சரியாக இருந்த்து.

சத்தம் கேட்டு உள்ளிருந்து எட்டிப் பார்த்த இருவரில் சோலையம்மா, ''மாமா..!'' என்று கத்தியபடி ஓடி வந்து வெளியில் பார்த்து ''ஐயோ'' என்று அலறினாள். அதற்குள் கைத்தடியை ஊன்றி எழுந்த முருகையன், «தண்ணி கொண்டு வாம்மா» என்றார்.

தண்ணீர் தெளிக்கப்பட்டதும் சற்றே உணர்வு வந்து எழுந்து உட்கார்ந்தான் இராமன். சோலையம்மா தன் தலை மேல் கைவைத்துக் கொண்டு அழுதாள். ''நான் நேத்தே போயிருந்தனா கொஞ்சம் சமச்சுப் போட்டிருப்பேனே ...''

''இவன நாங்க பாத்துக்கறோம். இப்பநீ புறப்படு» என்றாள் பொன்னாத்தா. ''யாவாரத்துக்குப் போகும் போது அழாதே.

முகத்தைக் கழுவிக்கிட்டு புறப்படு''

சோலையம்மா இரண்டு பைகள் நிறைய காய்கறி மற்றும் கீரை வகைகளை அடுக்கிக் கொண்டு தூக்க முடியாமல் தூக்கிச் செல்வதை வியப்புடன் பார்த்தான் ராமன். எவ்வளவு கோபம் தன் மீது இருந்தா லும் சோலையம்மா அவள் தாய் வீட்டுக்குச் செல்லவில்லை என்பதே அவனுக்குப் பெரிய நிம்மதியாக இருந்தது. பொன்னாத்தா தந்த கூழும், சில்லென்ற நீராகாரமும் ராமன் வயிற்றுக்குள் அமிர் தமாக இறங்கின. ஆனால் யாரும் எதுவும் பேசவில்லை. வீட்டில் இந்த மௌனம் ராமனை சங்கடத்துக்குள்ளாக்கியது. ''அம்மா'' என்றழைத்து ஏதோ சொல்ல ஆரம்பித்தவன் தாய் அங்கே நிற்காமல் சென்று விட்டதால் நிறுத்திக் கொண்டான். முருகையன் சட்டையை மாட்டிக் கொண்டு, ''வாடா'' என்று சொல்லி வெளியில் அழைத்துச் சென்றார்.

கொண்டு சென்ற அனைத்தும் விற்றுத்தீர்ந்து விட்ட மகிழ்ச்சி இருந்தாலும் கணவனைப் பற்றிய கவலையுடன் வீட்டுக்குள் நுழைந்த சோலையம்மா தன் கண்களை நம்ப முடியாமல் பார்த்தாள்.

பரட்டைத்தலைமுடி சீராக வெட்டப் பட்டு, சவரம் செய்யப்பட்ட முகத்தில் ஒழுங்கு படுத்தப்பட்ட மீசையுடன், நெற்றி யில் இரு புருவங்களுக்கும் மேற் புறத்தில் அளவாக.. ஆனால் பளீரென்று தெரிந்த சந்தனமும்... சோலையம்மா தன் கணவனை இதற்கு முன் அவ்வளவு கம்பீ ரமாகப் பார்த்ததில்லை.

''அப்பா தான் சலூனுக்கு கூட்டி கிட்டுப் போனாரு ..'' என்று சொன்னதைக் கேட்டு அவளும் எதுவும் பேசாமல் கண்களைத் துடைத்துக் கொண்டு அடுக்களைக்குள் சென்று விட்டாள்.

அப்போது தான் தூக்கத்தில் இருந்து விழித்த கடைக்குட்டி கண்ணம்மாள் முகம் மலர இராமனைப் பார்த்து, ''அப்பா..'' என்று அழைத்தபடி ஓடி வந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள். ''இப்பத்தான் நல்ல அப்பா'' என்றாள்.

இந்த அனுபவம் ராமனுக்குப் புதுசு. இதுவரை தன் பிள்ளைகளிடம் அவன் சரிவரப் பேசியதில்லை. ஆனால் அந்தப் பிஞ்சுக் கைகள் தன் கழுத்தைக் கட்டிக் கொண்டதும் அதன் மென்மையில் உருகி அந்தக் கைகளுக்கு முத்தமிட்டான். பள்ளிக்கூடத்தில் இருந்து திரும்பிய சுப்புவும், கோபாலும் சற்றுத் தயங்கி நிற்க அவர்களை அழைத்து தன்னுடன் அணைத்துக் கொண்டான். கண்களில் தானாகவே கண்ணீர் பெருகிற்று. 'இவ்வளவு அன்பை இத்தன நாள் நான் எப்படி கண்டுக்காம போயிட்டேன்.. இப்ப எவ்ளோ சந்தோசமா இருக்குது'

'நாளைக்கு சீக்கிரம் எழுந்து ரெடியாயிரு.. சோலை கூடவே எல்லோ ரும் டவுனுக்குப் போறோம். பாங்க் மானேஜரைப் பாக்கறோம்..'' என்றாள் பொன்னாத்தா.

பாங்க் மேனேஜர் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார்.

«இதோ பாரு ராமா! வீட்டு மேல பாங்க்லேர்ந்து கடன் கொடுத்திருக்கோம். வீட்டுப் பத்திரம் இங்க தான் இருக்கு. அதற்கு மாசா மாசம் உங்கம்மா தவணை கட்டிகிட்டு வராங்க... இப்ப அவங்க நிலத்து மேல கடன் தர பாங்க் கொடுக்கத் தயாரா இருக்கு. அந்த நம்பிக்கை அவங்க மேல வந்ததுக்குக் காரணம் அவங்க உழைப்பு, நேர்மை, நேரம் தவறாமை. இதையெல்லாம் நீயும் கடைப்பிடிச்சா வாழ்க்கையில் கண்டிப்பா முன்னுக்கு வரலாம். வேலை செஞ்சிகிட்டிருந்தப்ப நீ எவ்வளவு சம்பளம் வாங்கிக்கிட்டிருந்த..?'' சொன்னான்.

மேனேஜர் பொன்னாத்தாவிடம் கேட்டார். "அதில் பாதி நேர உழைப்புல உன்னோட வருமானம் எவ்வளவும்மா..?" பொன்னாத்தா தன் வருமானத்தைக் குறைத்தே சொன்னாள்.

மேனேஜர் தொடர்ந்தார். "பார்த்தியா.. கை கட்டி, வாய் பொத்தி நீ வாங்கின சம்பளத்த விட மூன்று மடங்கு வருமானம், நீங்களே எஜமானரா, எந்த நிலையிலும் கம்பீரமா நிக்கற நிலைமை நீங்களே உழைச்சா வருது.."

ராமன் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான். 'அடடா..! எனக்கு கீழே தங்கம் இருந்திருக்கிறது. நான் அதன் அருமை தெரியாமல் சாக்கடையில் விழுந்திருந்தேன்..' பொன்னாத்தா தன் பையில் இருந்து இன்னும் சில பத்திரங்களை எடுத்து மேனேஜரிடம் கொடுத்தாள். "இதுல என்னா இருக்கு.. நீங்களே படிச்சு சொல்லிடுங்கய்யா.."

படித்துப் பார்த்த மேனேஜர் புன்னகைத்தார்.

"அம்மாங்களுக்கு இளைய மகன் மேல தான் ஆசை அதிகம் இருக்கும். ராமா..! இதோ பார்த்தியா.. 'எங்களுக்கு இந்த சொத்தும் வேணாம்னு உங்க அண்ணனுங்க எழுதிக் கொடுத்த பத்திரங்கள்.. இதை உன் அண்ணனுங்களை எழுதித் தரச் சொன்னதே உங்கம்மா தான். உங்கள கண்ணுக்குள்ள உங்கள வெச்சு கண்மணி போல காக்கற தெய்வம்யா உங்கம்மா. உங்களுக்காகவே உழைச்சாரு உங்கப்பா. இவங்களைப் போயி.."

ராமன் தலை குனிந்தான். 'வாழும் தெய்வம் அம்மா. அம்மாவின் அருமை புரியாம... சே..! நான் மனுசனே இல்ல... அனைவரும் வெளியில் வந்தவுடன் ராமன் தாயிடம் சொன்னான். "அம்மா..! நானும் சோலை கூட யாவாரத்தப் பார்த்துட்டு வரேன்மா.."

"சரி ராசா..!" என்றாள் பொன்னாத்தா. "குடிச்சிட்டு மட்டும் வந்துராத.. பத்திரம்டா.."

ஆனால் அவள் நம்பிக்கை பொய்யாகப் போனது. அன்று மாலை பொன்னாத்தாவும் முருகையனும் வாசலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது பொன்னாத்தா தான் முதலில் கவனித்தாள். அவிழ்ந்த வேட்டியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, சோலையம்மா தோள் மீது கை போட்டபடி, கால்கள் பின்னிட தள்ளாடும் நடையுடன்.... ராமன்.

"என்னய அடிச்சு என் கையில் இருந்த பணத்த பூராவும் எடுத்துட்டுப் போயிட்டாரு... நான் என்ன செய்யட்டும்..?" குலுங்கிக் குலுங்கி அழுதபடி.... சோலையம்மா.

7

## கி. இரகுநாதன்

ராமனை ஓங்கி கன்னத்தில் அறைந்தாள் பொன்னாத்தா. தள்ளாடி, சுருண்டு கீழே விழுந்தான் ராமன். "உன்னயப் போல ஒரு புள்ள என் எதிரிக்குக் கூட வேணாண்டா...! உன்னய என் மகன்னு சொல்லிக்கவே முடியாம பண்ணிட்டயேடா பாவி..." எதற்கும் கலங்காத பொன்னாத்தாவின் கண்களில் இருந்து கண்ணீர்.

தன் அருகில் விழுந்த ராமனை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்தார் முருகையன். "மகன்ங்கறது இருக்கட்டும்டா.. நீ மனுஷப் பிறவியா இருக்கக் கூட லாயக்கில்லாதவன்டா.." என்று சொல்லி ஆத்திரத்துடன் எட்டி உதைக்க காலைத் தூக்கியவர், "சே! நீ இதுக்குக் கூட லாயக்கில்லாதவன்.." என்று சொல்லி பொன்னாத்தாவுடன் உள்ளே நுழைந்தார்.

திடீரென்று "அம்மா... அப்பா" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த

இருவரும் திடுக்கிட்டு நின்றனர். புன்னகை பூத்த தெளிவான முகத்துடன்... ராமன்.

"அம்மா.. அப்பா....! நீங்க ரெண்டு பேரும் என்னய மன்னிச்சிருங்க. நான் செஞ்ச தப்புக்கு எனக்குத் தண்டனை வேணாமா..? அதுக்காகத் தான் இப்படி. இந்த அடி போதும்மா. என்னை ஆயுசு வரைக்கும் காப்பாத்தும்.." என்றவன் இரு கைகளையும் கூப்பி வணங்கினான்.

பொன்னாத்தா சோலையம்மாவைப் பார்க்க.. ''எனக்கு ஒண்ணும் தெரியாது. அவரு தான் இப்படிச் செய்யச் சொன்னாரு..'' என்றாள் சிரித்துக் கொண்டே. பொன்னாத்தா, முருகையன் இருவரும் மனம் நிறைவாக உணர்ந்தனர்.

சோலையம்மாவும் ஆனந்தக் கண்ணீருடன் கை கூப்பி வணங்கி, "அத்தை.." என அன்பொழுக அழைத்தாள். திருமணத் துக்குப் பின்னர் இப்போது தான் முதல் முறையாக அப்படி அழைக்கிறாள்.

"என்னையும் மன்னிச்சிருங்க அத்தை'' என்றவள் பிள்ளைகளை அருகில் அழைத்தாள்.

"அத்தை.. மாமா..! எங்க எல்லாரையும் ஆசீர்வாதம் பண்ணுங்க.." என்று சோலையம்மா சொல்ல.. அனைவரும் இருவர் காலிலும் விழுந்து வணங்கினர்.

உடல் முழுவதும் மண்ணில் படும்படி நெடுஞ்சாண்கிடையாக விழுந்து பெற்றோரை வணங்கிய இராமன் எழுந்து நின்ற போது அவன் வேட்டி, சட்டை முழுவதும் மண்...

கறை நல்லது.

(முற்றும்)

# என்றென்றும்...

குழந்தைத் தனமாய்க்
கும்மாளமிட்ட நினைவுகள்
எலந்தைப்பழம்
பொறுக்கிய சிறுமி
என்னுள் இன்னும் நகரவில்லை
நான் இப்படி இருக்கவே
விரும்புகிறேன்
இப்படித்தான் இருப்பேன்
இதனால் என்ன
நட்டமய்யா உங்களுக்கே
இழையும் இந்த
குழந்தைப்
பருவ மனது
மழை வந்தும்
கரைவதில்லை
மாயங்கள் செய்தும்
மறைவதில்லை
சோகங்கள் கடந்து
சொர்க்கம்
நிறைந்திடும்
சொல்லி வைத்து சுகம் தரும்
ஏராளமான ஏக்கங்கள்
எழுதிட இயலாது
தாராளமாகக் கவியெழுத
வைத்திடும்
கரையும் கற்கண்டாய்
இனித்திடும்
நரைவிழுந்தும்
நல்லதொரு
இந்நினைவால்
நான் என்றும்
இருந்திடுவேன்
கள்ளமின்றி
குழந்தைத்தனமாகவே
என்றென்றும்...

**தென்றல்கவி - தமிழ்ச்சிட்டு**

# அறிவின் மேன்மை

*

அறியாமைத் தீயில் அகப்பட்ட வாழ்க்கைப்
பறிபோகு முன்பே படிப்பாய் - நெறியறிந்து
கொண்டாரைப் பார்த்துக் குறிப்பெடுத்துக்
கொண்டேநீ
பண்புடனே வாழப் பழகு

*

இங்கிருக்குங் காலம் இயற்கை எமையெழிலாய்
தங்கிச் செலவிட்டத் தற்காலம் - அங்குசெல
முன்னுனை ஆட்டிவைக்கும் மோகத்தைக்
கொன்றழித்துச்
சென்றுவிட லொன்றே சிறப்பு

*

சிறப்புடன் வாழ்தல் சிறப்பல்ல, உன்னால்
சிறப்பற்றார் வாழ்தல் சிறப்பே - உறவுகள்
இல்லா தவர்க்காய் இருப்பதைத் தந்துதவிச்
செல்வதுவே செல்வச் சிறப்பு

*

சிறப்பெனும் பேரில் சிலரிங்கு செய்யும்
அறமற்றச் செய்கை அகற்று - நிறம்மாறாப்
பச்சோந்தித் தன்மை படர்ந்திட வென்றேநீ
இச்செகம் மாற்ற இயங்கு

*

இயங்கிட வைக்கும் இறைவனைப் போற்றிச்
செயலாற்று வார்க்கின்பம் சேரும் - தயக்கங்கள்
போக்கித் தலைநிமிர்த்தப் போராடும் உன்னையே
தூக்கிவைப்பான் வாழ்வில் தொடர்ந்து

*

தொடர்கதை போலே தொடர்ந்துனை வாட்டும்
இடர்களை வோனே இறைவன் - திடமொடு
நெஞ்சை நிமிர்த்தி நிலையாகப் போராட
அஞ்சாதே! காப்பான் அவன்

*

அவன்காப்பா னென்று அனவரதம் குட்டிச்
சுவர்மீ தமர்தல் சுகமோ - கவனம்
புவனத்தில் உன்னைப் புடம்போட்டு நீயே
எவனுக்கும் தீயாய் எரி

*


எரிகின்றத் தீயில் எடுக்கின்ற சேட்டைப்
புரிகின்றப் பேர்கொண்ட பூமி -மரியாதைக்
காட்டும் மனிதர்கள் கால்செல்ல நல்வழிக்
கூட்டிச் செலக்காண்பாய் கூர்ந்து

*

கூர்ந்து கவனிக்கும் கொள்கை உனக்கிருப்பின்
சேர்ந்து நடைபோடும் செல்வாக்கு - ஊர்ந்தே
செலுமாமை வென்றிடும் ஓட்டமாய் வாழ்வை
அலுப்பின்றி ஓட்டும் அறி.

ஒரு பா பஃது

## மெய்யன் நடராஜ்



# விதையொன்று நட்டுவைப்போம்

## பாவலர் கருமலைத்தமிழாழன்

குழந்தையாக உலகில்நீ பிறந்த போது
குறுவுடலைத் தாங்குகின்ற தொட்டி லானேன்
அழகாகச் சிரித்துநீயும் மகிழ்வ தற்கே
அருமையான பொம்மைகளாய் வீற்றி ருந்தேன்
பழகுதற்குக் காலெடுத்து வைப்ப தற்குப்
பக்கத்தில் நடைவண்டி யாக நின்றேன்
சுழன்றுநீயும் பள்ளிக்குச் செல்லும் போது
சுடரெழுத்தை எழுதுதற்கும் சிலேட்டாய் வந்தேன் !

படிக்கின்ற போதுசாய்வாய் அமர்வ தற்குப்
பக்குவமாய் நாற்காலி யாக நின்றேன்
குடிப்பதற்குக் குளம்ஏரி நிரம்ப மேகம்
குளிர்வித்து மழைபொழிய உதவி செய்தேன்
விடுத்திழுக்கும் மூச்சிற்குக் கலந்தி ருக்கும்
விடந்தன்னைத் தூய்மைசெய்து காற்றைத் தந்தேன்
எடுத்துண்ண சுவையான காய்ப ழங்கள்
எழிலுடற்கு மருந்திலைகள் தினம்கொ டுத்தேன் !

வாழ்க்கையினைத் தொடங்குதற்குக் கட்டி லாக
வாழ்வீட்டைத் தாங்குகின்ற தூண்க ளாக
வாழ்விறுதிப் பாடையாக உடனி ருந்தே
வளம்தந்து மண்ணிற்குள் புதைந்த போதும்
காழ்ப்பேறி வைரமாகப் பயனை நல்கும்
கண்ணான மரமென்னை வெட்டிக் கீழே
வீழ்த்துமுன்பு விதையொன்றை நட்டு வைத்தால்
விளைந்துநாளை வாழவைப்பேன் உன்னைக் காத்தே !

# மழை பிடிக்காத முதல் மனிதன்

நௌஷாத் கான். லி

சில தினங்களாக மழை ஓயாமல் கொட்டி தீர்த்து கொண்டிருந்தது மக்களில் பெரும்பாலானோர் தங்கள் தேவைக்காக குடையை பிடித்து கொண்டாவது வெளியே சென்று வந்தனர் .

மழையில் நனைந்து கொண்டோ, அல்லது குடை பிடித்து கொண்டோ மழையை ரசிப்பது பெரும்பாலானோர்க்கு பிடிக்கும் ஆனால் ராஜேஷ் நீங்கள் நினைப்பது போன்றன்று .

உலகத்திலேயே அவனுக்கு பிடிக் காத விஷயம் என்பது மழை பெய்வது தான். இந்தியாவின் மேகாலயா மாநிலத் தில் காசி மலை உச்சியின் தென் பகுதியில் வங்காள தேசத்தை நோக்கியுள்ள சோராவை (சிரபுஞ்சி) அவனுக்கு பிடிக்காது.

இந்தியாவின் அழகான இடங்களில் சோராவும் ஒன்று .உலகிலேயே அதிகம் மழை பெய்யும் இடம் சோரா தான். சோராவை தான் நாம் சிரபுஞ்சி என்று அழைக்கிறோம் ஆனால் உள்ளூர்வாசிகள் இன்னமும் அந்த ஊரை சோரா என்று தான் அழைக்கின்றனர் .

ராஜேஷின் கதையை அறிய ஆவ லாக உள்ள உங்களிடம் சோராவின் வரலாறு சொல்ல வந்த அவசியம் என்ன ?

எல்லாத் துக்கும் காரணம் அந்த மழை தான்...

இருபது வருடங்களுக்கு முன்பு

யய்யா ராஜேஷ் மழை வேகமா பெய்யுது, மழையில தலை நனையாம அம்மா கொடுத்த சாக்கை பத்திரமா போட்டுக்கிட்டு வாய்யா, தலையில மழை தண்ணி படாம பார்த்துக்கோ, ஏன்னா மழைன்னா உன் உடம்புக்கு ஆகாது. அப்புறம் ஜுரம் வந்து அவதி பட போறேன்னு அம்மா அறிவுரை கூறி கொண்டே மழையில் நனைந்து கொண்டே வந்தாள்.

மழை ரொம்ப பெய்யவும் ஒரு மரத்தின் அருகே ஒதுங்க போனாள், யய்யா ராஜேஷ் நீ வீட்டுக்கு பத்திரமா போய் பசு மாட்டை மழையில நனையாத வண்ணம் கொட்டகையில கட்டி வை .

அம்மா மழை நின்ன பிறகு வர்றேன் நீ பத்திரமா பார்த்து போ என்று சொல்லி விட்டு ஒரு மரத்தின் அருகே போய் நின்றாள். அப்போது அதிக சப்தத்துடன் வானில் இருந்து வந்து இடி அவள் தலையில் விழுந்து அந்த இடத்திலேயே அவள் உயிர் பறி போனது .

அப்பன் இல்லாமல் தாய்க்கு தாயாய், தகப்பனுக்கு தகப்பனாய் இருந்து அவன் வாழ்வில் எல்லாமுமாய் இருந்த அவன் தாயின் உயிர் அவன் கண் முன்னே போனதிலிருந்து அவன் என்னவோ போல் ஆகி விட்டான் .

தங்கமாய் மின்னும் அவன்

தாய் இடி தாக்கி கரிக்கட்டையாய் ஆம்புலன்சில் தூக்கி சென்றதை பார்த்தால் எந்த பிள்ளைக்கு தான் அழுகை வராமல் இருக்கும்.

காலங்கள் கடந்தாலும் சில காயங் கள் மாறாது .அவனுக்கு எல்லாமுமாய் இருந்த அம்மாவை ஒரு மழையின் இடிக்கு வாரி கொடுத்ததால் அந்த சம்பவத்துக்கு பிறகு உங்களுக்கெல்லாம் பிடித்த மழையை அவனுக்கு அறவே பிடிக்காது .

பல இன்னல்களுக்கு பிறகு உழைத்து கொண்டே படித்து இப்போது ஓரளவுக்கு பொருளாதாரத்தில் நன்றாகவே இருக்கிறான் ராஜேஷ். அடிக்கடி அவன் அம்மாவின் நினைவுகள் வந்து போவதை காலச்சக்கரத்தாலும் தடுக்க முடியவில்லை.

இன்று

டே ராஜேஷ் பிறந்தநாள் அதுவுமா என்னடா தூக்கம் ?

டே எழுந்திருடா என்று உறங்கி கொண்டிருந்தவனை ஒரு உலுக்கு உலுக்கினாள்.

யேய் தேனு நீ எப்படி வீட்டுக்குள்ள வந்த ?

டே லூஸு நீ கதவ சாத்தாமலே தூங்கி இருக்கடா

சரி, சரி என்னை கேள்வி கேட்குறதை விட்டிட்டு காலா காலத்துல போய் குளி

சீக்கிரமா குளிச்சு முடிச்சிட்டு வாடா.

சரிடி

கொஞ்சம் அலுத்து கொண்டு கையில் டவலுடன் பாத்ரூமுக்கு சென்றான் .

சிறிது நிமிடங்களுக்கு பிறகு குளித்து முடித்து வந்தான் .

இங்க பாருடா உனக்கு பிடிச்ச நீலக்கலர் சர்ட்டும், ப்ளாக்கலர் பேண்ட்டும் வாங்கி வந்து இருக்கேன். அதை உடனே சட்டு புட்டுன்னு போட்டிட்டு வா, நாம்ம கோயில் போய் சாமி கும்பிட்டுட்டு வந்திடலாம் .

பைக்கில் இருவரும் கோயில் சென்று கடவுளை வணங்கியதோடு மட்டுமின்றி ராஜேஷ் பெயரில் சாமிக்கு அர்ச்சனையும் செய்தாள் தேன்.

டே பசிக்குதுடா வா ஏதாவது ஒரு ஹோட்டல்ல போய் சாப்பிடலாம்.

ஆர்யாபவன் போலாம்டி அங்கே நெய் ரோஸ்ட்டும், பில்டர் காபியும் சூப்பரா இருக்கும்.

ஆளுக்கு ஒரு நெய் ரோஸ்ட்டும், பில்டர் காபியும் ஆர்டர் செய்து சாப்பிட்டனர். தோசையில் அளவுக்கு மீறி நெய் இருந்தாலும் அது தரும் கிறக்கத்தை விட தேனின் பார்வை என்னவோ போல் அவனுக்குள் செய்தது.

ராஜேஷ் அம்மாவின் இழப்பிற்கு பிறகு சிறுவயதில் இருந்தே அவன் மீது அன்பும், நட்பும் கொண்டவள். உண்மையான அன்பு காதலாக மாறும் என்பார்கள் அவர்களின் உண்மையான நட்பும் காதலாக மாறியது .

ராஜேஷுக்கு இவ்வுலகில் இப் போதைக்கு அவன் உயிரை விட அதிகம் பிடிப்பது தேன் மட்டுமே ..

தேன் இல்லாத வாழ்க்கை அவனை பொறுத்தவரை அர்த்தமற்றது.

டே பார்வையாலயே என்னை திண்றது போதும், நல்ல வேலையில தானே இருக்க, முறைப்படி அப்பா, அம்மாகிட்ட வந்து பொண்ணு கேளு .

இந்த அனாதை பயலுக்கு எல்லாம் உன்னை கொடுக்க சம்மதிப்பாங்களா ?

டே ராஸ்கல் காதலிச்சிட்டு அப்படியே டீலுல விட்டிட்டு போற எண்ணமிருக்கா.

ச்சீ இது மாதிரியெல்லாம் பேசாதடி பின்ன எப்படி பேசுறதாம்.

அப்பா, அம்மா இல்லாம கஷ்டப் பட்டு உழைச்சு அதே சமயத்துல நல்ல படியா படிச்சு முடிச்சு இப்ப நல்ல வேலையிலும் இருக்க, எந்த கெட்ட பழக்கமும் இல்லை, என்னை ரொம்ப அன்பா வேற பார்த்துக்கிற. இது பத்தாதுன்னு சின்ன வயசுல இருந்து உன்னைய எனக்கு தெரியும். என்னைய உனக்கு நல்லாவே தெரியும். இது மட்டுமா ஒருத்தரை ஒருத்தர் நல்லாவே புரிஞ்சு வச்சிருக்கோம். இதை விட ஒரு பொண்ணுக்கு என்னடா வேணும்.

நீ சொல்லுறது சரி தான்.

சரின்னு தெரியுதுல அப்ப எதுக்கு காத்திருக்கிற, சட்டு புட்டுன்னு வந்து பொண்ணு கேளுடா .என்னோட படிச்சவ எல்லாம் கையில ஒண்ணு ,வயித்துல ஒன்னுன்னு சுமந்துக்கிட்டு இருக்காளுங்க .நீ என்னடான்னா இதயம் முரளி மாதிரி லவ் பண்ணிக்கிட்டு மாத்திரம் இருக்கிறேன்னு நக்கலாய் அவனை கிண்டலடித்தாள்.

அவன் கோபப்படுவது போல நடித்து இறுதியில் சிரித்தே விட்டான்.

டே குள்ளா, நீ எதுக்காக காத்துக்கிட்டு கிடக்குறேன்னு எனக்கு தெரியும்டா. கூடுவாஞ்சேரியில எனக்காக சிறுக, சிறுக சேமித்து வீடு கட்டிக்கிட்டு இருக்கேன்னு எனக்கு தெரியும்.

என்னை கல்யாணம் பண்ணும் போது சொந்த வீட்ல என்னை குடி வைக்கணும்னு நீ நினைக்குறது எனக்கு



# பெண்மை

கருவில் அரும்பி
உருவம் தரித்துப்
பருவம் அடையுமுன்
பற்பல பக்குவங்கள் பதறாமல்
பெறுபவள்!

எதையும் இயன்றவரை
எடுத்துச் செய்திடும்
உறுதியான உள்ளத்துடன்
உலகை வலம் வரும்
உன்னதப் படைப்பு...!

அகத்தில் அன்புடனும்
புறத்தில் பண்புடனும்
பெண்மைக்கு உண்மையுடனும்
பிரமிக்கும் திறமையுடனும்
பிரகாசிக்கும் சுடர்...!

பொறுமைக்கு இலக்கணமாய்
புனிதத்திற்குப் பொருத்தமாய்
அடக்கம் அறிந்தவளாய்
அன்பிற்குப் பணிபவள்...

ஆயிரம் வேலைகள் செய்தும்
அலுக்காத அன்னையுள்ளம்...
அன்பான ஓர் வார்த்தைக்காக
என்றும் காத்திருக்கும்
பெண் உள்ளம்.

K.பிரபாவதி
பட்டினச்சேரி, திரு.பட்டினம்

தெரியாம இருக்குமா என்ன?

எப்படிடி நான் வீடு கட்டிக்கிட்டு இருக்கிறதை கண்டு பிடிச்ச?

நீ ஓவர் டைம், ஓவர் டைம்ன்னு மாடாய் போய் உழைக்கும் போதே கண்டு பிடிச்சிட்டேன்டா..

இது மட்டுமா நீ வீடு கட்டிக்கிட்டு இருக்கிற இடத்துக்கு பக்கத்துல தான் என் தோழி சசிகலா வாக்கப்பட்டு இருக்கா..

உன்னை அடிக்கடி அந்த பகுதி யில பார்ப்பாளாம் அதை வச்சு கண்டு பிடிச்சிட்டேன்டா.

நம்ம கல்யாணத்துக்கு ஒரு சர்ப்ரைஸ் கிஃப்ட் கொடுக்கலாம்ன்னு நினைச்சேன்டி

நமக்குள்ள சர்ப்ரைஸ் எல்லாம் எதுக்குடா. நீ என் வாழ்க்கையில கிடைச்சதே சர்ப்ரைஸ் தான்

அவள் அப்படி சொல்லவும் வெட் கத்தால் தலைகுனிந்தான்.

ஒரு பொம்பள வெட்கப்படுறதை விட நீ வெட்கப்படுறது ரொம்ப அழகா இருக்குடா.

வேற என்னவெல்லாம் சர்ப்ரைஸ் வச்சு இருக்க.

சர்ப்ரைஸ்ன்னு வேற எதுவும் இல்லைடி ஆனா வீட்டுக்கு உன் பேர் தான் வைக்கணும்ன்னு முடிவு பண்ணி இருக்கேன்: .

''தேன் இல்லம்''

இதான் வீட்டோட பேரு .

நான் கட்டுற வீடு அழகா இருக்கோ, இல்லையோ ஆனா அந்த பேரு காலத்துக்கும் பேரழகா நிலைச்சு நிக்கும் நம்ம காதலை போல.

சற்றும் எதிர்பாராத தருணத்தில் அவனை கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

தேனு உனக்கு இப்ப ஏதாவது ஒரு கிப்ட் கொடுக்கணும்னு ஆசைப்படுறேன். உனக்கு பிடிச்சது ஏதாவது கேளேன் .

நான்கேட்டாவாங்கிகொடுப்பியா?

கண்டிப்பா தேனு.

நான் கேட்டதுக்கு அப்புறம் முடியா துன்னு சொல்ல கூடாது.

அம்மா சத்தியமா முடியாதுன்னு சொல்ல மாட்டேன் தேனு.

அப்ப சரி. என் ஆசையை சொல் றேன் நீ தான் அதை நிறைவேத்தி வைக்கணும்.

சின்ன ஆசை தான் ஆனா நீ செய்வியான்னு தெரியலை.

அம்மா சத்தியமா சொன்னேன்லே, கண்டிப்பா செய்வேன்டி.

உனக்கு மழை பிடிக்காதுன்னு தெரியும். ஆனா எனக்கு மழையில நனைஞ்சுக் கிட்டு ஒரு ஐஸ்க்ரீம் சாப்பி டணும் அதை நீ உன் போன்-னாலே போட்டோ பிடிக்கணும். இதாண்டா என்னு டைய கடைசி ஆசை

ஏய் லூஸு, இதெல்லாம் ஒரு ஆசை யாடி. எனக்கு மழை பிடிக்காது தான் ஆனா உனக்கு பிடிக்கும்லே அதனால செய்யுறேன். அதுக்காக எல்லாம் என்னுடைய கடைசி ஆசைன்னு அபச குணமா ஏதும் பேசாதடி.

சரி, சரி என் ஆசையை எப்ப நிறைவேற்ற போற?

மழை வந்தா தானடி உன் ஆசையை நிறைவேற்ற முடியும். மழை வரட்டும் கண்டிப்பா உன் ஆசையை நிறைவேத்துறேன்.

அவன் சொன்ன அடுத்த செகண்ட் வானில் இருந்து மழை வேகமாய் கொட்டியது.

தேன் சிரித்தாள்.

சிரிக்காதடி...

இப்ப சார் என்ன பண்ண போறீங்க காதலியோட ஆசைய நிறைவேற்ற போறீங்களா, இல்லை அவளை ஏமாற்றி அவ ஆசையை நிராசையாக மாற்ற போறீங்களா .

அவனுக்கு பிடிக்காவிட்டாலும் அவளுக்காக அவள் சொன்னதை செய்ய ஒப்பு கொண்டான்.

ஹோட்டலில் ஒரு ஐஸ்க்ரீமை வாங்கி கொண்டு மழையில் நனைந்து கொண்டே அருகே உள்ள பார்க்கில் போட்டோ எடுக்க அவளை அழைத்து கொண்டு சென்றான்.

அவள் கையில் ஐஸ்கிரீம்மை கொடுத்து விட்டு கொஞ்சம் தள்ளி போய் போனை எடுத்து புகைப்படம் எடுக்க கிளிக் பட்டனை அழுத்தும் அடுத்த நொடி வானில் இருந்து விரைந்து வந்த ஒரு மின்னல் தாக்கி தேனின் உயிர் அந்த இடத்திலேயே பரிதாபமாய் போனது.

தன் கண் முன்னே காதலியின் உயிர் போனதை கண்டு சித்தபிரம்மை பிடித்தவன் போல அந்த இடத்திலேயே உறைந்து போனான். அவன் விழிகளில் இருந்து மட்டும் சிந்திய கண்ணீர் பூமியை தொட்ட அடுத்த கணம் கொட்டி தீர்த்த மழை நின்று போனது.



# சாதித்த சாமானியங்கள்

கைத்தட்டல்கள் புகழ் தேடல்கள்
பூமாலைகள் பொற்கிழிகள்
விரல் நீட்டல்கள் தலை சொறிதல்கள்

இவற்றுக்குப் பாத்திரமாகாமலும்
கொஞ்சம் வாழலாம்..
பாராமுக சாமானியனாக

வாழவைக்காத இலட்சியங்களைக்
கொன்று விட்டு
இடக்கரடக்கல்களை கொஞ்சம்
விட்டுக்கொடுத்து
அளபெடைகளை அளவாக்கி
அடைமொழிகளை நகர்த்தி
குறியீடுகளை மிதவாதித்து
ரசிகனாக மட்டுமே தென்றலைப் பருகி
ஏனென்ற பல கேள்விகளும்
இதுவென்ற பல பதில்களும்
கூடக் கிடைக்காமல் போனதில்
சந்தோஷமடைந்து..

என்ன ஒன்று?
விலை பேசிய விருதுகளும்
பாவப்பட்ட பட்டங்களும் தான்
உங்களைத் தேடி வராது!

**- லைலா அக்ஷியா**

# தேடி வந்த விருது

**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை**
**திண்டுக்கல்**

அதிகாலையில் திடீரென ஓர் அழைப்புச் சப்தம்! பக்கத்து வீட்டில் வசிக்கும் பரிமளா அம்மா.. ஜானகி வீட்டின் முன் வந்து.. "ஜானகி, என் கணவருக்கு திடீரென பேச்சு,மூச்சு இல்லாமல் ஆகிவிட்டது ..

"நாங்கள் அவரை நேற்று இரவு அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம்.. அவரை பரிசோதித்த மருத்துவர்கள், உடனே இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் இல்லையேல் உயிருக்கு ஆபத்து அதற்கு 40 ஆயிரம் தேவைப்படும் அதுவும் இன்று மாலைக்குள் கட்ட வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்கள்.

எங்களிடம் போதுமான வசதிகள் இல்லை, இந்த கடன் தொகையை அடைக்க வேண்டுமென்றால் எனக்கு, எனது பூ வியாபாரத்தின் மூலம் இரண்டு மாதங்கள் ஆகலாம், ஆகையால் உடனடியாக பணம் கேட்டால் யாரும் தர மறுக்கிறார்கள்.

எனக்கு என்ன செய்ய வேண்டும் என்றே புரியவில்லை" என்று சொல்லும் போதே கண்களில் கண்ணீர் ததும்பியது ஜானகிக்கு..

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த ஜானகியின் கணவன் சிவாவிற்கு மிகவும் வருத்தம்.. தனது மனைவியையும், தனது இரு குழந்தைகளான ரேவதி மற்றும் சுமதி யையும் அழைத்து 'நாம் அவர்களுக்கு ஏதேனும் உதவிகள் நிச்சயம் செய்ய வேண்டும்" என்று கூறிடவே..

குழந்தைகள் இருவரும் தங்களது சிறு சேமிப்பு உண்டியலில் வைத்திருந்த 10 ஆயிரம் பணத்தையும், மனைவியின் சேமிப்பு பணமும், இன்னும் இரண்டு தினங்களில் பள்ளியில் கட்ட வேண்டிய குழந்தைகளின் பணமும் சேர்த்து 40 ஆயிரம் சேர்த்து பரிமளவிடம் கொடுத்து விட்டனர்.

"உங்கள் கணவரின் உயிரை முதலில் காப்பற்றுங்கள், பிறகு பொறுமையாக எங்க ளுக்கு பணத்தை திருப்பி தாருங்கள்" என்று பரிமளாவை அனுப்பி வைத்தனர்..

அன்று மாலையே பரிமளாவின் கணவருக்கு அறுவை சிகிச்சை நல்லபடியாக முடிந்தது. ஒரு வாரத்தில் மீண்டும் பழைய நிலைக்கு உடல்நிலை சரியானது.இந்த விடயம் பரிமளாவை மிகவும் யோசிக்க வைத்தது..

நமக்கு உதவி செய்தவர்களை இந்த உலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் காண்பவரிடத்தில் எல்லாம் நடந்ததை சொல்ல ஆரம்பித்தாள். இது படிப்படியாக ஊடகங்கள் மூலமாக பரவியது, இறுதியில் அந்த மாவட்ட ஆட்சியரின் பார்வைக்கு எட்டியது..

மறுநாள் காலையில் ஜானகி குடும் பத்தை அழைத்த ஆட்சியர் "தங்களது குடும் பத்தின் செயலானது அனைவரையும் சிந்திக்க வைத்துவிட்டது, உங்கள் குழந்தைகள் வளர்ப்பு மிகவும் போற்றத்தக்கது, நமது பண்பாடும் நிலைத்து விட்டது. உங்களுக்கு சிறந்த சமூக சேவைக்கான விருதை அரசாங்கம் தருகிறது." என்று கூறியவுடன் பேரானந்தத்தில் அந்த குடும்பமே மூழ்கியது..

இதனை அறிந்த பள்ளி நிர்வாகமும் அந்த வருட பள்ளிக் கட்டணத்தை குழந்தைகளுக்கு அன்பளிப்பாக தள்ளுபடி செய்தது. இதனை அறிந்த பரிமளாவின் மனம் குளிர்ந்தது. ■

# பெண்களை புரிந்து கொள்ள…

‘பெண்களைப் புரிந்து கொள்வோம்’ என ஒரு வீடியோ பார்த்தேன். ஒரு ஆண் பூங்காவில் நின்று கொண்டு, புன்சிரிப்புடன் வீடியோவில் பெண்களைப் புரிந்து கொள்வோம்.ஆண் எதிர்மறையாக ஒரு வார்த்தை சொன்னால் பெண்ணுக்கு ஆயிரம்முறை சொன்னது போல ஒலித்துக் கொண்டே இருக்கும்.சாரின்னு ஒரு முறை சொன்னால் அது ஒரு முறை தான் கேட்கும் அதனால் கவனமாக பேசுங்கள் என்று ஆலோசனை கூறினார்.

பெண்களை வீட்டை விட்டு வெளியே அனுப்பாமல், அவளுக்கு எதுவுமே தெரியாது என்று சொல்லிச் சொல்லியே வீட்டுக்குள் அடைத்து வைத்தால், அவளுக்கு அது ஆயிரம் முறை தான் கேட்கும்.

அவளை சமூகம் சார்ந்து சிந்திக் கவும், செயல்படவும் விட்டால், ஆண் சொல்வதை ஒரு முறை கூட கேட்க நேரமின்றி கடந்து போவாள்.

நாங்களா தடுக்கிறோம் என்று கேட்காதீர்கள்’. எத்தனை படித்தாலும் பெண் தான் சமைக்கனும் ,குழந்தை வளர்க்கனும்னு ஆண்கள் ஒதுங்கும் வரை அல்லது அவள் தலையில் இந்தப் பொறுப்புகளைக் கட்டும் வரை’ உங்க ளுக்கு அவள் புரியாத புதிர் தான்..

அதனால் தான் சொன்னாங்க “பெண் ஆணுக்கு சுமையாக இருக்கக் கூடாது என்றால் அவளுக்கு கல்வி கொடுத்து சுதந்திரமாகச் சிந்திக்க விடு” என்று...

உடனே புலம்பாதீங்க ‘பெண்கள் தான் பெண்களுக்கு எதிரி’ என ஆயிரம் ஆண்டுகளாக மூளைச் சலவை செய்யப்பட்ட ஆணாதிக்கச் சிந்தனை தாங்கிய பெண்கள் அவர்கள்.

சுதந்திரமானசிந்தனைஎன்பதையே ஏற்றுக்கொள்ளாத அடிமைகள். ஒரு சத வீதத்திற்கும் குறைவான பெண்களே சுதந்திரமாக வாழ்கின்றனர் .அவர்களை வைத்து சமத்துவம் வந்து விட்டது என்று கூறாதீர்கள்.

புறவெளியில், காணும் இடங்களில் எல்லாம் ஆண்களே நிறைந்து உள்ளீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள் கூட வேலை முடிந்ததும் வீட்டுக்குள் புதைந்து கொள்கிறாள்.

நீங்கள் நடைபயிற்சி செல்லும் போது உங்களுக்கான சமையலைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறாள்.

நீங்கள் அரசியல் பேசும் போது அவள் சமையலறையில் புழுங்கிக் கொண்டு இருக்கிறாள்.

குழந்தை பெற்றதால் உடல் சிதைந் தவளைப் பார்த்து நீங்கள் கிண்டல் செய்வதை எல்லாம் அவள் மனதின் ஆழத்தில் புதைத்து கொள்கிறாள்.

தொப்பை பெருத்த ஆணுக்கும் நயன் தாராவைப் பிடிக்கும் என்று ஆர்வத் துடன் கூறுவீர்கள்.

அவளும் நயன்தாராவைப்போல் வாட கைத் தாயை அமர்த்தி, தனது உடலைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றால் விடுவீர்களா? .

தனது வாழ்வை முடிவெடுத்த நயன் தாராவைப் பற்றி எவ்வளவு தூற்றினீர்கள்.

பெண்களைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்ள, அவர்கள் நிலையில் நின்று புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

மு.கீதா
புதுக்கோட்டை

## ஹைக்கூ



1
நடுங்கும் பனியில்.
மெல்ல வளர்கிறது,
உயிர்களிடத்து காதல்.!!!

2
 இன்னும் பழமை மாறாமல்,
மலைக்கோயிலுக்கு அழைத்துச்செல்கிறது,
மிதிபடும் படிக்கட்டுக்கள்.!!!!!!

3
வெகுநேரமாக மிதந்து கொண்டிருக்கிறன,
மீட்புபணிக்கு யாரும் முன்வரவில்லை,
குளத்தில் மேகங்கள்.!!!!

4
பக்தியோடு கோவிலைத்,
தரிசித்துச் செல்கிறது,
ஆற்றுநீர்.!!!!

5
ஆற்றுக்குள் இருந்து,
மேலேறிச்  சென்றுவிட்டது,
ஒற்றையடிப்பாதை.!!!

அ. செல்வராஜ்,
உடுமலைப்பேட்டை.

## சென்ரியு



1
வயலுக்குச் சென்றதும்
உழவனுக்கு ஞாபகம் வரும்
நீரிழிவு மாத்திரை

2
சாதிக்கலவரம்
144 தடை உத்தரவு
சமத்துவபுரத்தில்...

3
வெற்றி வேட்பாளர்
தோற்றுப் போனார்
நோட்டாவிடம்

4
மதியநேரத்திற்குப் பிறகு
மருந்துடன் உணவு சாப்பிடும்
பட்டாசுஆலைச் சிறுமி

5
செய்கூலி இல்லை
சேதாரம் இல்லை
கடலைக் கம்மலுக்கு...

- ஸ்ரீவி.முத்துவேல்

# இன்பம் தருமே பாட்டுதான்

**நீயும் நானும்  ஒன்றுதான்
நெருங்கி வந்த பின்புதான்
ஆணும் பெண்ணும் சேர்ந்துதான்
அழகாய்த் தந்த படைப்புதான்**

**குழந்தை செய்யும் சேட்டைதான்
தாயின் பாசப் பார்வைதான்
ஆசையோடு தழுவிதான்
அன்பு முத்தம் தந்துதான்**

**தந்தை என்னை அழைத்துதான்
கையைப் பற்றி தூக்கித்தான்
தோளின் மீது சுமந்துதான்
ஊர் முழுக்கச் சுற்றிதான்**

**நான் வளர்ந்த கதையைத்தான்
நயமாய் சொல்லும் கவிதைதான்
இசையைக் கொஞ்சம் கூட்டித்தான்
இன்பம் தருமே பாட்டுதான்..!!**

**- கள்ளூர் இர.இல.சங்கர்**

குறள் வெண்செந்துறை

# மார்கழியின் மகத்துவம்...

காலையில் நீராடிக் கன்னியரை அழைத்தாள்
மாலையிட்டே கண்ணனை மணாளன் ஆக்கிடவே.

திருமகள் இயற்றிய திருப்பாவை பாட
அருள்நிலை பெறலாம் ஆண்டாள் போலவே.

இறங்கிடும் பனியிலும் இறைவனைத் துதித்திடச்
சிறந்திடும் வாழ்வும் சீர்மிகு வழியிலே!

ஆண்டாள் பாசுரம் அன்றாடம் பாடிட
வேண்டுதல் யாவும் வெற்றியாய்க் கிடைக்குமே.

பாவை நோன்பும் பரந்தாமன் விருப்பமே
தேவை நிறைவேறித் தென்படும் திருப்பமே.

கண்ணன் நாமம் காத்திடும் கவசமாய்
திண்ணமாய்ப் போற்று திருப்பாவை நாளுமே

மார்கழி பிறந்தது மங்கையரே எழுவீர்
கார்குழல் நனைத்துக் கண்ணனைத் தொழுவீரே!

மா.பாலசுந்தரம்



# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

உலகினில் உன்னதம்
ஓங்கிட வாழும்மொழி!
பலநூறு இன்பங்களைச்
சொரிகின்ற அன்னைமொழி!

தென்பொதிகைத் தென்றலென
மன்றமெங்கும் தவழ்ந்தமொழி!
செந்தேனின் சுவையினையே
சிந்துகின்ற பாகுமொழி!

முச்சங்கம் வளர்த்த
முத்தான மூத்தமொழி!
அச்சமிலாது அவனியை
ஆளுகின்ற அழகுமொழி!

கற்கண்டுச் சொற்கொண்ட
கனிச்சாற்று இனியமொழி!
கற்றோரும் மற்றோரும்
களிப்பிடும் கன்னிமொழி!

பண்ணிசை பாக்களைச்
சரங்களாய்த் தொடுத்தே
நயந்திட நாவூறிடும்
தேறலான செம்மொழி!

தேன்தமிழ் எங்களுயிருக்கு
நேரென்றே பாவேந்தர்
நேசமாய்ப் போற்றும்மொழி!
நெஞ்சினிலே நிற்கும்மொழி!

சந்தங்கள் நிறைந்திடும்
செந்தமிழே எங்கள்மொழி!
கம்பனின் கவிதனிலே
கனிரசமதை கசியும்மொழி!

அமுதமென அருந்திடும்
அவனியின் அழகுமொழி!
அழிவிலாத அருமைமொழி
எம்மொழி செம்மொழியே!

- கிண்ணியாசபீனா

# ஆழி சூழ்ந்த உலகிது



முருகேசுவரி ஆறுமுகம்
சவூதி அரேபியா

'ஆழி சூழ்ந்த உலகிலே யாவும் அழகாச்சே...", எப்படி இந்த ஆழி சூழ்ந்த உலகம் அழகானது. வற்றாத ஆறுகளின் சங்கமத்தால் தானே. ஆனால் சமீபத்தில் ஒலிக்கும் குரல்கள் சொல்கிறது.. "ஆற்றின் உபரிநீர் கடலில் வீணாகக் கலக்கிறது என்று..." இதை பற்றி கொஞ்சம் பேசலாம்.

எப்படி.. "இயற்கையின் மடியில் பிறந்து தவழ்ந்து தனது போக்கில் காலங்காலமாக கடலில் கலந்த ஆற்றுநீர்" சமீப காலத்தில் கடலில் சென்று சேர்வதை வீண் என்று கருதுகிறோம். இதனை, மனிதனின் ஆறாம் அறிவின் விசாலமான போக்கு என்று எடுத்துக்கொள்வோமா..?

இதெப்படி இருக்கிறதென்றால், ஒரு ஓட்டப்பந்தய வீரர் ஓடிச்சென்று இலக்கை அடையும் முன்பே அவரைத் தடுத்தி நிறுத்துவது போலிருக்கிறது.

மனிதனின் பேராசையின் நீளம்.. ஆற்றை சுருக்கிச் சுருக்குப்பையில் போடுகிறது. எங்கு நாகரிக வளர்ச்சி கண்டோமோ..! எங்கு மனித குலம்தன்னை நிலை நிறுத்திக்கொண்டதோ..! அந்த பண் பாட்டின் நீட்சி இன்று பாழாய்ப் போகிறது.

இயற்கையில் உள்ள அனைத்தும் அனைவருக்கும் பொது, ஆனால் ஏனோ, மனிதன் எல்லாம் தனக்குரியதென்ற தொனி யிலே வாழ்கிறான். தனக்கான தேவை களைத் தாண்டி இயற்கை அன்னையை இம்சிக்கிறான். அன்னை பொறுமை யானவள் தான் அதில் எந்த ஐயமுமில்லை. ஆனால், எந்த மட்டுக்கும் என்பதற்கு காலம் பதிலளித்துக் கொண்டேதான் இருக்கிறது. தயவு செய்து கவனியுங்கள். செவிக்குள் எப்பொழுதும் செவிப்பொறி (Headset) அணிந்துகொண்டு இயற்கையின் முணு முணுப்பைக் கண்டுகொள்ளாமல் பயணிக்கிறோம்.

புறநானூறு, ஒரு மன்னன் நிலைத்த புகழ் பெறவேண்டுமெனில் நிலத்தொடு நீரைச் சேர்க்க வேண்டும் என்கிறது. ஏனெனில் உணவெனப்படுவது, நிலத் தொடு நீரே. நீரின்றி அமையாது உலகென வள்ளுவரும் சொல்லி யிருக்கிறார்.

யாரென்ன சொன்னாலும் யாரென்ன செய்தாலும், என் வழி தனி வழி என்று

நடைபோடும் மனப்பக்குவம் எப்படி மனிதருக்குள் நுழைந்ததோ..? வியப்பை அள்ளியிறைக்கிறது.

தன் போக்கில் சென்ற ஆற்றின் குறுக்கே முன்னோர்கள் யாரும் அணை கட்டவில்லை. அணைகளெல்லாம் இந்த ஒற்றை நூற்றாண்டின் வரலாற்றைத்தான் தாங்கி நிற்கிறது.

முன்பெல்லாம், அனைவருக்கும் பொதுவான மழையை ஆறு, குளம், கண்மாய், ஏரி, கிணறு, குட்டை.. இது போன்று பல பெயர்களில் நீர்நிலைகள் அமைத்து சேமித்து தனக்கும், பாசனத் திற்கும் பயன்படுத்தினர்.

நாம் அறிவில், அறிவியலில் வளர்ச்சி அடைந்தவர் என்ற பெருமையைப் போர்த்திக் கொண்டு முன்னோர்கள் முறை செய்த அத்த னையையும் மாற்றி விட்டோம்.

நீர்நிலைகளை நீண்ட கட்டிடங் களாக்கி, விளைநிலத்தை விளையாத நிலமாக்கி, போதாக்குறைக்கு ஆழ்துளை யிட்டு நிலத்தடி நீரையும் உறிஞ்சி.. இன்னும் இன்னலுற என்னென்ன வழி யிருக்கிறதென்று தேடும் மனித மனங் களை என்னவென்று சொல்வது.

சரி.. நான் சொல்ல வந்ததைச் சொல்கிறேன். இந்த உபரிநீர் கடலில் கலப் பதால் நீர் வீணாகிறது என்றும், அது கலக்கவில்லை என்றால் நாம் வீணாய் ப்போவோம் என்றும் கருத்து கள் தங்கள் போக்கில் கச்சைக் கட்டிக் கொண்டுத் திரிகின்றன.

உபரிநீர் கடலில் கலக்கவில்லை என்றால் ஏன் நாம் வீணாய்ப்போவோம், பின்புலத்தையும் சற்று பார்ப்போம்.

ஏரல் கடல் கதையைப் பற்றி பலர் அறிந்திருக்கலாம். இது, உண்மையில் கடல் அல்ல. கடலளவுக்கு காட்சியளிக்கும் பெரிய ஏரி. இதன் பரப்பளவு, 68 ஆயிரம்

# ஈரலிக்கும் விழிகள்

பாதையில் செல்லும் போதும்
பயணங்களின் நடுவிலும்
யாராவது முகம் மலர்ந்தால்
கொஞ்சம் தள்ளி இடம் தந்தால்
அவற்றையெல்லாம் அலாதி பிரியத்துடன்
ஏற்றுக் கொள்கிறேன்..

ரயில் சிநேகங்களில்
பரிமாறப்படும் பலகாரங்களுக்காய்
நேசத்துடன் கரம் நீட்டுகிறேன்..

ஆழ்ந்த பற்றுதலுடன்
அதீத நம்பிக்கையில்
ஏற்றுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம்
காரணமின்றியே கடந்து போனபின்
எதேச்சை ஆறுதல்களையேனும்
இழந்து விடாதிருக்கவே பிரார்த்திக்கிறேன்..

யார் யாரோ
எதேச்சையாகவோ எதற்காகவோ
முறுவலித்து கடக்கும் போதெல்லாம்
இவர்களுக்குப் பின்னும் - ஒரு
இருண்ட கதையிருக்குமோ அல்லது
ஒரு கைவிடப்பட்ட நேசத்தின் வலியிருக்குமோ
என்றெல்லாம் சிந்தனை மேலிட
பதில் புன்னகையைக் கூட
மறந்து விடுகிறேன்...

தொங்கிப் போன
முகங்களை தூக்கிக் கொண்டு
துயரார்ந்து நடப்பவர்களை காண்கையில்
விசாரிக்காமலே என் விழிகள்
ஈரலித்து விடுகின்றன..
இதயத்தின் மதிப்பு தெரியாதவர்கள் எல்லாம்
எப்படியோ மிதித்து மேலேறி விடுகிறார்கள்..
இழக்கத் துணியாதவர்கள் மட்டுமே
விட்டுப் போன இடத்திலேயே
இன்னும் விக்கித்து நிற்கிறார்கள்...

மாத்தளை
ஜெஸீமா ஹமீட்

சதுர கிலோ மீட்டர். இதுதான் உலகின் நான்காவது பெரிய ஏரி. தெற்கிலிருந்து பாயும்அமுர்தாரியா, கிழக்கிலிருந்து பாயும் சிர் தாரியா என்கிற இரு ஆறுகள்தான் இந்த ஏரல் கடலுக்கு நீர்வளம் அளித்தவை. இது, முந்தைய சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியான இன்றைய கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் நாடுகளில் அமைந் திருந்தது. 'ஆம்... அமைந்திருந்தது' என்று இறந்த காலத்தில்தான் சொல்ல வேண்டும். ஏனெனில்.., இதில் பாய்ந்த அமுர் தாரியா மற்றும் சிர் தாரியா ஏரிகள் பாசன மற்றும் மக்களின் பயன்பாட்டிற்குத் திருப்பிவிடப்பட்டதால் இந்த ஏரல் கடல், இன்று இறந்து விட்டது. இதே கதி, நாளைக்கு நம்மைச்சுற்றியுள்ள நீர்நிலைகளுக்கு நேராமல் காக்கவேண்டு மெனில் மழைநீரை மறக்காமல் தாழ்வான பகுதிகளில் சேமிக்க வேண்டும்.

என்னது, ஆற்றுநீர் கடலில் கலக்க வில்லையென்றால்கடல்இறந்துவிடுமா..? அப்படிதான் சூழலியலாளர்களும் சொல் கிறார்கள். ஆற்றின் உபரிநீர் கடலில் கலப்பதால் கடல் உப்பின் அடர்த்தி உயராமல் காக்கப்படுகிறது. ஆற்றுநீர் அடித்துச்செல்லும் செடி செத்தைகள் கடல்வாழ் உயிர்களுக்கு உணவாகிறது. கடல்வாழ் உயிர்களுக்குத் தேவையான நைட்ரஜன் மற்றும் பல கனிம சத்துகள் ஆற்றுநீர் வழியாகத்தான் கிடைக்கிறது. கழிமுகத்தில் வாழும் நுண்ணுயிர்கள் ஆற்றுநீர் கலக்காவிட்டால் மடிந்துவிடும். அதனை உண்டு வாழும் சிறிய மீன்கள் அதனை சார்ந்து வாழும் பெரிய மீன்கள் என்று அந்த சங்கிலித்தொடர் அறுபட்டுவிடும்.

அதுமட்டுமன்று, ஆற்றுநீர் கடலில் கலந்ததால் தான் மழைமேகம் கூடும். காற்றழுத்த மாற்றத்தால் அது மழையாக மீண்டும் மண்ணில் பொழியும். உப்பின் அடர்த்தி அதிகமானால் மழைமேகம் கூடாது. நிலமும் மழையின்றிப் பாலை யாய் மாறிவிடும். மேலும் கடலில் இருந்து தான் நமக்கு தேவையான எழுபத் தைந்து சதவீத ஆக்சிஜன் கிடைக் கிறது. எல்லாம் அறிந்தும் இன்னும் ஆட்டு மந்தைகளாகவே..

உப்பின் அடர்த்தி கூடுவதால் கடல் வாழ் உயிர்கள் மடிவதோடு மனிதனின் வாழ்க்கையும் கேள்விக் குறியாகிவிடும் என்பதற்கு ஏரல் கடலே சிறந்த சான்று.

நம் முன்னோர்கள் யாரும் அணைக ளால் ஆற்றின் போக்கைத் தடுக்கவில்லை. கல்லணை என்பது கூட பெரிய மதகு தான். கொள்ளிடம், வெள்ளத்தின் தாக் கத்தை தாங்காது என்பதற்காக நான் காகப் பிரித்துவிடும் மதகாகத்தான் கல் லணை கட்டப்பட்டுள்ளது. அவர்கள், நீர் நிலைகளை அமைத்துதான் நிலத்தின் வளத்தைக் காத்திருக்கிறார்கள்.

இன்றைய கார்ப்பரேட் உலகின் பின்னே செல்லும் சிந்திக்க மறந்து சிதைந்த கூட்டமாய் இல்லாமல் சிறந்த கூட்டமாக வாழ சுயநலப்போக்கைத் தவிர்த்து மண்ணைக் காக்க மக்களும் முயலவேண்டும். தேவையான வளர்ச்சி நாட்டைக் காக்கும்; அறிந்தால் அறியாமை விலகும். எளிமைப்படுத்துதல் ஏற்றம் தருவதாக இருக்க வேண்டும். தேவைக்கும் தேடுபவைக்கும் உள்ள தூரம் பயணிக்க வேண்டுமா..? என்று முடிவு செய்ய வேண்டிய மூளையை எழுச்சியுற செய்து வாழ்தலின் பொருளை உணருங்கள்.

நாம் அடுத்த தலைமுறைக்கு என்ன சேர்க்கிறோம் என்று யோசிக்காமல் விண்ணில் பறக்கும் முயற்சியில் மண்ணை மறந்துவிட்டோம். தண்ணீரைப் பாட்டி லில் அடைத்தோம். இன்று, காற்றை யும் பாட்டிலில் அடைக்கும் சூழல். இயற்கையை மாற்றும் ஒவ்வொரு முயற்சியும் நம் வாழ்விற்கு நாமே தோண்டும் புதைக்குழி.

எனவே, ஆழி சூழ்ந்த இவ்வுலகை அழகாக்கி வாழ்வின் பொருளை உணர்ந்து உண்மையாக வாழ்வோம். ■

# வாழ்ந்து காட்டு

## மு.வா.பாலாஜி, ஒசூர்

(எண்சீர் விருத்தம்)

உள்ளொளியைப் பெருக்குதற்குப் பண்பை நாடு
உன்னறிவை வளர்ப்பதற்கு நூலைத் தேடு
அள்ளஅள்ள குறையாது கல்விச் செல்வம்
ஆற்றலினைக் கூட்டுதற்குத் துணையாய் நிற்கும்
வெள்ளமென தமிழ்மொழியின் பெருமை பேசு
வெல்லமென இனித்திடுமே மறுப்போர் உண்டா
உள்ளத்தை உறுதியாக வைக்க வேண்டும்
உண்மையினை எப்போதும் காக்க வேண்டும்

ஆழ்கடலைக் கடக்கின்ற கப்பல் போல
ஆழ்மனத்தைக் கடந்திடவே முதிர்ச்சி வேண்டும்
பாழ்படுத்தும் பழக்கங்கள் வேண்டாம் தள்ளு
பாரினிலே நிலைப்பதற்குப் புகழை அள்ளு
சீழ்பிடித்த சிந்தனையை அடித்தே ஓட்டு
சிக்கலினைப் போக்குதற்குத் தீர்வை நீட்டு
ஊழ்வினைதான் ஆட்டுமென்று உறக்கம் வேண்டாம்
உயர்வான செயல்களாலே உயரம் காட்டு

பழங்கதைகள் பேசியிங்கு பயனும் இல்லை
பலமான முயற்சிக்கு வானே எல்லை
பழக்கங்கள் நல்லவற்றை எடுத்து சொல்வோம்
பகுத்தறியும் அறிவாலே ஞாலம் வெல்வோம்
அழகழகாய் வாழ்ந்திடவே வழிகள் நூறு
அன்பாலே வென்றிடவே மனத்தால் தேறு
இழப்புகளை நினைக்கின்ற உள்ளம் ஓட்டு
இருக்கின்ற நிமிடத்தில் வாழ்ந்து காட்டு

# பொங்கல் திருநாள்

விளைச்சலுக்கு உதவிபுரியும் சூரியன், மண்,
கால்நடைகளுக்கு நன்றி செலுத்துவதே
பொங்கல திருநாள்

விளைச்சலுக்கும் உழவுத் தொழிலுக்கும்
மரியாதை செலுத்தும் நாள்

விளைந்த நெல்மணியால் பொங்கலிட்டு
சூரியனை வழிபடும் திருநாள்

விவசாயிகளுக்கு மட்டுமல்ல
தமிழர்களுக்கே மகிழ்வு திருநாள்

விளைந்த புது நெல், மஞ்சள், கரும்பு வைத்து
வழிபடும் திருநாள்

விவசாயிகள் தோட்டத்திலும்,
மற்றவர்கள் மனையிலும்
கொண்டாடும் திருநாள்

விளையாட்டுப் பிள்ளைகள் முதல்
பெரியவர்கள் வரை
புத்தாடையுடுத்தி மகிழும் நாள்

புதுப் பானையில பொங்கிவரும்
பொங்கலைக் கண்டு மகிழ்ந்து
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல் என்று சொல்லி
மகிழும் திருநாள்.

வி.எஸ்.ரோமா,
கோயம்புத்தூர்

அனுதினமும் எங்கள் வீட்டு ஜன்னல் கதவைத்தட்டி
எங்கே எனக்கான உணவு என்று கேட்கும்
பறவைகளுக்காககவே வைத்திருக்கிறேன்
ரேஷன் கடை அரிசியும் கோதுமையும்...!!

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர்






**மரணித்த சூரியன்**

# அணிந்துரை

பா வினங்கள் பலவும் பைந்தமிழின் புகழோடு பண்பாடும் பேரழகைத் தமிழ் இலக்கியத்தில் காணலாம். அவற்றைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு, உருப்போட்டு உவந்தளித்த கவிஞர்களோ ஏராளம் ஏராளம். அவர்கள் தம் எழுத்துவன்மையால் இலக்கியப் பிரியர்களை ஈர்த்து, இத்தரணியெங்கும் கோலோச்சுவது மறுக்க முடியா ஒன்றாகும். இவ்வகையில் இலங்கை மண்ணின் மைந்தனான நம் ஏரூர்க்கவிக்கோ ஏ.சீ அப்துல் றகுமான் தாம் எழுதிய **"மரணித்த சூரியன்"** மூலம் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளதோடு, தன் சிந்தனையைத் தட்டிவிட்டு சிறகுகளை எம் வசமாக்கியுள்ளார். இவரின் பெரும்பாலான கவிதைகள் யாதார்த்தத்தையே தம் ஆடையாய் அணிந்து, வனப்பும் சேர்த்ததன் வலிகளையும் உணர்த்தின. மொழியாளுமை என்பது ஒரு படைப்பை நிலைநிறுத்தி படைப்பாளியையும் அடையாளப்படுத்துகிறது. அங்கு அவர் மொழியைக் கையாளும் விதம் அவரை மற்றவர்களிடமிருந்து தனிச்சிறப்பு மிக்கவராக வேறுபடுத்திக்காட்ட உதவும்.

தவிரவும் எந்தவொரு படைப்பாக இருப்பினும், பொருந்தும் விதமாக மேற்கொள்ளப்படும் உவமான உவமேயங்களும் வார்த்தை அலங்காரங்களும் அழகைக் கூட்ட அணி சேர்கின்றன. சமூகப் பிரச்சினைகளாகட்டும் விழிப் புணர்வு தரும் கவிதைகளாக இருக்கட்டும் நறுக்குத்தெறித்தாற்போல்கையாளப்படும் வீரியம் மிக்க சொற்கள் நிச்சயமாக மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திப் பாரிய சமூக மாற்றங்களுக்கும் வழிகோலும், மற்றது அழகியல் கலந்து எழுதப்படும் படைப்புகளுக்கும் இலக்கியத்தில் ஆயுட் காலம் அதிகமே!

அந்த யுக்திகளைத்தான் நம் கவிஞர் ஏரூர்கவிக்கோ இங்குகையாண்டிருக்கிறார். கவிஞனொருவன் தன் எழுத்தாணி கொண்டு நிகழ்த்தும் அற்புதங்கள் பலகோடி. அவற்றை இக்கவிதைத் தொகுப்பிலும் காணலாம். கவிஞனொரு வனின் எழுதுகோலின் கூர் முனை சமுதாயச் சீர்கேடுகளை சீராக்கும். அவனின் காத்திரமான எழுத்துகள் சமூக வளைவுகளை நேராக்கும். அந்த வரிசையில் இக்கவிஞரின் படைப்புகளும் சமுதாயத்துக்கு விழிப்புணர்வு தந்து எதிர் கால தேசத்தின் விழுதுகளிடம் மனிதாபி மானத்தை விதைக்கும். வசந்தத்தை வாசலுக்கு அழைத்துவரும். இலங்கை யின் கவியாளுமையாகத் திகழும் ஏரூர் கவிக்கோவின் சிறப்பான மொழி யாளுமை வாசகரைக் கட்டிப்போட்டு களிநடம் புரிகிறதென்றால் அது மிகையில்லை.

வாருங்கள் ஏரூர்கவிக்கோவின் ''மரணித்த சூரியனில்'' லயித்து மனம் தொலைக்கலாம். மறுபடி உயிர்க்கலாம்..

இவரின் முதல் கவிதையான ''இறைவா பதில் சொல்'' இதில் பொதிந்த உண்மை களோ மனதை தாக்கி அடுத்த பக்கத்துக்கு நகரவிடாமல் கொஞ்சநேரம் சிந்திக்க வைத்தன.

''பெண்ணினமே நீ வாழி'' கவிதையை ஒட்டுமொத்த பெண்ணினத் துக்கும் மகுடமாக்குகிறார் கவிஞர். இன்றைய இளைஞர் சமுதாயம் கண்மூடித் தனமாக போதையில் வீழ்ந்து கிடக்கும் விதம் இவரை ஆத்திரப்பட வைக்க,

**''வாதையும் வருத்தம் கொண்டு**
**வதைபடும் இளைஞரின்று**
**போதையும் புகையும் கொண்டு**
**பொசுங்கிடும் காட்சி கண்டு**
**எரிமலைக்குழம்பாய் உள்ளம்**
**எழுதுகோல் வழியே பாயும்''**

வார்த்தைகள் தீச்சுவாலையாய் தெறிக்கிறது. இவ்வுலகை அன்பின் சக்தியொன்றே இயக்கி வருவதைக் குறிப்பிடும் வரிகளிவை...

**''மூன்றெழுத்தே யானாலும்**
**முழு உலகும் தலைவணங்கும்**
**அன்பொன்றே மருந்தாகும்**
**அதுவே நல்விருந்தாகும்''**

ஆமாம்! அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்? மனத்திடத்தால் தோல்வி யையும் வென்று வரலாம். இதற்கு சான்று பகரும் வரிகள் சொல்லும் வழியை இப்படி...

**''தோல்வியடைவதென்றும்**
**தோற்பதற்கே அல்ல.**
**வெற்றிக்கனியை**
**வென்றெடுக்கும் படிக்கல்.**
**உடற்திடம் கொண்டு மட்டும்**
**உயர்ந்திட முடியாதென்றும்**
**மனத்திடம் உள்ளோர் தாமே**
**மதியுள வெற்றியாளர்''**

ஊட்டச்சத்தாய் உறுதுணையாகும் வரிகளிவை. இறைக்கும் கிணறுதான் ஊறும் என்பதற்கிணங்க தர்மம் பற்றிய இவரின் கருத்து எளிமையாய் சொல்வது இதைத்தான்.

**''கொடுப்பதால் செல்வமென்றும்**
**குறைவதே இல்லையென்ற**
**உண்மையை உணர்ந்த யாரும்**
**உலோபியாய் வாழமாட்டார்''**

இச்சமூகத்தில் அன்றுதொட்டு இன்று வரை பச்சிளம் குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்வதையும் கொலை செய்யப்படுவதையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் வருடந்தோறும் கொண்டாடி மகிழும் சிறுவர் தினம் இவர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்த உதித்த கவிவரிகளிவை.

**''தினந்தோறும் பிஞ்சுகளைத்**
**தீக்கரங்கள் எரிக்கையிலே**
**உலகமெலாம் சிறுவர் தினம்**
**உயர்வாகக் கழிகிறது''**

சிந்தித்துக் களைய வேண்டிய மிகக் கொடூரமான விடயமிது. இதற்கொரு தீர்வையும் முன்வைக்கும் கவிஞர் சொல்கிறார்,

**''குற்றமிழைத்தவர்கள்**
**குலைநடுங்கிப் பயந்தலறத்**
**தண்டனைகள் வலுப்பெற்றால்**
**தவறுகள் குறையும்''**

கவிதை பற்றிய கவிஞரின் இன்னொரு கவிதை சொல்வதைப் பார்ப்போம்?

**''மூளை நரம்புக்குள்**
**முளைவிட்ட கற்பனைகள்**
**ஏட்டிலிறங்குவதே எழுதுகோல்**
**வழியாகக் கவிஞனவன் ஆற்றல்**
**கவிதையெனும் படைப்பாகும்''**




நெற்றிப்பரப்பில் வியப்புக் குறியை நங்கூரமிட்டுச் செல்லும் வரிகளிவை எனச் சொல்லலாம். முயற்சி திருவினையாக்கும் என்பதை தன்பாணி யில் இவர் சொல்வது

**''முயற்சியென்பது உனக்கிருந்தால் வான்**
**முட்டும் மலையும் கைக்கு வரும்.**
**சோம்பியிருந்தால் இமைகூட**
**சுமையாயிருக்கும் அறிவாய் நீ''**

என்றமைகிறது. ''நூறாண்டு வாழ்வோம்'' கவிதையில்

**''வாழும் வயதில் சாகும் நிலை**
**வாலிபவயதில் முதுமை நிலை**
**காரணம் எல்லாம் உணவாலே**
**கருத்தினில் கொண்டால் நலமாமே**
**நோய்களின்றி மருந்தின்றி**
**நூறுவயது வாழ்வதற்கே**
**பாரம்பரிய உணவு முறைப்**
**பழக்கம் வரவேண்டும்''**

என்று குறிப்பிட்டு பாரம்பரிய வாழ்க்கையும் உணவுப்பழக்க வழக்கங்களும் நம் மூதாதையரைச் சுகதேகிகளாய் வாழ வைத்த வெற்றியின் ரகசியத்தைப் பகிர்கிறது. இன்றைய கலப்பட உணவுகள் உயிர்கொல்லும் பிணிகள் தரும் வரலாற்றையும் ஒப்புவிக்கிறது.

**''போட்டி பொறாமைகளில்லாத**
**போரில்லாதொரு பொன்னுலகம் பெற**
**ஒற்றுமையே பலமாகும் நமக்கு**
**ஒற்றுமையே பலமாகும்''**

இக் கவிஞனது ஆத்மார்த்தமான கனவு மெய்ப்பட வேண்டும். அதற்கு நம் மக்களனைவரும் ஒன்றுபடவேண்டும்.

''அன்பே இன்பம்'' சமூகச் சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டுமிடம் எம் இதயம் வேகிறது.

**''வேலிகள் பயிரை மேய்கிறது**
**வேதனையால் மனம் தீய்கிறது**
**இதயங்கள் கல்லாய் மாறியது**
**இனமத பேதம் ஏறியது''**

காலத்துக்கேற்ற கவிதைகள் இவர் கவிதைத் தொகுப்பை அலங்கரிக்க ஒவ்வொரு கவிதைகளிலுமே வலுவாகத் தடம் பதித்துச் செல்லும் கவிஞரை பாராட்டாமல் இருக்க முடியாது. கவிதைகளில் சில அழகியலால் அள்ள. இன்னும் சில அனுபவப் பாடங்களால் கிள்ள, வரிவரியாய் வாழும் வழி சொன்னவை பலவுண்டு. விருந்தாகவும் மருந்தாகவும் எம்மைப் போசித்த கவிதைகளும் களமாடிச் செல்கின்றன.

இந்நூலாசிரியரின் படைப்புக்களாக **''கூடிழந்த குருவிகள்''**, **''மாறாத்துயரம்''**, **''அக்கரைப்பச்சை''** என்பனவும் ஏற்கனவே வெளிவந்திருக்க இக்கவிதைத் தொகுப்பானது இவரின் நான்காவது படைப்பாக வெளிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சி

கொள்கிறேன். கோர்க்கப்பட்ட வார்த்தை களில் நேர்த்தி அடுக்கிய வரிகளில் நேர்த்தி எடுத்துக்கொண்ட கருவிலும் நேர்த்திச் சொல்லப்பட்ட கருத்திலும் நேர்த்தியென இக்கவிதைத் தொகுப்பு முழுக்க பரிபூரணத்துவம் மிளிர்வதைக் காணக்கூடியாதவுள்ளது. இப்படியான இந்நூலில் பல சிந்தனை முத்துக்கள் சிறப்பாக அழகு சேர்க்கின்றன.

இது இலக்கிய உலகில் வரலாறு படைக்கும். இல்லந்தோறும் ஆவணமாகப் பாதுகாக்க வேண்டிய முத்தான இந் நூலின் படைப்பாளி ஏரூர் கவிக்கோ அப்துல் ரகுமானுக்கு நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகள்.

அன்புடன்
**தமிழ்நெஞ்சம் அமின்**

# கேளிரே.. கேளீரோ..

விதியென்பார் கரும வினையென்பார் அவருடய
மதிச்சலவை மாயைக்குள் மனந் தொலைப்பாய்
சதியறியா நீயுமிங்கே சாக்கடையதில் வீழ்ந்து
கதியிழந்து கந்தலாவாய் காலம் முழுவதுமே..!

அதிநுட்ப அறிவுடையார் எனத்திரிவார் – அவர்
எதிலிங்கே வல்லவர் என்றுரையார் உந்தன்
ததியதனை(வலிமை) மனதிலேற்றி தயங்காது போராடி
எதிரிகளை வென்றிடுவாய் இனி எப்போதுமே..!

எதிலிருந்து வந்ததென எவருமறிது இருக்கையிலே
நதியதன் கரைதனில் நாகரீகம் வந்ததென்றார்
புதியன யாவுமிங்கே புரட்சிகள் செய்கையிலே
வதியினில்(வீடு) அடைவது வரைமுறை ஆகுமோ..!

பதிலேதும் கூறிடாரிவர் பசுத்தோல் புலியாவார்
பதிவான வடுக்களினைப் பசுமரத்து ஆணிபோலே
பதித்திடுவாய் மனத்தினிலே பக்குவமாய் எந்நாளும்
பதியாகி(அரசன்) ஆளுங்காலம் பக்கத்திலே வந்திடுமே..!

கதிவேறு யில்லையென காதுதனைக் கடித்து - முகத்
துதிபாடும் கூட்டத்திலே தூயவர்கள் வெகுசிலரே
புதிதாக யாரேனும் புகழுரைகள் பாடிநின்றால்
எதிர்பாத்து கேட்டிடுவார் ஏதேதோ உன்னிடமே..!

க.மணிவண்ணன்
புதுக்கோட்டை

## தன்முனைக் கவிதைகள்

(அந்தாதி)

●

படித்ததை நடித்தான்
நடித்திட நொடித்தான்
வடித்தனன் கண்ணீர்
துடித்தான் துவண்டான்

●

துவண்டவன் துளிர்த்தான்
துளிர்த்தது செழித்தது
செழித்தவன் சிறந்தான்
சிறிதாகத் திளைத்து

●

திளைத்தது நிலைக்காது
நிலைதடுமாற ஆகியவன்
ஆக்கிவைத்ததை சுவைத்தானா
சுவையற்றதென வெறுத்தானோ

●

வெறுத்து ஒதுக்கும்
நிம்மதிப் பெருமூச்சு
நிறுத்தும் நாள்வரை
உறுத்தியது மனமாகிட

●

மனமதை மதித்திட
மறந்தே ஆனான்
மரம்தாவ மந்தியென
உரமிழக்க உணர்வும்

●

உணர்வுகள் நெஞ்சதில்
இன்பமே நண்பனே
உணராமல் வாழ்ந்திடாதே
உன்நிழல் உனைத்தொடர

●

உன்னைத் தொடர்ந்தவள்
உயிராய் நினைத்தாள்
உறவாடி களித்தநீ
உதறித் தள்ளிடாதே

●

தள்ளிடக் காண்பவள்
எள்ளியே நகைப்பாள்
பள்ளிப் பாடமாகிட
கள்ளம் தவிர்

●

தவிர்க்கத் தவிக்கும்
தாயும் தந்தையும்
உயிர்க்குப் போராடிட
உனக்கும் வியர்க்கும்

●

வியர்க்க விறுவிறுக்க
உழைத்துச் சலித்தான்
அயற்கை அரவணைக்க
செயற்கை அதுவாகிடுமோ

– வாசன் சாவி

# தன்முனை கவிதைகள்

**மரம்**

வாழ்ந்தாலும் பலன் தரும்
வீழ்ந்தாலும் பயனாகும்
நட்டு வைக்க
மழை கொட்ட வைக்கும்

**மாடு**

தனக்கென உழைக்காது
உள்ளதை உண்ணும்
காலம் பார்க்காது
உழைக்கும் மாடு

**மின்னல்**

வானில் தோன்றும்
நிகழ்வில் ஒன்றாகும்
மின்னல் ஒளிக்கீற்று
கணப்பொழுதில் தோன்றி மறையும்

**மீனவன்**

கடலோடு உரையாடி
வாழும் வாழ்க்கை
உடலோடு உப்புக்காற்று
தழுவி மகிழும்

**முயற்சி**

விடாமல் தொடர்வது
இலக்கை எய்துவது
முயலா விட்டால்
முடக்கமே மிச்சமாகும்

**மூத்தோர்**

அகவை கூடும்
அகமும் குழந்தையாகும்
அனுபவ பாடத்தைப்
போதிக்கும் ஆசான்

**மென்மை**

கரடுமுரடாய் இல்லாதது
கடினம் அற்றது
மிருதுவாய் இருப்பது
மென்மை தன்மை

**மேன்மை**

சிறுமைப் பண்பு
துளியும் இல்லாதது
சிறந்த குணம்
மேலோங்கி இருப்பது

**மையல்**

விழிகளின் விளையாடல்
மொழிதல் இல்லாது
மனதில் எழும்
காதல் உணர்வு

**மொந்தை**

மண்ணில் உருவெடுப்பது
ஆதிதமிழரிடம் இருந்தது
இன்றைக்கு பயன்பாடு
இல்லாத மண்சட்டி

**மோனம்**

விழிகள் மூடி
மொழிதலற்ற சூழல்
மனதின் நிச்சலனம்
மோன நிலை

**மௌவல்**

நானிலத்தில் ஒன்று
மலராய் மலர்வது
சிவகுரு விரும்பிடும்
முல்லை மலர்

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# சிலந்தி வலை

கவிச்சித்திரம்



நேர்த்தியாய்ப் பின்னும்
வலையினை
சிலந்திக்குக்
கற்றுக் கொடுத்தது யார் ?!

வாய்நூல் இழையில்
வரைந்திட்டச் சித்திரமோ !
நெய்திட்டப் பொத்தல் ஆடையோ !

மெல்லிய
வெள்ளிக் கம்பியால்
செய்திட்ட வேலைப்பாடோ!

அந்தரத்தில்
எழுப்பிய மாளிகையோ !

காற்றில்
அசைந்திடும் ஊஞ்சலோ !

இத்தனை நீள இழைகள்
எங்கிருந்து வந்தன
எச்சிலில் சுரந்தனவோ !
வயிற்றில் வளர்ந்தனவோ !

சின்ன சின்ன
பூச்சிகளைச் சிறைபிடிக்க
இத்தனைப் பெரிய வலையா?

வீட்டின் மூலைகளில்
அலங்கோலமாய்த்
தொங்கும்  தோரணங்கள்.

நமக்குப்
பிடிக்காமல் போகலாம்
தூசுகள் என்று அகற்றலாம்

ஆனால்  அவை
ஒவ்வொரு சிலந்தியின்
கடின உழைப்பில்
உருவாகிய சின்னங்கள்

**கவிஞர் இளையதீபன்**

# இயக்கி

சிற்பங்கள் செய்வது எனக்கான தொழிலல்ல
என்றாலும் அதில் ஈடுபாடு அதிகமுண்டு
எதைப் பார்த்தாலும் செய்துவிடும்
பிடிவாதமும் எனக்குண்டு
என்விரல் தீண்டாமல்
எதுவும் உயிர்பெறுவதில்லை
என்ற அகங்காரமும்
அதையெண்ணிய பூரிப்புமுண்டு

எப்பேர்ப்பட்ட மண்ணையும்
பிசைந்து எடுத்து கண் மூக்கு உதடு
என்று பிடிக்குமெனக்கு
உன்னைக் கண்டபிறகு அடியோடு
காணாமல் போகிறது என் வீம்பு.

செய்யப்படுபவை எல்லாம்
சிற்பங்களாகிவிடுவதில்லை
சிற்பங்கள் இயற்கையால் எழுப்பப்படுபவை
இத்தனை நாளாய் எப்படி உணராமல்போனேன்
தலைக்கனம் எப்போதும் நிரந்தமாக இருப்பதில்லை

ஆழியில் அகழ்ந்தெடுத்த
முத்துக்களை யார் அடுக்கியிருக்கக்கூடும் இப்படி
வரிசை மாறாத கட்டிடங்களாய்
பளிங்குகளை யார் சிறையிலிட்டிருப்பார்
இப்படி அங்குமிங்குமாய் அலைகின்றது
மென்பஞ்சு பருத்திப்பைகள்
கொஞ்சம் செழிப்பாகத் தானிருக்கின்றன
ஈரிதழ்கள்  கிளிகள் கொத்தும் கொவ்வைப்
பழமொத்துக் காணப்படுகின்றன
குறுஇடை உடுக்கையின் நடுப்பாகமாய்;
தேய்ந்தபிறையாய்க் காணப்படுகிறது.
நிலம்தொடும் பாதங்கள்
வலிக்குமோ பூமிக்கென மெதுவாக நடைபோடுகின்றன
இவையனைத்தையும் முடித்து நிமிரக்
கொஞ்சம்கொஞ்சமாக
என்னை இழந்து கொண்டிருக்கிறேன்

எனது விரல்கள்
நேற்றுப் பிசைந்த அந்த
மண்ணைத் தேடுகின்றன
அவள்போகுமுன் ஒரு நகல் எடுத்துவிடவேண்டுமென;
தன்னிச்சையாய் இயங்குமென்
இதயம் கொஞ்சம் நிறுத்திக்கொண்டுத் துடிக்கிறது
அவள் கடக்கும்வரை
இப்போது என்னை
அவள் இயக்கிக் கொண்டிருக்கிறாள்
என்பது மட்டும்
நினைவில் நின்று ஒளிர்கிறது.

– கவித்தென்றல் சௌ.நாகநாதன்

# நேரிசை வெண்பா

1.
இணக்கம் அறிந்தே இணங்குதல் பேறாம்
குணத்தால் உயர்ந்தவர் கோடி - மனத்தினில்
நின்றிடும் கேட்டினை நீக்கிட வேண்டிடில்
வென்றிடும் நின்பெயர் மாண்பு.

2.
எத்தனையோ நண்பர்கள் ஏற்றிருந்த போதினிலும்
புத்தகத்தின் இன்பமதே புத்தொளியாம் - இத்தரையில்
வாசிப்பின் மாண்புதனில் வாழ்வுதனைப் பேணியதை
நேசித்து சீர்மைபெற்று நில்.

3.
புத்தகத்தைக் கோப்புகளாய்க் கற்பதல்ல கல்வியது
புத்தியிலே அத்தனையும் பற்றிவிடு - இத்தருணம்
கற்றதினால் காசினியில் காணுகின்ற பேறுகளால்
பற்றுதலாய் நற்செயல்கள் புரி.

4.
ஆதவன் தோன்றும் அழகிய போதினில்
மாதவம் செய்துமே மாண்புறுநீ - பூதலத்தில்
இன்புற்று வாழ்ந்திட ஈசனை நாடியே
துன்பத்தை நீக்கவழி தேடு.

**மணிக்கூ கவி செய்னுலாப்தீன் நஸீரா**
**ஏறாவூர், இலங்கை.**



## இயற்கை தரும் மகிழ்ச்சி

வைகறைத் துயி லெழுந்து
வானினை நோக்கும் போது
மையிருள் நீங்கும் காட்சி
மனதிற்குத் தரும் மகிழ்ச்சி

கோதிடும் குயில்கள் சேவல்
கூவிடும் இனிய ஓசை
ஊதிடும் குழ லிசைபோல்
உள்ளத்தில் உவகையூட்டும்.

தங்கத்தை உருக்கி னாற்போல்
தினகரன் தரும் ஒளியின்
இங்கிதம் கண்டு மாந்தர்
இதயமும் மகிழ் வடையும்

ஓடிடும் மேகம் கூடி
ஒழுகிடும் பனியின் துளிகள்
பாடிடும் பறவைக் கூட்டம்
பார்த்திடில் பர வசமே..

காலையில் மலரும் பூவில்
கள்ளுண்ணும் வண்டு தேனீ
பாலொடு தேன் கலந்த
பாடலால் மகிழ்வை யூட்டும்..

மனித இதயம் என்றும்
மகிழ்ந்து வாழ உலகில்
புனித இறைவன் தந்த
புதுமைகள் நிறைய வுண்டு..

அறிவிலா மாந்தர் கூட்டம்
அகம்மகிழ் வுறவே யென்று
தறிகெட்டு அலைவ துமே
தகுமாமோ பகுத் துணர்வீர்.

மணிக்கூ கவி
**செய்னுலாப்தீன் நஸீரா**
ஏறாவூர். இலங்கை.




### ஓட்டமாவடி சம்முன் அன்சார் எழுதிய

# கூலிக்காரன்

கவிதைத் தொகுப்பு

## ஒரு கண்ணோட்டம்

கூலிக்காரன் அன்சார். அட்டை படத்தில் காணப்பட்ட தலைப்பு 'சுள்' ளென்று நெஞ்சில் சிறு ஊசியாய்த் துளைக்க அங்கு காட்சிப் படமாக தளபாடம் சுமக்கும் மனிதன்... ஆம்.தலைப்பில் குறிப்பிடப்பட்ட கூலிக்காரன் இந்த சம்முன் அன்சார் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. என்றாலும் உடனடியாக உள்ளே புகுந்து 'கூலிக்காரன்' கவிதையினை உடனே படித்து விடும் பேராவலில் பக்கங்களைப் புரட்டுகின்றேன்.

பரதேசி போல உழைத்து
பல நாட்கள் ஓடினாலும்
பல்லிளித்தே நிற்க வேண்டும்
பண்ணை வீட்டுத் திண்ணையிலே...

கூலிக்காரன் நிலைமையைத் தத்ரூபமாக விளக்கும் இந்த வரிகள் நெஞ்சத்தை நெக்குருக வைக்கின்றது.

நாளும் பொழுதும் வேலை செய்து
நாடி நரம்பும் ஆடி அடங்கி
...................... .........
....... .......... .........
ஓடி உழைத்ததில் வலிகள் மிஞ்சும்
ஒரு நாள் கூலிகளின் நிலை இதுதான்...

கூலிக்காரன் கவிதை அவர்களின் அவல வாழ்க்கையைத் தத்ரூபமாக விளக்கி நிற்கின்றது. கல்வி கற்கும் வயதில் வறுமையில் சிக்கி.. ஆரம்பக் கல்வியையே முழுமையாகப் பெறாத ஓட்டமாவடி சம்மன் அன்சார் அவர்கள் கூலித் தொழிலில் சிக்குண்டாலும் அவரது தமிழறிவு சொந்த முயற்சியால் வளர்ந்து இன்று ஒரு கவிதை நூலை எம் கரங்களுக்குத் தந்திருக்கின்றார் என்றால் அது வியப்புக்குரியதே. அன்றாட தேவைக்காக அல்லும் பகலும் உழைத்து வாழும் இவர் ஒரு கவிதை நூலைப் படைக்கும் அளவிற்குத் திறமையும் பெற்றிருக்கின்றார் என்றால் அது இறைவனின் அருட்கொடை என்றுதான் கூற வேண்டும்.

இவரது கவிதை நூலுக்குள் நுழையும் போது கவிநுட்பம், கே.நாகேந்திரன் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் கவிஞர் கோவி தண்டாயுதபாணி அவர்களின் அணிந்துரையையும் தாண்டிச் செல்லும் போது "புதுமையா வாழ்க்கை" என்ற முதல் கவிதை

அம்மா அப்பா அண்ணன் தங்கை
சொந்தமென்று ஒன்று கூடி
திருநாள் பெருநாள் இன்ப சுகம்...

இன்றோ... பிறப்பு இறப்பு இன்பம் துன்பம் எல்லாவற்றையும் இணையத்தில் காணும் அவலத்தை விளக்குகின்றார்.

கட்டி அணைத்து அழுத நாம்
விட்டு விலகிப் போய் விட்டோம்..

அருமையான வரிகள்.

தண்ணீர் பஞ்சம் ஒழியவும்
நெஞ்சில் வஞ்சகம் அழியவும்
மனிதனில் மனிதத்தை தேடவும்
வறுமையை ஒழிக்கவும்
பொறாமையை உடைத்தெறியவும்
இன ஒற்றுமையைப் பேணவும்

என எல்லாவற்றுக்குமாக உண்ணாவிரதம் இருப்போம் என எமை அழைக்கிறது 'உண்ணாவிரதம்' கவிதை.

சுமார் 65 கவிதைகளை சுமந்து வந்த கூலிக்காரன் இயம்பிய கவிதைகளில் ஏராளமானவை சமூக சீர்கேடுகளையும் சமூக அவலங்களையும் விளம்பி நிற்கின் றன. கூலிக்காரன் உட்பட, விடிந்திடுமா பொழுது?, நாட்டு நடப்பு, கள்ளக் காதல், நம்பிக் கெட்டவன் நான், போதையின் பாதையில் போன்ற இன்னோரன்ன கவிதைகள் சமூக சீர்கேடுகளை எடுத்தியம் புகின்றன.

நாளும் பொழுதும் வேலை செய்து
நாடி நரம்பும் ஆடி அடங்கி
நாடியதை எண்ணிச் செல்ல
நாலு பணம் கையில் இல்லை.
(பக்கம் - 26)

ஊரில் தொழிலில்லை
கையில் பணமில்லை
உண்ண உணவில்லை
உறங்க முடியவில்லை
உலகில் அச்ச நிலை
உள்ளம் சரியில்லை
உழைக்கும் மக்களுக்கு
வழிகள் ஏதுமில்லை. (பக்கம் - 03)

நாகரீக வாழ்க்கையிலே
நாட்டம் வந்ததால்
நட்புக் கொண்டு
வாழ்ந்தவர்கள் காணவில்லிங்க.
தேவைக்கு மேல் செலவு செய்ய
ஆச கொண்டதால்
சுவையளித்த வாழ்க்கை எல்லாம்
கசந்து போச்சுங்க. (பக்கம் - 06)

கூட இருந்து குழி பறித்து
பேசிப் பழகி மோசம் செய்தான்
வாழ்வில் நுழைந்து வசனம் பேசி
வலியை கொடுத்து விலகி விட்டான்.
(பக்கம் - 35)

மதிப்புள்ள வாழ்க்கை
உன் கையில் இருக்க
மதுக் கோப்பை தூக்க
ஏன் துணிந்தாயோ
குறை என்று இங்கு
எதனைக் கண்டாயோ
குடும்பத்தில் என்ன
பிணக்கில் வீழ்ந்தாயோ... (பக்கம் - 50)

போன்ற கவிதைகளின் வரிகள் சமூகத்திற்கு எத்தனையோ பாடங்களைப் போதிக்க விளை கின்றன.

கல்விக்கானவாய்ப்புதவறிபோனதாலோ என்னவோ கல்வியின் சிறப்பும் இன்றைய கல்வியின் அவலமும் இவரது கருத்தை ஈர்த்துள்ளன. 'பாடசாலை' என்ற தலைப்பில்...

வித்யாலயத்தை கருவறையாக்கு
அறிவில். திரிசெய்து ஒளியேற்று

என்று கூறிக் கருவறையில் ஒளியேற்றி, கல்வியினை உருக்குலையாது வளர்த் தெடுக்க வாஞ்சையுடன் வழிகாட்டுகின் றது. அதேவேளை இலவசக் கல்வியானது ஏழை மாணாக்கரிடம் எவ்வாறு பணம் பிடுங்கும் பேயாக மாறி குடும்பங்களிடம் கொள்ளையடிக்கும் விந்தையினைத் தத் ரூபமாக விளக்கி நிற்கின்றது. தன்னுடைய கல்விக்கு எல்லையிட்ட வகுப்பறையின் அமைப்பினைப் 'பாழடைந்த வகுப்பறை' கவிதை சுட்டிக் காட்டுகின்றது. ஆளுக்கொரு நீதி காட்டும் கல்விக்கூடங்களில்

''கல்வியும் பணத்தோடு
இணைந்து கிடக்க.
ஏழைகள் கல்வி எதிலே இருக்கு?''

என்று 'ஏழைக்கு கல்வி எட்டிடுமா'
(பக்கம் - 44)



நூலாசிரியர்



கட்டுரையாளர்

கவிதை மூலம் கனவுகள் சுமந்த பறவை களாக மாணாக்கர்கள் அலையும் விதத் தினையும் வேள்வி செய்து கேள்வி எழுப்புகின்றார் அன்சார்.

மேலும் இவர் 'போனாலே வீணா கும் சமூகம்' கவிதையில் புத்தகப் பைக் குள்ளும் புகுந்தது போன் (கைப்பேசி) என்பதன் மூலம் கல்வியையும் சமூகத்தை யும் சீரழிக்கும் கைப்பேசி பற்றிப் பேசு கின்றார்.

| | |
|---|---|
| பெண்மையைப் போற்றுவோம் | (31) |
| மரங்களை நடுவோம் | (37) |
| தேனீக்கள் | (38) |
| எண்ணங்கள் உயர்வானால் | (39) |
| கரம் கொடுப்போம் | (46) |
| காலங்கள் மாறலாம் | (62) |
| புது விடியல் பிறக்கட்டும் | (65) |

போன்ற கவிதைகள் மூலம் சமூக சீர் திருத்தங்களையும் நல்லெண்ண ஊக்கு விப்புக் கருத்துக்களையும் முன்வைக்கத் தவறவில்லை.

இவ்வாறு பல்வேறுபட்ட கருத்துக் களை சுமந்து புதுக்கவிதைகளாகப் பரம்பி இருக்கும் இவரது கவிதைகளுள். பல இடங்களில் கிராமியக் கவிதைகள் சார்ந்ததாக வசன ஓட்டங்கள் அணுகிச் செல்கின்றமை இவரது கிராமிய வாழ்க்கை யின் வளைவு நெளிவுளை எமக்கு உணர்த்திச் செல்வதாக அமைந் துள்ளது. படிக்கும் பாமரனும் கூட யதார்த்தங் களையும் உட்கருத்துக்களையும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அத்தனையும் வியாபித் துள்ளன. எளிமையும் பணிவும் கொண்ட சம்முன் அன்சார் எழுதிய கவிதை நூல் என்பதனாலோ என்னவோ.. அத்தனை கவிதைகளையும் படித்துப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலை இந்நூல் ஏற்படுத்துகின்றது.

தனது மனதில் தைத்த சமூக சிந்தனைகளையும் சீர்திருத்த கருத்துக் களையும் கூலிக்காரன் மூலம். எமக்கு விவரித்த ஓட்டமாவடி சம்முன் அன்சார் அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள். இன்னும் பல நூல்களை தமிழ் கூறும் நல்லுலகுக்குப் படைத்தளிக்க வேண்டு கின்றேன்.

**கலாநிதி மணிக்கூ கவி ஹாஜியானி**
**செய்னுலாப்தீன் நஸீரா**
ஏறாவூர், இலங்கை.

## நல்லெண்ணம் :

நல்லெண்ணம் எண்ணார் -
நற்செயல் செய்யார் -
நல்லுணவு உண்ணார்-
நல்மருந்து அருந்தார் -
இந்நால்வரும் அகத்தாலும்
புறத்தாலும் நலமிழப்பர்-
நல்வழி வாழ்வோரே
நல்லோராவர் நாளும்.

**துரைராஜ்,**
ஆடுதுறை

## ஒவ்வொரு மாதிரி

நன்றியில்
மனிதரை விடவும்
மேலானதெனப்
பரிவோடு
வாலாட்டியபடி
குழையும்
நாயைப் பார்த்துச்
சொல்லுகிறார்
ஒருவர்.

குரைத்தபடி
பின் தொடரும்
நாயைத் தன்
பாதுகாப்பிற்குக்
கல்லெடுத்து வீசி
விரட்டியபடி
பெருமூச்செறிகிறார்
மற்றொருவர்.

வீட்டின்
பாதுகாப்பு கருதி
வாசலில் ஆளுயர
நாயைச் சங்கிலியால்
கட்டிவைத்து
பயமுறுத்துகிறார்
வேறொருவர்.

மடிமேலமர்த்திக்
கொஞ்சி விளையாடி
பாசத்தொடு முத்தமிட்டு
ரொட்டியும் பாலும்
கனிவாய்க் கொடுத்து
நாயைக் குழந்தையாய்ப்
பாவிக்கிறார்
இன்னொருவர்.

## வாஞ்சை

பேத்தியின் கால்கொலுசை
வாஞ்சையுடன்
தழுவிச் செல்கின்றன
கரையைத் தொடவந்த
அலைகள்.

## இயற்கை

பலமுறை
பார்த்திருக்கிறேன்.
அதற்குக் கணக்கில்லை
என்னிடத்தில்.
புத்தம் புதிதாய்
காட்சி தருகின்றது.
ஒவ்வொரு முறை
காணும் போதும்
இயற்கை.

**- பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம்

## பணம்

**உழைப்பென்னும் நான்கெழுத்துத் தாயின் சேயே!**
**உலகமெலா மொருகுடையில் ஆளும் நீயே**
**மழைத்துளிபோல் உயிர்நாடி யாகிப் போனாய்**
**மழலைகளாய்ச் சில்லறைக ளீன்று போட்டாய்**
**தழைத்தோங்கும் செல்வத்தின் ஆணி வேராய்த்**
**தான்மட்டும் அடையாளச் சின்ன மானாய்**
**பிழைப்போரும் உன்பின்னா லோட நாட்டம்**
**பிச்சையெடுப் போருமுன்றன் மீதே நோட்டம்**
**பொருளாதா ரப்போட்டி நீண்ட நாளாய்ப்**
**போர்களையும் தூண்டிவிடும் தூண்டு கோலாய்**
**இருளான நிலைமைக்கு மாக்கி விட்டாய்**
**இறைபக்தி எண்ணங்கள் போக்கி விட்டாய்**
**வருமானம் ஈட்டுதலை வெறியா யாக்கி**
**வறியோரைக் கொல்லுதலே குறியா யாக்கி**
**ஒருமான மில்லாத கூட்டம் சேர்த்தாய்**
**ஒழுக்கத்தைப் புதைத்திடவே செய்தாய் நீயே**
**விரும்பிப்போ னாலும்நீ எம்மை விட்டு**
**விலகித்தான் போகின்றாய்; விலகிப் போனால்**
**விரும்பித்தான் வருகின்றாய் உன்றன் மாய**
**வித்தைகளை எங்கிருந்து கற்றாய் நீயும்?**
**நிரம்பத்தான் ஆசையுடை உடுத்திக் கொண்டாய்**
**நிம்மதியை உளம்விட்டே எடுத்து விட்டாய்**
**வரம்பில்லாத் தேவைகளைக் காட்டு கின்றாய்**
**வங்கியின்பால் எங்களையும் ஓட்டு கின்றாய்**

**கவியன்பன் கலாம்**

# தைவாசல் திறக்கட்டும் ! தமிழ்வாழ்வுச் சிறக்கட்டும்!

## கவித்திலகம் வெற்றிப்பேரொளி

தைவாசல் திறக்கட்டும் தமிழ்வாழ்வு சிறக்கட்டும்
பொய்வாசல் திறப்போர்கள் புறமுதுகிட் டோடட்டும்!
நெய்வாசப் பொங்கலென நெஞ்சங்கள் மணக்கட்டும்
மைவாசல் விழிப்பெண்கள் மணவாசல் பூக்கட்டும்!

ஏருழவர் வேர்வையினில் பாருலகம் பசியாறி
ஊருலகம் சேர்ந்தொன்றாய் அவர்தொழிலை வாழ்த்தட்டும்!
காரிருளும் விலகட்டும்! கதிரவனும் உதிக்கட்டும்!
நேரிழையர் அடிமைநிலை நீங்கிநலம் விளையட்டும்!

'நீட்'டெனும் தேர்வதனை நெருப்பெடுத்தே எரிக்கட்டும்
நாட்டுத் தேர்வெல்லாம் நற்றமிழில் நடக்கட்டும்!
தீட்டுத் தமிழென்போர் தலையைக்கால் மிதிக்கட்டும்!
கோட்டையில் தமிழாட்சி கொலுவேறி நடத்தட்டும்!

பொன்வாசல் திறக்கட்டும் புதுவெளிச்சம் பிறக்கட்டும்
என்மக்கள் வாழ்வுற்ற துயர்நீங்கிச் சிரிக்கட்டும்!
தென்தமிழர் திருவாசல் தலைவாசல் திறக்கட்டும்
முன்சங்கக் காலத்தின் பொற்காலம் முழங்கட்டும்!

முத்துவேலர் கருணாநிதி வித்தான ஸ்டாலினவர்
எத்திசையும் வியக்கதரும் பொற்கால நல்லாட்சி
முத்திரையைப் பதிக்கட்டும்! முழுவெற்றி காணட்டும்
முத்தமிழர் வாழ்வதுவும் முரசொலித்து ஓங்கட்டும்!

புத்தாண்டு தமிழர்க்குத் தைமுதல்நாள் ஆகட்டும்
சித்திரையாம் பொய்க்கதைகள் போய்க்குப்பை சேரட்டும்!
ஒத்ததொரு திருக்குறளே உலகமறை யாகட்டும்
எத்திக்கும் எந்தமிழர் கொடியேறிப் பறக்கட்டும்

# அய்யனார் ஈடாடியின் கவிதைகள்

## அம்மையின் சாயல்

பொங்கி வழியும் உலைநீரில்
குமிழ்கள் தாங்கிய
கொடி அடுப்பில்
அம்மையின் ஓடிந்த கையோடு
சொடுக்கி போடப்பட்ட
விரல்களின் சுண்ணாம்புக்கோலங்கள்
கலைந்து போகையில்
பதறித் தவிக்கிறது
கனத்த இதயம்
சிறிது நாழிகை.
விட்டத்தை அண்ணார்ந்து
பார்க்கையில்
அம்மையின் சாயலைப்போன்ற
ஒட்டடைகள் கையசைத்து
தேற்றுகிறது
இளஞ்சுடர் ரத்த நாளங்களை…

## மனிதம்

படித்துறையில்
சுருண்ட எலிக்குஞ்சாய்
மூத்திரக் கொச்சையுடன்
தொட்டலையும் ஈரமார்பின்
சிதறிய வடுக்களோடு
யாருமற்ற பிணமாய்
அலைக்கழியுமவளுக்கு
அகலியேந்தும் கைகள்
ஆடை தறித்தும்
மல்லிகாபி காரன்
ஆறவிட்ட பசியில்
மலர்கிறது மனிதம்
சன்னதி வீதியில்.

## பாகுபாடு

மரப்பூங்காவில்
பழுத்த கனிகள்
கீழ் உதிரும்
வெடித்த நிலப்பரப்பில்
கல்லறையில் துயிலும்
ஆன்மாக்கள்
தத்தமது
கண்ணீர்த் துளிகளால்
சிதைவுறுகின்றன

அடையிலிருந்து கிளம்பிய
மொய்க்கும் தேனீக்கள்
மகரந்தங்கள் அப்பிய பூக்களை
புணர்ந்து விளையாடுவது போல
முத்தங்களில் விளையாடும்
இரட்டைக் காதலர்கள்.

தேநீர்க் கடைவாசலில்
புகையிலை மண்டலத்தின்
இதற்கிடையில் சூழப்பட்ட
கொடுஞ்சொற்சுனையின்
ஊற்றெடுத்தோடும்
கொடிதிலும் கொடிய நாவில்
வன்மப் புரையோடுகிறது
இனப்பாகுபாடு.

**ப.அ.ஈ.ஈ.அய்யனார்**

# மாண்புறும் கல்வி

பூலோக வாழ்வினிலே
புகழ்பெற்று சிறந்திடவே
இருளகற்றும் கதிரவனாய்
ஒளியேற்றும் கல்வியே

மாண்புறும் பண்புகளால்
மானிடம் செழித்து
புரைபோக்கி வடுமறைத்து
கரைசேர்க்கும் கல்வியே

நாடும் உயர்ந்திட
நாமும் ஒளிர்ந்திட
கரும்பாய் கல்வியை
அரும்பிலே கற்றிடனும்

வித்துக்களை விருட்சமாக்கும்
வித்தகத்தினை அருளாக்கி
சொத்துக்களாய் சேர்த்திடுவோம்
வளரும் தலைமுறைக்கு

பிள்ளையது பருவத்தினிலே
இல்லையென்று மறுக்காது
எல்லையில்லா கல்வியை
நிலையாக கொடுத்திடுவோம்

ஜாதி, மத பேதமையெல்லாம்
மேதினியில் மாய்த்திடவே
போதிமரமாய் கல்வியை
போதிப்போம் உலகில்

பருவ வயதினிலே
பக்குவமாய் பயின்றிடனும்
பகுத்தறிவை தீட்டிடவே
எழுத்தறிவு பெற்றிடனும்

சிந்தை இழக்கும்
சிற்றின்ப போதையை
எந்தை சமூகம்
நிந்தனை செய்திடவே

பேரூலக வாழ்விற்கு
பெரும் வரமான
பேரின்ப கல்வியே
வாலிப பருவத்திலே

சீர்தூக்கி பெற்றிடனும்
சிகரங்கள் உயர்ந்திடவே
அண்டங்களில் வழிகாட்டும்
அகரங்கள் தொடர்ந்திடனும்

மட்டில்லா கல்வியால்
மகுடங்கள் சூடிடவே
இளமையில் கல்வியை
இன்றியமையாது பெற்றிடனும்

**ஏரூர் ALM.றமீஸ்**
ஏறாவூர், இலங்கை

## ஹைக்கூ

●
இனிய சங்கீதம்
ஒலித்துக் கொண்டே இருக்கும்
சொட்டும் மழை நீர்

●
வேலியில் பச்சோந்தி
அடிக்கடி நிறம் மாறும்
அந்திவானம்

●
இலை உதிர்த்த மரம்
சிலந்தி வலையில் சிக்கி நகரும்
பௌர்ணமி நிலவு

**வஃபீரா வஃபி**

## வாய்ப்புகள்

வாய்ப்புகள் வருவது
வாழ்விற்கு வளமே
விடியல் பிறப்பதோ
வாய்ப்புகள் வந்த பின்னே

திறமையை வளர்த்திட
வாய்ப்புகள் வரமே
வெற்றியைப் பெற்றிட
வாய்ப்புகள் வழி தருமே

வாய்ப்புகள் வரும் வரை
காத்திருப்பது தவறில்லை
அடுத்தவர் வாய்ப்புகளைத்
தட்டிப்பறிப்பது முறையில்லை

வாய்ப்புகளைப் பெற்றிட
போராடு முடியும் வரை
வாய்ப்புகளைப் பெற்றபின்
வசந்தம் காணு வாழும் வரை

வாய்ப்புகள் கிடைப்பது
சிலருக்குப் பரிசு
வாய்ப்புகளை உருவாக்கியவர்
உலகிற்கே பரிசு

## கடந்த ஞாபகங்கள்!

ஒற்றுமையாய்க் கல்லூரியில்
ஒன்றிணைந்த ஞாபகம்
ஒன்றாய் கைகோர்த்து
நடை போட்ட ஞாபகம்
எதிர் எதிரே சிலையாய் நின்று
கண்கள் பேசிய ஞாபகம்
அளவிடாத தூரம் நின்று
இதழ்கள் சிரித்த ஞாபகம்
காகிதங்கள் கவிதை சுமந்து
தூது வந்த ஞாபகம்
பண்டமாற்ற பரிமாறலில்
அன்பு பகிர்ந்த ஞாபகம்
சண்டையிட்டு மீண்டும் வந்து
சமாதானமான ஞாபகம்
கார் இருள் சூழ்ந்த இரவில்
கண்விழித்த ஞாபகம்
பக்கம் பக்கமாய் கடிதம் எழுதி
பதுக்கி தந்த ஞாபகம்
தூரம் நின்று கூவி அழைத்து
குதூகளித்த ஞாபகம்
ஞாபகங்கள் நிலையாக
நிஜங்களோ கனவாக
துடிக்கிறேன் தனியாக
விடியலே வருவாயாக

அகீலா ஜவுபர்

# கவிதைகள்

## பதில் உண்டோ என் மனுவிற்கு!

கனவிலே உன் முகம் மறைவதில்லை
விடியலில் உன் முகம்
நிஜத்தில் இல்லை

ஏக்கங்கள் யாவும் என்னை
ஏங்கிட செய்யும் வேலை
உண்மைகள் யாதும் இங்கு
உயிர்பெற மறுப்பது உண்மை

நீ நான் என்ற விதி மாறி
நாம் என்றே வாழ்ந்தோம்
நாம் என்ற வழிதவறி
நீ நான் என மீண்டோம்

இது பிரிவா இல்லை தொலைவா
உன்னிடம் கேட்கிறேன்
இது முடிவா இல்லை முதலா
மீண்டிட நினைக்கிறேன்

சிறு கோபம் சிறு ஏக்கம்
வலி தந்து வடுவானது அன்று
யாவையும் நான் மறந்து
உனதானேன் இன்று
எனதாக நீ மாற
என்னை ஏற்றிடுவாயா!

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம், இலங்கை.

## அச்சம் துற!

வாழ்விலே தோல்வி
ஜெயிப்பதே கேள்வி
இந்நிலை தாண்டா
நெஞ்சம் உண்டா!

துக்கங்கள் சிகரமாய்
ஏக்கங்கள் பகரமாய்
முளைக்காத பருவம்
வாழ்வில் உண்டா!


நெஞ்சிலே காயம்
கண்ணிலே நீர்க்கோலம்
இலையோட இதயம்
எங்கேனும் உண்டா!

பிரிவுகள் கோடி
சேர்வுகள் தேடி
அழையா உறவுகள்
அவனியில் உண்டா!

சதிகாரர் வலையிலே
சற்றும் சறுக்காது
சரித்திரம் படைத்த
படைப்பாளி உண்டா!

அசையும் உலகில்
அச்சப்பட்டால் நீ
அஞ்சி ஒடுங்கி
அழியத்தான் வேண்டும்!

அச்சம் துறந்து
துச்சம் திறந்து
உச்சம் பறக்க
எச்சம் இடு!



# பிஞ்சுக் கைகளில்

பிஞ்சுக் கைகளில்
பிடிக்குது தீக்குச்சி
நஞ்சான வாழ்வை
நன்றாக வாழ்ந்திட
அஞ்சி நடுங்கி
அனாதையாக இல்லாமல்
பஞ்சாய்ப் பறக்கும்
பசியைப் போக்கிட

பள்ளி செல்லும்
பருவத்தில் பாலகன்
அள்ளிக் கொஞ்சி
அரவணைத்து நடத்தாமல்
துள்ளி விளையாடாமல்
துரத்தும் வறுமை
தள்ளுதே வேலைக்கு
தளராமல் உழைக்க

குச்சியை அடுக்கினால்
குடும்பம் வாழுமே
எச்சில் இலையை
எடுக்காமல் வாழ்க்கை
பச்சிளம் குழந்தையை
பரிதாபமாகப் பார்க்காமல்
மிச்சம் வாழ்வை
மிகுந்த நிம்மதியுடன்

மானத்தோடு நடத்திட
மரியாதையோடு நகர்த்திட
வானமும் வசப்படும்
வசந்தம் வீசிடும்
தானமும் வாங்காமல்
தன்கையே தனக்கென்று
ஏனமும் ஏந்தாமல்
எடுக்குதே தீப்பெட்டியை

அடுக்குதே அழகாய்
அம்மாவின் உதவியுடன்
படுக்குதே ஏக்கத்துடன்
படிக்கும் மாணவர்களை
தடுக்குதே வயிற்றுப்பசி
தவிக்குதே மனதோ
எடுக்க ஆசை
எழிலாய் புத்தகத்தையே

பணமும் இல்லையே
படிக்கும் வசதிக்கு
கணமும் சிந்தனை
கானல் நீராய்
பிணமாக வாழாமல்
பிறந்ததால் தன்னம்பிக்கை
கொண்டு தளராமல்
வாழ்வை நகட்டுதே

**சு. யோ. முத்தமிழ்ச்செல்வி**
நத்தம்



# படுக்கை

## அ. முத்துவிஜயன்

அப்பா செத்து பத்து நாளாச்சு காரியமும் முடிச்சாச்சு. தீட்டுக்கழிக்கனும்னு சொல்லி வீட்டுல கெடந்த ஆகாதது போகாதது எல்லாத்தையும் தேடிப்புடிச்சி கழிப்பு கழிக்கப் போறப்ப அப்பா படுத்திருந்த கட்டில்ல அவர்சாகும் போது இருந்த பெட்ட என்ன பண்ணுறதுன்னு பேச்சு வந்துச்சு.

அப்ப அம்மா சொல்லிச்சி "அது சும்மா சாத்திரத்துக்கு தண்ணியத் தெளிச்சி காயவைச்சி உள்ளாற எடுத்து வைச்சிக்கலாம் வெளியே தூக்கிப் போட்டுறவேணாம்" னு

ஆனா அதுக்கு மருமகளுக ஒத்துக்கல, ஏன்னா "ஏற்கனவே அது இத்துப்போய்க்கெடக்கு அவரு படுக்கையில கெடந்தப்ப ஒன்னுக்கும் ரெண்டுக்கும் போய் அது வீணாப் போய்டுச்சு பேசாமா அதைத்தூக்கி எறிஞ்சிட்டு புதுசா ஒலகம்பஞ்சுல பெட் வாங்கிப் போட்டுறலாம்"னு சொன்னாக அப்ப அம்மா சொல்லிச்சி...

"அந்த பெட் அப்பா ஆசையா 40 வருசத்துக்கு முன்னாடி வாங்குனது அப்ப மொத மொதல்லா கெடைச்ச போனஸ் பணத்துல ஆசையா வாங்குனது, அது பலதடவ பெட் செய்யிற வருக்கிட்ட போய் துணிமாத்தி கொஞ்சம் பஞ்சு சேத்து ரெடி பண்ணிக் கொண்டாந்துருவாரு, பலதடவ அது மாதிரி ரெடிபண்ணிருக்காரு இருக்குற கொஞ்சநாள் அவரு ஞாவகமா அது இருக்கட்டும் அதுல படுத்தா எனக்கும் நிம்மதி அவர் இருக்குறமாதிரி இருக்கும்"னு சொல்லிப்பாத்தாங்க

ஆனா அது எடுபடல ஏன்னா மருமகளுக அந்தமரக்கட்டில எடுத்து அவங்க படுத்துக்கலாம்னு பிளான் போட்டாங்க. அதுனால சொன்னாங்க "என்ன அத்த அது மோசமா இருக்கு, அதுவும் போக அவர் ராத்திரி செத்து கெடந்து காலையிலதான் நாம பாத்தோம் அதுக்குள்ள அவர் ஒடம்புல ஒடம்பு டி கம்போஸ் கிருமிகள் எல்லாம் நீரோட பெட்டுல வழிஞ்சிருச்சு அதுவும் போக பலதடவ அவர் கடைசி காலத்துல பெட்டுலயே தான் எல்லாம் நடந்துச்சு என்னாதான் பாலித்தீன் விரிச்சிப் படுக்கப்போட்டிருந்தாலும் அதெல்லாம் முழுசா பெட்ட பாதுகாத்திருக்காது நாத்தம் வேற அடிக்குது தூக்கிப்போட்டுட்டு வேற புத்தம் புதுசா வாங்கிடலாம் " நு பிடிவாதம் புடிச்சாங்க

ஆனா அம்மா அதை ஏத்துக்கல, "அவரோட நான் வாழ்ந்த வாழ்க்கை என்னோட மகனுக சிறுசில இருந்து உருண்டு பொறண்டு வளந்தது எல்லாம் அதிலதான். தொட்டில இவனுக படுக்க மாட்டானுக, எல்லாம் பெட்டுலதான் தூங்குவானுக.அதுகுடுமபத்துலஒருஅங்கம் மாதிரி, வேணுமானா அவர் செஞ்சமாதிரி அதை பெட் ரிப்பேர் பண்ணுறவங்ககிட்ட குடுத்து சரி பண்ணிப்போட்டுக்கலாம்"னு சொன்னவன்ன அர மனசா ஒத்துக்கிட்டு பெட் ரிப்பேர் பண்ணுறவர் அவங்க

ஏரியாவில எப்பையும் பண்ணுறவர் கிட்டப் பேசினாங்க.

ஆனா அவரும் மருமாளுக சொன்ன தைத்தான் சொன்னாரு. "தூக்கி வெளியே எறிஞ்சிட்டு புதுசா வாங்கிப் போடுங்க எத்தன நாள் தான் நானும் அதை ரிப்பேர் பண்ணுறதுன்னு" சொல்லிட்டாரு.

வேறவழியில்லாம பெட்டத்தூக்கி எறியிறதுன்னு முடிவு பண்ணித் தூக்கி எறிஞ்சாச்சு. குப்பையில போட்டாச்சு. அதே கையோட பெட்டு தைக்கிறவர் கிட்ட புத்தம் புதுசா கட்டில் சைசுக்கு அளவெடுத்து செய்யச்சொல்லியாச்சு, அவரும் மூணு நாள் டைம் கேட்டாரு. அதைத்தயார் செஞ்சு குடுக்க. எத்தனைகிலோ பஞ்சு வேணுமின்னு கேட்டு அத்தன கிலோவுக்கு காசு கணக்குப் பண்ணி துணி தையக்கூலி எல்லாம் சேத்து ஒரு ரேட் சொன்னாரு, அதுக்கு அட்வான்ஸ் கொடுத்தாச்சு.

ஆனா அவர் சொன்ன மூணுநாள் முடிஞ்சும் அவர் பெட் குடுக்கல. மழை வந்துருச்சு அதுனால பஞ்சக்காயப்போட முடியல கொஞ்சம் லேட்டாகும் பொறுத்துக் கோங்க குடுத்துரு றேன்னு சொன்னாரு. வேற என்ன செய்ய காத்திருக்க வேண்டி யதாப் போச்சு.

இதுக்கு நடுவில காரியம் எல்லாம் முடிச்சவன்ன அப்பா இருந்த கட்டிலத் தூக்கி கழுவிக்கிழுவி பெயிண்ட் அடிக்கிற வரைக்கூப்புட்டு பெயிண்ட் அடிச்சி புதுசு மாதிரி ஆக்கி அத மூத்த மருமக எடுத்துக்கிட்டா, அது பத்தி அம்மா ஒன்னும் சொல்லல. நான் பாயவிரிச்சே படுத்துக்கிறேன்னு சொல்லீட்டாங்க.

சொன்னமாதிரி பெட் தயாரிக்கிறவர் புத்தம் புதுசா பெட்டக்கொண்டாந்து எறக்கு னாரு. பழைசவிட இது பெருசா இருந்துச்சு. படுத்தா நல்லா சொகமா இருந்துச்சு. குடுத்துட்டு பேசுன காச விட கொஞ்சம் பஞ்சு கூடிப்போச்சு, வேணுமின்னா வெயிட் போட்டுக் காட்டு றேன்னு வெயிட் போட்டுக் காட்டி அதுக்குண்டான காசையும் வாங்கிட்டுப் போயிட்டாரு.

அப்ப மருமகளுக "அத்த வேணு மின்னா நீங்க பெட்டுல படுத்துக்கோங்க அதான் புதுசா வந்திரிச்சில்ல"னு சொன்னாக.

அப்ப அம்மா சொல்லிடுச்சு வேணாம் நீங்களே வைச்சிக்கோங்க அவர் வாங்கிக்குடுத்த ஜமுக்காளம் இருக்கு அதவிரிச்சிப் படுத்துக்கிறேன்னு சொல்லீட்டாங்க.

இதுக்கு நடுவில அப்பா ரூம் சுத்தப்படுத்தயில அவர் ஒரு கவர் வைச்சிட்டுப் போயிருந்தாரு. அதைக் கொண்டாந்து எல்லார் முன்னிலையிலும் படிச்சப்ப அதுல அவர் எழுதியிருந்த விசயத்தப்பாத்து எல்லாருக்கும் மூச்சு நின்னு போச்சு. அது என்னான்னா "அவர் தன்னோட மனைவிக்குக் கூடத் தெரியாம வைச்சிருந்த ஒரு லட்ச்சத்து 70 ஆயிரம் ரூவா அந்தப்பெட்டுக்குள்ள பிளாஸ்டிக் கவர்ல போட்டு வைச்சிருக்குற தாகவும் அதை தனக்குப்பின்னால் அம்மாவிடம் ஒரு லட்சமும் மீதிய பேரப்பிள்ளைகளுக்கு எதுனாச்சும் வாங்கிக்கொடுக்கவும்"னு எழுதியிருந்துச்சு.

அதைப்படிச்சா மூச்சு நிக்காம என்னா செய்யும் அம்புட்டுக்காசையும் கொண்டுபோய் குப்பத்தொட்டில போட் டுட்டமேன்னு வயிறு கலங்கிப்போச்சு. இப்ப அம்மா சொன்னாங்கா "அதான் நான் தலையால அடிச்சிக்கிட்டேன் எவ கேட்டான்னு இப்ப அம்புட்டும் போச்சு "நு கோவமா சொன்னாங்க

அப்ப மகன் சொன்னான் இருங்க எதுக்கும் ஒரு முயற்ச்சி பண்ணுவோம் விசாரிப்போம்னு சொல்லிட்டு கேட்டான் "பெட்ட எங்க கொண்டுபோய் போட் டீங்க"ன்னு கேட்டான் அதுக்கு மரு மகளுக சொன்னாக நம்ம தெரு மொனையில இருக்குற குப்பத் தொட்டில

தான் அதைத்தான் கார்ப்பொரேசன் காரன் காலையில வந்து அள்ளிட்டுப் போயிருப்பானேன்னு பொலம்புனாக.

சரி பார்ப்போம்னு சொல்லிட்டு மறுநாள் கார்ப்பரேசன் லாரி வார டைமுல காத்திருந்து அவங்ககிட்ட கேட்டான் மகன்காரன்," இங்க எடுக்குற குப்பைய எங்க கொண்டுபோய் போடுவீங்க" னு

அதுக்கு அவங்க சொன்னாங்க அது எல்லாம் ஊருக்கு வெளியே இருக்குற பெரிய குப்பமேட்டுலதான் போடுவோம் ஏன் கேக்குறீங்கனு " கேட்டாங்க.

அப்ப மகன் சொன்னான் அப்பா தவறிட்டாரு அவரோட பெட்ட இந்தக்குப்ப தொட்டில போட்டோம் ஆனா அப்புறம்தான் தெரிஞ்சது அதுக்குள்ள முக்கியமான டாக்குமெண்ட் இருக்குன்னு அதான் தேடுறோம் "னு.

அப்ப அவங்க சொன்னாங்க ஒரு விசயம் தெரியுமா இங்க கொட்டுற எல்லாக்குப்பையும் அங்க போகாது நாங்க வாரதுக்குள்ள நைட்டுல பலபேர் அதை கௌறிப்பாப்பாங்க. ஒரு கும்பல் பிளாஸ்டிக் ரீ யூஸ் பண்ணப் பொறுக்குவாங்க. இன்னும் செலபேர் குப்பையில தெரியாம வார பொருள்களுக்காகத்தேடு வாங்க. நீங்க சொன்ன பெட் மாதிரி பொருள்கள் எல்லாம் நைட்டோட நைட்டா எடுத்துட்டுப்போய் பெட் தயார் பண்ணுறவங்ககிட்டக்கொடுத்து ருவாங்க.எல்லாரும்அதைவாங்கமாட்டாங்க. ஆனா சில பேர் அதை வாங்கி பஞ்ச மாத்திரம் எடுத்து பிரிச்சி கண்டிசன் பண்ணி புதுப்பஞ்சோட சேத்துருவாங்க, அது குப்ப மேட்டுக்குப் போகாதுன்னு" சொன்னவன்ன ஆடிப்போயிட்டான் மகன் காரன்.

இனிமே அதைத்தேட முடியா துன்னு முடிவு பண்ணிட்டு வீட்டுக்கு வந்து விசயத்தைச்சொன்னான். இப்புடிப் பண்ணுவாறா மனுசன் னு எல்லாரும் அவரைத்திட்டுனாங்க

அதைப்பாத்துக்கிட்டு இருந்த அம்மா ஒன்னும் சொல்லல. ஏன்னா அவர் சாகுறதுக்கு முன்னாடி தன்கிட்ட அந்தப் பணவிசயத்தைச் சொன்னதும் அதை எடுத்துப்பத்திரப் படுத்தியதையும். பெட்டத்தூக்கிப்போடுற முடிவுக்கு வந்த வன்ன வழக்கமா பெட்டு செய்யிறவர் கிட்ட கெஞ்சி அந்தப்பஞ்சயே எடுத்துப் புதுபெட்டு செஞ்சிட்டு வந்ததையும் நெனச்சுப்பாத்தாங்க.

வீட்டுல எல்லாரும் வெளியே போயிருந்தப்ப அம்மா அப்பா போட்டா முன்னாடி கண்ணீர் வடிச்சிட்டு சொன் னாங்க" நீங்க சொன்னதுதான் உண்மை உங்களுக்கு அப்புறம் என் சொல்லை யாரும் கேக்கமாட்டாங்க. வீணா சண்டை போடாதே ஒனக்கென பணத்த வைச்சிக்க. நீ நெனைக்கிறத நீயாவே செய்.னு சொன்னீங்க அதான் இன்னிக்கி நடந்திருக்கு." ஏன் என்ன வீட்டுப்போனீங் கன்னு அழுதுகிட்டே அந்தபெட்டுல படுத்தப்ப அவகண்ணீர் அந்தபெட்ட நனைச்சிச்சி அதுல இருந்து வந்த வாசம் அவரோடதா இருந்துச்சு அவளால கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியல.

## ஜெயராஜ்... ஹைக்கூ

**தாய்மொழி :**

தாய்மொழி செந்தமிழ்த்
தேனிருக்க ஏனிங்கு -
வாய்வழி பேசிட
நமக்கு வேற்றுமொழி-
நோய்மொழி தன்னை
நுனி நாக்கால் பேசாமல்
தாய்மொழியாம் இன்பத்தமிழ்
பேசிடு வாய்வழியாய்.

**வளர்ச்சி** :

வளர்ச்சி என்பது
வாழ்வின் உச்சக்கட்டம் -
தளர்ச்சி என்பது
தாழ்வின் உச்சக்கட்டம் -
வளர்ச்சியோ தளர்ச்சியோ
வாழும்வரை போராடுவோம் -
வீண்முயற்சி என்றாலும்
விடாமுயற்சி ஆக்கிடுவோம்.

# சிறுவர்கள் சங்கமம்



## ஓய்தல் ஒழி

**சு. பிரவந்திகா**
*சென்னை*

நாள்தோறும் சீக்கிரமே எழுந்து, காலைக்கடன் முடித்து, உடற் பயிற்சிகள் செய்து, பள்ளி செல்லும் சிவா... மாலையில் பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்தவுடன் நண்பர்களுடன் விளையாடுவது, வீட்டுப் பாடம் செய்வது, வீட்டு வேலைகளில் உதவுவது என்று சுறுசுறுப்பாக இருந்த சிவா ஏனோ சில காலமாகவே சோம்பலாகக் காணப்பட்டான்.

நாள்தோறும் தாமதமாக எழுந்து முகம் கழுவியும் கழுவாமலும் இணையவழி வகுப்பில் உட்கார்வது, பாடங்களைச் சரியாகக் கவனிக்காமல், சரியாக சாப்பிடா மல் இருப்பது, நீண்ட நேரம் படுத்துக் கொண்டே தொலைக்காட்சி பார்ப்பது, போனில் விளையாடுவது என்று மாறி விட்டான்.

சிவாவின் இந்த குணம் அவனது அம்மா, அப்பாவிற்கு கவலை அளித்தது. அவனிடம் பலமுறை எடுத்துக் கூறியும் சிவா தன்னை மாற்றிக் கொள்ளவில்லை.

ஒரு நாள் மாலை “வா சிவா, அருவியில் குளித்து வரலாம்” என்றார் அப்பா.

“நான் வரலை அப்பா, நீங்க போயிட்டு வாங்க” என்றான் சிவா.

“அப்பா கூப்பிடுறாங்கல, போயிட்டு வா” அம்மா சொன்னார்கள்.

“ஏன்மா இப்படி?” சிணுங்கிக் கொண்டே அப்பாவுடன் கிளம்பிச் சென்றான் சிவா.

சிவாவோட ஊரு மரங்கள், செடிகள், பூக்கள்னு நிறைந்து பச்சைப் பசேல்னு பார்க்க அவ்வளவு அழகா இருக்கும். அதை வேடிக்கை பாத்துக்கிட்டு, விளையாடிக்கிட்டே சிவாவும் அவங்க அப்பாவும் நடந்து போனாங்க.

வழியில ஒரு பெரிய எறும்பு புற்று இருந்தது. அங்கு நிறைய எறும்புகள் சுறுசுறுப்பா போவதும், வருவதுமாய் இருந்தன.

“அந்த எறும்புகளைப் பார்த்தியா சிவா? ஒரு நிமிஷம் கூட நிற்காமல் இங்கே அங்கே அலைந்து உணவு எங்கே இருக்குனு கண்டுபிடிச்சு... அதை

எடுத்துட்டு வந்து இங்கே சேமித்து வைக்கிறாங்க... என்ன ஒரு சுறுசுறுப்பு பார்த்தியா'' என்றார் அப்பா.

''ஆமாங்க அப்பா, பார்த்தேன்... இந்த எறும்புகள் ஏன் இப்படி தேவைக்கு மீறி உணவு சேகரித்து வைக்கிறாங்க? எனக்கு புரியவே இல்ல... அந்த வேளைக்கு சாப்பிடும் அளவுக்கு மட்டும் உணவு தேடினா போதாதா அப்பா... பிறகு நல்லா ஓய்வெடுக்கலாமே'' என்றான் சிவா.

''நீ சொல்ற மாதிரி ஓய்வெடுத்தா மழைக்காலத்தில் எறும்புகள் சாப்பாட்டுக்கு என்ன செய்வாங்க? ரொம்ப சிரமப்படுவாங்க இல்லையா... அதான் தங்களோட தேவைக்காக முன்னெச்சரிக்கையா சேமிச்சு வைக்கிறாங்க'' என்றார் அப்பா.

மேலும் ''சோம்பலா இருந்தால் நமது உடலும், மனசும் அதுக்கு பழகியும். பிறகு நம்ம தேவைகளுக்கான வேலைகளையே நம்மால செய்ய முடியாத சிரமப்படுவோம்''

''நீ கூட இந்த கொரானாக் காலத்தில இணையவழி வகுப்பு என்பதால தாமதமா எழுந்திருக்கிறாய்''

''வீட்டுக்கு வெளியே அவ்வளவாக போக முடியாத காரணத்தால எப்பப் பாரு போன், தொலைக்காட்சி னு பொழுதைக் கழிக்கிறாய்''

''உன் வழக்கமான பழக்கங்கள், தேவைகளைக் கூட உன்னால் செய்ய முடியலையே... அதுபோல எறும்புகளும் சோம்பித் திரிந்தால் என்னாவது?'' என்றார் அப்பா.

சிறிது நேரம் எறும்புப் புற்றையே உற்றுப் பார்த்த சிவா, அப்பாவுடன் அருவியில் குளித்து வீடு திரும்பும் வரை மிகவும் அமைதியாகவே இருந்தான்.

வந்ததும் கலைந்து கிடந்த புத்தகங்களை அடுக்கி வைத்த சிவாவைக் கண்டு அவனது அப்பாவும், அம்மாவும் மகிழ்ந்தார்கள்.

''நான் இனி ஓய்ந்து இருக்க மாட்டேன்'' என்றாவாரே துள்ளிச் சிரித்தான் சிவா.

# குழந்தை


**யாழி பிரகாஷ்**
ஓசூர்


குழந்தை
கடவுளின் விந்தை!
அதன் சிரிப்பிலோ
கண்டேன் கடவுளை!
மழலையில்
மறந்தேன் கவலை!
குறும்பிலே பார்த்தேன்
இறைவனின் மாயை!!
கள்ளங் கபடமில்லா உள்ளம்
இறைவன் குடியிருக்கும் இல்லம்!!
கண்முன்னே தெரியும் தெய்வம்!
நம்மை அடையாளம் காட்டும் உருவம்!!
நம் துன்பத்தைப் போக்கும் தங்கம்!
குழந்தையால் நாம்
பெறுவோம் இன்பம்!!

# நான் பரிசளித்த செம்பருத்தி

Background Design by Sana M

**செ.ஸ்ரீலேகா**

ஆறாம் வகுப்பு
அரசு உயர்நிலைப் பள்ளி
திருச்சி - 12



**வை**ஜயந்திமாலா என்ற ஒரு அழகிய சிறுமி அவரது கிராமத்தில் ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தாள். அவளை அவளது தோழிகள் ஜெயந்தி என்று அழைப்பார்கள். ஜெயந்தி தினமும் காலையில் பள்ளிக்கூடத்திற்குச் சரியான நேரத்திற்கு செல்வாள்.அவள் ஒரு அழகிய பெண்ணும் நற்குண முள்ள பெண்ணுமாவாள்.

எப்பொழுதும் போல பள்ளிக்குச் சென்றால் ஜெயந்தி. அந்த ஆசிரியர் வழக்கம்போல பாடமும் நடத்தினார். “இன்று நாம் ஒரு பூவைப் பற்றி பார்க்கப் போறோம் சரியா மாணவர்களே” என்று கூறினார்கள்.

''என்ன பூ ஆசிரியரே... நாங்கள் ஆவலாய் இருக்கிறோம்'' என்று ஜெயந்தி கூறினாள்.

''சொல்கிறேன்... சொல்கிறேன், என்ன அவசரம். இன்று செம்பருத்திப் பூவைப் பற்றிதான் பார்க்கப் போகிறோம்''.

அன்று செம்பருத்திப் பற்றி ஆசிரியர் விரிவாகப் பாடம் நடத்துவதை ஜெயந்தி மிகவும் நன்றாகக் கவனித்தாள்.

அன்று வகுப்பு முடிந்த பிறகு தான் யோசனை வந்தது 'இன்னும் சிறிது நாட்களில் நமக்குப் பிறந்தநாள்' என்று யோசித்துக் கொண்டே வீட்டுக்குச் சென் றாள். செம்பருத்தி பற்றி இன்று ஆசிரியர் நடத்திய பாடத்தைப் பற்றி யோசித்துக் கொண்டே போன ஜெயந்தி, தனது யோசனையை அம்மாவிடமும் கூறினாள்.

''அம்மா செம்பருத்திப் பூவில் நிறைய நன்மைகள் உள்ளது என்று எங்கள் ஆசிரியர் இன்று பாடம் நடத்தினார் அம்மா'' என்றாள்.

''அதற்கு என்ன?'' என்று அம்மா கேட்டவுடன் ஜெயந்தி பேசத் தொடங்கி னாள். 'அம்மா எனக்கு ஒரு ஆசை தெரியுமா?''

''என்ன ஆசை ஜெயந்தி?'' என்று அம்மா கேட்க அதற்கு ஜெயந்தி ''எனக்கு வரும் பிறந்தநாளில் செம்பருத்திப் பூச் செடிகளை பரிசளிக்கலாம் என்று யோசனை அம்மா''.

''நீ நினைத்தது போலவே செம் பருத்திச் செடிகளை வழங்கலாம். என்ன மகிழ்ச்சி தானே!'' என்று அம்மா கேட்ட வுடன் ஒரு சிறிய புன்னகையுடன் மகிழ்ந்தாள்.

நினைத்தது போலவே தனது அம்மா விடம் சொல்லி அவளது பிறந்த நாள் அன்று அனைத்துப் பள்ளி மாணவ, மாணவி களுக்கும் பரிசளித்தாள். அனைவரும் எதற்கு செம்பருத்தி பூச்செடிகளை கொடுக்கிறாள் என்று வியப்பில் ஆழ்ந்தனர்.

''நாம் அனைவரும் நம் பிறந்த நாளில் பல சுவையான இனிப்புகளைத் தான் தருவோம். ஆனால் ஜெயந்தி சிறிது வித்தியாசமாக யோசித்து செடிகளை வழங்கியிருக்காளே'' என்று பலரும் வியந்தனர்.

அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் இறைவணக்கக் கூடத்தில் ''ஜெயந்தி பரிசளித்த செம்பருத்திப் பூச்செடிகளை நம் பள்ளியைச் சுற்றியுள்ள வளாகத்தில் வைத்து வளர்ப்போம்'' என்று கூறினார்.

மாதங்கள் கடந்தன. ஜெயந்தியின் அடுத்த பிறந்த நாளும் வந்தது. தனது வீட்டை விட்டு மிக உற்சாகத்துடன் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வருகிறாள். தன் பள்ளி நுழைவு வாயிலை சுற்றியுள்ள அனைத்துச் செம்பருத்திப்பூ செடிகளும் பூத்துக் குலுங்கியது பார்த்து மகிழ்ந்தாள் ஜெயந்தி.

பிறந்தநாள் அன்று ஜெயந்தி கொடுத்த பூச்செடிகளை வியப்பாக பார்த்த மாணவ, மாணவிகள் இன்று பூத்துக் குலுங்கும் இந்தச் செம்பருத்திப் பூவை போல அவர்கள் முகமும் மலர்ந்தது.

''அன்று நாம் கூறிய ஒரு பாடத்தை இன்று நினைவாக்கி இருக்கிறாள் நம் பள்ளி மாணவி ஜெயந்தி'' என்று அவள் வகுப்பாசிரியர் பெருமிதம் அடைந்தார்.

அனைவரும் மகிழ்வோடு இருந்தனர்.



# முயற்சியே வெற்றி




## செ.ப. கமல் சங்கர்

**சென்னை**


மதியனூர் அப்படிங்கிற ஒரு அழகான கிராமம் இருந்துச்சு. அங்கே வயல் எல்லாமே பார்க்க பச்சை பசேல்னு கண்களுக்கு குளுமையாக இருந்தது. அந்த கிராமத்தில் தான் கோபியும், அவங்க அம்மா, அப்பாவும் வாழ்ந்து வந்தாங்க....

கோபி அம்மா வயல் வேலைக்குப் போவாங்க. அவங்க அப்பா கட்டடம் கட்டும் வேலைக்குப் போவாங்க. அவங்க குடிசை வீட்டுல தான் வாழ்ந்து வந்தாங்க. அவங்க அம்மா, அப்பாக்கு அவனை பெரிய ஆளாக்கணும்னு ஆசை. அவன் ஏழாம் வகுப்பு படிச்சிட்டு இருந்தான்.

கோபியும் அதுக்கேத்த மாதிரி நல்லா படிப்பான். படிப்பு, ஓவியம், விளை யாட்டுனு எல்லாத்திலயும் ரொம்ப திறமை சாலி. பள்ளிக்கூடத்துல அவனை தெரியாத வங்களே இல்லைனு சொல்லலாம்.

ஒருநாள் பள்ளிக்கூடம் முடிந்து வந்த கோபி, "அம்மா அம்மா" னு கூப்பிட் டுட்டே வந்தான்.

அம்மாவும் "என்னடா கண்ணு"? கேட்டாங்க. அதுக்கு கோபி, "அம்மா இன்னைக்கு பள்ளிக்கூடத்துல நடந்த ஓட்டப்பந்தய விளையாட்டுல நான்தான் முதலிடம். எனக்குப் பரிசு கூட கொடுத்திருக்காங்கனு" அவன் வாங்கின பரிசைக் காமிச்சான்.

ஓ!.. அப்படியா கண்ணு, ரொம்ப சந்தோசம். மகிழ்ச்சிடா செல்லம்" ...

அம்மா அடுத்து மாவட்ட அளவுல நடக்கிற ஓட்டப்பந்தய விளையாட்டு போட்டிக்கு நான் தகுதி ஆகி விட்டேன்... நான் வெளியூருக்கு போய் விளையாடனும்னு என்னோட விளை யாட்டு ஆசிரியர் சொன்னாங்கம்மா. "ஆனா ஆனா......"

"ஆனா என்னடா கண்ணு சொல்லுடா?"

"ஆனா அம்மா அதுக்கு 500ரூவா கொடுத்தா தான் போக முடியும்மா... அதான்..."

"சரிப்பா...நான் அப்பா வந்த பிறகு அப்பாகிட்டே கேட்டுட்டு சொல்றேன். இப்போ நீ போய் விளையாடு சரியா கண்ணு..."

"சரிம்மானு" சொல்லிட்டு கோபியும் விளையாட போய்ட்டான்.

அவன் போன பின்னாடி

அவங்க அம்மாவுக்கு ரூவா எப்படி கொடுக்கப்போறோம் னு ரொம்ப கவலையா இருந்துச்சு. இராத்திரி அவன் அப்பா வீட்டுக்கு வந்ததும், அவன் அம்மா கம்மங்கூழ் கஞ்சியை சாப்பிட வச்சாங்க.

அப்புறம் மெதுவா "ஏங்க உங்களுக்கு விஷயம் தெரியுமா? நம்ம கோபி கால்பந்து விளையாட்டுல நல்ல விளையாண்டு பரிசெல்லாம் வாங்கிருக்கான். அதனால வெளியூருக்குக் கூட்டிட்டுப் போறாங்கலாம். அதுக்கு ஐநூறு ரூவா வேணுமாம்..."

அவன் அப்பா டக்குனு சாப்பி டுறதை நிப்பாட்டிட்டு, "ஐநூறு ரூவாயா? அவ்வளவு ரூவாக்கு நாம எங்க புள்ள போறது.." அப்படினு கேட்டார்.

"எனக்குத் தெரியாதா... நம்ம பையன் ரொம்ப ஆசைப்படுறான்..பாவம் சின்ன பையன்... அவனோட இந்த ஆசை யாவது நாம பண்ணவேண்டாமா?"

அவருக்கும் கோபியைப் பத்தி நல்லா தெரியும். அவன் மத்தப் பசங்களை மாதிரி எந்தத் தொந்தரவும் பண்ண மாட்டான். ரொம்ப யோசனைக்கு அப்பறம் "சரிம்மா, நான் ஏதாவது முயற்சி செய்து பாக்குறேன்னு" சொல்லிட்டு அவன் அப்பா சாப்பிட்டுட்டுத் தூங்கப் போய்ட்டார். இரவெல்லாம் அவன் அப்பாவுக்கு ஒரே யோசனையா இருந்த்துச்சு.

மறுநாள் காலைல வேலைக்குப் போன அவன் அப்பா வேலை செய்யும் பொழுது கட்டிடத்தின் மேலேயிருந்து கீழே விழுந்துட்டார். உடம்புல ரொம்ப பலமான அடி பட்டுடுச்சு. ஹாஸ்பிடல்ல சேர்த்தும் குணப்படுத்த முடியாம ரெண்டு நாளுல இறந்தும் போயிட்டார் .

அதன் பிறகு அம்மாக்கும், கோபிக் கும் என்ன பண்ணுறதுனே தெரியல. கோபியை எப்படிப் படிக்க வைக்கப் போறோம்னு ஒரே கவலையா இருந்துச்சு. சொந்தக்காரங்களும்யாருமேஇவங்களுக்கு உதவி செய்ய வரல. அதனால கிடைக்கிற வேலை எல்லாம் செய்ய ஆரம்பிச்சாங்க. சரியா சாப்பிடாம, தூங்காம வேலை செஞ்சதால அவங் களுக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாம போச்சு.

இதெல்லாம் பார்த்த கோபிக்குப் பள்ளிக் கூடம் போகவே பிடிக்கல. ஒழுங்கா பாடத்துல, விளையாட்டுல கவனம் செலுத்த முடியல. அவனுக்கு அம்மா கூடவே இருக்கனும், நல்ல மருந்து வாங்கி கொடுத்து அம்மாவை காப்பாத்த னும்னு ஆசை. ஆனால் அவனுக்கு என்ன பண்ணுறதுனு தான் தெரியல.

ஒரு நாள் ரொம்ப நேரம் தூக்கமே வரல, குடிசைக்கு வெளியே வந்து நின்னுக்கிட்டு இருந்தான்.

"நீ தூங்காம என்னப்பா பண்ணிட்டு இருக்க, தூக்கம் வரலியானு" அம்மா கேட்டாங்க.

"இல்லாம சும்மாதான் உட்கார்ந் துட்டு இருக்கேன்மா".

"எனக்கு தெரியும்டா கண்ணு, நீ என்ன யோசிக்கிறேன்னு. இங்க வா.. அவனை அவனோட அப்பா போட் டோக்கு முன்னாடி கூட்டிட்டு போய் பேச ஆரம்பிச்சாங்க. கோபி கண்ணு நீ நல்ல படிக்கணும், நல்லவேலைக்குப்போகணும், நம்மளை மாதிரி கஷ்டப்படுறவங்களுக்கு உதவி செய்யணும்... இதுதான் உன் அப்பாவோட, என்னோட கனவு. நீ படிக்கலேனா எப்படி அப்பாவோட கனவை நிறைவேற்றுவ... சொல்லுடா செல்லம். அதனால என்ன ஆனாலும் படிப்பை மட்டும் விட்டுறாதே !சரியா கண்ணு ..." னு கேட்டாங்க.

"சரிம்மா உங்க இரண்டு பேரோட கனவை நிறைவேத்திக் காட்டுறேன்னு" சொல்லி அம்மாவைக் கட்டிப் பிடிச்சிக் கிட்டான்.

ஏதாவது செய்யனும்... அதே நேரத்தில் படிப்பையும் விட கூடாதுனு ரொம்ப உறுதியா இருந்தான். எங்கேயாவது வேலை செய்யலாம்னு நிறைய இடங்களில் வேலை கேட்டுப் பார்த்தான். சின்னப் பையனா இருக்கிறதால யாருமே வேலை கொடுக்கல.

ஒருநாள் இதே மாதிரி வேலை கேட்டுட்டு இருக்கிறப்போ ஒரு பெட்டிக் கடையில இருந்த தாத்தா, "எதுக்குப்பா இந்த வயசுல வேலைக்கு வர? படிக்கப் போகலியா" னு கேட்டார்.

அப்பா, அம்மா கனவைப் பற்றி, அம்மா உடல்நிலை பற்றிச் சொன்னான். "அப்படியா, நான் ஒரு வேலை உனக்கு தர்றேன், அதைச் செய்வியா?" தாத்தா கேட்க "செய்வேன் தாத்தா" கோபி சொன்னான்.

"அதிகாலை இங்கே கடைக்கு வந்து நான் கொடுக்கிற நியூஸ் பேப்பரைக் கொண்டு போய் நான் சொல்லுற வீடுகளுக்குப் போடணும் சரியானு" கேட்டார். சந்தோசமா சரினு சொன்னான்.

ஒரு நாள் அவன் அம்மாவுக்கு இவன் வேலை பார்க்கிறது தெரிஞ்சு எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் இவன்வேலையை விடுவதா இல்லை. பள்ளிக்கூடம் இல்லாத நேரத்தில் என்னென்ன வேலை கிடைக்குதோ அதை எல்லாம் சந்தோசமா செய்ய ஆரம்பிச்சான்.

இதுல கிடைக்கிற வருமானத்தை வச்சி அவங்க அம்மாக்கு மருந்து மாத்திரை எல்லாம் வாங்கிக் கொடுக்க ஆரம்பிச்சான்.

ஒருநாள் கோபி அம்மா சொன்னாங்க "கோபி கண்ணு, நீ எனக்கு மருந்து வாங்கித் தரவேண்டாம். அதை நான் பார்த்துகிறேன். எனக்கு இப்போ கொஞ்சம் வேலை எல்லாம் செய்ய முடியும் கண்ணு! நீ இந்தப் பணத்தை உன்னோட படிப்புக்கு, விளையாட்டுக்கு தேவையானதை வாங்கிக்கோ. அதுதான் முக்கியம்". "சரிம்மானு" சொன்னான் கோபி!

அவனுக்குக் கிடைக்கிற கொஞ்சக் கொஞ்ச காசையெல்லாம் உண்டியலில் போட்டுச் சேர்க்க ஆரம்பிச்சான்.

அவன் அம்மா சொன்ன மாதிரி அந்த பணம் அவனோட படிப்புக்கும், விளையாட்டுக்கும் ரொம்ப உதவியா இருந்தது. சில சமயத்துல குடும்பத்துக்கும் ரொம்ப உதவியா இருந்துச்சு.

இந்த சின்ன வயசுலேயே இவ்வளவு பொறுப்பாகவும் ரொம்ப நல்ல பையனாகவும் இருக்கானேனு எல்லோருமே அவனைப் பாராட்ட ஆரம்பிச்சாங்க.

ஒரு நாள் அவன் அம்மா, அப்பா ஆசைப்பட்ட மாதிரி ஓட்டப்பந்தய விளையாட்டுல முதலிடம் வந்தது மட்டும் இல்லாமல், படிப்பிலேயும் அவன் தான் முதல் மாணவன்.

அதுக்கு அப்புறமும் வேலை செய்து கொண்டே நன்றாக படித்து, அவனாகவே சுயதொழில் தொடங்கி அதன் மூலம் நிறைய பேருக்கு வேலை கொடுக்க ஆரம்பிச்சான்.

அது மட்டும் இல்லாமல் அவனை மாதிரி கஷ்டப்படுற ஏழைக் குழந்தைகளுக்கு அவனால் முடிந்த உதவியைச் செய்ய ஆரம்பிச்சான்!

இதை பார்த்த அவங்க அம்மாக்கு ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு.

அப்போ! அவனும் அவங்க அம்மாவும் இந்த நேரத்தில் அன்று அவனுக்கு முதலில் வேலை கொடுத்து உதவிய தாத்தாவுக்கு நன்றி சொன்னாங்க!

■

# வண்ணத்துபூச்சி



வண்ணங்கள் நிறைந்த அழகிய உயிரினம் நீயே!
அப்பூக்களுக்கு அழகு சேர்க்கும் தேவதையும் நீயே!

வண்ண வண்ண பூக்களில் தேனருந்தும் வண்ணத்துப் பூச்சி நீயே!
வண்ண மலர்களில் வசந்தமாய் தேனெடுக்க வந்தாய் நீயே!


உன் அருகில் நான் வர எட்டிச் சென்றாய் நீயே!

வண்ணத்துப்பூச்சியே நீ வானம் நோக்கி பறந்திட
உன் அழகைக் கண்டு புன்னகையுடன் மகிழ்ந்தேன் நானே!



**செ.ஸ்ரீலேகா**
ஆறாம் வகுப்பு
அரசு உயர்நிலைப் பள்ளி
திருச்சி - 12

## என் பாரதி



எத்தனை தலைமுறை?
உன் பாட்டே ஒலிக்கும் பறை
உன் சிந்தனையில் இல்லை கறை
உன் கவியால்..நான் படைப்பேன் உரை
உன் வரிகளால்.. வைத்தாய் சிறை
கருப்பு மீசை.. உன் போல் கவி பாட ஆசை
அன்னைத் தமிழை ஆராதிப்பது
அகண்ட பாரதத்தை நிமிர வைப்பது
அந்நிய சக்தியை விரட்டியடிப்பது
இதுவே உன்னுடைய வரலாறு என்பது

**ம. குசன்**
ஐந்தாம் வகுப்பு
சென்னை

# சிறார்கள் எழுதிய
# தன்முனைக் கவிதைகள்

நாள்தோறும் ஒரு
கீரையுடன் அவற்றின்
பயன்களையும் சேர்த்தே
பரிமாறுகிறார் அம்மா

கையில் பாலுடன்
பலமுறைக் கூப்பிட்டேன்
ஏனோ திரும்பிக் கொண்டது
பக்கத்து வீட்டுப் பூனை

சத்தமில்லாமல் எட்டிப்
பார்க்கும் பூனை
அடுப்பில் கொதிக்கிறது
மீன் குழம்பு

**சு.பிரவந்திகா**

சிறகடிக்கும் பட்டாம்பூச்சி
சிகரம் தொட்டது!
பூவிலிருந்து தேனை
மட்டும் எடுத்துக் கொண்டது!

அழகிய ரோஜாவிடமிருந்து
கற்றுக் கொண்டேன்!
முட்களுக்கு நடுவில்
மலர்ந்து சிரிக்க!

பூனையோடு விளையாடும் முன்
பலமுறை யோசி!
விளையாடும் போது கடித்தால்
போடுவார்கள் ஊசி!!

**பி. பர்வதவர்மன்**
ஒசூர்

அண்டை வீட்டுப்பூனை
அழகான பூனை
மீன் வாசம் வந்ததும்
வீட்டைச் சுற்றும் பூனை

**அ. சரவணா**
தஞ்சாவூர்

பாலை விரும்பி குடிக்கும்
பாசம் அதிகம் காட்டிடும்
எலியை கண்டால் துரத்திடும்
எங்கள் வீட்டு பூனை

**க.ம.அல் வாஃபிகா**
திருச்சி

பூனை குறுக்கே போனால்
சகுனம் சரியில்லையாம்!
பூனைக்கா நமக்கா?
அடிப்பட்டது பூனை!

**தரணிப்பிரியா**

**மகேந்திரமணி,**
மலேசியா

பண்டைய எகிப்தியர்
வழிபடும் தெய்வமானதால்
சைவ உணவை
உண்கின்றன பூனைகள்

**லோ.மைதிலி**

கீரைகளில் உண்டு
வகைகள் பல
நாளும் உண்ணக் கிடைத்திடும்
நன்மைகள் பல

**அ. சரவணா**
தஞ்சாவூர்

கட்டுக் கீரைகள்
சாப்பிடப் பிடிக்காது
ஆரோக்கியம் காத்திட
உண்ண வைத்திடுவார் அம்மா

**பா.அனிஸ்குமார்**

நலம் தரும் கீரைகள்
நமக்கு பலம் தந்திடும்
கவிதைகளைப் படித்தால்
நாட்டின்நல் வித்தாவோம்


**த.யோகிதா**
திருச்சி-12

கீரைகளைச் சாப்பிடுவோம்
உணவாக நாளும்
மருத்துவரை மறந்திடுவோம்
நலமாக நாமும்

**ஆ.யுவிஸ் டெல்வின்**

நடக்கும் வழிகளில்
மண்டிக்கிடக்கும் கீரைகள்
நோய் தீர்க்கும் மருந்தாம்
நோகாமல் நாளும் உண்போம்

**லோ. மைலேஷ் குமார்**




# எழுச்சி உன்னுள்

பார் போற்றும் பாரதி
அவரே தமிழுக்கான சாரதி
பாரதி கவிதைகளைப் படி!
அதை மனதில் பதியும்படி படி
அச்சம் போக்கிய கவிஞரே
மேலங்கி போட்ட மேதையே
பல மொழி கற்றறிந்த பண்பாளனே
வீரத்தின் அடையாளம் உன் மீசை
அதுவே எங்களை ஈர்க்கும் விசை
மீண்டும் வருவாயா?-
அதுவே என் ஆசை

ம.லவன்
ஐந்தாம் வகுப்பு
சென்னை





# தெய்வத்தின் தெய்வங்கள்


## முனைவர் ப. கற்பகராமன்

M.A.,M.A.,M.A.,M.Phil.,Ph.D.,


குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று கூறுவர். உண்மதான். இந்த வயதான குழந்தைகளும் தெய்வமும் கூட குணத்தளவில் ஒன்றுதான். இவர்களின் தோள்கள் தளர்ந்திருப்பதாலோ, இவர்களுடைய கூந்தல் நரைத்திருப்பதாலோ இவர்களை ஒதுக்கிவிடாதீர்கள். எண்ணற்ற அனுபவங்களை தேக்கி வைத்திருக்கும் மாபெரும் புதையல் என்றே இவர்களை அழைக்க வேண்டும்.

புகைப்படத்தில் கண்டு கண்ணீர் சிந்துவதைவிட நேரில் இருக்கும்போதே கொண்டாடுவோம் பெற்றோரை. அவர்களுடைய உணர்வுகளை முழுமையாக மதிக்கப் பழகுவோம். ஏனென்றால் அவர்கள் நமக்கு உயிரையும்> உணர்வையும் தந்த நம்முடைய பெற்றோர்கள். கையிலிருந்த வைரங்களைத் தொலைத்துவிட்டு கருங்கல்லைத் தேடி ஓடுவதில் ஒரு பயனும் இல்லை.

ஒரு நொடிகூட கீழே விடாமல் மடிமேலும், மார்மேலும், தோள்மேலும் வைத்துப் பாராட்டி, சீராட்டியவர்கள். நம்முடைய வளர்ச்சியை ஒவ்வொரு தருணத்திலும் ரசித்தவர்கள்.

நம்முடைய வயிற்றை நிரப்ப எண்ணி எண்ணியே பலநாட்கள் தங்களுடைய பசியை மறந்தவர்கள். வயதாகிவிட்டதால் அடைக்கலம் மட்டுமே கேட்கிறார்கள். அவர்களுக்கென தனியே சமைக்கவா போகிறோம். நம்முடனே அவர்களையும் வைத்துக்கொள்வோமே.

பூமிக்கு நாம் வருவதற்கு அவர்களே காரணமாக இருந்தார்கள். இறுதியில் பூமியைவிட்டு அவர்கள் போகும்போது, அவர்களுடைய அந்தப் பயணத்தைப் போராட் டம் நிறைந்ததாக ஆக்கிவிடாமல் புனிதமானதாக அமைப்பதற்கு முயற்சிப்போம்.

நமக்குப் பசிப்பதைப் போலவே அவர்களுக்கும் பசிக்கும். நமக்குக் குளிர்வதைவிட அதிகமாக அவர்களுக்குக் குளிரும். நமக்கு என்னவெல்லாம் தேவைப்படுகின்றதோ அவை அனைத்தும், நமக்குத் தேவைப்படுவதைவிட பல மடங்கு அதிகமாகவே அவர்களுக்கும் தேவைப்படும். அவர்களுக்குத் தேவைப்படும் அவ்வளவையும் நாம் கொடுக்கவில்லை என்றாலும், குறைந்த அளவாவது அவர்களுடைய தேவையை நாம் பூர்த்திசெய்யவேண்டுமல்லவா? மெலியதை வலியது காக்கவேண்டும் என்பதல்லவா மனித நியதி.

தாய் வயிற்றில் கருவாக நாம் இருக்கும்போது அந்தத் தாயின் வயிற்றைத் தடவிப் பார்த்துப் பூரிப்படைந்தது அந்தக் கைகள். குழந்தையாக நாம் தவழ்ந்தபோது பாதுகாப்பாய் நம்மைப் பார்த்துக்கொண்டது அந்தக் கைகள். பள்ளிப் பருவத்தில் கல்வி கற்கும்போது கையோடு கைபிடித்துக் கற்றுத்தந்தது அந்தக் கைகள். விளையாட்டுப் பருவத்தில் காயத்தோடு வீடுவரும்போது மெல்லமாய் மருந்தினைத் தடவியது அந்தக் கைகள். திருமண நாளில் தீயின் முன்னிலையில் தாரைவார்த்துத் தந்தது அந்தக் கைகள்.

இத்தகைய அந்தக் கைகளை இறுதியில் ஒருவேளை சோற்றுக்கு பிச்சை ஏந்த வைப்பது முறையா? ஒவ்வொரு வேளை சோற்றிற்கும் வெட்கப்பட வைப்பது சரியா? அவர்களுடைய இறுதி காலத்தில் இவ்வாறு தவிக்க வைக்கவா அவர்கள் நம்மைக் கருவாக்கினார்கள்?

வயதான அந்த உயிர்களுக்கு, மேலும் வயதாகஆக கண்கள் தெரிவதே சிரமம். அந்தக் கண்களை அழவைத்து மேலும் அவர்களுக்கு வேதனையைக் கொடுப்பதில் நமக்கென்ன பலன் என்று நாம் யோசிக்க வேண்டும். நம்முடைய வெற்றியைக் கண்டு மகிழ்ந்தவை அந்தக் கண்கள். அவற்றை நாமே நாசம் செய்யலாமா?

நம் பெற்றோர்கள் வயதானவர்கள். ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கி பயணிப்பவர்கள். நாம் என்னதான் அவர்களைப் பார்த்துக் கொண்டாலும் நம்முடனேயே அவர்கள் தங்கிவிடப் போவதில்லை. விரைவில் நம்மை விட்டுப் பிரிந்துத்தான் செல்லப்போகிறார்கள். இருக்கும் அந்தக் கொஞ்ச நாட்களையாவது நம்முடனே அவர்களை வைத்துக்கொள்வோமே.

நம்முடைய ஸ்பரிசம் அவர்களுக்கு நிச்சயம் தேவைப்படும். நம்மோடு இருந்தால் மட்டும்தான் அவர்கள் தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வார்கள். நம்மைவிட யாரால் அவர்களைப் பார்த்துக்கொள்ள முடியும்?

நாய்களுக்கும் பூனைகளுக்கும் இடமிருக்கும் நம் வீட்டில் நம்மைப் பெற்றெடுத்து அழகுபார்த்த அந்தத் தெய்வங்களுக்கு இடமில்லை என்றால் அது முறையா?

நகைகளும், சொத்துக்களும் நிலையானவை அல்ல. இவை அனைத்தையும்விட நிலையானது ஒன்று உண்டெனில் அது மனித உணர்வு ஒன்றே.

சாவின் விளிம்பில் நாள்தோறும் பயணிக்கும் அவர்களுடைய உணர்வை, நாமும் அந்த நிலைக்குச் செல்லும்போதுதான் நம்மால் உணர முடியும்.

காற்றிலும், மழையிலும், பனியிலும், வெய்யிலிலும் எத்தகைய பாடுகளையெல்லாம்பாடுபடுமோ அந்த உடல்கள் என்ற பதற்றம் நமக்குள் இருக்கவேண்டுமல்லவா. ஏனெனில் அவ்வுடல்கள் நம்மைச் சுமந்த உடல்கள். நாமும் விட்டுவிட்டால் அவர்கள் எங்கு செல்வார்கள்?

தெய்வங்களும் தெய்வநிலை அடைந்ததற்கு தங்களுடைய பெற்றோரை உயிரென மதித்ததே காரணம் என்பதைப் பல்வேறு ஆன்மீக வரலாறுகளும் நாளும் நமக்கு விளக்கிய வண்ணமே உள்ளன. தெய்வங்களுக்கும் அந்தத் தெய்வநிலையைத் தந்தவர்கள் அவர்களுடைய பெற்றோர்களே என்பதால் பெற்றோர்களே தெய்வத்தின் தெய்வம். அந்தத் தெய்வங்களுக்குத் தீங்கு செய்பவர்களைத் தெய்வம் அன்றே கொல்லும். ■




## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்


# கலாபூஷணம்
# எம். எச்.ஏ. அப்துல் ஹலீம்,

**ஏறாவூர், இலங்கை.**


உலகில் வாழும் சுமார் எழுநூறு கோடி மக்களும் சுமார் இரண்டாயிரம் மொழிகளைப் பேசுகின்றனர். இம்மொழி களுள் எழுத்துருப் பெற்றவை எழுநூறு மொழிகளாகும். அவற்றுள் இலக்கண இலக்கிய வளங்கள் நிறைந்து வளர்ச்சி பெற்றவை இருநூறு மொழிகளாகும். இவற்றுள் சிறப்புடைய செம்மொழி களாக உலகில் ஏழு மொழிகள் இனங்காணப் பட்டுள்ளன. செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற ஏழு மொழிகளுள் நம் செந்தமிழ் மொழியும் ஒன்றாகக் காணப்படுவது நமக்குப் பெருமை தருகின்றது. இப் பெருமையை நமக்கு ஈட்டித் தந்தவர்கள் நம் முன்னோர்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

நம் முன்னோர்கள் இலக்கியங் களைப் படைத்தார்கள். அவற்றுக்குரிய இலக்கணங்களையும் வகுத்துத் தொகுத்துப் பிற்சந்ததிக்கு வழங்கிச் சென்றார்கள். உரைநடை வளர்ச்சி பெறாத அக்காலத்தில் இவையனைத்துங் கவிதைகளாகவே காணப் பட்டன. தமிழ்மொழி செம்மொழி அந்தஸ்தைப் பெறுவதற்கு கவிதை இலக்கியத்தின் பங்களிப்பு மிகப் பெரிய தெனின் மிகையாகாது. இதனை ஒரு கவிஞர்...

“கம்பன் புகழேந்தி
கச்சியப்பர் காரைக்கால்
அம்மையுடன் நாயன்மார்
ஆழ்வார்கள் - எம்மொழியைச்
செம்மொழி யாக்கிச்
சிறப்புறச் செய்பணிக்கு
இம்மண்ணி லேதோ
இணை.”


என விவரிக்கின்றார். இத்தகைய மேன்மை மிக்க முது சொத்துக்கள் தாம் மரபுக் கவிதைகள்.

காட்டாறு கரைமீறியோடுவது போல புதுக்கவிதைகள் எனும் பெயரில் புத்தி ஜீவிகள் புரட்டிப் புரட்டிப் படித்தாலும் அர்த்தம் விளங்காத அர்த்த ஜாமத்துப் புலம்பல்கள் இன்று இம்மரபுக் கவிதைகளுக்கு சவாலாய் அமைந்துள்ளன. மரபுக்கவிதைகளை ஓரங்கட்டி மரணக்குழி தோண்டும் இவர்களுக்கு பத்திரிகைகளும் களமமைத்து பக்கத்துணை புரிவதும் காலத்தின் கோலமாய் அமைந்துள்ளது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் கவியருவி கவின்முருகு தனது ‘‘சுவரெழுத்து’’ எனும் மரபுக்கவிதை நூலை வெளியிட்டுள்ளது சாலப் பொருத்த

மாகும். மரபு வளர்ந்து வளங்கொழித்த மண்ணிலே பற்றை பறுகுகளும் பயன்படா மரஞ்செடிகளும் வளர்கின்றன. அவற்றை சுட்டெரிக்கும் அக்கினிக் குஞ்சாக சுவரெழுத்தை நான் பார்க்கின்றேன். இதில் சுமார் நாற்பத்தியொரு கவிதைகளை யெழுதி மரண ஓலமிடும் மரபினிற்குப் புனர்வாழ்வளிக்க முயன்றுள்ளார். மரபுக் கவிதைகளுள் ஓரம்சமாகிய விருத்தப் பாக்களிலேயே இவரது கவிதைகள் வீறு நடைபோடுகின்றன. இவை இடைக்கிடை இவர் எழுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றுள் ஒன்றில் கூறியுள்ளவாறு "இலக்கண மோனை இயையும் எதுகை/ விலக்கா விதியுடன் பா." எனலாய் இலக்கண விதிகள் பொருத்தமான எதுகை மோனைகளுடன் சீர் தட்டாமல் எழுதப்பட்டுள்ளன. வெண்பாச் சீர்களும், நேர் நிரை அசைகளும் நியதிப்படி மிக நேர்த்தியாக அமைந்துள்ளன.

'ஈன்று புறந்தந்த தாய்க்கும் சான்றோ னாக்கிய தந்தைக்கும் படையல்' எனும் கவியடியிலும் "எப்படி மறப்பேன்" எனும் கவிதையிலும் நன்றி செலுத்தும் பாங்கு நெஞ்சை நெகிழ்விக்கின்றது. பிறந்த பொன்னாட்டிலும் பேசும் மொழி யிலும் இவருக் குள்ள பற்றினைப் பல கவிதை களில் வெளிப்படுத்திக் காட்டு கின்றார். "தமிழ் நம் ஆளுமை" எனுங் கவிதையிலே 'நம் நாடு தமிழ் நாடென்றுணர வேண்டும்' என்றும் "எம் தாயின் தமிழ்ப்பாலால் வாழும் நாங்கள்" எனத் தமிழ் வணக்கத்திலும், தனி மானிலம் - தமிழ் மானிலம் எனும் கவிதைகளிலும் தமக்கென ஒரு நாடு - ஒரு மொழி என்னும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் பின்னிப் பிணைந்து வெளிப்படுவதைக் காணலாம். இவை பற்றுடன் செயற்பட்டு புரட்சிக் கவிதைகள் புரட்சிக் கவிஞன் பாரதிதாசனை நமக்கு நினைவூட்டுகின்றன. விரிவஞ்சி அவற்றை விவரிக்க முடியவில்லை. தனித்தமிழ் வாழ்க!, பைந்தமிழே பேசிடுவாய், தமிழைக் காப்போம் போன்ற கவிதைகளும் இவரது மொழிப்பற்றுக்கு முத்திரை பதிக்கின்றன.


கலாபூஷணம்
எம். எச்.ஏ. அப்துல் ஹலீம்

காதல் கவிதைகள் சிறு சிறு கவிதைகளாகவும் பெரிய காவியமாகவும் எழுதப் பட்டுள்ளன. இவரது காதல் கவிதை களில் கன்னியின் மீது ஏற்படுங் காதலை தமிழின் மீது செலுத்தியே எழுதி யுள்ளார். பொதுவாகக் கவிஞர்கள் ஒரு கன்னியைக் கனியென்றும், தேனென் றும், அமுதென்றும் வருணிப்பர். இவரோ "இழந்து விட்ட கணப்பொழுது" எனுங் கவிதையில் "பைந்தமிழாய் இனிக்கின்றாய்" எனக்கூறுகின்றார். அவ ளின் குரலோசையை "அவளென் பா" எனுங்கவிதையில் "தேமதுரத் தமிழின் ஓசை, தெவிட்டாத குரலோசை" என்கின் றார். இக்கவிதையில் அவளை உயர்த்திப் பாடும் ஒவ்வொரு கட்டத்திலும் அவளைத் தமிழுடன் இணைத்தே பாடுகின்றார். "தீஞ்சுவையாம் தேன் தமிழைப் போலே வந்தாள்" என ஓரிடத்திலும், ஓங்கு தமிழ் நீ - எனக்கு வாராய் முன்னே" என மற்றோரிடத்திலும் "தொன்று தொட்டுத் துலங்கிடவே தமிழைப் போலதோன்றுபுகழ்நாமடைவோம்" ஊனத் தமிழின் மகத்துவத்துக்கு முதலிடங் கொடுத்து மொழியின் மீதுள்ள பற்றுதலை வெளிப் படுத்து கின்றார்.

விதைக்கமறந்தமனிதநேயம், தீமையை எரித்திடு, தீது கண்டால், கற் பென்ன காமந்தானோ! போன்ற கவிதைகளில் பஞ்சமா பாதகங்கள், தீமைகள், வன்புணர்வுகளைக் கடிந்து, சாதி, குல, மத பேதங்களை வெறுத்துப் பாடுகின்றார். ஒட்டு மொத்தமாக இந் நூலில் நன்றி செலுத்தும் நற்பண்பு, மனித நேயம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஆகி யவை நயக்கத்தக்க விதத்தில் காணப் படுகின்றன.

மரபுக் கவிதைகளுக்கு சிவப்புக்

கொடி காட்டும் இக்காலத்தில் பச்சைக் கொடி காட்ட விழையும் இவர், மரபுக்கவிதைப் படிவங்களுளொன்றான எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தப் பாவிலேயே தனது அதிகமான கவிதைகளை எழுதியுள்ளார். வஞ்சி விருத்தம், அறுசீர் விருத்தம், கலி நேரிசை வெண்பா ஆகிய பாவடிவங்களில் ஒவ்வொரு கவிதையும், இடைக்கிடை சில நேரிசை வெண்பாக்களையும் உணவுக்குக் கொஞ்சம் ஊறுகாய் தொட்டுக் கொள்வது போல் புகுத்தியுள்ளார். இவை மரபுக் கவிதைகளுள் பேரிலக்கிய வடிங்கள் உருவான பாவடிவங்களாகும். கலி, சிந்து, வஞ்சி, பள்ளு, கீர்த்தனை போன்ற சிற்றிலக்கிய வடிவங்கள் காலத்தால் மறைந்து கொண்டிருக்கின்றன. தேசிய உணர் வினையூட்டி இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து, இந்திய சுதந்திரத் துக்காக மக்களை ஒன்று படுத்துவதற்கு பாரதியார் இப் பா வடிவங்களைக் கையாண்டு பாடல்களை இயற்றி வெற்றி கண்டார்.

நாட்டுப்பற்றை, மொழிப்பற்றை ஏற்படுத்துவதற்கும் இப் பா வடிவங்கள் விருத்தப் பாக்களை விட சிறந்தவை யாகும். எல்லாக் கவிதைகளும் ஒரே பா வடிவத்தில் அமைந்துள்ளதால் வாசகர்களுக்குத் தெவிட்டல் நிலை ஏற்படவுங் கூடும். கவிஞர் எழுதியுள்ள "அவளென் பா" என்னும் நீண்ட காதல் காவியம் அறுபத்தியொரு அடிகள் கொண்ட எண்சீர்க்கழி நெடிலடி ஆகிய விருத்தப் பாக்களில் அமைந்துள்ளது. இதனை சிறு சிறு அலகுகளாகப் பிரித்து வெவ்வேறு தலைப்பில் பல்வேறு கவிதைகளாக எழுதினால் வாசகர்கள் அலுப்பு சலிப்பின்றிப் படிப்பதற்கு இலகுவாகவிருக்கும். காமத்துப்பாலில் திருவள்ளுவர் காதலின் எந்தவொரு அம்சத்தையும் விட்டு வைக்காமல் பதின்மங்களாக வகுத்துப் பாடியுள்ளமை நோக்கற்பாலது.

மேலும், 'பூக்கும் பூவை', 'பூவாய்ப் பூத்தனள்' எனுங் கவிதைகளில் ஒரு பூப்பெய்திய சிறுமியை ஒரு பேரிளம் பெண்ணாக கவியருவி கவின்முருகு வருணிக்கின்றார். பூப்பெய்தும் பருவம் பேதைப்பருவம்; அவளிடம் காதல் உணர்வு களையோ கட்டழகு மேனியையோ நாம் காண முடியாது.

"தங்கத்தால் இழைத்த மேனி தளிராய் மின்ன
சதியவளின் விழியிரண்டில் குறிஞ்சி பூக்க
..............................................................
..............................................................
பொங்கு தமிழ் எடுத்தேயான் இசைத்துப் பாட
பூவையவள் பூப்பெய்தி என்னுள் நின்றாள்."

பூவாய்ப் பூத்தனள் எனும் கவிதையின் கடைசி அடியில் கவிஞர் மேற்கண்டவாறு ஒருபேதைப் பெண்ணை வருணிக்கின்றார்.

கவிஞரின் மொழிப்பற்று, மொழி யறிவு, இலக்கண அறிவு தமிழின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் மென்மேலும் உதவ வேண்டும். மரபு பாதுகாக்கப் படுவ தோடு தமிழிலக்கிய வரலாற்றிலே பயனுள்ள புதிய படைப்புகளும் இடம் பெற்று எதிர்கால சந்ததிக்கு நாம் கையளிக்க வேண்டும் எனக்கூறி கவிஞரின் முயற்சியைப் பாராட்டி அன்பான வாழ்த்துக் களையும் தெரிவிக்கின்றேன்.

# ரசிகன்

**எல்லைக்குள்**
**ஊடுருவும்**
**அயல்நாட்டுப்**
**பறவைகளை**

**ரசிக்கின்றான்**
**ராணுவவீரன்...**

**கையில்**
**துப்பாக்கி**
**ஏந்தியபடி...**

**அ.கேசவராம்**
**கும்பகோணம்**

# முடிவின் ஆரம்பங்கள்

**தினுஷா மகாலிங்கம்**

**இலங்கை**

கண்கள் பளபளக்க வெளிக் காட்சிகளை ரசித்தப்படியே பயண மாகிறாள் பூர்ணிமா. அந்தி சாயும் நேரம். குளிர்மையான காற்று மோத மனம் பரவசத்தில் துள்ளாட்டம் போடுகிறது.

பிறகு இருக்காதா? போனவாரம் தான் பெண் பார்த்துவிட்டு போனவர்கள் நிச்சயதார்த்தம் செய்ய சம்மதம் சொன் னார்கள். மாப்பிள்ளை விமல் களையான முகம். அழகு தொழில்வளம் அதிகமாகவே இருந்தது.அனைவருக்கும் பிடித்த சம்பந் தம்தான்.

இருவரும் பேசிக்கொள்ளவும் செய் தார்கள். மகிழ்ச்சிக்கு குறைவில்லாமல் இருந்தது. வீட்டிற்குள் நுழைந்ததும் அந்த பரவ சங்கள் எல்லோரிடமும் இருந்தது.

பூர்ணிமா அரச அலுவலகத்தில் வேலை செய்பவள். அன்றும் வழமைப் போல பணிமுடித்து வீடு திரும்பும் வேலை யில் தன் அலுவலக நண்பன் கதிருடன் பேசியப்படி பேருந்திற்காக காத்திருக்கி றாள்.அந்த பேச்சை ஊடறுக்கும் விதமாக ஒரு கார் நிற்கிறது. அதற்குள்ளிருந்த மாப்பிள்ளை விமல் இவர்களை ஏற்றிக் கொண்டு புறப்படுகிறார். பேச்சுகள் முடிந்து அவரவர் இடங்களில் இறங்கி கொள்கின்றனர். தொடர்ந்து மாப்பிள்ளை விமல் சில இடங்களில் பூர்ணிமாவை ஏதேர்சையாக சந்திப்பதும் பேசுவதும் தொடர்ந்தது.

நிச்சயதார்த்த நாளும் வந்தது.வீடே கோலாகலமும் சந்தோஷம் பூண்டது

அலங்கார பதுமையாக ஜன்ன லோரம் அமர்ந்திருக்கும் பூர்ணிமாவை சில குரல்கள் துளைக்கிறது. அது மாப்பிள்ளை விமல் அவரது அம்மாவின் ரகசிய குரல்கள்.

அம்மா கொஞ்ச நாட்களாவே பூர்ணிமாவ பின்தொடர்ந்து பார்த்துட் டேன். பெரிசா நண்பர்கள் இல்லை. இருக்கிற இரண்டு மூனு பேரையும் மெதுவா தட்டிவிட்டுறலாம். மற்றபடி நல்ல பொண்ணாதான் தெரியுறா.ஏதாவது கோளாறு செய்தா கல்யாணத்துக்கு பிறகு அடக்கி வச்சிட வேண்டியதுதான்

ஆத்திரத்தில் மனம் கொதிக்க வெளியே வந்த பூர்ணிமா விமலிடம் வருகிறாள்.

மிஸ்டர் விமல். ஆக என்னையே சுத்தி சுத்தி வந்தது என்னை வேவு பார்க்கத்தான் இல்லையா? மணவாழ்க் கைக்கு அடிப் படையே நம்பிக்கைதான். அது இல்லாட்டி நரகம்தான். உங்களோட வாழப்போற வாழ்க்கையில் எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்க போகலாம் என்றுவிட்டு வீட்டிற்குள் போகிறாள். மகளின் விருப்பம்தான் சரி என்பதுப்போல அவளை பின்பற்றி மற்றவர்களும் கலைந்து போகிறார்கள். ■

# சிவப்பு நாற்காலி




## மைதிலி சம்பத்

**செகந்திராபாத் - 15**


“மருதைய்யா, ஒன்ன தலைவர் கையோடு கூட்டியாரச் சொன்னாருப்பா, புறப்படு « என்று சேக்காளி ரத்தினம் வந்து கூப்பிட்டதும் மருதைய்யன் குஷியாகப் புறப்பட்டான். தலைவர் அவ்வப்போது இவன் ஏதாவது வேலை முடித்தால் மறு நாள் சீமைச் சரக்கு கொடுப்பது வழக்கம் தான். ஆனால் அந்தக் குஷியெல்லாம் புஸ்ஸென்று பொங்கின பாலில் நீர் தெளித்தமாதிரி அடங்கிவிட்டது, ரத்தினம் சொன்னதைக் கேட்டதும். விசிலடித்துக் கொண்டே தன்னோடு வந்த மருதையனைப் பார்த்ததும்என்னதோன்றியதோஎன்னவோ உண்மையை உடைத்துக் கூறிவிட்டான் ரத்தினம்.

“தலைவர் ரொம்ப கோவமா இருக்காருப்பா, சாக்கிரத என்றான்.

“இன்னாத்துக்கு?” என்று கேட்டான் மருதைய்யன்

“எனக்கும் புரியல்லேயப்பா, போனாத் தெரிஞ்சுபோவுது” என்றான் ரத்தினம். இருவரும் வேகமாகத் தலைவரின் அலுவலகத்தை அடைந்தனர்.

“வாங்க, தொரை, மருதைய்யா தொரை, வாங்க” என்றபடி இவன் எதிர்பாராதபோது இவன் முகத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார் தலைவர். இவனுக்கு உலகமே தட்டாமாலை சுற்றியதுபோல் இருந்தது. ஒன்றுமே புரியவில்லை

“தலைவரே, நான் என்னா பண்ணினேன்?” என்று கேட்டான் கன்னத்தைத் தடவியபடி.

“ஒண்ணும் புரியல்லையோ ஐயாவுக்கு” என்றபடி இரண்டு, மூன்று போட்டோக்களை இவன் முன் வீசி எறிந்தார். அதைப் பார்த்ததும், இவனுக்குப் புரிந்ததும், புரியாததுமாக இருந்தது.

“ஏண்டா, கை நிறைய பணம் வாங்கிக்கிட்டு, நல்லா தண்ணியடிச்சுட்டு, சிக்கன் பிரியாணியும் அதுவுமாய் வெட்டிட்டு ‘என் சிநேகிதர்களை அழைத்துப் போய் அந்த இடத்தை உண்டு, இல்லைன்னு ஆக்கிடறேன்’னு சொல் லிட்டு போனியா இல்லியா? இந்த போட்டோவைப் பாரு, ஒரு நாற்காலி யாவது உடஞ்சிருக்காடா?

போலீசு பார்த்துட்டு கலாட்டாவே நடக்க லைன்னுட்டாங்களாம். அதான் நாற்காலி வரிசை கூட கலையல்லையே, வேறே என்ன சொல்லுவாங்க” என்றார் தலைவர் கோபத்துடன்.

“இல்லை தலைவா! மைக்கு, விளக் கெல்லாம் தூள்தூளாக்கிடோமில்லே. என்னைக் கூட சோடா புட்டி குத்திடுச்சி, பாருங்க . இது பிளாஸ்டிக் நாக்காலியா, ஒடைக்க வரலே'' என்றான்.

''பேசாதேடா இலவெடுத்தவனே! நீ இதுவரைக்கும் பிளாஸ்டிக் நாக்கா லியை ஒடச்சதில்லே? இப்ப என்ன வந்திச்சு உனக்கு? தண்டச் சோறு, விளங்காதபயலே! போ, இனிமே எங்கிட்டே வராதே'' என்றார் தலைவர்.

மருதைய்யன் தலை குனிந்து கை கட்டி நின்றிருந்தான்.

''டேய், ரத்னம் இந்த வெறும் பயலை இழுத்துகிட்டுப் போடா. கோவத்திலே ஏதாவது செஞ்சுடப்போறேன். ஒரு எதிர்க் கட்சி கூட்டத்திலே கலாட்டா பண்ணத் துப்பில்லை. இவனையெல்லாம் நம்பி அரசியல் பண்றோம், பாரு! போடா, மொதெல்ல இங்கிருந்து'' என்று கோபித் தார் தலைவர்.

வெளியில் வந்ததும் ரத்னம், இவனை பூட்டியிருந்த வீட்டு வாசலில் விட்டுவிட்டுத் தன் வழியே போக, இவன் திண்ணையில் உட்கார்ந்து தன் பெல்ட்டிலிருந்த மணிபர்ஸை எடுத்துத் திறந்தான். அதில் ஒரு பக்கம் பூரா இருந்த போட்டோவில் அவன் பெண் காமாட்சி அழகாகச் சிரித்துக் கொண்டு ஒரு சிகப்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

பார்த்ததும் இவனுக்குக் கண் கலங்கி விட்டது. இவனுக்கு ஒரத்தநாடு சொந்த ஊர். பெண் எடுத்ததும் அங்கேயே தான். ஒழுங்காக இருந்தவன் தான். பட்டணத்துக்குப் போய் பெரிய வேலை பார்க்கணும்னு ஒரு நாள் திடீ ரென்று தோன்றவும், வந்துவிட்டான் சென்னைக்கு.

பிழைப்புக்கு வழி பிறக்க வில்லை. இவர்கள் ஆசைப்பட்டமாதிரி ஒரு குழந்தை யும் பிறக்கவில்லை. கடைசியில் கட்சியில் தொண்டனாக ரௌடித்தனம் பண்ணு வதே பிழைப்பாயிற்று. கூடவே மொடாக் குடியனாகவும் ஆகிவிட்டான்.

அவன் மனைவி காவேரி மாங்காடு போய், விடாதபிரார்த்தனையும், வலம் வருதலுமாகவே இருந்தாள். காலப் போக்கில் இவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவனுக்குக் கூடப் பிறந்தவர்கள் எவருமில்லாததற்கு அந்தக் குழந்தையை தலை மேல் வைத்துத்தான் கொண்டாடி னான். காமாட்சி என்று பெயர் வைத்தனர். குழந்தை கொள்ளை அழகும் சுட்டிப் பேச்சுமாய் வளர்ந்தது.. நயினா, நயினா என்று இவனிடம் உயிரையே வைத்திருந்தது. இவன் வீட்டிற்கு வந்ததும் காலைக் கட்டிக் கொள்ளும். “எனக்கு என்ன வாங்கிவந்தே'' ன்னு கேட்காது. “நீ சாப்பிட்டியா நயினா, வா, வந்து சாப்பிடு» என்று தான் கேட்கும். இவன் குடித்துவிட்டு வந்திருந்தாலும் நாற்றத்தைக் கூட பொருட்படுத்தாது. இவன் யாரையாவது அடித்துவிட்டு, தானும் சின்னக் காயத் துடன் வீட்டிற்கு வந்தால், “நயினா, வலிக்குதா?'' என்று தடவி விடும். ஆனால் இந்த பாழாய்ப்போன குடிப் பழக்கத்தால் எப்போதும் கணவன் மனைவிக்குள் சண்டைதான். ஆமாம், வருவதையெல்லாம் குடித்துத் தீர்த்தால். வீட்டு செலவுக்கு என்ன செய்வது ?

குழந்தையை ஓரளவு நல்ல பள்ளிக் கூடத்தில் சேர்த்தான். அது சமர்த்தாகப் படித்தது. இரண்டாம் கிளாஸ் வந்துவிட்டது. “நயினா, படிக்க தோதா எனக்குமேசை,நாற்காலி வேண்டும்' என்று கேட்டுக் கொண்டே இருந்தது. எங்கே, இவனால் வாங்கவே முடியவில்லை.

கடைசியில் வீட்டின் பின்னாடி இருந்த ஒரு சின்ன திண்ணையை மேசையா ஆக்கிக் கொள்ளச் சொல்லி, ஒரு நாற்காலி மட்டும் வாங்கி வந்துவிட்டான். குழந்தைக்கு சிகப்புதானே ரொம்பவும் பிடிக்கும் என்று அந்தக் கலரில் வாங்கியிருந்தான். அந்த நாற்காலி அம்சமாக இருந்தது. காமாட்சிக்கு அதுவே பரம சந்தோஷம்.. அவளுக்குத் தெரிந்த அக்கம்பக்கத்து பெண்கள் எல்லோரையும் கூட்டிவந்து தன் சிவப்பு நாற்காலியை காட்டி, « எங்க நயினா எனக்காக வாங்கிவந்ததாக்கும்» என்று பீற்றிக் கொள்வாள். "நயினா, இப்ப என் கையெழுத்து எவ்வளவு அழகா இருக்கு. பாரு!'' என்று காண்பித்து மகிழ்ந்துபோவாள். அந்த நாற்காலியை துடைத்துதுடைத்துவைத்துக்கொண்டாள். அதில் மேல்பக்கத்தில் காவேரி, காமாட்சி அம்மனின் சின்ன போட்டோ ஒன்றை ஒட்டி வைத்திருந்தாள். அவனை மட்டும்தான் காமாட்சிப் பொண்ணு "இதிலே வந்து ஒக்கார்ந்துக்கோ, நயினா" என்று சொல்லும். வேறு யாரையும், ஏன், காவேரியைக் கூட உட்கார விடாது. தான் பள்ளிக்கூடம் போகும் முன்னும், ராத்திரியிலேயும் நினைவாக அந்த நாற்காலியைத் தூக்கமாட்டாமல் தூக்கி உள்ளே போட்டுவிடும்.

அவளை அதில் உட்காரவைத்து இவன் தன் சிநேகிதனிடம் சொல்லி போட்டோ எடுத்திருந்தான். ஒரு வாரம் முந்தி ஒருநாள் தலைவர் கொடுத்த பணத்தில் கொஞ்சம் அதிகமாகவே சரக்கு ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு வர பெரிய சண்டையாகிவிட்டது. மனைவி காவேரியை நன்றாகவே அடித்துவிட்டான். அவளும் குழந்தை காமாட்சியைக் கூட்டிக் கொண்டு ஒரத்தநாட்டிற்குப் போய்விட்டாள். ஏதோ சகவாசம் இப்படி ஆகியிருந்தாலும், இவனுக்கு பெண்டாட்டிமீதும், பெண் மீதும் ரொம்பவே பிரியம் தான். இப்போது வீட்டுக்கு வரவே பிடிக்கவில்லை. வந்தால் சிகப்பு நாற்காலி கண்ணில் படும். குழந்தையின் நினைவு வந்து அவனைப் பாடாய்படுத்திவிடும். எப்படியோ ஒரு வாரத்தைக் கஷ்டப்பட்டு கழித்துவிட்டான். நேற்று அந்தக் கூட்டத்தில் எல்லாமே அழகான சிகப்பு நாற்காலிகள். இவனுக்கு எப்படி உடைக்க மனம் வரும்.? ஒவ்வொரு நாற்காலியிலும் ஒவ்வொரு காமாட்சி தெரிந்தாள். தானும் ஒரு நாற்காலியைக்கூட உடைக்கவில்லை, தன் ஆட்களையும் உடைக்க விடவில்லை.

காவேரியும், பொண்ணும் இல்லாதது வீடே வெறிச்சொடியிருந்தது. வயிற்றில் பசி பிடுங்கியது. முகத்தில் அந்த ஆள் அறைந்தது கன்னம், தாடை, பல், உதடு என்று மொத்தமும் வலித்தது. கையில் கண்ணாடி கிழித்ததுவேறு குத்துவலி.

''சீ, இந்த நாற்றம் பிடிச்ச பொழைப்பல்லாம் ஒரு பிழைப்பா? என் காமாட்சிப் பொண்ணைக் கூட எனக்கு தூரமாக்கிடிச்சே? இன்னியோட இந்த குடி, அடிதடி எல்லாத்தையும் விட்டுட்டேன். இது இரண்டு காமாட்சி மேலேயும் சத்தியம்." என்று பெண்ணின் சிகப்பு நாற்காலியில் ஒட்டியிருந்த மாங்காடு காமாட்சியின் படத்தின் மேல் சத்தியம் செய்தான்.

காலையில் ஒரத்தநாட்டிற்கே வீட்டைக் காலி பண்ணிக் கொண்டு கிளம்பி விடணும்.. குழந்தையோட சிகப்பு நாற் காலியை கோணிபோட்டு நல்லா தைச்சி கீறல் விழாமே எடுத்துகிட்டு போகணும். யாரிடமாவது கையகல நிலம் வாங்கி கறிகாய்த் தோட்டம் போட்டுப் பிழைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தபடியே விடிவதற்காகக் காத்துக் கொண்டு விழித்துக் கொண்டே படுத்துக் கிடந்தான். ■

**ஹைக்கூ**

வெட்டப்படும் மரங்கள்
மெல்ல ஓய்ந்து வரும்
பறவைகளின் ஒலி

வஃபீரா வஃபி



# தாய்த் திருநாடு



விஜி கிருஷ்ணன்

அன்று குமரனுக்கு சஷ்டியப்பூர்த்தி, கல்யாணம் அவர் எவ்வளவு மறுத்தும் கேட்காமல் பிள்ளைகள் கொண்டாட்டங்கள்.. விருந்து என தடபுடலாக ஏற்பாடு செய்ய குமரனும் மல்லிகாவும் மணையில் அமர...

மேள, தாளங்கள் முழங்க மந்திரங்கள் ஓத, ஐயர், 'குடும்பத்துல இருக்க பிள்ளைங்க.. மருமகள்ங்க எல்லாம் கும்பத்துல உள்ள தண்ணிய, சுத்தி வந்து ஜல்லடைல ஊத்துங்கோ.' என சொல்லி கொண்டிருக்க..

குமரனின் பேரன் சுதீஷ்..தாத்தா.. தாத்தா பெரிய தாத்தா வையும் கூட்டிட்டு வரவா என ஓட....

இருடா சேர்ல உக்கார வச்சி மெல்ல தள்ளிட்டு வாடா என மல்லிகா கத்த... அவன் ஓடிச்சென்று அவர் அறையில் எட்டி பார்த்தான்...

பெரிய தாத்தா பாலா எனும் பாலக்கிருஷ்ணன் கட்டிலில் படுத்திருந்தார். 95 வயதில் பேசவும் சாப்பிடவும் இயலும்.. ஆனால் நடக்க முடியாது... அவரை வீல் சேரில் உட்கார வைத்து வெளியே கூட்டி வந்தான் சுதீஷ்.

ஐ..பெரிய தாத்தா என கொள்ளு பேரன் கள்.. பேத்திகள் புடை சூழ சற்றே கண்களை இடுக்கி தன் பெரிய மகன் குமரனை பார்த்து இரு கைகளாலும் ஆசீர்வதித்தார்...

குடும்பம் முழுவதும் ஒன்று கூடி குதூகலித்திருக்க... சே... தமயந்தி இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என நினைவுகளை பின்னோக்கினார்...

அவருக்கு 25 வயதாக இருந்த போது தமயந்தியை கைபிடித்தார்.. அவளை சந்தித்த முதல் நாள் நினைவில் வந்து கண்களை கண்ணீர் மறைத்தது..

பாலாவாகிய அவர்... அகிலன்.. முகமது கருப்பன் முத்தையா இன்னும் சில தோழர்களுடன் ரயில்வே தண்டவாளத்தில் குண்டு வைத்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் மறைந்திருக்க. ஆளும் ஆங்கிலேயர்களுக்கான ஆடைகள்.. விலை உயர்ந்த மதுபானங்கள்... மற்றும் சில முக்கிய பொருட்களை ஏற்றி வந்த கூட்ஸ் ரயில் வெடித்து சிதற... பாலா தன் கூட்டாளிகளுடன் பறந்து சென்று ஒளிந்து கொண்ட போதிலும் ஆங்கிலேயரால் இரண்டே நாட்களில் பிடிபட்டனர்..

சிறையில் இருந்து கோர்ட் டுக்கு அழைத்து சென்ற வாகனத்தில் 30 ஆண்கள் மத்தியில் ஒரே ஒரு பெண் மகாத்மா காந்தியின் இயக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட 11 ஆண்களுடன், ஒரே ஒரு பெண் அதுவும் சிறுவயது, தமயந்தியை பார்த்தான் பாலா...

அவனுக்கு ஒரே ஆச்சரியம்.. சிறை செல்லும் பயமோ... இத்தனை ஆண்களுடன் பயணிப்பதோ.. போலீஸ் கையில் இருக்கும் துப்பாக்கியோ.. லத்தியோ எதைக்கண்டும் பயந்திடாத தீர்க்க மான கண்கள்... துணிச்சல் மிகுந்த வீராங்கனையை பாலா விரும்பி யதில் ஆச்சரியம் ஏதும் இல்லை..

ஒருவருட சிறைவாசம்... வெளி

யில் வந்தும் அவனும் அவனுடைய கூட்டமும்வெள்ளை யர்களை விரட்டி அடிப்பதிலேயே குறியாக போராட்டங்கள் புரட்சிகள்.. ஊர்வலங்கள் என... இருந்த போது மறுபடி யும் தமயந்தியை ஒரு ஊர் வலத்தில் பார்த்தான்..பாலா.

ஊர்வலம் சென்று கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கும் போது தமயந்தி யிடம், ஏ பொண்ணு உனக்கு போலீஸ் பயம் எல்லாம் கொஞ்சம் கூட இல்லையா? நான் ஏன் அவங்களுக்கு பயப்படணும், இது என்னோட நாடு, இங்க வந்து நம்மளையே அதிகாரம் பண்ற அவங்க தான் பயந்து ஓடணும், நான் இல்ல,

அப்பாடி, மூச்சு விடாம அனல் தெறிக்கும் பேச்சு, எனக்கு உன்ன ரொம்ப பிடிச்சிருக்கு, நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?

மற்ற சாதாரண பெண்களை போல் இதை கேட்டதும் நாணி கோணவில்லை, பாலா வின் கண்களை நேராக பார்த்து, எனக்கும் உங்கள பிடிக்கும், ஆனா நம்ம கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அதுக்கு அப்பறம் அடுப்படில சமைச்சு போட்டு, குழந்தைகள் பெத்துக்கிட்டு, சுயநலமா வாழ மாட்டேன், நம்ம இந்தியா முழு சுதந்திரம் அடையற வரைக்கும் போராட்ட களத்துல தான் நம்ம வாழ்க்கை இருக்கும், பரவாயில்லயா?

பாலாவின் கோரிக்கைகள்.. அவன் தலைமையில்ஒருகூட்டம்சதாசர்வகாலமும் நாட்டின் விடுதலை பற்றிய பேச்சு... தமயந்தியை ஈர்க்க... இருவருக்குள்ளும் காதல் மலர்ந்தது, திருமண பந்தத்தில் நுழைய முடிவு எடுத்தார்கள். சேர்ந்தே விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது போதுமே பாலாவுக்கு, தோழர்கள் புடை சூழ எளிய திருமணம் அதைத் தொடர்ந்து, போராட்டங்கள், காட்டில், சில நாட்கள், தெரிந்த தோழர்கள் வீட்டில் என சிலகாலம் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள்.

முடிவில் இந்தியா சுதந்திர நாடாக அறிவிக்க... இருவரும் ஆசிரியர் பணியில்... அமைதியாக வாழ்ந்து மூன்று குழந்தைகளை பெற்றனர். பெரியவன் பெயர் திருப்பூர் குமரன் நினைவாக குமரன்... அடுத்த பெண் இந்திரா.. அடுத்தவள் காந்தி மதி.

ஒவ்வொரு ஆகஸ்ட் 15 ம் திருவிழா தான் பாலா குடும்ப த்திற்கு. .ஏழைகளுக்கு அன்னதானம், வசதி இல்லாத குழந்தை களுக்கு புத்தகங்கள், நோட்டுகள், எழுது பொருட்கள் வாங்கி கொடுப்பது, ஏழை பெண்கள் திருமணத்திற்கு உதவுவது, பாரத மாதாக்கு ஜே, என்ற கோஷம் வானை எட்டும்.

தமயந்தி மூன்று குழந்தைகளுடன் கொடியேற்றி மகிழ... போராட்ட வாழ்க்கையில் இணைந்த இருவரும் அமைதியான வாழ்க்கை வாழ்ந்த திருப்தி யில். ஒரு பத்து ஆண்டு களுக்கு முன் தமயந்தி தன் இயக்கத்தை நிறுத்தி கொள்ள... பாலா இரண்டு வருடங்களாக நடக்க முடியாமல்... தமயந்தியின் பிரிவு துயரும் வாட்ட படுத்த படுக்கை ஆகிவிட்டார்.

தாத்தா தாத்தா சாப்பிட வாங்க என்ற குழந்தை களின் சத்தம் கேட்டு தன் நினைவு களில் இருந்து தன்னை விடுவித்து கொண்டார்.

மறுநாள் உறவினர் கள் ஒவ்வொரு வராக ஊருக்கு கிளம்ப...குமரன் அப்பா கிட்ட சொல்லிட்டு போங்க என்று எட்டிப்பாத்தார், ஆனா அப்பா இன்னும் எழுந்திரிக்கலயே...

இதோ நான் எழுப்பறேன் என்று இந்திரா அப்பா வின் அருகே செல்ல அவர் மூச்சு விட சிரமப்படுவது பார்த்து, குமரா அப்பா க்கு உடம்பு முடியல உடனே டாக்டருக்கு போன் பண்ணு,

குமரன் போன் செய்தார்.

டாக்டர் செக் செய்து பார்த்து விட்டு பல்ஸ் ரொம்ப இறங்கி ட்டே வருது...3,4 மணி நேரம் தான்... தாங்கும். எல்லாருக்கும் சொல்லி டுங்க என்று சொன்னது பாலா வின் காதிலும் விழ.

குமரனை சைகையால் அருகில் அழைத்தார்... அப்பா என சற்றே மனம் கலங்கி அவர் கைகளை பற்றி கொள்ள சற்றே சிரமப்பட்டு பேசினார்... குமரா நான் ஒன்னு சொல்வேன்.. நீ கோவிச்சுக்க கூடாது..

என்னப்பா சொல்லுங்க..

ஒன்னுமில்ல உன் மூத்த பையன் எனக்கு எந்தவித சடங்கும் பண்ண கூடாது..

அப்பா ஏம்ப்பா.. அவனுக்கு உங்கள பிடிக்குமே...

அதுக்கில்லப்பா...நாங்க.. எனக்கு முன்னாடி பல பேரு உயிர கொடுத்து ரத்தம் சிந்தி இந்த நாட்டை மீட்டோம்.

ஆனா அவனோ அமெரிக்கா போய் ஆங்கிலேயர்களுக்கு அடிமையா, அவங்க கம்பெனி ல .. வேல செய்றான்

நான் எவ்வளவு சொல்லியும் நீயும் அவனும் பணம் சம்பாதிக்கறதுலேயே குறியா இருந்தீங்க...

தமயந்திக்கும் இது பிடிக்கலப்பா..

ஜெய்... ஹி... ந்... த்... என்று சொல்லி உயிர் விட... அவர் ஆசையை குமரன் நிறைவேற்றினார்.இனிமேல் தன் பையனை அங்கு அனுப்புவதில்லை என்ற முடிவுக்கு வந்தாலும், அதனை கேட்டு மகிழ அப்பா இல்லை, இருந்தாலும் அவர் ஆன்மா சாந்தி பெறும்.

பாரத மாதாக்கு ஜே...

# மறவாதே..!

கூவும் குயிலே ஆடும் மயிலே
என்ன சொல்கிறாயோ..?
மலரும் மலரே அசையும் கிளையே
என்ன சொல்கிறாயோ..?
உந்தன் மொழியும் உந்தன் செய்கையும்
புரியவில்லையே..!

மனிதனிடம் என்ன செய்தி
சொல்ல முனைகிறாயோ..?
ஈரமற்ற மனித நெஞ்சில் - அன்பை
விதைக்க நினைக்கின்றாயோ..?

பணத்தின் பின்னால் ஓடும் - மனிதன்
நேரமின்றி தவிக்கிறானே..!
நிம்மதியில்லா - மனிதன்
நித்திரையை தொலைக்கிறானே..!

இருக்கும் வரையில் - இப்போது
வாழ்க்கை புரியாதே... !
வாழ்வை புரியும் போது - மரணம்
உன்னை வாழ விடாதே..!

ஓடி ஓடி உழைத்து - வாழ்வை
தொலைக்காதே..!
கால நேரம் பொன்னானது
சிந்திக்காமல் வாழ்ந்திடாதே..!
இன்று போல் நாளையும் - வாழ்வு
அமையாதே..!

பொய்களோடும் பொறாமையோடும் -
நீயும் பழகாதே..!
பகைமையோடும் வஞ்சகத்தோடும்
நாளும் வாழாதே..!
நாளை உனது சந்ததியை தாக்கும்
என்றும் மறவாதே..!

**மஜினா**

# வையம் வளம் பெற செய்யும் சக்தி பொருளாதாரம்..

## ம. சக்திவேலாயுதம் நெருப்பு விழிகள்

உலகம் செய்த உன்னதத் திருமணம்
பொருளாதாரம்...
பொருளுக்கு மூன்று முடிச்சு போட்டு
தாரமாக்கி தரமாக்கி
நம் வாழ்விற்கு ஆதாரமாக்கி
வாழ்வாதாரமாக்கி
மாபெரும் சக்தியாக்கி
வையத்தை உயர்ந்து நிற்க வைக்கும்!

நாடுகள்
பொருளாதாரத்தோடு இணங்கி
வாழ்ந்துண்டால் வாழ்வுண்டு...
இல்லையேல்
வீழ்ச்சியே நித்தமும் உண்டு!

பொருளாதாரம்
அச்சம் கண்டு ஓடும்..வீழும்
எப்போது என்பது உங்கள் கேள்வி?
நாடுகள் உயிர்களை துச்சமென மதிக்கும்
போர்க்காலச் சூழலில்..
சுரண்டலில்...
அடிமையாய் பார்க்கும் பார்வையில்!

பாரதி கண்ட
பண்ட மாற்று முறை
இன்றைய
நவீன பொருளாதாரத்தின்
எளிய தத்துவம்...

சூழல் பொருளாதாரத்தின்
ஆணிவேர்...
புவியியல் பொருளாதாரத்தின்
முக்கிய வரைபடம்...
இயற்கை வளம் பொருளாதாரத்தின்
அடிப்படைக் காரணி!

வையத்து நாடுகள் எல்லாம்
வளமாக வாழ்ந்து நிற்க
பொருளாதாரம் ஒன்றே போதும்
தத்தம் பொருளாதாரம்
நுகர்வால் சேமிப்பால் முதலீட்டால்
உயர்ந்து நின்றால் போதும்!

அளவீடுகள் வைத்தே
அளக்கப்படும் பொருளாதாரம்
நாம் அழைத்தால்
உயர்ந்து விடுவதில்லை...
உள்நாட்டு உற்பத்தியால் மட்டுமே
மலைபோல் உயர்ந்து நிற்கும்!

வையத்தின் பொருளாதாரம்
உலக வங்கியால்
அளவிடும் போதெல்லாம்
சில நாடுகள் முன் நிற்கும்...
பல பின் நிற்கும்..
இயற்கைவளம் அதை தீர்மானிக்கும்!

மனித வளம் பொருளாதாரத்தை
பொங்க வைக்கும்...
வேலைவாய்ப்புகள் அதை
தக்க வைக்கும்...
வர்த்தகம் அதை நிலைத்து
உயர வைக்கும்!

பொருளாதாரக் குறியீடுகள்
புரிந்தவருக்கு
கலங்கரை விளக்கம்..
புரியாதவருக்கோ
மாபெரும் விடுகதையின் தொடக்கம்!

பங்குச்சந்தைகளில் முதலீடு...
தங்கத்தில் முதலீடு...
என நீண்டு கொண்டு போகும்
வர்த்தகங்களில்
வற்றாத பொருளாதார நாடுகள்
இங்கே பல உண்டு!
வற்றிப்போனவையும்
சில உண்டு!

உலகமே பொருளாதார
நிதி நெருக்கடியில்
தத்தளித்த நேரத்தில்
இந்திய தேசமே
கம்பீர நடை போட காரணமான
பொதுத்துறை வங்கிகள்
நம் பொருளாதாரத்தின்
புதையல்களன்றோ?!

இன்னும் சொல்லலாம்
பொருளாதாரத்தின் பொக்கிஷங்களை..
தொழில்துறை ஒரு பக்கம்..
விவசாயத் துறை ஒரு பக்கம்..
சேவைத் துறையும் ஆய்வுத் துறையும்
மறுபக்கம்...
எல்லாம் பொதுத் துறையாய் இருந்தால்
பொருளாதாரம் இன்னும் இன்னும்
பூத்துக் குலுங்கிடும்!
வையம் செழித்து வளர்ந்திடும்...

முண்டாசுக்கவியின் ஒருமைப்பாட்டை
விதையாய்த் தூவிடுவோம்..
வங்கத்து நீரினால்
நாடு கடந்த விவசாயம்
எட்டு திசைகள் சென்றும்
நியாயமான வியாபாரம்...
உயர்ந்து நிற்போம்
நம் பொருளாதாரம்
உயர்த்தி நிற்போம்!

எளிய மக்கள் அறிவார்கள்
தன் வரவு செலவும்
பொருளாதாரம் என்று...
நடுத்தவர மக்கள் புரிவார்கள்
தன் சேமிப்பும் கடனும்
பொருளாதாரம் என்று...
செல்வமிக்க மக்கள் உணர்வார்கள்
தன் முதலீடும் வர்த்தகமும்
பொருளாதாரம் என்று...
உலகம் உணர்கிறது
மக்கள் மட்டுமே
தனது நிரந்தர பொருளாதாரம் என்று!



# இரயில் பயணங்களில்..!

நம் கடந்த கால நினைவலைகள்,
எதிர்கால எல்லையில்லா கனவுகள்,
நிகழ்கால எதிர்பார்ப்புகள் என்று
அனைத்தும் சுமந்தபடி
அம்சமாய் அசைந்தாடி வருகிறது இரயில்....!
இணையா பாதையில் நம்
இதயங்களை இணைக்க
முயற்சிக்கிறது இனிய இரயில் ..!
தொடர்ச்சியாக உன் நினைவுகளை
இதமாய் அள்ளி தெளித்து
தெம்மாங்கு பாடிச் செல்கிறது தொடர்வண்டி..!
இயற்கையை ரசிக்கச் சொல்லி
கால அவகாசம் கொடுத்தது
இந்த இனிய இரயில் பயணம்..!
கடக்கும் பாதையில்
களங்கமில்லா
உன் நினைவுகளுடன்
இந்த இனிய பயணம்
தவமே இல்லாத வரம்..!!!

சூர்யா. பா

# புரிதல்கள்

பகுதி 6



திருப்தியே மனநிம்மதி. மனமே எல்லாவற்றினதும் மூலம். அதன் உயிர்ப்பே உடலின் இயக்கம். மனம் உறுதி பெற்றெழுந்தால் ஞானம் கிடைக்கும். மனித உள்ளமே ஒரு அதிசயம்தான். விருப்பும் வெறுப்பும் அன்பும் கோபமும் அதற்குள் ஒளிந்திருக்கின்றன. மனதை வெல்வது வாழ்வின் வெற்றி, ஒளி, பலம் என எல்லாம். மனதை ஒருமுகப்படுத்தினால் நாம் செய்யும் செயலில் கரைகாணலாம். மனமே மிக துணிவும் செறிவும் நிறைந்த பகுதி. அதில் தான் கவனமும் அவதானமும் தேவை.

மனதை வெற்றிகொள்வதில் நிலைபெறுகின்ற மகிழ்ச்சிக்கு அளவேதுமில்லை. மகிழ்வின்றி நிம்மதி எங்கனம் கிடைக்கப்போகிறது? மனதை கட்டுப்படுத்தி, திடப்படுத்தி வாழ்வதில் வாழ்வின் லயமும் சுகமும் உணரப்படுகிறது எனலாம். வாழ்வொழுங்கில் வீரியம் நிறைந்து காணப்படுவதே ரம்மியமான மனவொழுங்கின் தகுதிநிலையில்தான். வாழ்வை வடிவமைப்பதில் பெரும்பங்காற்றுவது கூட மனம்தான். மனம்போல வாழ்க்கை என்பார்கள். மனம்தானே வாழ்க்கையை கடக்க கிடைக்கும் யத்தனம். சாதனம். படகு. இன்னும் பல.


• முஷ்தாக் அஹ்மத்

இலங்கை

கிடைக்கின்ற தகுதிகளை வைத்தே நிலைக்கின்ற உறவுகள் குறித்து கவனம் தேவை. பெறுமானம் அளிக்கும் அனுமானிப்பில் தான் தன்மானம் நிறைந்திருக்கிறது. மதிக்கும் குணத்தில் தான் மணக்கும் உறவுகள் கிடைக்குமே அன்றி மறக்கும் நிலையில் மகோன்னதம் கிடையாது.

உறவின் விரிசல்களில் கடைத்தேற்றி மெருகேற்றப்படும் புதிய பரிமாணங்கள் குறித்த அலசலும் ஆராய்வும் அவசியம் உறவின் புரிந்துணர்வில் மிகத்தேவை எனலாம். உறவின் விசாலத்திற்கும் வீரியத்திற்கும் மனங்களின் அகலங்களும் நீளங்களும் அளக்காமல் திறந்துகொடுக்கப்படும் போதுதான் தரமாகவும் உரமாகவும் கடைக்கோடி மட்டும் தொடரக்காரணமாக அமையும்.

வாழ்வமையக் காரணமான உறவுகளின் நெருக்கமும் உருக்கமுமே மனிதனை சகபாடிகளுடன் சந்தோசமாக வாழ வழிசமைத்து கொடுக்கின்றன என்றால் அது மிகையாகாதே. வாழ்வினை நிரப்பமாக கடக்க துணைசேர்க்கும் சகலவற்றுக்கும் லாவண்யமாக ராகலயம் கூட்டி மீளிணைப்பில் பிணைக்கும் பக்குவம் ஆத்மார்த்தமாக கலக்கின்ற உறவுகளுக்கே சரியாகப் பொருந்தும்.

•

மனம் கவலைகளை எதிர்கொள்கின்ற சூழ்நிலைகளை கடக்க நேர்கின்ற பொழுதுகளில் ஒரு தனிமையை மனம் பெற்றுக் கொள்ள முனைவது குறித்த அவதானம் தேவை. மனதின் தனிமைக்கு தீனி எதுவென்றால் அதை வெல்வதுதான். மனதை வெல்லும் மனிதனே தன்னை வென்றவனாகிறான். மனமும் மனிதனும் சதாவும் போட்டா போட்டி போடும் இருதுருவப்போர்கள். ஒன்று வென்றால் ஒன்று தோற்கும். ஒன்று தோற்றால் ஒன்று வெல்லும். எது நடந்தாலும் விதி அறிந்து செயல்படுதலே சாலச்சிறப்பு.

மகோன்னதத்தின் நிலைக்கு எத்தனிக்கும் எவரும் மனதின் தனிமையை வெற்றி கொள்வதே காலத்தின் கட்டாயம். கவலை ஆட்கொள்ளும் உலகை தவிர்த்து மனதை திடப்படுத்தி வாழ திடசங்கற்பம் பூணுவோம்.

•

## வாழ்க்கை நிலையற்றது,

குத்திக் கிழித்தால்
இரத்தம் வரும் என்பதற்காக
வெட்டாமல் கொடுக்குமா
மூங்கில் மரம்
புல்லாங்குழலை,,,

யாரையும் அவன்போறான்
குப்பையென
கேவலாமத் திட்டாதீர்கள்
குப்பைதான் எருவாகி
உணவே நமக்கு மருந்தாகிறது,,,

வேஸ்ட் என்று இங்கு
எதுவுமில்லை
அசுத்தமான இயந்திரங்களை
சுத்தம் செய்யவே
அவசியப்படுகிறது,,,

ஆகாதுயென்று
நம்மால் ஒதுக்கப்படுவதுதான்
மறுசுழற்சி முறையில்
நம்ம மனையை
அலங்கரிக்கிறது,,,

மனிதர்களை நேசிப்போம்
பிடிக்கவில்லையென்றால்
ஒதுங்கிப்போவோம்
தூற்ற வேண்டாமே
வாழ்க்கை நிலையற்றது,,,!

~ நாகை ஆசைத்தம்பி
கோவை




# நேரிசை வெண்பா

## வெண்பாப் பயணம் 14

ஈற்றடி...

**இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு**

.
கண்மை கடைக்கண்ணின்
பார்வையென் கண்மணிக்குள்!
பெண்குயிலுன் பேச்சு
செவிப்பறையில்! - பெண்ணுன்
இனிமை நினைவென்
இதயத்தில்! போதும்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

ஞால ரவிச்சந்திரன்

.
கனிதரும் காதல்
கயல்விழி தேடல்
நுனிவழி நீண்டு
நுழைத்தாள் - வனிதா
தனித்தமிழ் போதும்
தளிருடல் தீண்டேன்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

மன்னை மணிமாறன்

.
வெற்றி இலக்கடைய
வேகமாய்ப் போகையில்
சுற்றத்தைக் குற்றமாய்ச்
சொல்லாமல் - முற்றும்
பனிபோல் படர்ந்தெம்மை
பற்றுகின்ற சோர்வே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

செ. இராசா

.
இத்தரையில் யானேத்தும்
எத்தனையோ காய்வகையில்
கத்தரியே உன்னைக்
கடிதுவந்தேன்! - நத்தும்
கனியிலொன் றோடுன்னைக்
காசியிலே விட்டேன்!
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

சுந்தர ராசன்

.
ஒட்ட உயிரறிந்து
ஓங்குபுகழ் தான்தடுத்துக்
கெட்ட பெயர்வாங்கக்
கேலிசெயும் - துட்டக்
கனிச்சாறே உன்னால்
கலங்கியது போதும்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

க. சங்கரபாண்டியன்

.
வெண்பாவை யாத்தென்ன?
வேண்டியதைப் பெய்தென்ன?
வெண்டளையில் சிக்குண்டு
வைத்ததென்ன? – செண்டில்
பனிபெய்யக் காணின்பம்
பார்பூவில் உண்டோ?
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு...!

விசு. இம்மானுவேல்

.
இனிமை எளிமையும்
எல்லாம் நிறைந்தே
கனிந்த தமிழையுங்
கற்றேன் - இனிதாய்க்
கனிவாய் மலர்ந்து
கலந்த கனவே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

கவிஞர் வீக பொன்னையா

.
கனிவுடன் பேசிக்
கயமையைக் கொண்டு
சனியென வந்த
சதியே! - இனிதாய்த்
தனிமையில் வாழும்
தனித்துவம் பெற்றேன்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

மாலதி திரு

.
காலையில் கஞ்சி;
கடும்பகல் கூழ்க்குடிப்பேன்
மாலையில் சப்பாத்தி
மட்டும்தான் - மேலைத்
தனிவிருந்து தாண்டேன்;
தணிமருந்து தீண்டேன்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

பொன் வேலப்பன்

.
நைய நடந்திடவே
நாளும் செயல்காணப்
பையவே பாதஅணி
நீதேய்ந்தாய் - வையம்
நனிமேவும் வாழ்வமைய
வேண்டின்தீ நண்ப
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

பாவலர் ஜீ கல்லபெருமாள்

.
நல்லோர் நிலைகெட்டு
நாணித் தலைகுனிவார்!
பொல்லாக் குடியால்
பொருளிழப்பார்! - மெல்லக்
கனிவாய் வளைக்கும்
கொடிய குடியே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

இரா. பாஸ்கரன்

.
ஒன்றாய் இருக்கையிலே
ஊரெல்லாம் சுற்றிவந்தீர்
இன்றோ துணையாம்
இணையிழந்தாய் - ஒன்றாய்
தனித்தாயே காலணியே
தன்னந் தனியா
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

அய்யப்பன்

.
புரிதலில்லா வாழ்விலென்றும்
புண்ணியங்கள் உண்டோ
பிரிந்திங்கு சென்றிட்டாற்
போதும் - எரிக்கும்
கனிவில்லாப் பெண்ணே
கடிய மனமே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

உடுவிலூர் கலா

.
பசியின் கொடுமையால்
பாதித்த வேளை
புசிக்கக் கிடைத்தசிறு
புட்டின் - ருசியை
தனிமையில் மென்றேன்!
தயிர்கலந்த சோறும்
இனியுமேல்நீ வேண்டாம்
எனக்கு !

நா. பாண்டியராசா

.
வனிதையர் மற்றும்
மழலையொடு வாழும்
புனிதநிலை இல்லாப்
புவியில் - மனிதன்
தனித்திருக்கும் துன்பநிலை
தானெதற்கு? போதும்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

பால முருகன்

.
என்னை அறிந்தேன்.
எனக்குள் உறைந்திருக்கும்
உன்னை அறிந்தே
உணர்ந்திட்டேன் - இன்னும்
எனிலிருந்தால் சீரழியும்
என்வாழ்வு கோபம்
இனிமேல்நீ வேண்டா
எனக்கு!

பாவலர் கருமலைத்தமிழாழன்

.
பாடுபொரு ளெல்லாமே
பாடிவிட்டார் பாவலர்கள்
தேடுகின்றேன், என்தமிழில்
தேர்ச்சியில்லை - ஓடும்
பனித்துளிபோல் ஓய்வதேயென்
பாடல்வெண் பாவே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

முனைவர் சுந்தரராஜ் தயாளன்

.
பொல்லாதத் தீமையே
பூத்துச் செழிப்பதனால்
நல்லோர் கலங்கும்
நலிவகற்ற; - நல்லக்
கனிபோல் தெரிந்துபின்
காயாகும் பொய்யே;
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு...!

ஜ. க. நாகப்பன்

.
துன்பத்தில் தோள்தந்த
சுந்தரன் நீயன்றோ!
அன்பைச் சொரிந்தாய்!
அகன்றுநீ - சென்றாய்!
தனிமையிலே வாடுகிறேன்
தங்க நிலாவே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!!

ரூபா அன்ரன்

.
கள்வன்போல் வந்து
கடுத்த பிணியாகி
மெள்ளெனக் கொய்கிறாய்
மேன்மையை - உள்ளுள்
அனிச்சையாய் ஆழ்ந்திடும்
அச்சமெனும் தீதே!
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

வானதி சந்திரசேகரன்

.
துன்பம் வரும்போது
தூரமாய் ஓடிடும்
அன்பில் உறவே
அகன்றுபோ - என்னைத்
தனியளாய்ச் செய்திடும்
தன்னலம் மிக்கோய்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

குளோரிசக்தி

.
நேரத்தில் வந்தவளே
நேர்மையைத் தந்தவளே
தூரத்தில் நில்லாதுத்
தூதாக - பேரம்
தனியாக நிற்பதாகத்
தக்கபடி சொல்ல
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

கு. கதிரேசன்

.
வாட்டமில்லா நெஞ்சில்
வலிகளும் வந்தது
நோட்டமிட்டப் பெண்ணவளால்
நோயாகி - ஓட்டம்
சனியனே உன்னால
சாவளவும் தொல்லை
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

வா. சண்முகம்

.
ஒட்டி உறவாடி
உண்மையனாய்த் தான்நடித்தாய்
வெட்டி மரமெல்லாம்
விற்றுவிட்டாய் துட்டா
கனிமரங்கள் நான்கினையும்
காணாமல் செய்துவிட்டாய்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

பாவலர் தாழை ந இளவழகன்

.
கனியின் சுவையோ
கடுஞ்சொல் மொழியப்
புனித மொடுங்கப்
புகழ - குனிவே
நுனிநா தடுத்திட
நுட்பமாய்ப் போக்கேல்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

மதுரை குமரன்

.
களிப்பினை நல்கும்
கடுஞ்சொல்லன் ஆக்கும்
சுளிப்பும் மனக்கசப்புஞ்
சூழும் - நெளியத்
தனியாக்கி வேறாக்கும்
தன்மையிலாப் பானம்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

வ. க. கன்னியப்பன்

.
தலையைப் பிடித்துத்
தரையில் அடிக்கும்
கலையில் திகழ்ந்தாய்நீ
கண்ணே - நிலையைத்
தனிமையில் நானுணர்ந்தும்
தாரமென் பேனோ?
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

பாவலர் கோவதன்

.
உள்ளத்தில் மாசினை
உண்டாக்கி விட்டதனால்
பள்ளத்தில் வீழ்ந்தவனாய்
நானின்று - தள்ளித்
தனியாளாய் நின்று
தவிக்கிறேன் நண்பா!
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

தங்க. ஜான்பீட்டர்

தெருவில் நடக்கத்
தெறித்தே அறுந்த
அருமையான காலணி..
ஐயோ - செருப்பே
அணிந்த மகிழ்வை
அழித்தாயே போ.. போ
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

ஓசூர் மணிமேகலை

.
இனிமை சிலநேரம்
என்றாலும் ஏனோ
பனிபடர்ந்தாற் போலாம்
பொழுது - நினையாத்
தனிமையே நீயும்
தயவுசெய்து போப்போ
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு!

ஃபக்ருதீன் இப்னு ஹம்துன்

சிட்டுக் குருவிபோல்
சீட்டிட்டுச் சேர்த்துவச்ச
பெட்டிப் பணமெல்லாம்
போனதெங்க.? - வெட்டித்
தனியார்கல் விக்கொள்ளை
யால்சோக மிங்க.?
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

புகழேந்தி சரவணன்

.
பகையை வளர்த்திடப்
பாரேன்! பகைவர்,
திகைத்திட நன்மைச்
சிறப்பின் - வகையைக்,
கனிவுடன் செய்வேன்
களிப்பாய்! பகையே,
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

கிண்ணியாசபீனா

.
இன்னலும் நெஞ்சில்
இருந்திட வாழ்வினில்
கன்னல் சுவையும்
கசந்திடுமே! - என்றும்
கனிவை நடிப்புடன்
காட்டிடும் நட்பே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

நிறைமதி நீலமேகம்

.
போதையில் அல்லாடிப்
போக்கிடம் நான்தொலைக்கப்
பாதையைக் காட்டினாள்
பாவையவள் - தீதை
இனிநீ குடிக்காதே
என்றாள் அதனால்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

கு. கமலசரஸ்வதி

.
வந்த மொழிகளை
வாழ்விக்கச் சாகடிவுன்
சொந்த மொழியையெனச்
சொல்லுகின்றார் - அந்தச்
சனியன்கள் பேச்சே
சரியென்றாய்; சீ!சீ!
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

ஜாய் சத்தியா

காலமெலாம் கண்விழித்தே
காத்திருந்தேன் நின்வரவை
நீலவிழி கண்டதுமே
நொந்துவிட்டேன் - கோலக்
கனியிதழில் செந்தழலைக்
கொட்டுகிறாய் போதும்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

செய்னுலாப்தீன் நஸீரா, ஏறாவூர், இலங்கை

நீயேயென் வையமென்று
நித்தம் நினைந்தயெனை
நாயேயான் என்பதுபோல்
நீயெண்ணி - என்னைத்
தனிநிறுத்தி பெண்ணோடு
போனாயே ஏனோ
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

தமிழமின்

.
மறக்கின்ற தன்மை
மலரா திருக்க
சிறந்த நினைவு
செழிக்க - இறவா
நனியுறு  ஞாபகம்
நல்கி இறைவா
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி

.
திப்பியாய் தேனடையாய்
சீர்கறி வேப்பிலையாய்
ஒப்பில் பனங்காயாய்
உண்டெறிவார் - இப்பார்
சனிபோல் பிடித்துத்
தவித்திடத் தானேன்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி

.
முன்னிரவு நேரம்
முழுநிலவு தோழியேநீ
அன்பன் வருகை
அறிவாயோ -- துன்பத்
தனிமையைத் தீர்க்கும்
தலைவன் துணையாம்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

சு. வி. லட்சுமி

.
குனித்த பிறமொழிச்சொல்
கொஞ்சுதல் விட்டே
தனித்தமிழ்ப் பேசித்
தழைப்பாய்! - நனிதேன்
கனிவிடுத்துக் காயைக்
கவருவையேல் பெண்ணே!
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

திருக்குறள் புலவர் நாவை சிவம்

.
ஓரமாய் நிற்கின்றேன்
ஓய்வற் றுழைக்கின்றேன்
பாரமாய் இல்லாது
பாங்குடனே - வீரத்
தனித்தமிழைக் கற்க
தணிந்ததென் துக்கம்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

.
எடுத்த எடுப்பினில்
எல்லையே மீறிக்
கடுப்பாகிப்  போகுமென்
கோபம் - தடுத்தால்
கனிவான அன்பில்
கரைந்துருகிப் போவேன்
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு.

கவிதா முகுந்தன்

.
நொடியிலென் வாழ்வை
நொறுக்கியே நெஞ்சைத்
துடிதுடிக்கச் செய்தமாத்
துட்டன் - குடியே
துணிந்தேன் உனைவிரட்டத்
தூரமாய்ப் போபோ
இனியும்நீ வேண்டாம்
எனக்கு

இரா. அழகர்சாமி

**வெண்பாப் பயணம் 14 ல் கலந்து சிறப்பித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. வாழ்த்துகள் கவிஞர்களே...**

# வெண்பா போட்டி (பயணம்) 15

## போட்டியின் கால அளவு – டிசம்பர் - 23 முதல் சனவரி 08 வரை

முழுமையாகப் படிக்கவும். இம்மாதம் ஒரு சுவாரஸ்யமான போட்டி…

**இம்மாதப் போட்டியின் விதிகள்…**

குறிப்பிட்ட வயதை அடையும் வரை சர்க்கரை நோய்… இரத்தக் கொதிப்பு… கொழுப்பு… வாயுப் பிடிப்பு… இதுபோன்ற நோய்கள் இல்லாமல் எல்லா வகையான உணவையும் ரசித்து ருசித்து உண்போம்… அதன்பிறகு இதுபோன்ற நோய்கள் நமக்கு வரும்போது… உணவுப் பழக்கம் மட்டுமன்றி நமது வாழ்க்கை முறையையே அது புரட்டிப் போட்டுவிடும்… அவ்வாறான சூழலில் மன உளைச்சல், மருத்துவ செலவு போன்றவற்றால் படும் அவதியை ஒரே வெண்பாவில் சொல்லவேண்டும்.

.

**பொதுவான விதிகள் : -**

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும்,  பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப்படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.

இதோ (எ-கா) பாடல் : -

தின்றுறங்க வேண்டாம் தினம்பணிசெய் என்றன்னை
அன்றறிவைச் சொன்னாள் அதைமறுத்தேன் – இன்றதனால்
கஞ்சுண்டே வாழ்வைக் கடந்துச் சுவைவிலக்கி
நெஞ்சுருகு கின்றேன் நிதம்.



அசத்துங்கள் கவிஞர்களே….

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில்.  எல்லாம் கற்பனைக்கே…அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்…

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்…

தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,

# அதிகாலைக் காத்திருப்பு

முஹ்தாக் அஹ்மத்
**இலங்கை**

அதிகாலைப் பனி
அடர்ந்திருக்கும் பொழுதில்
மனம் அடைத்திருக்கும்
அத்தனை கவலைகளுக்கும்
இடைவெளி கிடைக்கப்பெறுவதில்
வாழ்க்கை உயிர்ப்புடன் தொடர்கிறது

மனவிசாலமடைய காரணமாகியிருக்கும்
உரசல்களில் வழிந்தோடும்
மதுரமான நீருக்கொப்பான
பெருநிம்மதி என்னிலும் நிகழ்வது
அலாதியின்பமும் ஆத்மார்த்தமும்

சேவல்களில் கூவல்களில்
கண்விழிக்கும் உள்ளத்தைக் கண்டு
களிப்புறுவதே எனக்குள் ஏகாந்தமாய்
தேகத்தை ஈரமாக்கி விடுகின்றது

சமீபத்திய சந்திப்பை
நினைவுகூறும் வகையிலான
சல்லடைக்கீறல்கள் போன்ற
மெல்ல வந்துப்போகும்
உள்ளுணர்வுகளில்
மிதந்து செல்கின்றன
பதகளிப்புக்களும் பிரார்த்தனைகளும்

ஆறாமல் ஊற்றெடுக்கும்
ஊமை உணர்வுகளை
யாராவதிடம் சொல்லியழ
மனம் விம்மி நிற்கும்போது
மூன்றாவது மனிதராக
வந்துப்போகும் இந்தக்காலைப்பொழுதில்
சப்தமிட்டு கத்திச் சொல்கிறேன்
என்னோடு கதைத்து விட்டு மறைந்துவிடு
அதிகாலையே,
மூடுபனியே,
கூவும் சேவலே,
பாடும் குயிலே,
வீசும் காற்றே

நான் ஒவ்வொரு காலைப்பொழுதும்
காத்திருக்கிறேன்.
நீங்களும் எனக்காக காத்திருப்பீர்கள்
என்ற நம்பிக்கையில்,
எதிர்ப்பார்ப்பில்,
பேச்சுத்துணையில்,
கதைக்கடத்தலில்,
ஆறுதற்படுத்தலில்
எல்லாமுமாயிருங்கள் எனக்கு.



பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
சனவரி 2023

# புத்தாண்டு வாழ்த்துகள்

புத்தாண்டுப் பொங்கலிட்டு மகிழ்வோம் வாரீர்
பொலிவேறிக் கதிரவனாய் ஒளிர்வோம் வாரீர்!
சித்தமெலாம் தமிழ்சுமந்து வாழ்வோம் வாரீர்
செந்தமிழர் வாழ்வுயர உழைப்போம் வாரீர்!
எத்திக்கும் நம்தமிழைத் தெளிப்போம் வாரீர்
எழில்கொஞ்சும் பாக்களெலாம் படைப்போம் வாரீர்!
நித்தநித்தம் புதுச்சுவையைச் சுவைப்போம் வாரீர்
நெடுந்தமிழின் பாதையிலே நகர்வோம் வாரீர்!

புத்தமுதப் பொங்கலுண்டு களிப்போம் வாரீர்
பொன்னேட்டில் இடம்பிடிக்க முயல்வோம் வாரீர்
நத்திவரும் வடநாட்டார் இங்கே வந்து
நம்குடியை அமுக்குவதைத் தவிர்ப்போம் வாரீர்
இத்தரையில் மூத்தமொழி தமிழே என்ற
இன்மொழியை உரத்தெங்கும் உரைப்போம் வாரீர்!
முத்தமிட்டு புத்தாண்டை உச்சி மோந்து
முகமலர்ச்சி பொங்கியெழ அழைப்போம் வாரீர்

அத்தமிக்காத் தமிழ்மொழியின் அமுதை உண்டே
அகிலத்தில் வலம்வருவோம் மொழிகள் கற்றே
வித்தகராய்ப் புத்தாக்கம் செய்வோம் வாரீர்
வியன்தமிழில் காவியங்கள் புனைவோம் வாரீர்
உத்திகளை மாற்றிவைத்தே உயர்வோம் வாரீர்
ஊருலகம் போற்றுவழி காண்போம் வாரீர்
தித்திக்கும் பொங்கலுண்டு திளைப்போம் வாரீர்!
தெள்ளுதமிழ்ப் பிள்ளைகளாய்த் திகழ்வோம் வாரீர்!

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்